ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சாதிமத ஆராய்ச்சி

(முதல் பாகம்)

[ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடு]

[இரண்டாம் பதிப்பு]

—o—

பதிப்பாசிரியர் & கிடைக்குமிடம்:—

ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

அட்வகேட்,

'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்,

3. புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளிவருகிறது.

டிரஸ்டிகள்:—

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A.B.L., அட்வகேட்,

S ராம அய்யங்கார், B.Sc.B.L., அட்வகேட்,

இந்தப் புத்தகம் அரசாங்கம் வழங்கிய மலிவு விலைக் காகிதத்தில் அச்சிடப் பெற்றது.

விலை ரு. 4-00.] 1977 [தபாற்கூலி 75.

acharya.org

ஸ்ரீ:

அணிந்துரை

[வித்வான் கி. வேங்கடசாமி ரெட்டியார், வி.பூதூர்.]

“பூசலுக்குக் காரணமாவன மதவேற்றுமையும் சாதி வேற்றுமையுமே ஆகும். ஆதலின் வேற்றுமை நீங்கி அமைதியாக வாழ ஒற்றுமை தேவை. ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்ற கருத்துப் பரவுதல்வேண்டும்” என்பன இக்காலத்துப் பல்லோர் கொள்கை.

இவை உண்மையா? ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்பதால் வேற்றுமை நீங்குமா? ஒற்றுமையாக வாழ இயலுமா? என்பவற்றை அறிஞர்கள் சிந்தித்தல் வேண்டும்.

செல்வம்×வறுமை; பதவி×பதவியின்மை; வன்மை× மென்மை; அருமை×எளிமை; அறிவு×அறியாமை முதலிய இரட்டைகளால் வேற்றுமையில்லையா? என்பதனையும் நோக்குதல் வேண்டும்.

இச்சிந்தனைநோக்கில் எழுந்ததே ‘சாதிமத ஆராய்ச்சி’ எனும் இந்நூல்.

இந்நூலாசிரியர் உயர்திரு உ. வே. S. கிருஷ்ணசாமி ஐயங்கார் M. A., B. L., அவர்கள்; ‘ஸ்ரீ வைஷ்ணவ சுதரிசனம்’ ஆசிரியர்; இவர் பொருட்செல்வம், அருட் செல்வம், கைங்கரியச்செல்வம், கேள்விச்செல்வம், அறிவுச் செல்வம் முதலிய எல்லாச் செல்வங்களாலும் நிரம்பியவர். உண்மையை உணர்த்தப் போராடும் இவரை அறியாதார் யார்? வைணவ உலகமும் தமிழுலகமும் வளம்பெற வந்த வள்ளல் இவர் என்று வாயார வாழ்த்துகின்றேன்.

மேலும், சட்டக்கல்வி பயின்றவர்; எனவே நடுநிலை நின்று உண்மை உணர்ந்து அதனை அஞ்சாமல் எடுத்துக் காட்டும் பாங்கு நம்மனோரால் போற்றத் தகுந்தது.

acharya.org

இவர்தம் கருத்துக்கள் சிந்தனைக்குரியவை. முதலில் மதம்பற்றி ஆராய்ந்து, உண்மை உணர்தற்கும், சகிப்புத் தன்மையால் அயலாரோடும் அளவளாவி வாழ்தற்கும் இவர் காட்டும் வழி மிகவும் சிறப்பானது.

இம்முயற்சியில் இவர் பரிபாடல் எனும் சங்கநூலுள் திருமாலைப்பற்றிய பாடல்கட்கு விளக்கமான உரை எழுதியுள்ளார். இதற்குப் பரிமேலழகர் எழுதிய சுருங்கிய அரிய உரை உளது. சில இடங்களில் இவ்வுரையினும் சிறப்பாக இவர் உரை அமைந்துள்ளது. உதாரணமாக—

மூன்றும் பரிபாடல் (68-70)

'அனைத்தும் நீ அனைத்தினுட்பொருளும் நீ யாதலின்
உறைவும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமாரனையை'

'இனிச் சொல்லாத எல்லாப் பொருளும் நீ; அவற்றின் உட்பொருளும் நீ; ஆதலால் நீ உறைதலுமில்லை; உறையும் இடமும் இல்லை; மறவியுடையார் மறவியில் சிறப்புப் பெறுதல் காரணமாக அவை நினக்கு உளவாந் தன்மையும் பொய்; மேற்சொல்லிய தன்மையை யாதலான்" என்பது பரிமேலழகர் உரை.

இதற்கு, இந்நூல் (பக்-77ல்)—'அனைத்தின் உட்பொருளும் நீ'என்றதாலே,எல்லாவற்றிலும் இவன் உள் நுழைந்து உறைகின்றான் என்றும், எல்லாப் பொருளும் இவனிடம் உறைவதாலே தரிக்கப்படுகின்றன என்றும் உணர்த்தப் பட்டது. இவன் உறைகின்றானால், தலையிலே சுமை உறைவதுபோலே, அவற்றாலே தாங்கப்பட்டு உறைகின்றானோ என்னும் ஐயம் எழக்கூடும். இவனிடம் அவை உறைகின்றனவாகில் தலையிலே உறையும் சுமைபோலே இவனுக்கு பாரமாயிருக்கின்றனவோ என்னும் ஐயமும் எழக்கூடும். அவற்றைக் களைகிறது அடுத்த அடியாலே,– (உறைவும் உறைவதும் இலையே) தலையிலே சுமை உறைவதுபோலே நீ அவற்றாலே தாங்கப்பட்டு அவற்றில் உறையவுமில்லை; தலையிலே சுமையைத் தாங்குமிடத்திற்போலே

acharya.org

உனக்கு ப₄ாரமாக அவை உன்னிடமும் உறைவதுமில்லை. அப்படியானல் 'நீ அவற்றிலுறைகிருய், அவை உன்னிடம் உறைகின்றன' என்றது எப்படி? எனில்: (உண்மையும் மறவியில் சிறப்பின் மாயமார் அனையை) அவற்றில் உன் உறைவும், அவை உன்னிடம் உறைவதும் **உண்மையா யிருப்பதும்**, மறதியில்லாத சிறப்பையுடைய ஞானஸ்வரூப ஞய் நீ இருக்கையாலே. **"மாயா வயுநம் ஜ்ஞாநம்'** என்கிற நிகண்டுவின்படி 'மாயம்' என்னும் சப்தம் ஞானத்தைக் குறிக்கும். "உன் மாயமுற்றும் மாயமே" [திருச்சந்த-41] முதலானவிடங்களில் ஞானப்பொருளில் தமிழில் பிரயோ கிக்கப்பட்டுமுள்ளது. ஞானமயனுயிருக்கையாலே, அவை உன்னைத் தாங்காமலே நீ அவற்றினுள் வியாபித்திருக் கிருய்; ஞானமயமான உன் ஸங்கல்பத்தாலே அவற்றை த₄ரிக்கையாலே உனக்கு ப₄ாரமாக இல்லாமலே உன்னிடம் அவை உறைகின்றன என்று கருத்து. **"மயா ததமித₃ம் ஸர்வம் ஜக₃த₃வ்யக்தமூர்த்திநா। மத்ஸ்த₂ாநி ஸர்வபூ₄தாநி ந சாஹம் தேஷ்வவஸ்தி₂த:॥ ந ச மத்ஸ்த₂ாநி பூ₄தாநி"** [கீ₃தை 9-4, 5] [அறியப்படாத ஞானஸ்வரூபத்தையுடைய என்னுலே இவ்வுலகனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளது. எல் லாப்பொருளும் என்னிடம் உறைகின்றன. (இருந்தபோதி லும் அவற்ருல் தாங்கப்பட்டு) நான் அவைகளில் உறைவ தில்லை; (எனக்கு ப₄ாரமாக) என்னிடம் அவை உறைவ தில்லை] என்ற கீ₃தா ஶ்லோகத்தை அப்படியே மொழி பெயர்த்திருக்கிருர். இப்படி இடரில்லாமல் பொருள்கொள் ளக் கூடியதாயிருக்க, 'ஆதலின்' என்பதைப் பின்னுல் கூட்டியும். 'மாயம்' என்பதற்கு 'பொய்' என்று பொருள் கொண்டும். 'உறைவும் உறைவதும் பொய்' என்று பரிமேலழகர் பொருளுரைத்தார். முன் பின்னடிகளுக்கு மாறுபட்டிருக்கையாலும், "ஆதலின்" "உண்மையும்" "மறவியில்" "சிறப்பின்" என்னும் பதங்கள் அப் பொருளில் பொருந்தாமையாலும் அது நடுநிலையாளரால் ஏற்கப்படமாட்டாது.'—என்பது இவர் உரை. இரண்டுரை யினையும் ஒப்புநோக்கி உண்மையுணரலாம்.

acharya.org

நான்காம் பரிபாடல் (59)

'பொன்னிற்றேன்றிய புனைமறுமார்ப'

" 'நிறத்தாற் பொன்போலத் தோன்றிய புகழப்படும் மறுவை யுடைய மார்ப' திருமகள் ஆதலால் 'புனைமறு' என்றார்" என்பது பரிமேலழகர் உரை.

இதற்கு இவர், " பொன்னுலான ஆபரணம்போலே தோன்றும 'ஸ்ரீவத்ஸம்' என்று புகழப்படும் மறுவைத் திருமார்பிலே உடையவனே " என்று உண்மைப்பொருளை உணர்த்தி, "பரிமேலழகர், 'திருமகளையே மறு என்றார்; இது சாஸ்திரவிருத்தம்" என்று கூறுவது அறிஞர்க்கு விருந்தாகும்.

பதினைந்தாம் பாடல் (23-26)

'.........................மாலிருங்குன்றம்
தாம் வீழ் காமம் வித்துபு விளைக்கும்—
நாமத் தன்மை நன்கனம் படிய
யாமத் தன்மை யிவ் வையிருங்குன்றத்து'

'திருமாலிருஞ்சோலைமலை என்னும் நாமத்தினது பெருந் தன்மை நன்றாகப் பூமியின்கட்பரக்க; மகளிரும் மைந்தரும் தாம்வீழ் காமத்தை வித்தி விளைக்கும் யாமத்தியல்பை உடைய இவ்வையிருங்குன்றத்தெனக் கூட்டுக' என்பர் பரிமேலழகர்; 'தாம் வீழ் காமம்' எது ? என்பது இங்கு விளங்கவில்லை. இப்பாடலிலேயே **(15-16) 'நாறிணர்த் துழா யோன் நல்கின் அல்லதை — ஏறுதல் எளிதோ வீறு பெறு துறக்கம்' (36-37) 'பெருங் கலி ஞாலத்துத் தொன்று இயல் புகழது—கண்டு மயர் அறுக்கும் காமக் கடவுள்'** என வரும் அடிகளை அடியொற்றி 'தாம் வீழ் காமம் வித்துபு விளைக் கும்' — 'தாம் விரும்பும் பகவத் பக்தியாகிற காமத்தை விதைத்து, அதையே பரபக்தி, பரஞானம், பரமபக்திகளாக விளைக்கும் இந்த மாலிருஞ்சோலையில்' என்பதும், " 'கண்ண னுக்கே ஆமது காமம்' (இராமாநுச நூற்றந்தாதி 40) என்றார் அமுதனுரும்" என்று மேற்கோள் காட்டுவதும் இவர்தம் புலமைக்கு எடுத்துக்காட்டு. இத்தகைய விளக்

acharya.org

கங்களை இன்றிருந்து ஆசிரியர் பரிமேலழகரே காண்பா ராயின், நடுவுநிலைமிக்க அவர்தம் உள்ளம் இவ்வாசிரிய ரைப் பாராட்டும் என்று நம்புகின்றேன்.

விளக்கம் கூறுமிடங்கள்தோறும் இவர், வேதம், உப நிடதம் போன்ற பிரமாண நூல்களிலிருந்து தக்க மேற் கோள் காட்டுவது நம்மனோர்க்கு இறும்பூதளிக்கின்றது.

'சாதிமத ஆராய்ச்சி' என்ற தலைப்பில் ஆயப்புகுந்து, எதிர்பாராதவண்ணம் திருமாலைப்பற்றிய பாடல்கட்கு அரிய உரை வகுக்க நேர்ந்தது நாம்செய்த பேறு ஆகும்.

அடுத்துவரும் இந்நூல் இரண்டாம் பாகத்தில் சாதி பற்றிய இவரது ஆராய்ச்சியை அறிஞர் உலகம் எதிர் பார்க்கின்றது.

இவர்தம் கருத்துக்கருவூலம் யாவர்க்கும் இன்பம் அளிக்கவல்லது.

இது நிலவுலகில் நிலைபெறுக.

இவ்வாசிரியர் நீடுவாழ்க.

மேன்மேலும் இத்தகு தொண்டினைச் செய்ய இவர்க்கு எல்லாம்வல்ல எம்பெருமான் திருவருள் புரிவானாக.

வி. பூதூர். இங்ஙன்,

23—12—76. **கி. வேங்கடசாமி.**

acharya.org

ஸ்ரீ :

முகவுரை

பேராசிரியர் எஸ். வி. வரதராஜ ஐயங்கார், M.A., M.O.L.

சங்ககால முதற்கொண்டே தமிழ் இலக்கண இலக்கியங்களில் பல அரிய சமயக் கருத்துக்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. எட்டுத்தொகை நூல்களில் ஒன்ருன பரிபாடலில் திருமால், முருகன்போன்ற கடவுளரின் சிறப்புக்கள் பாடப்பெற்றுள்ளன. அப்பரிபாடற் செய்திகளைப் பெரும்பாலும் விரித்துரைப்பதாய், புறநானூறு, அகநானூறு, கலித்தொகை முதலிய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சுருக்கமான சமயம்பற்றிய குறிப்புக்களை உணர்த்துவதாய் இந்நூல் அமைந்துள்ளது. சங்கச் சான்ருேர் தம் நூல்களில், தக்க இடங்களில் நடுவு நிலைமையோடு பல சமயக்கடவுளரையும் போற்றிப்பாடினர் எனவும், அவ்வாறு அவர்களால் போற்றப்பெற்ற கடவுளருள், திருமாலைப்பற்றிக் கூறப்படும் கருத்துக்கள் அவரே முழுமுதற் கடவுள் என்னும் கொள்கையே அக்காலத்தே நிலைகொண்டிருந்தது என்பதற்குச் சான்றுகளாகும் எனவும் இந்நூலின் வாயிலாக நாம் தெளிவாக அறியமுடிகின்றது.

முதற் பரிபாடலில், "இருவர்தாதை இலங்குபூண் மாஅல்" என்னும் அடிக்கு இந்நூலில், 'படைத்தற் கடவுளாகிய பிரமனையும், அழித்தற் கடவுளாகிய சிவபிரானையும் படைத்த பரமனே திருமால்' என்னும் விளக்கம் காணலாம். (பக்-19) இதற்குச் சான்ருக, "நாராயணுத் ப்₃ரஹ்மா ஜாயதே, நாராயணுத் ருத்₃ரோ ஜாயதே" என்னும் நாராயண உபநிடத வாக்கியம் பொருந்தியுள்ளது. முதற் பாடலில், "விறல் மிகு விழுச்சீர்" என்பது முதலாக வரும் பதினேரடிகளும் (பக்-21) இரண்டாம் பாடலில், "தீவளிவிசும்பு" என்பது முதலாக வரும் பதினேரடிகளும் (பக்-52) "நளிர் மதிச் சடையனும்" என்னும் நம்மாழ்வார் அருளிய திருவாசிரியப்பாடலை ஒத்த கருத்துக்களைக் கொண்டவையாய், திருமாலின் பரத்வத்தைப் பேசுவனவாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும்,

"மன்னிய முதல்வனை யாதலின்
நின்ஒரனையைநின் புகழொடும் பொலிந்தே"

acharya.org

(பக்-26) எனவரும் அடிகள், " 'ஒப்பற்ற முதற்கடவுள்' என்னும் புகழுக்கு உரியவர் திருமாலே " என்பதைக் காட்டுவனவாகும். இதனை விளக்க, இந்நூலில் (பக்-27) பொய்கையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கைமன்னன் ஆகியோரின் அருளிச்செயல் தொடர்கள் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. மூன்றும் பரிபாடலில் வரும் "தீயினுள் தெறல்நீ" என்பது முதலான எட்டு அடிகள் (பக்-75) நம்மாழ்வார் அருளிய "நீராய் நிலனாய்" என்னும் திருவாய்மொழியை ஒத்திருக்கின்றன. இப்பரிபாடல் அடிகளை விளக்க பகவத்கீதைத் தொடர்கள் பல சான்றாக இந்நூலில் தரப்பெற்றுள்ளன. மற்றும்,

"முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலில்,
பிறவாப் பிறப்பில்லை; பிறப்பித்தோர் இலையே"

(பக்-70) என்னும் அடிகளும் திருமாலின் அவதாரச் சிறப்புக்களைக் குறிப்பதோடு, " அவர் தம் திருவுள்ளப்படி தாமே அவதரித்தாரேயன்றிப் பழவினைப் பயனாக மற்ற மக்களைப்போலப் பிறப்பிக்கப்பட்டாரில்லை " என்பது உணர்த்துதல் காணலாம்.

ஐந்தாம் பரிபாடலில், கந்தக்கடவுளின் தோற்றம் விவரிககப்படுகின்றது :

அஃதாவது: "..................**அமரர் வேள்விப்**
பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்-(சிவபிரான்)-
உமையொடு புணர்ந்த காமவதுவையுள்,
அமையாப் புணர்ச்சி அமைய"

அப்புணர்ச்சியால் உண்டாகிய கருவினை, அவ்வீசன் இந்திரன் வேண்டத் தன் மழுவால் அறுகூறுகளாகச் சேதிக்க, அக்கூறுகளை முனிவர் அறுவர் தம ஓமகுண்டத்தில் இட, அக்கூறுகளை அம்முனிவரின் பத்தினிகளாகிய (அருந்ததிதவிர) ஆறு கார்த்திகைப் பெண்டிரும் தரித்திருந்தனர்; அவ்வாறு பிறந்து உமாதேவியால் ஒன்றாக்கப் பட்டவரே அறுமுகக் கடவுள்" என்பது. இப்பாடலுரை நன்கு ஊன்றி உணரத்தக்கதாகும்.

பதினைந்தாம் பரிபாடலில், இளம்பெருவழுதியார் பாடிய,

"நாறுஇணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"

acharya.org

என்னும் அடிகள் (பக்-147) "வேதமுதல்வனாகிய திருமாலா லன்றிப் பிறதெய்வங்களால், சீவனின் பிறப்பை மாற்றி வீடளித்தல் இயலாது" என வரையறுக்கின்றன. அவ் வாறு பிறப்பறுத்து வீடுபெற வழி யாதெனின், திருமாலிருஞ் சோலைப் பெருமானை வழிபடுதலே எனவும் இப்புலவர் பெருமான் (வழுதியார்) ஈடுபடுகின்றார்.

எட்டாம் பரிபாடலில், "பற்றுகின்று நின் காரணமாக" என்னும் அடியில், 'நின் காரணமாக' என்பதற்கு, 'முருகனாகிய உன்னைக் காண்பதன் பொருட்டாக வந்தனர்' எனப்பரிமேலழகர் கூறும் உரை பொருந்துமேயன்றி, 'முருகனைவிடப் பெரியவராகிய திருமாலும் சிவனும் அவனை வழிபடுவதன் காரணமாக வந்தனர்' என்னும் உரை பொருந்தாது என்பது இந்நூலில் (பக்-120) பாங்குற விளக்கப்பெற்றுள்ளது.

நூலின் பிற்பகுதியில் "மாயோன்மேய" என்னும் தொல்காப்பிய நூற்பாவும் (பக்-173), "மல்லரை மறம் சாய்த்த" என்னும் நெய்தற்கலியடியும் (பக்-198), "ஏற்று வலன் உயரிய" என்பது முதலான புறநானூற்றுப் பாட லடிகளும் (பக்-200, 201) "இலம்பாடுழந்த" என்பது முதலிய புறப்பாடலடிகளும் (பக்-205) நேரியமுறையில் விளக்கப்பெற்றுள்ளன. "வீங்குநீரருவி வேங்கடம்," "விரிதிரைக் காவிரி வியன்பூந் துருத்தி (திருவரங்கம்)" (பக்-211,213) என்னும் சிலப்பதிகார அடிகளும், "நீடு குலைக் காந்தளஞ் சிலம்பில்" என்பதுபோன்ற பெரும் பாணாற்றுப் படையடிகளும் (பக்-216) திருமாலின் திருவுருவச் சிறப்பினைச் செப்புவனவாய்த் திகழ்கின்றன.

இந்நூலாசிரியரின் நுட்பமும் திட்பமுமுடைய ஆராய்ச்சியும், நடுநிலை பிறழாது செம்மை நெறியிற் செல்லும் விளக்கங்களும் கொண்டிலங்கும் இந்நூல் ஸ்ரீவைஷ்ணவரேயன்றித் தமிழன்பர்கள் யாவரும் போற்றத் தக்கவாறு அமைந்துள்ளது.

திருவல்லிக்கேணி,
சென்னை-5.
20—3—77.

எஸ். வி. வரதராஜ ஐயங்கார்.

acharya.org

श्री:
श्रीमते रामानुजाय नमः

முகவுரை

[நாவல்பாக்கம் ஸ்ரீ. தேவநாதாசார்ய ஸ்வாமி
மீமாம்ஸா சிரோமணி, ஸ்ரீரங்கம்.]

तस्मै रामानुजार्याय नमः परमयोगिने।
यः श्रुतिस्मृतिसूत्राणामन्तर्ज्वरमशीशमत् ॥
श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

புனிதமான நம் பாரதநாட்டில் மதங்களுக்குக் குறைவில்லை. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பற்பல மதங்கள் வேரூன்றி நிற்கின்றன. வைதிகமதங்கள் பல. அவைதிக மதங்களுக்கும் குறைவில்லை. இந்த மதங்களெல்லாம் ஏதோ ஒரு உபயோகமான — ஆவஶ்யகமான — விஷயத்தைத் தன்னுள்ளே கொண்டுள்ளன. அதனாலேயே மேதாவிகளான மக்களிடையே ப்ராபல்யமடைந்தன. பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தில் முதல் அத்யாயம், மூன்றாம் பாதம், 5-6 ஸூத்ரங்கள் இக்கருத்தைத் தருகின்றன:—

"शिष्टाकोपेऽविरुद्धमिति चेत्;
न शास्त्रपरिमाणत्वात्"

என்பவையே அவ்விரண்டு ஸூத்ரங்களாம். "வேதங்களில் விதிக்கப்படும் தர்மங்களோடு விரோதமில்லாத கொள்கைகளைப் புற மதங்களிலிருந்தும் ஏற்றுக்கொள்வதில் என்ன விரோதம்? என்று சொன்னால், அது சரியில்லை. தர்மத்தை போதிக்கும் சாஸ்திரங்களுக்கு ஒரு அளவுண்டு. புத்தரது உபதேஶங்கள் இதில் அடங்காதவை. அதனால் அஹிம்ஸா முதலிய தர்மங்களை வேதத்திலிருந்தேதான் அறிந்துகொண்டு அனுஷ்டிக்கவேணும்" என்பது கருத்து.

acharya.org

இதிலிருந்து ஒரு உண்மை தெள்ளென விளங்குகின்றது. "வேத3ங்களுக்குப் புறம்பான மதக்காரர்களும் ஏதாவதொரு வைதி3கமான த4ர்மத்தையும் தத்தம் மதத்தில் கலப்படம் செய்து ப்ரசாரம் செய்து வந்தனர்"—என்பதே அது.

இப்படிப்பட்ட அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது ஏன்? மக்களுக்கு வேத3ங்களில் அசைக்க முடியாத நம்பிக்கை வேரூன்றிக் கிடந்தது. அதை எளிதில் மாற்ற முடியவில்லை. இதுதான் காரணம். இவ்வாறு திரித்துக் கூற முற்பட்ட புறமதக்காரர்கள், தமக்கென ஒரு "வேத3"த்தையும் தோற்றுவித்துக்கொண்டு, "அதுவும் நித்யமானதுதான்" — என்றும் தயக்கமின்றிக்கே பிரசாரம் செய்து வந்தனர்.

"स्वसंवेद्यश्च सिद्धान्तमात्मीयमपि जानताम्।
छायां तथापि रक्षन्तो जल्पन्ति प्रतिशब्दकैः॥
यथा मीमांसकत्रस्ताः शाक्यवैशेषिकादयः।
नित्य एवागमोऽस्माकमित्याहुश्शून्यचेतनम्॥"

[குமாரிலப4ட்டர் தந்த்ரவார்த்திகம் 1.3.6]

என்கிறார் குமாரிலப4ட்டர். பு3த்3த4மதத்தினரோடு கடுமையான தர்க்கவாத3ங்களில் சிக்கித் தவித்து மீண்டவர் இவர். இன்றைக்கு 1400 வருஷங்களுக்கு முற்பட்டவர். புறமதத்தினரின் சூழல்களைக் கண்டுபிடித்து அவற்றை வேருடன் களைந்தெறிந்த மஹாபுருஷர். அவர் இவ்வாறு உண்மையை விளக்கிக் கூறுகிறார். இப்படி மதவிஷயத்தில் அறிவாளிகளால் திட்டமிட்டுக் குழப்பம் விளைவிக்கப்பட்டு வந்துள்ளது. சிறந்த அறிவாளிகளே மயக்கம் தெளிவது இதில் அசாத்தியம். அறிவிலிகளான அப்பாவிகள்—அந்தோ!! செய்வதறியாமல் திகைத்து நிற்கின்றனர். இந்தக் குழப்பத்தில் தெளிவு காண்பது தானெப்படி? அது சாத்தியமா? அசாத்தியமா?

acharya.org

பூர்வமீமாம்ஸா பா₄ஷ்யகாரராகிய ஶப₃ரஸ்வாமி இதற்குத் தக்க பதில் கூறுகிறார், காண்மின் !

"धर्मं प्रति हि विप्रतिपन्ना बहुविदः केचिदन्यं धर्ममाहुः। केचिदन्यम्। सोऽयमविचार्य प्रवर्तमानः कञ्चिदेवोपाददानो विहन्येत। अनर्थञ्च ऋच्छेत्। तस्माद्धर्मो जिज्ञासितव्यः इति।"

[பூர்வமீமாம்ஸாபா₄ஷ்யம் 1-1-1]

"அறிவாளிகளான பலர் பலவாறாக உண்மையைத் திரித்துக் கூறும்பொழுது விசாரம் செய்து தத்துவத்தை உணரவேண்டும். அஃதின்றிக்கே கண்மூடித்தனமாய் 'ஏதாவதொரு' வழியைப் பின்பற்றுகிறவன் அழிந்து போவான்" என்பது கருத்து.

இங்கு த₄ர்மவிஷயத்தில் சொல்லப்பட்ட விஷயம் தத்துவத்தையுணர்வதிலும் பொருந்தும். அத்யாவஶ்யகமான இவ்விஷயம் அறிவுநூலாகிய வேத₃த்தில் ஸந்தே₃ஹத்திற்கு இடமில்லாத வகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

"பரம்பொருள் ஒன்றே. நாராயணனே பரதெய்வம்" என்று வேத₃ங்கள் பறைசாற்றுகின்றன. இந்த வேத₃த்தை அன்றும் இன்றும் அனைவரும் ஓதிக்கொண்டுதானிருக்கிறார்கள். தத்துவத்தையுணர்த்துவதில் தனிப்புகழ்பெற்றவரான ஸ்ரீபராஶரமுனிவர், உலகிலேயே மிகமிகச்சிறந்த தத்துவநூலாகிய தமது விஷ்ணுபுராணத்தில் இவ்வுண்மையை அசைக்க முடியாதவாறாக நிலைநாட்டியுள்ளார். நாராயணன் — வாஸுதே₃வன் — ப₄க₃வான் — இச்சொற்களெல்லாம் ஒரே பொருளுள்ளவையாம். இவையெல்லாம் ஸ்ரீமகாவிஷ்ணுவின் திருநாமங்களேயாம். ஆதலால் வைஷ்ணவமதமொன்றே தொன்மையானது. வேத₃ங்களில் கூறப்பட்டது. பிற்காலத்தில் தோன்றிய சமயவாதி₃கள் மேலும் மேலும் தமது தர்க்கவாத₃ங்களால் தொடர்ந்து குழப்பத்தை விளைவித்துக் கொண்டேயிருந்தனர். அவ்வப்போது அவதரித்த நம்

acharya.org

பரமாசார்யர்கள் மருளை நீக்கி உண்மையை ஸ்தாபித்து வந்திருக்கின்றனர்.

"நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன, நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகைவள்ளல்
வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது, மண்ணுலகில்
ஈட்டியசீலத்து இராமானுசன்தன் இயல்வுகண்டே"
[இராமானுசநூற்றந்தாதி-54]

என்னும் அமுதனாரின் அமுதமொழி இதையே குறிக்கும். ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிர திவ்யப்ரபந்தமும் அதன் உரை நூல்களும் இதையே நிலைநிறுத்துகின்றன. இராமானுசருடைய ஸ்ரீபாஷ்யம் முதலிய நூல்களும், இவற்றுக்குப் பின்புள்ளார் எழுதிய உரை நூல்களும் மிகச் சிறந்த முறையில் இப்பணியைச் செய்கின்றன.

ஆனால்? பிற்காலத்தில் பிறமதங்களைத் தழுவும் மேதாவிகள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றனர். அவர்கள் இவற்றையெல்லாம் "हन्त! त्वत्पक्षपाती सः" என்கிற ரீதியில் ஒரு சாராருடைய வாதமாக பாவித்து விடுகின்றனர். நடுவு நிலையிலிருந்து ஆராய்ச்சி செய்தால் இவையெல்லாம் நிலைத்துநிற்காது என்று வாதிடுகின்றனர். ஆழ்வார்கள் அருளிச்செயல்களுக்குப் போட்டியாக நாயன்மார்களின் பாசுரங்கள் தோன்றுகின்றன. இராமானுசர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து ஸ்ரீபாஷ்யம் எழுதினார். அதற்குப் போட்டியாக "ஸ்ரீகண்ட பாஷ்யத்தை"த் தோற்றுவிக்கிறார் ஒரு புலவர். ஸ்ரீ ராமானுஜரால் த்வைதாத்வைத கடகஶ்ருதிகளுக்குப் பொருத்தமான நிர்வாஹம் அற்புதமாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் அழகினால் ஈர்க்கப்பட்ட அந்த மகா மேதைக்கு, தான் காலத்தில் பிற்பட்டவராக இருப்ப தொன்று தான் குறுக்கே நின்றது. தான் எழுதிய சிவ பரமான பாஷ்யத்திற்கு, இராமானுஜருக்கும் முந்திய காலத்தைக் கொடுத்துவிட்டார் இவர். "இதைப் பார்த்துத்தான் ராமானுஜர் காப்பி அடித்தார்" என்னும்

acharya.org

பிரசாரத்தைத் துவக்கி வைத்துவிட்டார்! பாவம்!! இதன் உண்மையை மேத₄ாவிகள் எளிதில் கண்டுகொள்வர் என்பதை இவர் உணரத் தவறிவிட்டார். திருட்டுத்தன மாகப் பாலைக்குடிக்கும்போது பூனை தனது கண்களிரண்டை யும் அழுத்தமாக மூடிக்கொண்டு விடுமாம். இந்தப் பரி தாபகரமான நிலையிலேயே இந்த மகாமேத₄ாவியும் சிக்கிக் கொண்டுள்ளார்.

வைஷ்ணவர்கள் "நாராயண" ஶப்₃த₃த்தையே ஆத₄ாரமாகக்கொண்டு "விஷ்ணுவே பரதத்த்வம்" என்று சாதிக்கின்றனரல்லவா? இதையும் இவர் "ஒரு கண்" பார்த்திருக்கிறார். "நாராயணீ" என்று து₃ர்க்க₃ாதே₃விக்கு ஒரு பெயருண்டு. "நாராயணனுடைய மனைவி—என்னும் பொருளில்தான் இந்தப் பெயர் தோன்றியுள்ளது. அதனால் சிவனே நாராயணன்" என்றும் தயக்கமின்றிக்கே சாதிக்கிறாரிவர். நாராயணனுடைய சகோதரியாக அவ தரித்ததனால் இந்தப் பெயர் து₃ர்க்கை₃க்கு ஏற்பட்டது என் னும் உண்மை நாடுநகரமும் நன்கறிந்ததேயன்றோ? இப்படிப் பலவகைகளிலும் குழப்பத்தை விளைத்துள்ளார் இவர்.

மற்றும் ஸ்ரீமந் நாராயணன் எடுத்த த₃ஶாவதாரங்க ளுக்குப் போட்டியாக மற்றொரு த₃ஶாவதாரங்கள் மற்றொரு தெய்வத்தால் எடுக்கப்பட்டதாகவும் புராணங்கள் தோற்று விக்கப்பட்டன. பிரமனும் விஷ்ணுவும் அடிமுடிதேடிய கதை ஒன்று கிளம்பியது. இப்படி எத்தனையோ கற்பனைகள். இதற்கெல்லாம் தக்கவாறு பதில் சொல்லவேண்டாமா?

பதில் சொல்லுவதனால் ஒன்றும் பயனில்லை. சொல் லாததனால் நஷ்டமும் யாதுமிலது. சிலருடைய க்ஷோ₄ஷத் தால் உண்மை மாறிவிடுமா? "நெருப்பு சுடாது. பாலில் இனிமையில்லை" என்று ஒருவர் கூறினால், அப்பொருள்கள் அப்படியேயாகிவிடுமா? "நெருப்பு சுடும். பால் இனிக்கும்" என்று ஒருவர் சொன்னால்தான் அப்பொருள்கள் அவ் வாறாக இருக்குமா? இது வீண் பிரயாசம். என்பது ஒரு அபி₄ப்ராயம்.

acharya.org

பதில் சொல்லத்தான் வேண்டும். வேத₃ங்களிலும் மற்ற சாஸ்திரங்களிலும், வேண்டாத பக்ஷத்தை முந்துற முன்னம் எடுத்துக்கூறி, பின்னர் அதை மறுத்துரைத்தல் ஸர்வஸஹஜமாகக் காணப்படவில்லையா? அறிவு நிரம்பப் பெற்றவர்கள் இந்தக் குதர்க்கங்களால் மயங்கமாட்டார்கள்; எனினும் சாதாரணமான பாமரமக்கள் மயங்குவது தவிர்க்க முடியாததொன்றும். "மெய்யுடை யொருவன் சொல்ல மாட்டாமையால் பொய்போலம்மே பொய்போலம்மே" என்பது முதுமொழி.

"भूतमप्यनुपन्यस्तं हीयते व्यवहारतः"

[யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி]

என்பது மஹர்ஷி வசனம். "உண்மை நிலை, தனக்குச் சாதகமாகவேயிருந்தாலும், தக்க தருணத்தில் அதை எடுத்துரைக்கவேணும். இல்லாவிடில், வ்யவஹாரரீதியில் அது இல்லாததாகிவிடும்" என்பது கருத்து.

இந்த வாதி₃களுக்குத் தர்க்கரீதியில் தக்கவாறுன மறுப்புரைகள், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமந்நிக₃மாந்த மஹாதே₃ஶிகன் போன்றவர்களால் ஏற்கனவே எழுதிவைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பிற்காலத்தவர் "கிளிப்பிள்ளைகள்"போல் வாயினுல் சொன்னுல் போதும். ப்ரதிவாதி₃கள் பறந்தோடுவர். அதுமட்டும் போதுமா? பழங்காலத்திய மேதா₄விகளின் பாசுரங்களையும் மேற்கோளாகக்காட்டி இவர்களை மௌனமுத்திரையில் நிறுத்திவைப்பதும் அவசியமே. இதையே ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், திறம்படச்செய்து காட்டியிருக்கிருர், தமது "சாதிமத ஆராய்ச்சி" என்னும் இந்நூலில். "சாதிகள் ஒழியவேண்டும் - மதங்கள் அழியவேண்டும்" என்று ப₃லமான ப்ரசாரம் இருந்துவருகிறது இந்நாட்களில். இதை நன்குணர்ந்தே இவர் இந்நூலை எழுதியிருக்கிருர்.

வைஷ்ணவ மதமே நம் புனிதமான பா₄ரதநாட்டில் பண்டைநாட்களிலிருந்து மக்களனைவராலும் தழுவப்பட்டு வந்துள்ளது-என்பதைப் பண்டைத்தமிழ்நூல்களின்

acharya.org

ஆதாரத்துடன் அற்புதமான ரீதியில் விளக்குகிருர் இதில், பரிபாடல் முதலிய சங்ககாலத்திய தமிழ் நூல்களில் 'ஸ்ரீமகாவிஷ்ணுவே பரதெய்வம்' என்னும் உண்மை வெகு அழகாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வேதங்கள் — உபநிஷதங்கள் - இதிஹாஸபுராணங்கள் - இவற்றுடன் சரிசமானமாக ஒருங்கிணைந்துநின்று விஷ்ணுவின் பரத்துவத்தை நம்நாட்டுச் சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. வைஷ்ணவர் அனைவரும் இவ்விஷயத்தைச் சிறிதும் ஆராய்ந்தவரில்லை. "பகவத்விஷயம்" என்று சிறப்பித்துச் சொல்லப்படும் திருவாய்மொழியையும் அதன் வியாக்யானங்களையும் மற்ற மூவாயிரம் திவ்யப்ரபந்தங்களையுமே இவர்கள் ஆர்வத்துடன் அப்யஸிப்பது வழக்கமாகிவிட்டது. அவற்றில் எம்பெருமானுடைய அருமை பெருமைகள் மட்டுமே பேசப்படுகின்றன. "பரமைகாந்திகள்" என்று தம்மைச் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படும் இயல்புள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் சங்க இலக்கியங்களில் ஈடுபடவேயில்லை. இவற்றில் தேவதாந்தர விஷயங்களும் சொல்லப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். இவற்றில் பொதிந்துகிடக்கும் அரிய தத்துவங்களை உட்புகுந்து ஆராய்ந்து, "சாதிமத ஆராய்ச்சி" என்னும் இந்நூலில் வெகு அழகாக எடுத்துக்கட்டுகிருர் நூலாசிரியர். இது அரியதோர் சாதனையே. இதற்காக ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹம் ஸ்ரீ உ. வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்காருக்குப் பெரிதும் கடப்பாடுடையதாகும். "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" என்னும் பெயரில் ஒரு மாதாந்த இதழைத் தமிழில் அச்சிட்டு வெளியிட்டுவருகிருர் இந்நூலாசிரியர். இது யாவருமறிந்ததே. அதில் சிறுகச்சிறுக இந்நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டதே. அப்பகுதிகளைத் தொகுத்து ஒரு முழுநூலாக இப்போது வெளியிட்டிருக்கிருர். இது இந்நூலின் முதற்பகுதியே. இரண்டாம் பகுதி இனி வெளிவரவிருக்கிறது. ரஸிகர்களான ஆஸ்திகப்பெருமக்கள் அனைவரும் ஆர்வத்துடன் இதை வாங்கிப் படித்துப்

acharya.org

பயனடைந்து, அடுத்த ப₄ாக₃த்தையும் கூடிய சீக்கிரம் வெளியிடுமாறு ஆசிரியரை ஊக்குவிக்கவேண்டும்.

"तथा चान्यार्थदर्शनम्"

என்பது பூர்வமீமாம்ஸா த₃ர்ஶனத்தில் அடிக்கடி காணப்படும் ஸூத்ரங்களிலொன்று. "நாம் சொல்லுகிறபடியே வேறு விஷயத்தைச் சொல்லுமிடத்தில் (தற்செயலாகச்) சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்" என்பது இதன் கருத்து. ஒரு விஷயத்தைப் பேசப்புகுந்தவிடத்தில், சம்பந்தமில்லாத மற்ருெரு விஷயம் தற்செயலாகப் பேசப்படும். அது அவ்விஷயத்தில் நோக்குள்ள மற்றவருக்குப் பெரிதும் உபயோகமானதாகும் இதுவே "அந்யார்த்த₂ த₃ர்ஶனம்" எனப்படுவது. நாலாயிர தி₃வ்யப்ரப₃ந்த₄ங்கள் வைஷ்ணவமதத்தின் பெருமையை ஸ்த₂ாபிப்பதற்காகவே தோன்றியவை. பரிபாடல் முதலான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் போன்றவை அவ்வாறல்ல. அவைகளில் வைஷ்ணவத்தின் மேன்மை பேசப்பட்டிருப்பது உயர்ந்ததான "அந்யார்த்த₂த₃ர்ஶனம்". இதைஆராய்ந்து வெளியிட்ட இந்நூலாசிரியர் வைணவர்களுக்குமட்டுமேயல்லாது பழந்தமிழ் நூல்களில் ஆராய்ச்சியில் ஈடுபடும் அனைவருக்குமே சிறந்ததோர் நல்விருந்தை அளிக்கிருர்.

இற்றைக்கு 2200 - வருஷங்களுக்குமுன் ப₄ாரத நாட்டில் குமரிமுதல் இமயம்வரை வைஷ்ணவமதமே பரவியிருந்தது. மக்களும் அரசர்களும் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பெயர்களையே தமக்கும் வைத்துக்கொண்டு வழங்கி வந்தனர். அக்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டுக்குவந்த அரசர்களும் யாத்ரீகர்களுங்கூட வைஷ்ணவ மதத்தையே தழுவி, தமது நாடுகளிலும் இதையே ப்ரசாரம் செய்து ஸ்த₂ாபித்துவந்தனர். வெளிநாட்டார்க்கு நம் நாட்டுப் பெண்களுடனும், நம்நாட்டு ஆண்பிள்ளைகளுக்கு வெளிநாட்டுப் பெண்களுடனும் திருமணங்களும் நடைபெற்றிருக்கின்றன. இதற்கெல்லாம் தக்க ஆத₄ாரங்கள் உள்ளன.

acharya.org

இதற்கெல்லாம் காரணம் ஒன்றுதான். வைஷ்ணவத்தில், "பண்டைக்குலத்தைத் தவிர்ந்து, தொண்டக்குலத்தின"ராகி, ஸகலவித₄மான வேற்றுமைகளையும் அறவே மறந்து கலந்து பழகும் மனோபா₄வம் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

"......எம்மடியார்களாகில், தொழுமின்
நீர் கொடுமின் கொண்மின்................."

[திருமாலை-42]

என்பதைக்காண்க. இவ்வாறு வைஷ்ணவ மதமானது பண்டைநாட்களில் தனது பரந்த கொள்கைகள்மூலம் உலகத்தையே ஒன்றுக்கி ஓங்கிவளர்ந்து வந்தது. பிற்காலத்தில் பிற மதங்கள் - எக்காரணத்தாலோ தலையெடுக்கவும், இதன் தனிச்சிறப்பு ஓரளவு குன்றிப்போய்விட்டது. பண்டைச்சான்றுகள் சிலவற்றைக் காட்டுவோமிங்கு :—

1. திருக்குறளாசிரியர் சுத்தவைஷ்ணவ பரமைகாந்தி. தனது குறளில் "பகவான்" என்னும் ஸ்ரீமகாவிஷ்ணுவின் திருநாமத்தை அமைத்து மங்களம் பாடியிருக்கிறார். இவரது தந்தையாருக்கும் இதுவே திருநாமம் என்பது, இவர்கள் பரம்பரையாகவே வைஷ்ணவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

2. "குரங்குகள் மலையை நூக்கக்
குளித்துத் தாம் புரண்டிட்டோடி,
தரங்கநீரடைக்கலுற்ற சலமிலா
வணிலும் போலேன்" [திருமாலை-27]

என்னும் பாசுரத்தில் கூறப்படும் வரலாற்றுச் சித்திரம் இந்தோனேஷியாவில் "ப்ராம்பண்" என்னுமிடத்தில் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

3. கிருஸ்து பிறப்பதற்கு 150 வருஷங்களுக்குமுன்பு வட இந்தியாவில் உள்ள "க்வாலியர்" ராஜ்யத்தில் ஒரு "க₃ருட₃ஸ்தம்ப₄ம்" எழுப்பப்பட்டுள்ளது. இதில் ப்ராம்மீ எழுத்தில் கல்வெட்டு உள்ளது. இதிலிருந்து அறியப் படுவதாவது :—

acharya.org

† "தே$_3$வதே$_3$வன் வாஸுதே$_3$வன் எனப்படும் முழுமுதற் கடவுளுக்காக இந்த க$_3$ருட$_3$ஸ்தம்ப$_4$ம் எழுப்பப்பட்டது. இதை எழுப்பினவர் "ஹெலியோதொருஸ்" என்பவர். இவர் ஒரு சிறந்த"ப$_4$ாக$_3$வதர்". டியான்(Dion)(தேவன்)என்பவருடைய குமாரன். தக்ஸில்லா (தக்ஷஸீலம்) நகரில் வஸிப்பவர். கிரேக்கநாட்டிலிருந்து"மஹாராஜனுன ஆண்டியால்கிதாஸ்" (Maharaja Antialkidas) என்பவரால், காசீபுத்ர ப$_4$க$_3$வத்$_3$ ப$_4$த்$_3$ரன் - என்னும் இந்திய அரசனிடம் ராஜீயதூதனுக அனுப்பப்பட்டவர் இவர்—என்பதாம்.

---

† Extract from the "Memories of Archeological Survey of India No. 5. "Archeology and Vaishnava Tradition" by Sri Ramaprasad chand B.A. of Calcutta.

[இங்கு குறிப்பிடப்பட்ட கல்வெட்டுகள், 1920-ம் வருஷத்தில் கல்கத்தாவில் "ஸ்ரீராமப்ரஸாத சந்த் B.A." என்னும் புராதனச் சின்னங்களின் ஆராய்ச்சியாளரால் எழுதப்பட்ட. "Memories of the Archeological Survey of India" என்னும் நூலின் 5-வது நெம்பர் ஆகிய "Archeology and Vaishnava Tradition" என்னும் நூலிலிருந்து எழுதப்பெற்றவை.]

The earliest known Vaishnava monument is the inscribed column at Besnagar near Bhisla in Central India (Gwalior State). In the votive inscription on this Column we are told "This Garuda Column (Garuda dhwaja) of Vasudeva the god of gods (Devadeva) was erected here by HELIODORUS a Bhagavata, the son of DION, and an inhabitant of TAXILA, who came as greek Ambassadar from Maharaja ANTIALKIDAS to king Kasiputra Bhaga Bhadra" Antialkidas is supposed to be one of the earlier members of the line of EUCRATIDES, who came to the throne of BATRIA about 171 BC, after ousting DEMETRIOUS. The archaic type of Brahmi characters used in the inscription of HELIODORUS indicates that it was probably engraved sometime in the first half of the second Century B.C.

acharya.org

‡ 4. மற்ருெரு கல்வெட்டிலிருந்து அறியப்படுவதாவது:- "ப₄ாக₃வதஞகிய (வைஷ்ணவஞகிய) கௌ₃ளதமீபுத்ரனல் தனக்குப் பட்டாபி₄ஷேகம் நடந்த பன்னிரண்டாவது வருஷத்தில் அழகியதான இந்த க₃ருட₃ஸ்தம்ப₄ம் ப₄க₃வானுக்காக (விஷ்ணுவுக்காக) எழுப்பப்பட்டது." என்பதாம்.

/ 5. மற்றுமொரு கல்வெட்டு கூறுவதைக் கேண்மின்:— மகாஅலெக்ஸாண்டர் நமது புனிதமான ப₄ாரதநாட்டின்மீது படையெடுத்து வந்தார். அப்போது இந்நாட்டில் ஆட்சி புரிந்து வந்த "போரஸ்" (புருஷோத்தமன்) என்னும் அரசர் தீ₄ரமாக அவரை எதிர்த்துப் போர் புரிந்தார். அவர் யுத்₃த₄ஸந்நத்₃த₄ராகப் புறப்படும்போது முந்துற முன்னம் ஒரு விக்₄ரஹம் ஸகல மரியாதைகளுடனும் எழுந்தருளப்பண்ணப்பட்டு வந்தது. அதை "மெகஸ்தனிஸ்" என்னும் யாத்ரீகர் (அலெக்ஸாண்டருடன் வந்தவர்) "ஹெர க்ளஸ்" என்று குறிப்பிடுகிருர். "ஹரிக்ருஷ்ண" என்னும் பெயரே கிரேக்க எழுத்தில் "ஹெரக்ளஸ்" என்று எழுதப் பட்டது. கிருஷ்ண பரமாத்மாவைக் கோவில்களில் விக்₃ரஹ ரூபமாக எழுந்தருளப்பண்ணி வழிபடுவது அந்நாட்களில் பரவலாக இருந்தது. மேலும் யுத்₃த₄காலங்களில், அவரது

---

‡ Another inscription says:—

"This Garuda column of the excellent temple of the Bhagavat was erected by gautamiputra (gautami's son) a Bhagavata (Vaishnava) in the twelfth year after the installation of Maharaja Bhagavata."

/ "An image of 'HERAKLES' was carried in front of the army of PORUS as he advanced against ALEXANDER". "But another well-known statement of MEGASTHENES relating to the Indian HERAKLES furnishes us with decisive evidence for the identification of that deity with KRISHNA-VISHNU".

acharya.org

விக்3ரஹத்தை முன்னிட்டுக் கொண்டு போரில் இழிவதும் ஸர்வஸஹஜமாயிருந்தது. பா4ரதப்போரில் இவ்வாறுதானே அர்ஜுனன் வெற்றி கண்டான்! இக்காலத்தவரான நம்மைக் காட்டிலும் புருஷோத்தமன் காலத்தில் கிருஷ்ண பரமாத்மாவின் காலம் அணித்தாகவே இருந்திருக்கிறதல்லவா?

“यत्र योगेश्वरः कृष्णः यत्र पार्थो धनुर्धरः।
तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतिर्मम॥”

என்னும் ப4க3வத்3கீ3தாவசனம் அவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருப்பது இயல்பேயல்லவா? இதையெல்லாம் ஷை கல்வெட்டு தெள்ளென விளக்குகின்றது.

இதுபோன்ற உண்மைகளையெல்லாம் நமது கண் முன்னே கொண்டுவந்து நிறுத்தும் வகையில்—தெளிவாக—அனைவரும் எளிதில் படிக்கும்படியான பெரிய எழுத்துக்களில்—பொருட்செலவைப் பொருட்படுத்தாமல் ஸ்ரீ உ. வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் “சாதிமத ஆராய்ச்சி” என்னும் இந்நூலை மலிவுவிலையில் வெளியிட்டிருக்கிறார். இதேபோல் வைஷ்ணவ ஸம்ப்ரதா3ய க்3ரந்த2ங்கள் பலவற்றையும் ஆர்வத்துடன் இவர் அச்சிட்டு வெளியிட்டு வருவது நாடுநகரமும் நன்கறிந்ததேயாம். இவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்3யமும் த4னதா4ன்ய ஸம்ருத்3தி4யும் நீங்காத செல்வமும் நிரம்ப அருளுமாறு பல்லாயிரக்கணக்கான ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தினரோடு அடியேனும் ஒன்றுகூடி இறைவனை வேண்டிக்கொண்டு க்ருதார்த்த2னாகிறேன்.

இங்ஙனம்,
அடியார்க்கடியன்,
நா. ஸ்ரீ. தேவநாதாசாரியன்.

ஸ்ரீரங்கம்
9—4—77.

acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முதற்பதிப்பில் ஆசிரியரின் முகவுரை

இன்று 'இந்துக்கள்' என்று நம் நாட்டில் அழைக்கப் படுகிறவர்களிடையே பல மதங்களும், சாதிகளும் இருக் கின்றன. இந்துக்களிடமுள்ள எல்லா மதங்களும் சேர்ந்து "இந்து மதம்" எனப்படுகிறது. 'இந்து' என்னும் வார்த்தை நம்மை ஆண்ட வெளிநாட்டினரால் நமக்குச் சூட்டப்பட்ட பெயர். நூறாண்டுகளுக்கு முன் இப்பெயர் வழங்கியதே கிடையாது. 'வைதிகமதம்' என்னும் பெயரே வழங்கிவந்தது. பல மதங்களும், பல சாதிகளுமாகப் பிரிந்து நிற்கும் இந்த பாரத சமுதாயத்திடையே ஒற்றுமைக்கு வழி என்ன என்பது ஒரு பெரிய வினாவாய் உள்ளது.

'இந்த மதங்களும், சாதிகளும் ஒழிய வேண்டும்' என்பார் சிலர். 'எம்மதமும் சம்மதம்' என்பதே இந்து மதம்; இக்கொள்கையைப் பரப்பினால் ஒற்றுமை தானாக உண்டாகிவிடும் என்பார் சிலர். 'இந்து மதம்' என்னும் பொதுப்பெயரில் அடங்கியிருக்கும் தனித்தனி மதங்களி லுள்ளோர் 'எங்கள் மதமே இந்து மதம்; மற்றவர்கள் எங்கள் மதத்தைத் தழுவினால் ஒற்றுமை உண்டாகிவிடும்' என்பார் சிலர். இந்நிலையில், ஆதிகாலத்தில் இவ்வைதிக மதமும், பாரத சமுதாயமும் எந்நிலையில் இருந்தன; பின்னர் எப்படி மாறுதல்கள் ஏற்பட்டன என்பதை ஆராயவேண்டியது அவசியமாகிறது. இவ்வாராய்ச்சிக்கு இலக்கியங்களைக் காட்டிலும் சிறந்த சான்றுகள் வேறு இல்லை.

தமிழ்நாட்டில் உள்ள இலக்கியங்களில் மிகப்பழை யவை சங்க இலக்கியங்கள். எட்டுத்தொகை என்றும் பத்துப்பாட்டு என்றும் அழைக்கப்படும இலக்கியங்களும், தொல்காப்பியமாகிற இலக்கணமும் சங்ககால நூல்களாகும். மற்ற எல்லா இலக்கிய இலக்கண நூல்களும் இவற்றுக்குப் பிற்பட்டவை. இதை எவராலும் மறுக்க இயலாது. இந்தச் சங்ககால நூல்களை ஆராய்ந்தால், "பிரமன், சிவன் முதலான எல்லா தேவர்களையும், எல்லா ஜீவர்களை யும், எல்லா உலகையும் படைத்து அளித்து அழிப்பவனும், அவையனைத்தையும் சரீரமாகக் கொண்டிருப்பவனும் திருமால் ஒருவனே" என்னும் விசிஷ்டாத்வைத வைஷ்ணவ

acharya.org

மதமே அக்காலத்தில் வழங்கி வந்தது என்பதும் இக்காலத்தில் வழங்கும் வேறு எந்த் மதமும் அக்காலத்தில் வழங்கி வந்ததில்லை என்பதும் தெளிவாக விளங்குகிறது. சங்ககாலத்திற்குப் பிற்பட்ட நூல்களை ஆராய்ந்தால் மற்ற எல்லா மதங்களும் படிப்படியாக நம் நாட்டில் எழுந்தன என விளங்குகிறது; ஆதிகாலத்தில் நாலு வருணங்களாகப் பிரிவுபட்டிருந்த பாரத சமுதாயம் பிற்காலத்தில் ஆயிரம் சாதிகளாகப் பிளவுபட்டதும் விளங்குகிறது. இவையனைத்தையும் விளக்கி, "நன்ருக வேரூன்றிவிட்ட இந்த மதங்களையும், சாதிகளையும் அழிக்க முடியாது; சகிப்புத் தன்மை ஒன்றே ஒற்றுமைக்கு வழி" என்று விளக்குவதற்காக எழுந்தது இந்நூல். ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் எனும் மாதப்பத்திரிகையில் சென்ற சில வருடங்களாக வெளியிடப்பட்டுவந்த இந்நூலின் முதல்பாகம், சங்க காலத்தில் தமிழ்நாட்டின் சமயநிலையை ஆராய்கின்றது. உலகத் தமிழ் மாநாடு சென்னையில் கூடவிருக்கும் இவ் வமயத்தில் இந்த முதல் பாகம் வெளியிடப்படுகிறது.

இக்கருத்தை ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாக எழுதி வாசிக்க உலகத் தமிழ் மாநாட்டில் இடம் கிடைக்குமா என்று மாநாட்டு நிர்வாகிகளைக் கேட்டேன். இடமில்லை என்று கூறிவிட்டனர் அவர்கள். மாநாட்டில் கலந்து கொள்ளும் தமிழறிஞர்களின் பட்டியலை அனுப்பினுல், இந்நூலை இலவசமாக அறிஞர்களுக்கு அனுப்புகிறேன் என்று எழுதினேன். பல நாட்களாகியும் அதற்கு பதிலே யில்லை. நமக்குத் தெரியவரும் அறிஞர்களுக்கு இந்நூலை அனுப்பியிருக்கிரேம். நடுநிலைநின்று ஆராய்ந்து அவர்கள் தம் கருத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று உண்மையின் பெயராலும், தமிழாராய்ச்சியின் பெயராலும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 'உண்மையே வெல்லும்; பொய்ம்மை வெல்லாது' என்பது அருமறைவாக்கு.

இங்ஙனம்,

தமிழன்பன்

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,
'ஆசிரியர்' ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

பிலவங்க
மார்கழி 14-உ
(29—12—67)

acharya.org

ஆசிரியரின் முகவுரை

(இரண்டாம் பதிப்பு)

இந்நூலின் முதற்பதிப்பு—வெளியானவுடன், உலகத்தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்களுக்கும், நம்நாட்டுப் பொதுஜனப் பத்திரிகைகளுக்கும் நடுநிலைநின்று விமர்சனம் செய்வதற்காக அனுப்பப்பட்டது. அசைக்கமுடியாத - ஆனால் சிலருக்குக் கசப்பான - உண்மைகளை இந்நூல் வெளியிட்டிருப்பதால், எவரும் நடுநிலைநின்று விமர்சனம் செய்யத் துணியவில்லை. 'மித்திரன்' பத்திரிகையில் மாத்திரம் ஒரு சிறு விமர்சனம் வெளிவந்தது. அதில் நாம் கூறியிருக்கும் விஷயங்களை எடுத்து ஆராயாமல், நாம் சிலரது மனம் புண்படும் வகையில் சொற்களை அமைத்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. பிலவங்க-ஞூ தை-மீ (242) ஸுதர்சனத்தில் "'மித்திர'னின் நடுநிலைமையின்மை" என்றும் (6-பக்கங்கொண்ட) கட்டுரையில், "(சங்க காலத்தில் வழங்காத) விஷ்ணு தூஷணக்கதைகளை வெளியிடுவதன்மூலமும், மற்றும் பல வகைகளிலும் லக்ஷக்கணக்கான வைஷ்ணவர்களைப் புண்படுத்தும் செயலைச்செய்யும் மித்திரன், அவற்றில் உள்ள பொய்ம்மையையும், நேர்மையின்மையையும் எடுத்துக்காட்டி வைஷ்ணவர்களின் புண்பட்ட மனத்தைத் தேற்றி ஆறுதல் அளிக்கும் நம்மைக் குற்றம் சாட்டுவது விசித்திரமே! பொய்யைக்கூறிப் பலருடைய மனங்களை மித்திரன்போன்ற பொதுஜனப் பத்திரிகைகள் புண்படுத்துகின்றன. அப்படிப் புண்பட்ட மனங்களுக்கு மருந்திடுவதற்காக நாம் சில உண்மைகளை ஆதாரங்காட்டி நிரூபிக்கும்போது, விவேகிகள் எவரும் புண்படமாட்டார்கள். அப்படியே புண்பட்டாலும், பொய்யைக்கூறிப் பலரைப் புண்படுத்தும் மித்திரன்போன்ற பத்திரிகைகளின் பணியைக்காட்டிலும், மெய்யைக்கூறிச் சிலருடைய மனத்தைப் புண்படுத்தும் நமது பணி சிறந்ததும் பாராட்டுக்குரியதுமேயாகும்...இயலுமானால் மித்திரன் விமர்சகர்தான் நடுநிலைமை தவறி விமர்சனம் எழுதவில்லை என்பதை நிரூபித்து ஒரு கட்டுரையை மித்திரனில் வெளியிடலாம்; அல்லது நமக்கே அனுப்பலாம். அப்படி ஒரு கட்டுரை வந்தால் அதை நமது ஸுதர்சனத்தில் அப்படியே அச்சிட்டு,

acharya.org

ஆராய்ந்து நடுநிலையாளர்களின் தீர்ப்புக்கு விடுவோம்" என்று எழுதி மித்திரனுக்கு அனுப்பினோம். இந்நூலில் நிலைநாட்டியுள்ள விஷயங்களுக்கு எந்த பதிலும் சொல்லமுடியாதாகையால், விமர்சகர் எந்த பதிலும் எழுதவில்லை.

அத்தகைய இந்நூல் இன்று இரண்டாவது பதிப்பாக வெளியிடப்படுகிறது. இதையும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் விமர்சனத்திற்கு அனுப்புகிறோம். எல்லாத் துறைகளிலும் பொய்ம்மையும், நேர்மையின்மையும் தாண்டவமாடும் இக்காலத்தில், மதத்துறையில் சிலருக்குக் கசப்பான சில உண்மைகளை அசைக்கமுடியாதபடி நிலைநாட்டியிருக்கும் இந்நூலை, நடுநிலைநின்று பாராட்டமுடியாவிடினும், "இப்படி ஓர் நூல் வெளிவந்துள்ளது. தமிழறிஞர்கள் இதைக் காய்தல் உவத்தல் இல்லாமல் ஆராய்ந்து தங்கள் கருத்தை இதன் ஆசிரியருக்கோ, அல்லது நூல் மூலமாகவோ வெளியிடலாம்" என்று எழுதினால், பத்திரிகைகள் தம் நடுநிலைமையைக் காத்துக்கொண்டதாக ஆகும். இதுசெய்யாமல். வழக்கம்போல், விஷ்ணுவை தூஷிக்கும் தாமஸபுராணப் பொய்க்கதைகளையும், 'ஆதிசங்கரர் ஷண்மதஸ்தாபனம் செய்தார்' முதலான பொய்ப்பிரசாரங்களையுமே நம்நாட்டுப் பத்திரிகைகள் செய்துவருமாயின், அவைகளுக்கு உண்மையில் நாட்டமே இல்லையென்று நடுநிலைநிற்கும் நல்லோர்கள் உணர்ந்துகொள்வர். பத்திரிகைகள் மறைத்து விட்டதால் உண்மை பொய்யாகிவிடாது. பத்திரிகைகள் ஓயாமல் பிரசாரம் செய்வதால் பொய் உண்மையாகிவிடாது. நிற்க.

இவ்விரண்டாம் பதிப்புக்கு முகவுரைகள் வழங்கிய வி.பூதூர் வித்வான் வேங்கடசாமி ரெட்டியார் அவர்களுக்கும், பேராசிரியர் ஸ்ரீ உ. வே. S. V. வரதராஜய்யங்கார் ஸ்வாமி அவர்களுக்கும், ஸ்ரீ உ. வே. N. S. தேவநாதாசார்ய ஸ்வாமிக்கும் உண்மையை உயிரினும் ஓம்பும் தமிழ் கூறும் நல்லுலகத்தின் சார்பாக அடியேன் நன்றி தெரிவிக்கிறேன்.

பிங்கள-ஹு
வைகாசி-7
(20—5—1977

இங்ஙனம்,
பெருந்தமிழர்களான ஆழ்வார்கள் வழித்தோன்றல்,
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சாதிமத ஆராய்ச்சி

[ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
ஆசிரியர்:- 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்'
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.]

1. முன்னுரை

சாதி சமயங்கள் ஒழியவேண்டும் என்று அரசியல் வாதிகள் பலர் கூக்குரலிட்டவண்ணமிருக்கின்றனர். ஏன் ஒழியவேண்டும்? என்று கேட்டால், மனிதனுக்கு மனிதன் வேற்றுமையை வளர்ப்பதால் ஒழியவேண்டுமென்கின்றனர்.

மனிதனுக்கு மனிதன் எத்தனையோ வேற்றுமைகளிருக்கின்றன. அறிவிலும், குணத்திலும், செயலிலும், செல்வத்திலும், நிறத்திலும், பேசும் பாஷையிலும், வாழும் தேசத்திலும், உண்ணும் உணவிலும், எண்ணும் எண்ணத்திலும் மற்றும் பலவற்றிலும் உள்ள வேற்றுமைகள் கணக்கிலடங்கமாட்டா. இவை ஒவ்வொன்றும் வேற்றுமைகளை வளர்த்தவண்ணம்தானிருக்கின்றன. இது இயற்கையின் நியதி. இதை அடக்க என்றும் எவராலும் முடியாது. அடக்க முயன்றால் வேற்றுமைகள் மேலும் வளருமேயொழியக் குறையாது.

இனி, அறிவாளிகள் செய்யவேண்டியதென்ன? இவ் வேற்றுமைகளை வைத்துக்கொண்டு ஒற்றுமைகாண முயல

வேண்டும். வேற்றுமையுணர்ச்சிகளையும், அதனால் வரும் தீமைகளையும் தடுக்க முற்படவேண்டும். அறிவினாலோ குணத்தாலோ, செயலாலோ, செல்வத்தாலோ அல்லது மற்ற எதனாலோ உயர்ந்த நிலையிலிருப்பவர்கள் அல்லது அப்படியிருப்பதாக நினைப்பவர்கள் அவற்றால் தாழ்ந்த நிலையி லிருப்பவர்களை வெறுக்கக்கூடாது. உயர்த்த முயல வேண்டும் என்னும் மனநிலையை வளர்க்கவேண்டும்.

இதை வளர்க்கக்கூடிய ஒரே சாதனம் மதநம்பிக்கை தான். உலகிலுள்ள எல்லா மதங்களும், 'மனிதன் நல்ல வனாயிருக்கவேண்டும்' என்பதை வற்புறுத்துவதில் ஒன்று பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு மதத்தில் உண்மையான நம்பிக்கையுள்ளவனும், ஏதாவதொரு தெய்வத்திடம் உண்மையான பக்தியுள்ளவனும் ஒருபோதும் மனமறிந்து தவறிழைக்கமாட்டான். பாவத்திற்கு பயப்படுவான். ஆகை யால், மதநம்பிக்கையை வளர்ப்பதொன்றே வேற்றுமை யுணர்ச்சிகளையும், அதனால் வரும் தீமைகளையும் தடுப்ப தற்கு வழியாகும்.

"மருந்தே நோயை வளர்ப்பதுபோலே, மதநம்பிக்கை களே வேற்றுமையுணர்ச்சிகளுக்கும் காரணமாகின்றனவே; மதப்போராட்டங்களும் நிகழ்ந்திருக்கின்றனவே. இதற் கென் செய்வது?" என்று சிலர் கேட்கக்கூடும்.

சகிப்புத்தன்மையோடு கூடிய மதநம்பிக்கையை வளர்த்தால் இத்தவறு நேராது. மதநம்பிக்கையுள்ள ஒவ்வொருவனும், தன் மதமே முழு உண்மையை உரைப் பது, மற்ற மதங்களினும் உயர்ந்தது, பரம்பொருளை நேரே அடைவிப்பது என்று எண்ணவேண்டியது மத நம்பிக்கையின் அடிப்படையாகும். இந்த எண்ணமில்லா விட்டால் அது மதநம்பிக்கையே ஆகாது. இது இல்லாத வர்கள் உண்மையான மதநம்பிக்கையுள்ளவர்களாகார்கள். தன் மனமே மதம் என்றுதான் வாழ்வார்கள். அரசியல்

acharya.org

வாதிகளிற் பெரும்பாலோர் எம்மதமும் சம்மதம் என்னும் இம்மதத்தையே பின்பற்றி ஒரு மதத்திலும் நம்பிக்கை யில்லாமல் மனம்போனபடி வாழ்ந்துவருவது பிரத்யக்ஷம். ஆகையால் ஒவ்வொருவனும் தன் மதமே உண்மையானது, உயர்ந்தது என்னும் எண்ணத்தோடு மதத்தை அனுஷ்டித்துவந்தால்தான் மதாநுஷ்டானம் பயனளிக்கும். ஆனல், தான் எப்படித் தன் மதம் உயர்ந்தது, உண்மையானது என்று எண்ணுகிருனே அப்படியே பிறர்க்கும் அவரவர் மதம் உயர்ந்தது உண்மையானது என்று எண்ணும் உரிமையை அளிக்கவேண்டும். பரம்பொருள் அவரவர் மனநிலைக்கேற்பப் படிப்படியாக முன்னேறித் தன்னை அடைவதற்காகவே பல மதங்களைப் படைத்திருக்கிற தாகையாலே அவற்றில் குழப்பம் விளைக்கக்கூடாது என்னும் நல்லெண்ணத்தையுடையவனுயிருக்கவேண்டும். சுருங்கச் சொன்னல் தன் மதத்தைப் பிறர்மீது திணிக்க முயலக் கூடாது. இதுவே சகிப்புத் தன்மையெனப்படும். இது இல்லாமையாலேயே பிறநாடுகளிலும், மதங்களிலும் மதப் போராட்டங்கள் நடந்தன. இது நிறைந்திருந்ததாலேயே நம் நாட்டில் வைதிகமதங்களிடையே எக்காலத்திலும் மதப் போராட்டமென்பது இல்லை.

சகிப்புத்தன்மையில்லாத அரசர்களும் தனிமனிதர் களும் நம்நாட்டிலும் சிலர் பண்டைக்காலத்திலிருந்தனர். உதாஹரணமாகக் குலோத்துங்கசோழனெருவன் கோவிந்த ராஜப்பெருமாள் திருமேனியையிடித்துக் கடலிலிட்டான்; வைணவர்கள் பல்லாயிரவரைச் சைவர்களாக்கினுன்; "சிவனிலும் மேலான தெய்வமில்லை" என்றெழுதிக் கட்டாயப்படுத்தி வைணவர்களிடம் கையெழுத்து வாங்கினுன். கூரத்தாழ்வான் கண்ணிழக்கக் காரணமானுன். இவற்றையும் இன்னமும் பல கொடுஞ்செயல்களையும் புரிந்தான் என்பதற்குப் பண்டை நூல்களில் ஆதார முள்ளது. இவையெல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு

acharya.org

வைணவப் பொதுமக்கள் சகிப்புத்தன்மையோடிருந்தனர். "ஒரு திருமேனியையோ, மதிளையோ இடித்ததினுல் வைணவம் அழிந்துவிடாது; ஸ்ரீ ராமாயணம், அருளிச் செயல்கள் முதலானவையே ஸ்ரீவைஷ்ணவ மதத்துக்குக் காவலான மதிள்கள். இவற்றையிடிக்க எவராலும் முடியாது" என்று அமைதியோடிருந்தனர். அவ்வரசனை யெதிர்த்துக் கிளர்ச்சி செய்யவுமில்லை. சதிசெய்யவுமில்லை. ['திருச்சிற்றம்பலம்' என்னும் கற்பனைக் கதையில் வைணவர்கள் குலோத்துங்கனையெதிர்த்துப் பல சதிகள் செய்தார்கள் என்று ஒருவர் எழுதிவருவது அவ்வாசிரியரின் கற்பனையின் பெருமையைக் காட்டுகிறதேயொழிய, உண்மைக்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை. அக்கற்பனைக்கு ஆதாரம் ஒன்றும் கிடையாது.]

இக்காலத்திலும் வைதிகமதங்களிலிருப்பவர்கள் சகிப்புத்தன்மையில் சிறந்து விளங்குகின்றனர். வலிமையால் வைஷ்ணவர்கள் சைவர்களை மாற்றியதென்பதோ, சைவர்கள் வைணவர்களை மாற்றியதென்பதோ, கடந்த நூறு வருஷங்ளாக நிகழ்ந்ததேயில்லையெனலாம். சாதிமதங்களை ஒழிக்கவேண்டும் என்று கூச்சலிடும் அரசியல்வாதிகள்தான் நாற்சந்திகள்தோறும் கூட்டம்போட்டு, மதநம்பிக்கை உள்ளவர்களை வாயில் வந்தபடியெல்லாம் தூஷித்துக்கொண்டு சகிப்புத்தன்மையில்லாதவர்களாய் வேற்றுமையுணர்ச்சிகளைப் பாமரமக்களிடம் வளர்த்துவருகிறுர்கள். அரசாங்கமும் இதைத் தடுப்பதில்லை. வைதிகர்கள் தெய்வத்தையே நம்பி வாளாவிருக்கின்றனர்.

இங்கிலையில், அவரவர் தம்தம் மதத்தவரிடையே சகிப்புத்தன்மையோடுகூடிய மதநம்பிக்கையை வளர்ப்பதொன்றுதான் நல்லவர்கள் செய்யக்கூடியது. இம்முறையில் நம்மால் இயன்றதைச் செய்யவே இந்நூலை எழுதுகிறோம்.

acharya.org

2. அநாதியான வைதிகமதமே உயர்ந்தது

உலகிலுள்ள மற்ற மதங்களையெல்லாம் பார்த்தால், அவை ஒருகாலத்தில் ஒருவரால் ஏற்படுத்தப்பட்டவை யென்பதைக் காண்கிறோம். அவையெல்லாம் எல்லா மதங்களுக்கும் பொதுவான உண்மையுரைத்தல், தீமை தவிர்த்தல் முதலான அடிப்படை தர்மங்களை வற்புறுத்திய போதிலும், வேற்றுமைமிக்க உலக வாழ்க்கையின் காரணத்தைக் கண்டுபிடிப்பதிலும், மற்றும் பல புரியாத வாழ்க்கைப் புதிர்களை அவிழ்ப்பதிலும் தவறிவிட்டன என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். கர்மத்தை யும், அதன் காரணமாக ஏற்படும் கணக்கற்ற பிறப்புகளை யும் வற்புறுத்தும் வைதிகமதங்களே உலக வாழ்க்கையின் வேற்றுமைகளுக்குத் திருப்திகரமான சமாதானத்தைச் சொல்லுகின்றன. உலகில் காணப்படும் நூல்களில் மிகப்பழைமையானது வேதம் என்பது அனைவரும் ஒப்புக் கொண்டது. உண்மையில், இவ்வேதக்கொள்கைகளில் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்கொண்டுதான் உலகி லுள்ள வெவ்வேறு மதங்களும் பிற்காலத்தில் தோன்றி யுள்ளன என்பது நடுநிலைநின்று ஆராயுமவர்களுக்குப் புலப் படும். வேதஞ்சொல்லும் மதத்திலேயே முழு உண்மை அடங்கியுள்ளதென்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

3. பண்டைத் தமிழில் வேதம்

இவ்வேதம் காலந்தோன்றிய நாள்முதல் பாரததேசத்தி லுள்ள ஆஸ்திகர் அனைவராலும் ப்ரமாணமாக ஒப்புக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. நாஸ்திகர்களில்கூட ஸாங்க்யர்களைப்போன்ற சிலர் வேதத்தை ப்ரமாணமாகக் கொண்டிருந்தனர். வடநாட்டில் மாத்திரமன்றியே தென் னாட்டிலும் ஆதிகாலம் தொடங்கி மக்கள் வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டு வாழ்ந்தனர்.

மிகப்பழைய தமிழ்நூல் எனக் கருதப்படும் தொல் காப்பியத்திலே திருமால், முருகன், இந்திரன், வருணன்

acharya.org

என்னும் வேதக்கடவுளர் நால்வருக்கு நாலுவகை நிலங்கள் உரியனவாகக் கூறப்பட்டுள்ளன. மற்றும் பல வேதக் குறிப்புகளும் உள்ளன.

தமிழ் நாட்டில் மிகப்பழங்காலத்தில் இயற்றப்பட்ட பாடல்கள் எட்டுத்தொகை என்றும், பத்துப்பாட்டு என்றும் கடைச் சங்க காலத்தில் தொகுக்கப்பெற்றன. அவற்றில் பலவிடங்களில் பழந்தமிழர்கள் வேதத்தைச் சிறந்த பிரமாணமாக ஒப்புக்கொண்டு பாடியிருக்கிறுர்கள்.

பரிபாடலிலே, "அந்தணர் அருமறைப் பொருள்" என்று முதற்பாட்டிலும், மூன்ரும் பாட்டிலும், "அந்தணர் அருமறை" என்று நாலாம் பாடலிலும், "ஒரு சார் அறத்தொடு வேதம் புணர் தவம் முற்றி......திறத்தின் திரிவு இல்லா அந்தணர்" என்று பரிபாடல் திரட்டிலுள்ள பாடலிலும் பாடியிருப்பதிலிருந்து, அக்காலத்தில் வேதமானது அந்தணரின் அரிய த₄னமாகக் கருதப்பட்டு வந்ததென்று விளங்குகிறது. பதிற்றுப் பத்து மூன்ரும் பத்து நாலாம் பாடலில், "ஓதல், வேட்டல், அவை பிறர்ச்செய்தல். ஈதல் ஏற்றல் என்று ஆறு புரிந்து ஒழுகும் அறம் புரி அந்தணர்" என்று அந்தணருக்கு உரிய ஆறு தொழில்களில் வேதம் ஓதுதலையும். ஓதுவித்தலையும் குறிப்பிட்டிருப்பதும் உணரத்தக்கது.

"யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம் யோ வை வேத₃ாம் ஶ்ச ப்ரஹிணேுதி தஸ்மை" என்று பரம்பொருள் ஆதிகாலத்தில் பிரமனைப் படைத்து அவனுக்கு வேதங்களை ஓதிவைத்ததாகவும், **"ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமப₄வத்"** என்று பிரமன் தாமரையிதழில் தோன்றியதாகவும் வேதம் ஓதுவதைப் பின்பற்றி, "நாம வெள்ளத்து நடுவண்தோன்றிய வாய்மொழி மகனெடு மலர்ந்த தாமரைப் பொகுட்டு" என்று பரிபாடலில் திருமாலைப்பற்றிப் பாடும் மூன்ரும் பாடல்— வாய்மொழியாகிய வேதத்தையோதும் மகனுகிற பிரமனேடு

acharya.org

உந்தித் தாமரை மலர்ந்தது என்று கூறியிருப்பது சுவைக்கத் தக்கது. வேதமானது ஏடு பார்த்துப் படிக்கப்படுவதில்லை, வாயால் ஓதப்பட்டும் ஓதுவிக்கப்பட்டுமே வழிவழியாக வந்தது என்பது தோற்ற, "வாய்மொழி" என்று சங்கப் பாடல் பலவற்றிலும் வேதம் வழங்கப்படுகிறது. "கெடு இல் கேள்வி" என்றும் இரண்டாவது பரிபாடலில் படிக்கப் படுகிறது. "வாய்மொழி" என்றும். "கேள்வி" என்றும் சொன்னது, வடமொழியில் வேதத்துக்கு வழங்கும் "ஆம்நாயம்" "ஶ்ருதி" என்னும் பெயர்களின் மொழி பெயர்ப்பாகும்.

வேதமே பாரதநாட்டில் காலந்தோன்றிய நாள்முதல் வழங்கிவரும் சாஸ்திரம் என்பதை, பரிபாடலின் மூன்றும் பாடல் "முதுமொழி" என்றும், "முன்னை மரபின் முது மொழி" என்றும் "தொல் இயல்" என்றும் வேதத்தைக் குறிப்பிட்டிருப்பதிலிருந்தும் உணரலாம். "முக்கோல் கொள் அந்தணர் முதுமொழி நினைவார் போல்" என்னும் நெய் தற்கலிப் பாடல் ஒன்றிலே த்ரித₃ண்டி₃ ஸந்யாஸிகள் பரம வைதிகர்களாய் வாழ்ந்து வந்தது காட்டப்பெற்றுள்ளது. வேதமானது ஆயிரம் தாய்தந்தையரைக் காட்டிலும் பரிவுடன் உயிர்களுக்கு நன்மையை உபதேசிப்பது என்று வடமொழி நூல்களில் வழங்கும் கருத்தை, "நலம் புரீஇ அம் சீர் நாம வாய்மொழி" என்னும் தொடராலே இளம் பெரு வழுதியார் என்னும் சங்கப்புலவர் பதினைந்தாவது பரிபாடலிலே உணர்த்துகிறார். வேதம் ஒருவராலும் ஏவப்படாதது – அபௌருஷேயமானது – என்பதைப் பதின் மூன்றாவது பரிபாடலிலே "ஏவல் இல் முது மொழி" என்னும் தொடரால் நல்லெழுனியார் காட்டுகிறார். "கெடு இல் கேள்வி" என்று இரண்டாம் பாடலிலே கீரந்தையாரும், "மாயா வாய்மொழி" என்று மூன்றாவது பாடலிலே கடுவன் இளவெயினனாரும் வேதம் என்றும் அழியாதது என்று அறிவிக்கிறார்கள்.

acharya.org

வேதத்தை ஓர் ஓடையாகவும், அந்த ஓடையிலே மலர்ந்த தாமரையிலே பிரமன் பிறந்ததாகவும் மூன்றுவது பரிபாடலிலே பாடப்படுகிறது—"வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோன்" என்று. "தாமரைப்பூ படைப்பிற்கு முதலாக வந்து மலரும் என்பதற்கு வேதம் ஞாபகவேது ஆதலின், அதற்கு அதனை ஓடையாக உப சரித்துக் கூறினர்" என்பது இவ்விடத்தில் பரிமேலழகர் உரை. மூன்றுவது பாடலிலே "வேதத்து மறை நீ" என்ற விடத்திற்கு உரையிடும்போது, 'மறை' என்னும் சொல் உபனிஷத்தைக் குறிக்கிறதென்கிருர் பரிமேலழகர். ஸாம வேதம் கானரூபமாயிருப்பதாகையாலே, 'ஏஎ' என்னும் சொல்லாலே மூன்றுவது பாடலில் அவ்வேதம் குறிப்பிடப் படுகிறது என்கிருர் பரிமேலழகர். எட்டாம் பரிபாடலிலே "மேவரு முதுமொழி" என்று, ஓதுவதற்கு மிகவும் அரியது என்று வேதத்தைப் பற்றிப் பாடுகிருர் ஆசிரியர் நல்லந் துவனர் என்னும் சங்கப்புலவர். இவையெல்லாம் பண்டைத் தமிழர் வேதத்திலே மிக ஆழ்ந்த அறிவு படைத்தவராயிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. மதுரையைப் பற்றியதொரு பரிபாடலிலே —

"பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாது எம் பேர் ஊர் துயிலே"

என்று சங்கப்புலவர் படுகிருர். இதன் பொருளாவது:- "எம்முடைய பாண்டியநாட்டுத் தலைநகராகிய மதுரை, பிரமன் முதலில் ஓதிய வேதவொலியை அந்தணர் எழுப்ப, அதனலே துயில் உணருமேயல்லாமல் சோழநாட்டுத் தலை நகரான உறையூரைப்போலும், சேரநாட்டுத் தலைநகரான வஞ்சியைப்போலும் கோழி கூவ, அதனல் துயிலெழாது" என்பது. இதனல் பண்டைத் தமிழ்நாட்டிலே வேதகோஷம் மிகவும் போற்றப்பட்டு வந்தது என்று தெளிவாகிறது.

acharya.org

பல சங்கப்பாடல்கள் திருமாலை வேதமுதல்வன் என்று சிறப்பித்துள்ளன; சில வேதவாக்கியங்களை அப்படியே தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றன.

> "மாநிலம் சேவடியாகத் தூநீர்
> வளை நரல் பௌவம் உடுக்கை ஆக
> விசும்பு மெய்யாக, திசை கை ஆக
> பசுங்கதிர் மதியமொடு சுடர் கண் ஆக
> இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
> வேத முதல்வன் — என்ப —
> தீது அற விளங்கிய திகிரியோனே"

என்னும் நற்றிணைக் கடவுள் வாழ்த்து, சூரியசந்திரர்களைக் கண்ணுகவும், பூமியைப் பாதமாகவும் எல்லாப் பொருள் களையும் பரம்பொருளின் ஒவ்வோர் அவயவமாகவும் கூறு கின்றதான

> "அக்₃நிர் மூர்த்₄தா சக்ஷுஷீ சந்த்₃ரஸூர்யௌ
> தி₃ஶ: ஶ்ரோத்ரே வாக்₃விவ்ருதாஶ்ச வேதா₃: ।
> வாயு: ப்ராணோ ஹ்ருத₃யம் விஶ்வமஸ்ய
> பத்₃ப்₄யாம் ப்ருதி₂வீ ஹ்யேஷ ஸர்வபூ₄தாந்தராத்மா ॥"

என்னும் முண்டகோபனிஷத்தின் மந்திரத்தையும் "காண் பனவும் கேட்பனவுமாகிற எல்லாப் பொருள்களின் உள் ளும் புறமும் வியாபித்து விளங்குகிருன் நாராயணன்" என்று உரைக்கின்றதான

> "யச்ச கிஞ்சித் ஜக₃த்யஸ்மிந் த்₃ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா ।
> அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த: ॥"

என்னும் தைத்திரீய நாராயணவல்லீ வாக்கியத்தையும் உள்ளடக்கியது என்பது வெளிப்படை.

> "'வாய்மொழி ஓடை மலர்ந்த
> தாமரைப் பூவினுள் பிறந்தோனும், தாதையும்
> நீ' என மொழியுமால் அந்தணர் அருமறை"

என்று பரிபாடலில் மூன்றும் பாடலிலுள்ள அடிகள்.

acharya.org

"யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம்" "நாராயணுத் ப்₃ரஹ்மா ஜாயதே"

என்று பிரமனைப் படைத்தவனுகவும், "ஸ ப்₃ரஹ்மா" என்றும், "ப்₃ரஹ்மா நாராயண:" என்றும் பிரமனும் அவனே என்றும் நாராயணனைப்பற்றி உபனிஷத்துக்கள் ஓதுவதை வெளிப்படையாகவே காட்டுகின்றன.

"சாயல் நினது வான் நிறை—என்னும்
நா வல் அந்தணர் அருமறைப் பொருளே" என்று

இரண்டாம்பாடலிலே திருமாலின் நிறம் நீர் நிறைந்த மேகம் போன்றது என்று வேதம் கூறுவதாகச் சொல்லப்படுகிறது. இவ்வடிகள் **"நீலதோயத₃மத்₄யஸ்த₂ா வித்₃யுல்லேகே₂வ ப₄ாஸ்வரா"** என்று திருமாலின் உருவை மின்னலோடு கூடிய நீலமேகத்திற்கு ஒப்பிடும் நாராயணவல்லீவாக்கியத்தை உட்கொண்டே பாடப்பட்டவை என்பது தெளிவு.

"ஆகாஶாத் வாயு: வாயோரக்₃நி: அக்₃நேராப: அத்₃ப்₄ய: ப்ருதி₂வீ" என்று, ஆகாசம், வாயு, தீ, நீர், பூமி ஆகிய ஐம்பெரும்பூதங்கள் முறையே ஒன்றிலிருந்து ஒன்ருக ஊழி காலத்தில் தோன்றுவதாக உபனிஷத்துக்களில் ஓதுவதைப் பின்பற்றி, பரிபாடலில் இரண்டாம் பாடலில் விசும்பில் ஊழி. வளி என்னும் காற்று கிளர்ந்த ஊழி. செந்தீ ஊழி, தண் பெயல் என்னும் நீர்பொழியும் ஊழி, நிலத்தூழி என்னும் முறையிலே ஊழிகாலங்களை முறைப்படுத்திக் கூறுவதும் காணத்தக்கது. இப்படி வேதார்த்தங்கள் பேசப்படும் இடங்கள் பலவும் உண்டு. மேலே காணலாம்.

வேதத்தில் போற்றப்படும் திருமால், உருத்திரன் முதலான தெய்வங்கள் சங்கப்புலவர்களாலும் பாடப்பெற்றிருக்கின்றனர். வேதத்தில் சொல்லப்பட்ட வேள்விகள் வருணிக்கப் பெற்றிருக்கின்றன. திருமாலை வேதமுதல்வனுகப் பாடும் பாடல்கள் பல உண்டு. "வேதமுதல்வன்" என்று நற்றிணைக் கடவுள் வாழ்த்திலும். "சேவல் அம்

acharya.org

கொடியோய்! நின் ஏவலுள் பணிந்தமை கூறும் நா வல் அந் தணர் அருமறைப் பொருளே" என்றும். "வாய்மொழிப் புலவ" என்றும், "கெடு இல் கேள்வியுள் நடு" என்றும், "மூ ஏழ் உலகமும் உலகினுள் மன்பதும் மாயோய்! நின் வயின் பரந்தவை உரைத்தேம்-மாயா வாய்மொழி உரைதர" என்றும், "பதினுயிரம் கை முதுமொழி முதல்வ" என்றும், "வேதத்து மறை நீ" என்றும், "தொல் இயல் புலவ" என்றும், "நின்னோர் அன்னோர் அந்தணர் அருமறை" என்றும், "பாப்புப் பகையைக் கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனே ஏவலின் முதுமொழி கூறும்" என்றும் "நலம் புரீஇ அம்சீர் நாம வாய்மொழி இது என உரைத் தலின் பெரும் பெயர் இருவரைப் பரவுதும்" என்றும், "ஏஎ இன கிளத்தலின் இனமை நற்கு அறிந்தனம்" என் றும் பரிபாடலில் பலவிடங்களிலும் சங்கப்புலவர்கள் திருமாலே வேதமுதல்வன் எனப் போற்றியிருப்பதும் உணர்ந்து இன்புறத்தக்கது.

இவற்றிலிருந்து பண்டைத் தமிழர் சிறந்த வைதிகர் களாயிருந்தனர் என்பதும், திருமாலையே வேதமுதல்வ ஞகக் கொண்டிருந்தனர் என்பதும் விளங்கும். சங்கத் தமிழ்ப் பாடல்கள் பலவற்றுக்கு உரைசெய்து இதை விளக்குவோம் இனி. முதலில் பரிபாடல்களில் சில பாடல்களைக் காண்போம்.

பரிபாடல்—முதற்பாடல்

முதற்பாடல் முழுமுதற்கடவுளான திருமாலைத் துதிக் கிறது. இதன் ஆசிரியர் இன்னர் என்று தெரியவில்லை. இப்பாடலின் பரிமேலழகருரை பெரிதும் சிதைந்து காணப் படுகிறது. இனி, பாடலைப் பகுதி பகுதியாகக் கொடுத்து விளக்குவோம்.

ஆயிரம் விரித்த அணங்குடை அருந் தலை
தீ உமிழ் திறலொடு முடிமிசை அணவர,

acharya.org

மாவுடை மலர் மார்பின், மை இல் வால் வளே மேனி,
சேய் உயர் பணிமிசை எழில் வேழம் ஏந்திய
வாய் வாங்கும் வளே நாஞ்சில், ஒரு குழை ஒருவனே;

(ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலே) ஆயிரமாக விரித்துக்கொண்ட அழகுடைய அரிய தலேகளேயுடைய ஆதிசேஷன். (ஆயிரம் விரித்த) பரமபதத்திலுள்ளார் கைங்கரியம் செய்யும்போது **"ஸஹஸ்ரத₄ா ப₄வதி"** என்று ஆயிரம் உருவம் எடுக்கிருர்கள் என்று அருமறை அறிவிக்கிறதன்றே. (அணங்கு) அழகுடைய; திவ்யமான (அப்ராக்ருதமான) என்றுமாம். (அருந்தலே) பரமபுருஷனுக்கு எல்லாவிதமான அடிமையையும் செய்யவல்ல அருமையையுடைய தலே.

"சென்ருற் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்ருல் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணேயாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணேயாம் திருமாற்(கு) அரவு" [முதல்-திருவ 53]

என்ருரன்றே பொய்கையாழ்வாரும். **(தீ உமிழ் திறலொடு)** உகவாதார் மேல் நெருப்பைக் கக்கும்படியான ப₃லத்தோடு கூட; பரமபதத்திலும் நித்யமுக்தர்களின் ஸாமகானத்தைக் கேட்டு அஸ்த₂ானே ப₄யஶங்கையாலே தீயுமிழ்வதாக வன்றே திருமழிசையாழ்வார் அருளினர்,—

"ஆங்காரவாரமதுகேட்டு அழலுமிழும் பூங்கார் அரவு" [10] என்று. (திறலொடு) ப₃லத்தோடு கூடிய அநந்தன். **"அமிதௌஜா: பர்யங்க:"** [கௌஷீதகீ] [அளவற்ற ப₃லத்தையுடைய அநந்தன் படுக்கை] என்று வேதம் உரைத்தது. **"ப₃லேகத₄ாமநி"** [ஸ்தோ-ர] [ப₃லத்திற்கோர் இருப்பிடம்] என்ருர் ஆளவந்தார். ஸர்வாத₄ாரனை அவனுக்கும் ஆத₄ாரமாயிருக்கவல்ல ப₃லமன்றே. (முடிமிசை அணவர) முழுமுதல்வனுடைய முதன்மையைக் காட்டும் முடியின் மேலே குடையாக உயர்ந்து விளங்க. ஸர்வலோக சக்ர

acharya.org

வர்த்திக்கு வெண்கொற்றக்குடையிருக்கிறபடி. (மா உடை மலர் மார்பின்) திருமார்பிலே ஸ்ரீதேவியிருக்கையாலே மலர்ந்து விளங்கும் மார்பையுடையவன் இப்பெருமான். மா — லக்ஷ்மி. இந்நாமத்தின் பொருட்பெருமையை நமது ஸ்ரீஸூக்தவ்யாக்யானத்திலே கண்டுகொள்வது. (மா உடை மலர் மார்பின்) "வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும்" [திருப்பல்லாண்டு] "திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார்" [திருவாய் 10-6-9] என்றருளினர் ஆழ்வார்களும். **"உத்₃த்₄ருதாஸி வராஹேண க்ருஷ்ணேந ஶதபா₃ஹுநா"** [தைத்-நாராயணவல்லி] என்றவிடத்தில் வேதமும் வராஹப்பெருமாள் பூமிப் பிராட்டியை அணைத்தவுடன் கைகள் பணைக்கப்பெறுகிறுன் என்றது. "நிர்விகாரம்" என்னும் தத்துவமிருக்கும்படியிது. தாழ்வைத்தரும் விகாரமில்லையென்று நிர்விகாரஶ்ருதிக்குப் பொருள் கொள்ளவேணுமேயொழிய உயர்வைத் தரும் விகாரங்களுமில்லையெனில் அசேதனதத்துவமாமன்றே. (மை இல் வால் வளை மேனி) குற்றமற்ற சங்குபோன்ற வெளுத்த நிறமுடையவன். **"சங்கவண்ண மன்ன மேனி சார்ங்கபாணியல்லையே"** **"பாலினீர்மை"** [திருச்சந்த-44] **"நிகழ்ந்தாய் பால் வண்ணம்"** [நான்-திருவ 24] **"வளையுரு வாய்த் திகழ்ந்தான்"** [திருநெடு-3] என்ற க்ருதயுக₃ வர்ணத்தைச் சொல்லுகிறது. பின் வருவதற்கு விஶேஷணமாய் ப₃லராமனைச் சொல்லுவதாகவுமாம். "வெள்ளிப் பெரு மலைக்குட்டன்...பலதேவன்" [பெரியாழ்-திரு 1-7-5] என்றுரன்றே பெரியாழ்வாரும். (சேய் உயர் பணை மிசை எழில் வேழம் ஏந்திய) மிகவுயர்ந்த மூங்கிலை உண்ணும் அழகிய யானையைக் கொடியாக ஏந்திய பலராமனுக அவதரித்தான் இப்பரமபுருஷன். யானைக்கு மூங்கில் இனிய உணவென்பதை **"பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன் நின்று இருகண் இளமூங்கில் வாங்கி, அருகிருந்த தேன்கலந்து நீட்டும்"** [இர-திருவ 75] என்று பூதத்தாழ்வார் அருளினர். (வாய் வாங்கும் வளை நாஞ்சில்) வளைந்த வாயினை உடைய

acharya.org

கலப்பையை ஆயுதமாகக் கொண்டவன் பூலராமன். நாஞ்சில் – கலப்பை. (ஒரு குழை ஒருவனை) ஒற்றைக் காதில் 'குழை' என்னும் காதணியை அணிந்தவன் பூலராமன். இப்படிப்பட்ட பூலராமனாக அவதரித்த ஒப்பற்ற பரமபுருஷனே! என்று விளிக்கிறது.

எரிமலர் சினைஇய கண்ணை; பூவை
விரிமலர் புரையும் மேனியை; மேனித்
திரு ஞெமர்ந்து அமர்ந்த மார்பினை; மார்பில்
தெரிமணி பிறங்கும் பூணினை; மால் வரை
எரி திரிந்தன்ன பொன்புனை உடுக்கையை—
சேவல் அம் கொடியோய்! நின் வல வயின் நிறுத்தும்
ஏவல் உழந்தமை கூறும்,
நா வல் அந்தணர் அரு மறைப் பொருளே.

முதல் ஐந்து அடிகளிலே திருமாலை விளித்து, அடுத்து வரும் இப்பகுதியால் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹச் சிறப்பைக் கூறி, இவனே ஸர்வலோக நாயகனென்று கூறி, இவ்வர்த்தத்தில் ப்ரமாணம் அருமறையென்கிறது. குணமில்லை, விக்ரஹமில்லை, விபூதியில்லை என்பாருடைய மிடற்றைப் பிடித்தாற்போலேயிருக்கின்றன இவ்வடிகள்.

(நின் வலவயின் நிறுத்தும் சேவல் அம் கொடியோய்) உன்னுடைய வலப்பக்கத்தில் நிறுத்தியிருக்கும் அழகிய கருடக்கொடியை உடையவனே! சேவல் - ஆண்பறவை; (இங்கு) கருடன். க₃ருட₃த்₄வஜனென்று ரிஷிகளும். "கருளப் புட்கொடி" [திருவாய் 5-7-3] "கருளக் கொடியென்றுடையீர்" [பெரியதிரு 10-8-3] என்று ஆழ்வார்களும் கூறிய பரத்வ சின்னத்தைச் சொல்லுகிறது. வேதஸ்வரூபியான பக்ஷிராஜனைக் கொடியாகவும் வாஹனமாகவுமுடையவனே வேத முதல்வனாயிருக்கமுடியுமென்று கருத்து, இனி, அவனுடைய மற்ற பல அஸாத₄ாரண சின்னங்களைக் கூறி வேதத்தை ப்ரமாணமாக்குகிறது. " அருமறைப்பொருளே கூறும் "

acharya.org

என்பதை ஒவ்வொரு வாக்கியத்தோடும் கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். (எரிமலர் சினைஇய கண்ணை — அருமறைப் பொருளே கூறும்) செந்தாமரை மலரை ஒத்த கண்களை உடையவனாய் இருக்கின்றாய். இதை வேதம் கூறும். எங்கேயெனில்: **"தஸ்ய யத$_2$ா கப்யாஸம் புண்ட$_3$ரீக மேவமக்ஷிணீ"** [சா$_2$ந்] [அந்தப் பரமபுருஷனுக்கு சூரியனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள] என்றதன்றோ அருமறை. விரூபாக்ஷரிலும் வேறுபாடு. (பூவை விரிமலர் புரையும் மேனியை-அருமறைப் பொருளே கூறும்) காயாவின் மலர்ந்த புஷ்பத்தை ஒத்த கறுத்த மேனியை உடையவனாகிறாய். இதையும் **"நீலதோயத$_3$மத்$_4$யஸ்த$_2$ா வித்$_3$யுல் லேகே$_2$வ ப$_4$ாஸ்வரா"** [தை-நாரா] [நீலமேகமுட்கொண்ட மின்னற்கொடி போல் விளங்கும் மேனி] என்றவிடத்திலே வேதம் விளக்குகிறது. எரியுருவத்தாரிலும் வேறுபாடு. (மேனித் திரு ஞெமர்ந்து அமர்ந்த மார்பினை—அருமறைப் பொருளே கூறும்) அந்த மேனியிலே பெரியபிராட்டியார் விரும்பி வாழும் மார்பை உடையாய். **"ஹ்ரீஶ்ச தே லக்ஷ மீஶ்ச பத்ந்யௌ அஹோராத்ரே பார்ஶ்வே"** [பு. ஸூ] [ஸ்ரீபூமி தேவிகள் உன் பத்தினிகள்; இரவுபகலாக அருகிலிருக்கின்றனர்] என்றது வேதம். **"மத்$_4$யஸ்த$_2$ா வித்$_3$யுல்லேக$_2$ா"** [தை-நாரா] என்றவிடத்திலும் இது உணர்த்தப்பட்டது. திருவில்லாத் தேவரிலும் வேறுபாடு. (ஞெமர்ந்து அமர்ந்த) விரும்பியமர்ந்த. தாமரையிலிருப்பும் முள்மேலிருப்பு என்கை. (மார்பில் தெரிமணி பிறக்கும் பூணினை — அருமறைப் பொருளே கூறும்.) அம்மார்பிலே தெரிந்தெடுத்த மணிகள் பதிக்கப்பெற்ற ஆபரணங்களை உடையாய். **"ஆப்ரணக$_2$ாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:"** [சா$_2$ந்] [நகம் முதல் எல்லாம் பொன் மயம்] முதலான வேதவாக்கியங்கள் இதைச் சொல்லும். கபால ப$_4$ஸ்ம பங்கக$_3$ாத்$_3$யாப$_4$ரணமுடையாரில் வேறுபாடு. (மால்வரை எரி திரிந்து அன்ன பொன்புனை உடுக்கையை— அருமறைப்பொருளே கூறும்) நீலமலையொன்றைச் செந் நெருப்புச் சூழ்ந்து கொண்டிருப்பது போன்ற பொன்னை

acharya.org

லான பீதாம்பரத்தையுடையை. "**மாஹாரஜநம் வாஸ:**" [ப்₃ருஹு] என்று வேதம் இதை உணர்த்திற்று. புலித் தோலை அரைக்கிசைத்தாரிலும் வேறுபாடு. (ஏவலுள் பணிந்தமை கூறும் நா வல் அந்தணர் அருமறைப் பொருளே) எல்லாவுலகும் உன்னுடைய ஏவலுக்குப் பணிந்து நிற்கின்றமையை நாவன்மையுடைய அந்தணர் ஓதும் அரியமறையாகிற பொருள் கூறும். மறையின் பொருள் அனைவர்க்கும் காட்டும் என்றுமாம். ஏவலுள் பணிந்தது இன்னபொருள் என்று எடுக்காமையாலே எல்லாப் பொருளும் என்றதாகிறது. வேதம் எங்கே இப்படிச் சொல்லிற்றெனில்:

"யச்ச கிஞ்சித் ஜக₃த்யஸ்மிந் த்₃ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா।
அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:॥"
[தை-நாரா]

[இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமான அனைத்தையும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிருன் நாராயணன்.]

"யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம், யம் ப்ருதி₂வீ ந வேத₃,
ய: ப்ருதிவீமந்தரோ யமயதி...
யஸ்யாத்மா ஶரீரம், யமாத்மா ந வேத₃,
ய ஆத்மாநமந்தரோ யமயதி"[அந்தர்யாமிப்₃ராஹ்மணம்]

[எவனுக்கு பூ₄மி சரீரமோ, எவனை பூமி அறியவில்லையோ, எவன் பூமியை உள்நுழைந்து நியமிக்கிருனே, எவனுக்கு ஆத்மா சரீரமோ, எவனை ஆத்மா அறியாதோ, எவன் ஆத்மாவை உள்நுழைந்து நியமிக்கிருனே...]

"ஏஷ ஸர்வபூ₄தாந்தராத்மா அபஹதபாப்மா தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:" [ஸுப₃ால]

[பரமபத₃த்திலுள்ள நாராயணன் ஒருவனே பாபமற்ற வனுயும், எல்லா பூதங்கட்கும் அந்தர்யாமியாயும் விளங்கு மவன்] முதலான பல வேதவாக்கியங்கள் இதை உத் கோஷித்தன.

acharya.org

இணை பிரி அணி துணி பிணி மணி எரி புரை
விடர் இடு சுடர் படர் பொலம் புனை வினைமலர்
நெரி கிடர் எரி புரை தன மிகு தன முரண் மிகு
கடறரு மணியொடும் முத்து யாத்த நேரணி
நெறி செறி வெறி உறு முரல் விறல் வணங்கு அணங்கு வில்
தார் அணி துணி மணி வெயில் உறழ் எழில் புகழ் அலர் மார்பின்
எரி வயிர நுதி எரி படை எருத்து மலை இவர் நவையினிற்
றுணி படல் இல மணி வெயில் உறழ் எழில் நக்கு
இமை இருள் அகல முறு கிறுகு புரி ஒரு புரி நாள்மலர்
மலர் இலகின வளர் பரிதியின் ஒளி மணி மார்பணி
மணம் மிக நாறு உருவின விரை வளி மிகு கடு விசை
உடுவுறு தலை நிரை இதழ் அணி வயிறிரிய அமரரைப்
பொரெழுந்து உடன்று இரைத்து உரைஇய தானவர்
சிரம் உமிழ் புனல் பொழிபு இழிந்து உரம்
உதிர்பு அதிர்பு அலம் தொடா அமர் வென்ற கணை.

உறுப்புக்கள் பெரிதும் சிதைந்து காணப்படுதலால், இதன் பொருள் தெளிவாக அறிய இயலவில்லை. பரமபுருஷனுடைய திவ்யாபரணங்களையும், அசுரர்களை அழிக்கும் ஆயுதங்களையும் பேசுகிறதென்பது விளங்குகிறது. முதலிரண்டடிகள் அவன் திருமேனியை அலங்கரிக்கும் மலர்களைப் பேசுகிறது, 'மலர்' என்பதை ஒவ்வொரு பதத்தோடும் கூட்டினால் ஒவ்வொருவகை மலராகிறது. இணைமலர், பிரிமலர், அணிமலர், துணிமலர், பிணிமலர், மணிமலர், எரிமலர், புரைமலர், விடர்மலர், இடுமலர், சுடர்மலர், படர்மலர், பொலம் மலர், புனைமலர், வினைமலர் என்கை. அடுத்த இரண்டடிகளும் அவனுடைய அணிகளைப் பேசுகின்றன. நெரி அணி, கிடர் அணி, எரி அணி, புரை அணி, தன மிகு அணி, தனமுரண் அணி, மிகு கடல்தரும் அணி, முத்து யாத்த நேர் அணி என்பவை ஆபரணங்களாகும். அடுத்த அடி அவனுடைய சார்ங்கமென்னும் வில்லின் பெருமையைப் பேசுகிறது. நெறி வில், செறி வில், வெறி வில், உறு வில், முரல் வில்,

acharya.org

விறல் வில், வணங்கு வில், அணங்கு வில் என்றபடி. அடுத்த அடி திருமார்பின் பெருமையைப் பேசுகிறது. தார் மார்பு, அணி மார்பு, துணி மார்பு, மணி மார்பு, வெயில் உறழ் மார்பு, எழில் மார்பு, புகழ் மார்பு, அலர் மார்பு என்றபடி. அடுத்துள்ள சில அடிகள் மார்பில் தரித்திருக்கும் வைஜயந்தியென்னும் வனமாலையைப்பேசுகின்றன. அடுத்து வரும் அடிகள் அமரரோடு பொர (யுத்தம் செய்ய) எழுந்து வரும் தானவர்(அசுரர் அரக்கர்)களுடைய தலையைக் கொய்து, அமரிலே வெற்றியே கொள்ளும் கணையைப் பேசுகிறது. எவ்வளவு அழகிய வருணனை! "பிரதியுதவியும் உரையுதவியும் இல்லாமையால், அடிவரையறையும், பொருள்வரையறையும் செய்து இந்த அராகங்கள் நான்கினையும் ஒழுங்குபடுத்த இயலவில்லை. இங்ஙனமே மூலத்திலும் உரையிலும் சிலசில பின்னும் உள" என்று ஐயரவர்கள் தம் பதிப்பில் குறித்துள்ளனர்.

'பொருவேம்' என்றவர் மதம் தபக் கடந்து,
செரு மேம்பட்ட செயிர் தீர் அண்ணல்!
இருவர் தாதை! இலங்கு பூண் மாஅல்!
தெருள நின் வரவு அறிதல்
மருள் அறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே:
அன்ன மரபின் அனையோய்! நின்னை
இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது ?

இவ்வேழடிகளிலும், முனிவர்களாலும் அறியமுடியாத பரம்பொருளாகிற உன்னை நாம் எப்படி உரைக்கமுடியும்? என்கிறது.

(பொருவேம் என்றவர் மதம் தபக்கடந்து) **"த்₃வித₄ா ப₄ஜ்யேயமபி ஏவம் ந நமேயம்"** [ரா-யு 36-11] [இரண்டாகப் பிளக்கப்பட்டாலும் படுவேனேயொழிய வணங்கமாட்டேன்] என்னும்படியான துவேஷத்தையுடையவர்களுடைய மதம் அழியும்படியாகப் போரிட்டு வென்று; **"கூடாரை**

acharya.org

வெல்லும் சீர்'' [திருப்பாவை 27] என்றுள் ஆண்டாள். (செரு மேம்பட்ட செயிர் தீர் அண்ணல்) **''சென்று கொன்று வென்றி கொண்ட வீரன்''** [திருச்சந்த 116] என்கிற படியே எப்போதும் யுத்தத்திலே வெற்றியே கொள்ளும் குற்றமற்ற ஸ்வாமியே! (செரு மேம்பட்ட) **''ஹுங்காரேண மஹாதே₃வ: ஸ்தம்பி₄தோऽதீ₃ த்ரிலோசந:''** [ரா-பு₃ா 75-18] [விஷ்ணுவின் ஹுங்காரத்தாலே மஹாதே₃வனுன முக்கண்ணன் மயக்கமுற்றுர்] என்னும் நிலே என்றும் இவனுக்குக் கிடையாதென்கை. (செயிர் தீர் அண்ணல்) அதர்மயுத்தம் செய்யும் குற்றமுமில்லேயென்கை. (இருவர் தாதை) மும்மூர்த்திகளில் மற்றுள்ள இருமூர்த்திகளுக்கும் தந்தையாயிருப்பவனே! **''நாராயணுத் ப்₃ரஹ்மா ஜாயதே, நாராயணுத் ருத்₃ரோ ஜாயதே''** [நாராயணேபநிஷத்] [நாராயணனிடமிருந்து பிரமன் பிறக்கிறுன்; நாராயணனிடமிருந்து உருத்திரன் உண்டாகிறுன்.] என்ற வேதத்தை நினைக்கிறது. 'பிரமனுக்கும் மன்மதனுக்கும் தந்தையே!' என்று உரையிடுகின்றனர் சிலர்: பிரமனுக்கும் காமனுக்கும் 'இருவர்' என்று சேர்த்துக் குறிப்பிடத்தக்க தொடர்பொன்றுமில்லாமையால், அது பொருத்தமுடைய பொருளன்று. ஸ்ருஷ்டி ஸம்ஹார மூர்த்திகளேக் குறிப்பதாகக்கொள்ளுவதே பொருத்தமுடையது. (இலங்குபூண் மாஅல்) **''ஆப்ரணகா₂த் ஸர்வ ஏவ ஸுவர்ண:''** [சா₂ந்] [நகத்திலிருந்து எல்லாம் பொன்மயமானவன்] ''பலபலவேயாபரணம்''[திருவாய்2-5-6] என்கிறபடியே ஒளிவிளங்கும் ஆபரணங்களேயுடைய திருமாலே! (மாஅல்) பெரியோனே! பரம்பொருளே! (தெருள நின் வரவு அறிதல் மருளறி தேர்ச்சி முனேவர்க்கும் அரிதே) பரமபதத்திலிருக்கும் நீ இவ்வுலகில் வந்து அவதரிப்பதைத் தெளிவாக அறிவது மயக்கமற்ற அறிவையுடைய முனிவர்களுக்கும் அரியதாகும். (அன்ன மரபின் அனேயோய்!) அப்படிப்பட்ட பெருஞ்சிறப்புக்களேயுடைய பெரியவனே! 'அப்படிப்பட்டவன்' என்பதொழிய முடிய விவரிக்கலாவதில்லே. (நின்னே இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் **எளிது)**

acharya.org

உன்னை இப்படிப்பட்டவன் என்று உரைப்பது சிற்றறிவாளர்களான எமக்கு எப்படி எளிதாகும்? **"க இத்த₂ா வேத₃ யத்ர ஸ:"** [கடோ₂பநிஷத்] [அவன் எப்படிப்பட்டவன் என்பதை எவன் அறிவான்?] **"யஸ்யாமதம் தஸ்ய மதம்"** [கேந 2-3] [எவனுக்குப் பரம்பொருள் அறியப்படவில்லையோ, அவனுக்கே அது அறியப்பட்டதாகிறது] **"ஸோ அங்க₃ வேத₃ யதி₃ வா ந வேத₃"** [யஜுர்வேதம்] [தன் பெருமையை அவனே அறிவானோ மாட்டானோ] என்னும் வேதாந்தங்கள் இவனையே உரைக்கின்றன என்று காட்டப்பட்டது.

"அருமை நற்கு அறியினும் ஆர்வம் நின்வயின்
பெருமையின், வல்லாய்! யாம் இவண் மொழிபவை
மெல்லிய எனாஅ வெறாஅது அல்லி அம்
திரு மறு மார்ப! நீ அருளல் வேண்டும்"

இனி, நான்கடிகளாலே எங்கள் புன்மொழிகளை வெறுக்காது அருள்புரியவேண்டும் எனப் பிரார்த்திக்கிறது.

(அருமை நற்கு அரியினும்) உன்னைத் துதிப்பதிலே எங்களுக்குள்ள அருமையை-வல்லமையின்மையை-நாங்கள் நன்கு அறிந்தபோதிலும். (நின்வயின் ஆர்வம் பெருமையின்) உன்னிடத்திலுள்ள காதல் கடலின் மிகப்பெரிதாயிருக்கின்றமையால். (வல்லாய்) ஸர்வசக்தனே! எத்தகைய குற்றத்தையும் பொறுக்கவல்ல பரமதயாளுவே என்றுமாம். (யாம் இவண் மொழிபவை) நாம் இங்கு உன் பெருமையைக் கூறும் சொற்களை. (மெல்லிய எனாஅ வெறாஅது) 'இவை நம் பெருமைக்குப் பொருத்தமாக இல்லை; இளையபுன் கவிதைகளாயிருக்கின்றன' என்று வெறுக்காது. (நீ அருளல் வேண்டும்) நீ தயை புரியவேண்டும். (அல்லி அம் திரு மறு மார்ப) செந்தாமரையின் மீதுள்ள அழகியதிருவையும் ஸ்ரீவத்ஸமென்னும் மறுவையும் மார்பிலே உடையவனே! புருஷகார பூ₄தையான பிராட்டியை முன்னிடுகிறது. (திருமறு மார்ப

acharya.org

நீ அருளல் வேண்டும்) ஸ்ரிய:பதியே! நீ அருளவேண்டும். கருணைக்கோரிருப்பிடமான அன்னையுடைய ஸம்பந்தம் பெற்ற நீ எங்களுக்கு அருளாவிடில் அன்னை முகத்திலே விழிக்கவொண்ணாது என்கை.

"விறல் மிகு விழுச் சீர் அந்தணர் காக்கும்
அறனும் ஆர்வலர்க்கு * அருளும் நீ
திறன் இலோர்த் திருத்திய தீது தீர் கொள்கை
மறனும் மாற்றலர்க்கு அணங்கும் நீ
அம் கண் வானத்து அணி நிலாத் திகழ்தரும்
திங்களும் தெறு கதிர்க் கனலியும் நீ
ஐந் தலை உயரிய அணங்குடை அருந் திறல்
மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ
நலம் முழுது அளைஇய புகர் அறு காட்சிப்
புலமும் பூவனும் நாற்றமும் நீ
வலன் உயர் எழிலியும் மாக விசும்பும்
நிலனும் நீடிய இமயமும் நீ

இப்பனிரண்டு அடிகளாலே ஸர்வேஶ்வரனை இவனுடைய ஸர்வாத்மபாவத்தை விவரிக்கிறது. சேதநா சேதநங்களையும், தர்மதர்மிகளையும், க்ரியாக்ரியாவான்களை யும் எம்பெருமானோடு ஒரே வேற்றுமையில் படிப்பதன் மூலம் அவனன்றி எதுவுமில்லை என்று காட்டுகிறது.

(விறல் மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும் அறனும் நீ) மந்திரபலம் மிக்கவர்களாய், ஞானம் அனுட்டானம் ஆகிய சிறந்த பெருமைகளையுடையவர்களான அந்தணர்களால் ரக்ஷிக்கப்படும் தர்மமும் நீயே. அந்தணருடைய அறன் உன்னால் பிரவர்த்திக்கப்படுவதே என்கை. (ஆர்வலர்க்கு *அருளும் நீ) ஆர்வமுடைய அன்பர்களுடைய அன்பும் நீயே. "அதுவுமவனதின்னருளே" [திருவாய்8-8-3] என்கிறபடியே அவ்வன்பை விளைத்தாயும் நீயே என்கை. (திறனிலோர்த் திருத்திய தீது தீர் கொள்கை மறனும் நீ) முற்கூறிய

* (பா) அளியும்

acharya.org

அறத்திறமையில்லாதவர்களைத் திருத்துவதாய், தீமைகளைத் தீர்க்கும் சிறப்பையுடையதான மறக்கருணையும் நீயே. தீயவர்களாகிற ஹிரண்ய ராவணாதிகளை அழித்து, அவர்கள் மேலும் மேலும் தங்களுக்கும் பிறர்க்கும் துன்பத்தை விளைத்துக்கொள்ளாமல் செய்வதும் உன் மறக்கருணையின் காரியமாகும். அன்பர்களை அளிப்பது அறக்கருணை. குழந்தை கண்ணைக் குத்திக்கொள்ளாதபடி கையிலுள்ள கோலைப் பிடுங்கிவைக்கும் தாயைப்போலே, தீமைசெய்யாதபடி அவர்களுடைய உடலை அழிப்பது மறக்கருணை. இரண்டும் உன் கருணாகாரியமேயாகும். (மாற்றலர்க்கு அணங்கும் நீ) அந்த விரோதிகளின் அச்சமும் நீயே; அச்சத்தை விளைப்பாயும் நீயே என்றபடி. அறனாவதுபோலே மறனுமாகிறான்; அருள் (அன்பு) ஆவது போலே அணங்கும் (அச்சமும்) ஆகிறான் என்கை. "அயர்ப்பாய்த் தேற்றமுமாய் அழலாய்க் குளிராய்" [திருவாய்7-8-6] என்று ஆழ்வாரும் பரமபுருஷனுடைய விருத்₃த₄விபூ₄தியுடைமையை விவரித்தாரன்றோ. ஸாமாநாதி₄கரண்யம் (ஒரே வேற்றுமையில் படிப்பது)ஸ்வரூபைக்யத்தைக் காரணமாகக் கொண்டதல்ல என்பதற்கு இவை எடுத்துக்காட்டு.

உலகில் அன்பை விளைக்கும் பொருள்கள் சந்திரன் முதலியனவாகவும். அச்சத்தை விளைக்கும் பொருள்கள் சூரியன் முதலியனவாகவும் காணப்படுகின்றனவே; அப்படியிருக்க, 'அருளும் நீ அணங்கும் நீ' என்பதெப்படி? எனில்: 'அச்சந்திர சூரியர்களும் நீயே' என்கிறது மேலே; அவர்களும் உன்னாலே ஸத்தா ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளைப் பெற்று அன்பையும் அச்சத்தையும் விளைக்கின்றனர் என்று கருத்து. (அங்கண் நேர் வானத்து அணி நிலாத் திகழ்தரும் திங்களும் நீ) அழகிய இடத்தையுடைய பரிசுத்தமான வானத்திலே தோன்றி உலகுக்கே ஆபரணமாய்த் திகழும் நிலவொளியைத்தரும் சந்திரனும் நீயே. (தெறு கதிர்க் கனலியும் நீ) அனைத்தையும் எரித்து அழிக்கவல்ல சுடு கதிர்களையுடைய சூரியனும் நீயே.

acharya.org

ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்யும் முதல்வர்கள் பிரம ருத்திரர்கள் என்று லோகவேத₃ ப்ரஸித்₃த₄மாயிருக்கும் போது, எல்லாம் திருமாலாலே என்று எப்படிக் கூறுவது? எனில்: அந்தப் பிரமருத்திரர்களும் அவர்கள் செய்யும் ஸ்ருஷ்டிஸம்ஹாரத்தொழில்களும் உன்னதீனமே என்கிறது மேலே. (ஐந்தலை) ஐந்து தலைகளையுடையவன். (உயரிய) தேவர்களுக்குத் தலைவனுகையாலே உயர்ந்தவன். (அணங்குடை) பகைவர்க்கு அச்சத்தை விளைப்பவன். **'ருத்₃ரன்'** [அழச்செய்பவன்] என்று பெயர்பெற்றவன். (அருந்திறல்) அப்பெயருக்குத்தக்க பெரும் குரூரத்தன்மையை உடையவன். **"ருத்₃ரோ வை க்ரூர:"** [ருத்ரன் (எதிரிகளை வருத்துவதில்) கொடியவனன்றே] என்று வேதத்திலும் புகழப்படுபவன். (மைந்துடை ஒருவனும்) தேவர்களுக்குள்ளே ஒப்பற்ற பலத்தையுடைய உருத்திரனும் நீயே: அவனும் உன்னால் ஸத்தை பெற்றிருப்பவனே என்கை. (மடங்கலும் நீ) அவன் செய்யும் ஸம்ஹாரத் தொழிலும் நீயே. அவனைக் கருவியாகக்கொண்டு நீயே அத்தொழிலைச் செய்கிறாய் என்றபடி. சிவனும் நீயே என்றவுடன், அவன் செய்யும் ஸம்ஹாரத் தொழிலும் நீயே என்றதால் இங்கு ஸ்வரூபைக்யம் கூடாது என்று உணர்த்தப்படுகிறது. (நலம் முழுது அளைஇய புகர் அறு காட்சிப் புலமும் நீ) **"மாதா பித்ரு ஸஹஸ்ரேப்₄யோऽபி வத்ஸலதரம் ஶாஸ்த்ரம்"** [ஆயிரம் தாய் தந்தையரைக் காட்டிலும் வாத்ஸல்யம் மிகுந்தது சாஸ்திரம்] என்கிறபடியே பலதரப்பட்ட குணநலங்களுடைய சேதனர் அனைவருக்குமான நன்மைகளை ஒன்றுவிடாமல் காட்டுவதும், அப்ராமாண்யமாகிற குற்றமற்றதுமான அறிவைத்தரும் வேதமும் நீயே. காட்சி-அறிவு; **"வேத₃யதிதி-வேத₃:"** என்னும் வ்யுத்பத்தியை அடியொற்றி அனைத்தையும் புலப்படுத்துவது ஆகையாலே **'புலம்'** எனப்படுகிறது **வேத₃ம்**. **வேதம்** என்பதற்குச் சரியான தமிழ்ச்சொல். **'ச₂ந்த₃ஸ்ஸு'** என்பதற்குக் சரியாக **'மறை'** என்றும், **'ஆம்நாயம்'** என்பதற்குச் சரியாக 'வாய்

acharya.org

மொழி' என்றும் 'ஶ்ருதி' என்றதற்குச் சரியாக 'கேள்வி' என்றும் வேதத்தைப் பண்டைத்தமிழர்கள் குறித்திருப்பதும் காணத்தக்கது. "நலம் முழுது அளேஇய புகர் அறு காட்சிப்புலம்" என்று குறிப்பிடுவதிலிருந்து பண்டைத் தமிழர் வேதத்துக்கு எத்தனை மதிப்பு வைத்திருந்தார்கள் என்று புலப்படுகிறது. (புலமும் நீ) "**வேதைஶ்ச ஸர்வை ரஹமேவ வேத்₃ய: வேத₃ாந்தக்ருத் வேத₃விதே₃வ சாஹம்**" [கீ₃தை 15-15] [வேதங்களனைத்தாலும் நானே அறியப்படுபவன்: வேத கர்ம பலனைத் தருமவனும் யானே; வேதமறிந்தவனும் யானே] என்று கீதையில் சொல்லப்பட்ட தன்மைகளாலும், "**யோ வை வேத₃ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை**" என்று பிரமனைப் படைத்தவனான இவனே முதலில் அவனுக்கு வேதங்களை ஓதுவித்தான் என்கையாலும் 'வேதமும் நீயே' என்கிறது. "**அருமறையவையுமானாய்**" [பெரியதிரு 4-6-9] என்றார் திருமங்கைமன்னனும். 'சிவனும் நீ' என்பதைக் கண்டு சமரசம் பேசும் அறிவாளிகள் 'வேதமும் நீ' என்றும் 'சுடரும் நீ' என்றும், 'ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களும் நீ' என்றும் 'விசும்பும் நிலனும் நீடிய இமயமும் நீ' என்றும் கூறியிருப்பதைக் கண்டு தெளிய வேண்டும். (பூவனும் நீ) அவ்வேதத்தைக் கொண்டு ஸ்ருஷ்டியை நடத்துமவனாய், உன் உந்தித்தாமரைப் பூவினுள்ளே தோன்றியவனாகையாலே '**பூவன்**' [மலரோன்] எனப்படுமவனான பிரமனும் நீயே. (பூவன்) "ஏறனைப் **பூவனை**" [திருவாய் 2-2-3] என்றார் நம்மாழ்வாரும். (நாற்றமும் நீ) நாற்றம்—தோற்றம்; படைப்புத் தொழில். அவன் செய்யும் படைப்புத் தொழிலும் நீ. அவனைக் கருவியாகக் கொண்டு நீயே படைக்கிறாய் என்று கருத்து. (மைந்துடை ஒருவனும் நீ பூவனும் நீ) "**ஸ ப்₃ரஹ்மா ஸ ஶிவ:**" [தை-நா] [பிரமனும் அவனே; சிவனும் அவனே] "**ப்₃ரஹ்மா நாராயண:, ஶிவஶ்ச நாராயண:**" [நாராயணோபநிஷத்] [பிரமனும் நாரணனே; சிவனும் நாரணனே] என்றது பண்டைமறை. "**சிவனாய் அயனாய்**" [திருவாய் 6-9-1] என்றது தமிழ்

acharya.org

மறை. (மடங்கலும் நீ நாற்றமும் நீ) ஸ்ருஷ்டி ஸம்ஹார கர்த்தாவும் நீயே.

"ஏதௌ த்$_3$வௌ விபு$_3$த$_4$ஶ்ரேஷ்டௌ$_2$
ப்ரஸாத$_3$க்ரோத$_4$ஜௌ ஸ்ம்ருதௌ ।
தத$_3$ாத$_3$ர்ஶிதபந்த$_2$ாநௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ ॥"

[ப$_4$ார-கர்ண 169-19]

[பிரமருத்திரர்களாகிற இவ்விரு தேவர்தலைவர்களும் நாராயணனிடமிருந்து ஆநந்தத்தாலும், கோபத்தாலும் உண்டானவராகக் கூறப்படுகின்றனர். அந்நாரணனாலே வழிகாட்டப்பட்டு ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைச் செய்கின்றனர்.] என்று மஹாபாரதத்திலும், **"அரன் அயன் என உலகு அழித்து அமைத்துளனே"** [திருவாய் 1-1-8] என்று திருவாய்மொழியிலும் உரைக்கப்பட்ட அர்த்தமே இது. (வலனுயர் எழிலியும் நீ) உலகிற்கு நன்மையளிப்பதற்காக உயரத்தில் தோன்றும் மேகமும் நீ. எழிலி – மேகம். (மாக விசும்பும் நிலனும் நீ) அந்த மேகத்திற்கு ஆத$_4$ாரமான மிகப் பெரிய வெளியையுடைய ஆகாசமும் பூமியும் நீ. இது பஞ்சபூதங்களுக்கும் உபலக்ஷணம். 'க$_2$ம்'- என்று ஆகாசம்; 'விசும்பு' என்னும் ஆகாயத்தைக் குறிக்கும் சொல்லொன்று தனியேயிருப்பதால் 'கம்' என்றது வெளியைக் குறிக்கிறது. 'மாகம்' என்றது பெருவெளி என்றபடி. மாக விசும்பு-பெருவெளியுடைய ஆகாசம். அன்றிக்கே 'மாகம்' என்று, **"பரமே வ்யோமந்"** என்று வேத$_3$ங்களிலே பரமாகாசமாகக் குறிக்கப்படும் பரமபதத்தையும், 'விசும்பும் நிலனும்' என்று உபலக்ஷண மரியாதையாலே லீலாவிபூதியையும் குறித்து "உபயவிபூதியும் நீயே" என்கிறதாகவுமாம். பண்டைத்தமிழர் பரமபதத்தைக் குறித்திருக்குமிடங்களை மேலேயும் காணலாம். (நீடிய இமயமும் நீ) நீண்டு விளங்கும் இமயமலையும் நீ. **"ஸ்த$_2$ாவராணாம் ஹிமாலய:"** [கீ$_3$தை 10-15] [மலைகளுக்குள் இமயமலை நானே] என்றான் கீ$_3$தையில் கண்ணனும். **"நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே"**

acharya.org

[கீ₃தை 10-19] [என் விபூ₄திக்கு முடிவில்லை] என்று தொடங்கி முக்கியமான சிலவற்றை கீ₃தையிலே சொன்னதை அடியொற்றி "நின்னை இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது" என்றுதொடங்கி, விபூ₄திகளில் முக்கியமானவற்றைச் சொல்லிற்றாயிற்று. பரம்பொருளுக்கேயுரிய இப்பெருமைகளைப் பழந்தமிழர்கள் சிவனுக்கோ, முருகனுக்கோ அல்லது வேறெந்த தெய்வத்திற்குமோ சொன்னதில்லை என்பதை நடுநிலைவகிக்கும் நற்றமிழர் உணரவேண்டும்.

"அதனால்
இன்னோர் அனையை இனையையால் என
அன்னோர் யாம் இவண் காணாமையின்
பொன் அணி நேமி வலம் கொண்டு ஏந்திய
மன்னிய முதல்வனை ஆதலின்
நின்னோர் அனையை நின் புகழொடும் பொலிந்தே!"

இனி, ஆறு அடிகளாலே திருமாலாகிய நீயே ஒத்தாரும் மிக்காருமில்லாத முழுமுதல்வன் என்று உத்கோஷிக்கிறது. ஒவ்வொரு அடியும் வேதாந்த விழுப்பொருளாயிருக்கிறது.

(இன்னோர் அனையை இனையையால் என அன்னோர் யாம் இவண் காணாமையின்) "இப்படி ஸர்வாத்மாவாயிருக்கும் நீ இன்னாரை ஒத்திருக்கிறாய்: இப்படிப்பட்டவனாயிருக்கிறாய்" என்று சொல்லத்தக்க மற்றொரு வ்யக்தியை நாம் எங்கு தேடினாலும் காணாமையால். **"நேதி நேதி நஹ்யேதஸ்மாதி₃தி நேத்யந்யத் பரமஸ்தி"** [ப்₃ருஹ 4-3-6] [(பரம்பொருள்) இப்படிப்பட்டது மாத்திரமல்ல; இப்படிப்பட்டது மாத்திரமல்ல ; இப்படிச் சொல்லலாம்படி இதனிலும் பெரிய வஸ்து வேறொன்றில்லை] என்னும் வேதவாக்கியத்தை அப்படியே உரித்து வைத்திருக்கிறது இவ்வடியிலே. இவ்வேதவாக்கியத்திற்கு ரூபகு₃ணநிஷேத₄

acharya.org

பரமாக அத்₃வைதிகள் சொல்லும் அவப்பொருள் பழந் தமிழர்களால் ஆதரிக்கப்படவில்லை என்பது காணத்தக்கது.

(பொன் அணி நேமி) அழகியதாய், எம்பெருமானுக்கு ஆயுதமாக மாத்திரமல்லாமல் ஆபரணமாகவுமிருக்கும் திருச்சக்கரத்தை. (நேமி ஏந்திய முதல்வனை) சக்கரத்தை த₄ரித்திருக்கையே பரதத்வத்தின் இலக்கணமென்கை. (வலங்கொண்டு ஏந்திய) வலது திருக்கையிலே தரித்த. "வடிவார்சோதி வலத்துறையும் சுடராழி" என்றார் பெரியாழ்வாரும். (மன்னிய முதல்வனை) நிலைநின்ற முதல்வனாயிருக்கிறாய். "முதலாவார் மூவரே" [இர-திருவ-15] என்கிறபடியே ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்கையாலே பிரமருத்திரர்களும் முதல்வர் என்று சொல்லத்தக்கவர்களாயிருந்தபோதிலும், அவர்கள் இவனாலே ஸ்ருஷ்டிக்கவும் ஸம்ஹரிக்கவும் படுகிறார்களாகையாலே நிலைநின்ற முதல்வராகார்கள்; இவனே மூவருள்ளும் நிலைநின்ற முதல்வனாவான் என்று கருத்து. "அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்" [இர-திருவ-15] "முதல் மூவர்க்கும் முதல்வன் தன்னை" [திருவாய் 3-6-2] "மூவரில் முதல்வனாய ஒருவனை" [திருக்குறு-6] "மூவரில் முன்முதல்வன்" [பெரிய திரு 9-9-1] என்றனர் ஆழ்வார்களும். "மன்னுயிர் முதல்வனை" என்று பாடமானபோது நிலைநிற்குமவையான உயிர்களுக்கெல்லாம் முதல்வன் என்னுதல், உயிர்களுக்கு நிலைநின்ற முதல்வன் என்னுதல். (ஆதலின் நின்னோர் அனையை) இப்படி அனைவர்க்கும் நிலைநின்ற முதல்வனாயிருக்கையால், உனக்கு நீயே ஒப்பாவாய். "காணுமையின், மன்னியமுதல்வனையாதலின் நின்னோரனையை" என்று அந்வயம். உனக்கு நீயே ஒப்பு என்பதற்கு இரண்டு காரணம்,- (1) உனக்கு ஒப்பாவார் ஒருவரையும் காணவில்லை; (2) உலகில் காரணபூ₄தர்களாகக் காணப்படுகிறவர்களுக்கெல்லாம் நீயே காரணனாயிருக்கிறாய் என்று கருத்து. "**ந தத்ஸமஶ்ச அப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே**" [ஶ்வே 6-8]

acharya.org

[அவனையொப்பாரும் மிக்காரும் இல்லை] என்றது வேதம். **"தானே தனக்குவமன்"** [மூன் திருவ-38] **"இனன் இலன்"** [திருவாய் 1-1-2] **"ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா"** [திருவாய் 2-3-2] என்றனர் ஆழ்வார்கள். இப்படிப்பட்ட உன்பெருமைக்குக் காரணம் யாதெனில்: (நின் புகழொடும் பொலிந்தே) நீ ஸமஸ்தகல்யாண குணங்களோடு விளங்குகின்றமையால் ஒப்பற்றவனுயிருக்கிருய் என்றபடி. உன்னைப்போலே ஸமஸ்த கல்யாண குணங்களையுமுடையார் வேறு இலராகையாலே நீ ஒப்பற்றவனென்று கருத்து. **"ஸமஸ்த கல்யாண குணாத்மகோऽஸௌ"** [வி-பு 6-5-84] என்றது விஷ்ணு புராணம். **"உயர்வறவுயர்நல முடையவன் யவனவன்"** [திருவாய் 1-1-1] **"ஈறிலவண்புகழ் நாரணன்"** [திருவாய் 1-2-10] என்ற ஆழ்வாரைப்போலே, குணமில்லை என்பாரின் மிடற்றைப் பிடித்தாற்போலே, "நின் புகழொடும் பொலிந்தே" என்கிருர்.

நின் ஒக்கும் புகழ் நிழலவை
பொன் ஒக்கும் உடையவை;
புள்ளின் கொடியவை; புரி வளையினவை;
எள்ளுநர்க் கடந்து அட்ட இகல் நேமியவை;
மண்ணுறு மணிபாய் உருவினவை;
எண் இறந்த புகழவை; எழில் மார்பினவை;

இனிமேலே ஆறு அடிகளாலே "ரூபமில்லை, குணமில்லை, ஆயுதமில்லை, விபூதியில்லை' என்னும் அஸத்பக்ஷங்கள் மேலும் தள்ளப்படுகின்றன.

(புகழ் நிழல் அவை நின்னெக்கும்) உன்னுடைய கல்யாணகுணங்களின் ஒளி, நின்னைப்போலே ஸர்வவ்யாபியாயிராநின்றது. உன் குணங்கள் ஒளிவீசாத இடமேயில்லை என்றபடி. புகழ்—இவனுக்குப் புகழைத்தரும் குணங்கள். கீர்த்தியென்றுமாம். நிழல்—ஒளி. கூசச்செய்யாமல் குளிரச் செய்யும் ஒளியும் தமிழிலே நிழல் எனப்படும். ' புகழ்

acharya.org

நிழல்' என்கையாலே இவனுடைய குணங்களனைத்தும் ஹிதத்தையே அளிப்பவை என்று உணர்த்தப்படுகின்றது (பொன்னெக்கும் உடையவை) உன்னுடைய பீதாம்பரம் பொன்போலே ஒளிவீசுவதாய், ஆசைப்படத்தக்கதாய், மதிப்புள்ளதாய் இராநின்றது. "மாஹாரஜநம் வாஸ:" [பொன்போன்ற உடை] என்றது வடமொழிமறை. "**படிச் சோதி ஆடையொடும்...நின்பைம்பொன் கடிச்சோதி**" [திரு வாய் 3-1-1] என்றது தமிழ்மறை. (புள்ளின் கொடியவை) உன் த்$_4$வஜமோ வேதாத்மாவான கருடனேயாவான். (புரி வளையினவை) பாஞ்சஜந்யமாகிற வலம்புரிச்சங்கையும் உடையவனாகிறாய் நீ (எள்ளுநர்க் கடந்து அட்ட இகல் நேமி யவை) உன்னை அவமதிக்கும் பகைவர்களை வென்று கொன்று வலிமைபெற்று விளங்கும் திருச்சக்கரப்படை யையும் உடையாய். (மண்ணுறு மணிபாய் உருவினவை) சாணைபிடிக்கப்பட்ட நீலமணியைப்போல் பரந்த ஒளியினை யுடையது உன் உருவம். அல்லது உன் திருமார்பை அலங்கரிக்கும் நீலமணிபோன்றது உன் உருவம் என்று மாம். மண்ணுறுத்தலாவது—அழுக்கெடுத்தலையும், அலங் கரித்தலையும் குறிக்கும். (எண்ணிறந்த புகழவை) உன் குணங்களின் தொகையையும் கணக்கெடுக்கமுடியாது; ஒவ்வொரு குணமும் அளவிட்டு எண்ணமுடியாது. "ஈறில வண்புகழ்" [திருவாய் 1-2-10]. (எழில்மார்பினவை) உன் திருமார்பானது அழகே உருவெடுத்தது. இத்தால் பீதாம் பரத்தையும், கருடக்கொடியையும், சங்கசக்கரங்களையும், நீலமேனியையும், கல்யாண குணங்களையும், எழில்மார்பை யும் உடைய வஸ்துவே பரம்பொருள் என்று நிர்ணயிக்கப் பட்டதாயிற்று.

ஆங்கு,

காமரு சுற்றமொடு ஒருங்கு நின் அடியுறை
யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக! என,
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்—
வாய்மொழிப் புலவ! நின் தாள்-நிழல் தொழுதே,

acharya.org

இனி, பாட்டின் மிகுதி அடிகளாலே பரமபுருஷனுடைய திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுவதில் தமக்குள்ள உறுதியைத் தெரிவித்து முடிக்கிறுர்.

(ஆங்கு) உன் திருவடிவாரத்திலே. (காமரு சுற்றமொடு) பரதெய்வமாகிற உன்னிடம் விருப்பமுடைய சுற்றத்தாரோடு. (ஒருங்கு) "ஏக: ஸ்வாது$_3$ ந பு$_4$ஞ்ஜீத" [இனியது தனித்துண்ணேல்] என்று முதுமொழியாகையால் அனைவரோடும் கூடியிருந்து. (நின் அடியுறை யாம்) நின் திருவடி நிழலிலே வாழும் நாம். (இயைந்து ஒன்றுபு) "ஒருங்கு" என்றவிடத்திலே மெய்கள் ஒன்றிநின்றமையைக் காட்டிற்று. இங்கு மனமும் மொழியும் ஒன்றிநிற்கின்றமையைக் காட்டுகிறது. இது எப்போதாவதோ? எனில்: (வைகலும் பரவுதும்) தினந்தோறும் துதிப்போம். என் சொல்லித் துதிப்பது? எனில்: (பொலிக என பரவுதும்) "நின் திருவடிகள் என்றும் பொலிந்து விளங்கட்டும்" என்று திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுவோம். (பரவுதும்) பாடுவோம். வாக்$_3$வ்யாபாரமேயாய், மனத்தின் துணையில்லையோ? எனில்: (ஏமுறு நெஞ்சத்தேம்) மனமும் இதில் ஒன்றிநிற்கையாலே, பேரானந்தம்கொண்ட மனமுடையோமாய்த் துதிப்போம். மனமொழிகளேயாய், மெய் சலனமற்றிருக்கின்றதோ? எனில்: (நின் தாள் நிழல் தொழுதே) உன் திருவடி நிழலைத் தொழுதுகொண்டிருக்கிறது எம்முடம்பு. இப்படித் திரிகரணங்களும் ஈடுபடுவதற்குக் காரணமென்னவெனில்: (வாய்மொழிப் புலவ) வேதமுதல்வனன்றோ நீ. அதனுலே நாம் இப்படி ஈடுபடுகின்றோம். வாய்மொழி — ஏடுபார்த்துப் படிக்கப்படாமல் ஓதுவிப்பார் ஓதியே உணரப்படும் வேதம். புலவன்—ஸர்வஜ்ஞன்; தேவன்; வானத்தில் உறைபவன் என்றெல்லாம் பொருள்படும். (வாய்மொழிப் புலவ) பிரமனுக்கும் வேதமோதிய முதல்வனுகையாலே இப்படி ஈடுபடாநின்றோம் என்றுமாம்.

acharya.org

"யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம்
யோ வை வேத₃ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை"

[எவன் முதலில் பிரமனைப் படைக்கிறானோ, எவன் வேதங்களை அவனுக்கு ஓதுவிக்கிறானோ] என்றதன்றோ வேதமும்.

நடுநிலைவகிக்கும் தமிழ்ப்பெருமக்களே! உண்மைக்கு மதிப்புவைக்கும் நல்லோர்களே! பரிபாடலில் முதற்பாடலான இப்பாடலையும், அதற்கு யாம் தந்திருக்கும் உரையையும் மேலே நாம் தரப்போகும் திருமாலைப்பற்றிய பாடல்களையும், அவற்றின் உரைகளையும் பலகால் படித்துப் பாருங்கள்; இப்பரிபாடலிலேயே முருகனைப்பற்றியுள்ள பல பாடல்களையும், மற்ற தெய்வங்களைப் பற்றிவரும் குறிப்புக்களையும், மற்ற சங்கநூல்களில் சிவனைப்பற்றி வரும் பாடல்களையும் பாருங்கள். பரம்பொருளுக்கேயுரிய தன்மைகள் திருமால் ஒருவனுக்கே கூறப்பட்டிருப்பதையும், மற்றுள்ளார்க்கு அத்தன்மைகள் கூறப்படாதிருத்தலையும், தாழ்வுகள் உரைக்கப்பட்டிருப்பதையும் கண்டு, பழந்தமிழர் பரம்பொருள் யாரென்பதை நீங்களே நிர்ணயித்துக்கொள்ளுங்கள்.

பரிபாடல் — இரண்டாம் பாடல்

இப்பாடலும் முழுமுதல்வனான திருமாலைப்போற்றுவது. இதைப்பாடியவர் **கீரந்தையார்** என்பவர். இதற்கு இசை வகுத்தவர் **நன்னாகனார்**. இதன் பண் **'பாலையாழ்'** என்பதாகும்.

தொல் முறை இயற்கையின் மதியொ
... ... மரபிற்று ஆக,
பசும் பொன்னுலகமும் மண்ணும் பாழ்பட,
விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல,
கரு வளர் வானத்து இசையின் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றின் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழ்ஊழ் ஊழியும்;

acharya.org

செந்தீச் சுடரிய ஊழியும்; பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும்; அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இரு நிலத்து ஊழியும்;
நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும்,
மை இல் கமலமும், வெள்ளமும், நுதலிய
செய் குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை—
கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தலின், முதுமைக்கு
ஊழி யாவரும் உணரா;
ஆழி முதல்வ! நிற் பேணுதும், தொழுது.

முதற் பத்தொன்பது அடியால், இந்த சுவேதவராஹ கற்பத்தின் தொடக்கத்திலே எல்லாப் பொருள்களும் பாழ் பட்டுக்கிடக்கும்போது, படிப்படியாகப் பஞ்சபூதங்கள் படைக்கப்பட்டதையும், பரமபுருஷன் சுவேதவராஹவுரு வத்துடன் ப்ரளயஜலத்திலிருந்து பூமியையெடுத்து நிலை நிறுத்தியதையும் உணர்த்தி அவனை வணங்குகிறது.

(தொன்முறை இயற்கையின் மதியொ...மரபிற்றாக) நடுவிலுள்ள எழுத்துக்கள் காலவெள்ளத்தில் மறைந்து போயின. "நெடுங்காலமாக இரவிலும் பகலிலும் மாறிமாறி வரும் இயல்வையுடைய 'மதி' எனப்படும் சந்திரனும், சூரிய னும் அழிதலால் அழகிழந்த இயல்பை உடையதாக" என்று பொருளிருக்கக்கூடும். (பசும்பொன் உலகமும் மண்ணும் பாழ்பட) பசும்பொன்னைப்போலே அழகியதான தேவர் கள் உலகமும், மண்ணுலகமும் 'பாழ்' எனப்படும் ப்ரக்ருதி தத்துவத்திலே ஒடுங்கிப்போக. (பாழ்) "சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழ்" [திருவாய் 10-10-10] என்றார் நம்மாழ்வார் ப்ரக்ருதி தத்துவத்தை. (விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல) 'விசும்பு' எனப்படும் மூலப்ரக்ருதி தத்துவத்தில் அனைத்துலகமும் ஒடுங்கிக்

acharya.org

கிடந்த ஊழி பல கற்பகாலங்கள் நடந்து செல்ல. (விசும்பு) "சுரரறிவருநிலை விண்" [திருவாய் 1-1-8] என்று நம்மாழ்வார் 'விண்' என்னும் ஆகாசத்தைக் குறிக்கும் சொல்லை ஆகாச காரணமான மூலப்ரக்ருதியைக் குறித்துப் பிரயோகித் தருளினார். அதற்கு அடியாக, **"ஆகாஶ ஏவ ததோ₃தஞ்ச ப்ரோதஞ்ச"** [ப்₃ரு 2-5-8] [ஆகாசமெனப்படும் மூலப்ரக்ருதி யிலேயே இவையெல்லாம் குறுக்கிலும் நெடுக்கிலும் பின்னப்பட்டிருக்கிறது] என்று கா₃ர்க்கி₃ வித்யையிலே வேதம் ஆகாஶசப்தத்தாலே மூலப்ரக்ருதியைச் சொல் லிற்று. அதையடியொற்றி இப்பாடலிலும் ஆகாசத்தைக் குறிக்கும் 'விசும்பு' 'வானம்' என்னும் சப்தங்களால் மூல ப்ரக்ருதி குறிக்கப்படுகின்றது. (கருவளர் வானத்து இசை யின் தோன்றி உருவறிவாரா ஒன்றின் ஊழியும்) எல்லாப் பொருள்களும் ஸூக்ஷ்ம நிலையிலே நிற்கின்ற மூலப்ரக்ருதி யினின்றும் சப்தகுணங்கொண்டு தோன்றி, ரூபம் அற்ற ஆகாசமென்னும் ஏகபூதமேயாய் நின்ற கற்பமும். (உந்து வளி கிளர்ந்த ஊழூழ் ஊழியும்) அவ்வாகாசத்திலிருந்து எல்லாப் பொருள்களையும் அசைத்துக்கொண்டு காற்றுக் கிளர்ந்த முறைமுறையான ஊழியும். வளி – காற்று. (செந்தீச் சுடரிய ஊழியும்) அக்காற்றினின்றும் சிவந்த அக்னிதோன்றிச் சுடர்விட்ட கற்பகாலமும். (பனியொடு தண்பெயல் தலைஇய ஊழியும்) அவ்வக்கினியினின்றும் பனியோடு குளிர்ந்த நீர்தோன்றிப் பொழியலுற்ற நீர் ஊழியும். (அவையிற்று) அவற்றுக்குப் பின்பு. (உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு மீண்டும்) அந்நீரினின் றும் தோன்றுதலால் மீண்டும் ஒருமுறை வெள்ளத்திலே மூழ்கி விளங்கி. (மீண்டும்) ப்ரளயக்ரமத்திலே இந்நிலமானது ஒருமுறை நீரிலே மூழ்கி ஒடுங்கிற்றாகையால், ஸ்ருஷ்டி க்ரமத்திலே இப்போது மீண்டும் வெள்ளத்திலே மூழ்கிற்று என்கிறார். (பீடு உயர்வு ஈண்டி) குணத்திலே முன் சொன்ன பூதங்களைக்காட்டிலும் உயர்வுபெற்று. **"புனற்**

acharya.org

கண் நின்ற நான்குமாய், தீ நிலாய மூன்றுமாய்ச் சிறந்த கால் இரண்டுமாய் மீன் நிலாயதொன்றுமாகி'' [திருச்சந்த-1] என்கிறபடியே நீர், தீ, கால், மீன் என்னும் முந்தைய பூதங்களில் ரஸம், ரூபம், ஸ்பர்சம், சப்தம் எனும் குணங் களில் முறையே நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று ஆகிய குணங்களே உள்ளதாகவும், ''பூநிலாய ஐந்துமாய்'' [திருச்சந்த-1] என்கிறபடியே பூமியில் இவற்றோடு கந்தமும் சேர்ந்து ஐந்து குணங்களுள்ளதாகவும் திருமழிசைப் பிரான் உரைத்தாரன்றோ. புராணங்களும் இதைப்பேசின. இதனாலேயே மற்ற பூதங்களைக்காட்டிலும் குணத்திலே உயர்வு பெற்று என்கிறது இங்கு. (அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய) குணத்திலே உயர்வு பெற்றாலும், அளவிலே அவற்றிற்கு உள்ளடங்கியிருக்கும். (இரு நிலத்து ஊழியும்) மாநிலத்து ஊழியும். ஆக இவ்வளவால்,

''பூ₄தாதே₃ராகாஶம் ஆகாஶாத்₃ வாயு: வாயோரக்₃நி:
அக்₃நேராப: அத்₃ப்₄ய: ப்ருதி₂வீ'' [ஸுபா₃ல 1]

[பூதங்களுக்கு ஆதியான பூ₄தாதி₃யினின்று ஆகாசமும், ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியினின்று நீரும், நீரினின்று நிலமும் தோன்றின] என்று உபனிஷத்தில் சொல்லப்பட்ட ஸ்ருஷ்டிக்ரமம் உரைக்கப்பட்டது. பழந்தமிழர்கள் பரமவைதிகர்களென் பதை இவ்வொருபாடலிலிருந்தே அறியலாம். மூலப்ரக்ருதி யூழி, ஆகாயத்தினூழி, காற்றூழி, தீயூழி, நீரூழி, நிலத் தூழி என்னுமிவை முறையே எத்தனை காலங்கள் நடந் தேறின என்பதைக் காட்டுகிறார் இனி, — (நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும், மையில் கமலமும், வெள்ளமும் நுதலிய செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை) நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் என்று சொல்லப்பட்டவற்றால் குறிக்கப்படும் காலங்களின் கூட்டம் கழிந்த பின்பு.

acharya.org

(கேழல் திகழ் வரக் கோலமொடு பெயரிய ஊழி ஒரு வினை உணர்த்தலின்) பன்றியுருவாகித் திகழ்ந்த சிறந்த கோலத்தோடு, அதையிட்டு சுவேதவராஹகற்பம் எனப் படும் இக்கற்பத்திலே செய்த ஓர் அருஞ்செயலைமாத்திரம் உணர்த்துதலால். (கேழல் திகழ் வரக்கோலம்) **"கோல வராகமொன்றாய்"** [திருவாய் 10-10-7] என்றார் ஆழ்வார். (ஒருவினை) இவன் செய்த எத்தனையோ அருஞ்செயல்களில் இது ஒன்றேயாகும். இதையிட்டு இக்கற்பம் சுவேதவராஹ கற்பம் என வழங்கப்படுகிறது; மற்றும் பல அருஞ் செயல்களையிட்டுப் பாத்மகற்பம் முதலான கற்பங்கள் வழங்கப்படுகின்றன; இவனுடைய அருஞ்செயல்களுக்கும் அவற்றையிட்டு வழங்கப்படும் கற்பங்களுக்கும் ஒரு முடிவில்லையென்று கருத்து. (முதுமைக்கு ஊழி யாவரும் உணரா) இப்படியிருக்கையாலே உன் முதுமையின் எல்லை பல்லூழிகாலத்திலும் எவருமே அறியமாட்டார்கள். (யாவரும் உணரா) உன்னால் அனைவருமே படைக்கப்பட்ட வராயிருக்கும்போது உன் முதுமையின் எல்லையை எவர் அறியமுடியும்? (ஆழி முதல்வ) சக்கரப்படை தரித்த முதல்வனே! என்னுதல். ஊழிகாலக் கடலிலே பள்ளி கொண்டு யாவரையும் படைத்த முதல்வனே! என்னுதல். (நின் பேணுதும் தொழுது) உன்னைத் தொழுது உனக்குக் கைங்கரியம் செய்வோம். (பேணுதும் தொழுதும்) என்றும் பாடமுள்ளது. ஆகவித்தால், இவனே அனைத்துலகையும் படைத்து அளிக்கும் ஆதியஞ்சோதி என்று அறிவிக்கப் பட்டதாயிற்று.

நீயே, 'வளையொடு புரையும் வாலியோற்கு அவன்
இளையன்' என்போர்க்கு இளையை ஆதலும்,
'புதை இருள் உடுக்கைப் பொலம் பனைக்கொடியோற்கு
முதியை' என்போர்க்கு முதுமை தோன்றலும்,
வடு இல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த
கெடு இல் கேள்வியுள் நடு ஆகுதலும்,

acharya.org

இந் நிலைத் தெரி பொருள் தேரின், இந் நிலை
நின் நிலைத் தோன்றும் நின் தொல் நிலைச் சிறப்பே.

இனி எட்டு அடிகளாலே பரமபுருஷனின் தொன்னிலைச் சிறப்பு விவரிக்கப்படுகிறது. அவதரித்தபோதிலும் இவனுடைய முதுமைக்குக் குறைவில்லை என்று காட்டப்படுகிறது.

(வளையொடு புரையும் வாலியோற்கு அவன் இளையன் என்போர்க்கு இளையை ஆதலும் நீயே) முதுமைக்கு ஊழி யாவரும் உணரா ஆழிமுதல்வனான நீயே சங்கத்தையொத்த நிறத்தையுடைய பலதேவனுக்கு இளையவனாய்த்தோன்றி நின்றாய். வளை—சங்கம். வாலியோன்—வலிமை மிக்க பலதேவன். (அவன் இளையன் என்போர்க்கு இளையை ஆதலும்) அவதாரத்தில் அவனுக்கு இளையவனாகப் பிறந்ததைக் கருதி உன்னை அவனுக்கு இளையவன் என்பவர்களுக்கு இளையவனாகவும் காட்சியளிக்கிறாய். (புதையிருள் உடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு முதியை என்போர்க்கு முதுமை தோன்றலும் நீயே) பொருள்களை மறைக்கும் திணிந்த இருள்போன்ற கரிய நிறமுடைய ஆடையை அணிந்தவனும், அழகிய பனைமரச்சின்னத்தைக் கொடியாக உடையவனுமான அந்த பலதேவன் உண்மையில் உன் கிங்கரனான ஆதிசேஷனின் அவதாரமாயிருப்பதைக் கருதி, உன்னை அவனிலும் முதியவன் என்பவர்களுக்கு நீ முன்னவனாகவும் காட்சியளிக்கிறாய். வியூஹநிலையிலே நீ முன் தோன்றிய வாஸுதேவனாகவும், அவன் பின்தோன்றிய ஸங்கர்ஷணனாகவும் உள்ளமையைக் கருதி உன்னை முதியவன் என்பவர்களுக்கு முதியவனாகவும் ஆகிறாய் என்றுமாம். உடுக்கை—உடை. (வடுவில் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த கெடுவில் கேள்வியுள் நடு ஆகுதலும் நீயே) குற்றமற்ற கொள்கைகளையுடைய குணம்மிக்கவர்களால் ஆராயப்படுவதும், ஆதியில்லாததாகையாலே அழிவும் இல்லாததும் காதால் கேட்கப்பட்டே பரவுதலால் 'கேள்வி' எனப்படுவதுமான

acharya.org

வேதத்தினுள் அனைத்துக்கும் அந்தர்யாமியாகச் சொல்லப் படுமவனும் நீயே. **வடு**—குற்றம்; **கெடு இல் கேள்வி**—அழிவு இல்லாத சுருதி. நடு—அந்தர்யாமி. 'கேள்வியுள் நடு' என்று—"வேதாந்த விழுப்பொருள்" என்றதுபோலே, வேதத்தின் உட்பொருள் என்கிறதாகவுமுமாம். 'வடுவில் கொள்கையின் உயர்ந்தோர்' என்று அந்தணரையும், 'கெடு இல் கேள்வி' என்று வேதத்தையும், "கெடு இல் கேள்வி யுள் நடு" என்று திருமாலையும் பண்டைத்தமிழர் போற்றி யிருப்பதை நடுநிலையாளர் நோக்கவேண்டும்.(நடு ஆகுதலும்)

"யச்ச கிஞ்சித் ஜகு₃த்யஸ்'மிந் த்₃ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா।
அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:॥"

[இவ்வுலகில் காண்பனவும், கேட்பனவுமான அனைத்தின் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாரா யணன்] **"விஶ்வாத்மாநம்" "யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம்" "யஸ் யாத்மா ஶரீரம்" "ஏஷ ஸர்வபூ₄தாந்தராத்மா நாராயண:" "ஸ பூ₄மிம் விஶ்வதோ வ்ருத்வா"** முதலான நூற்றுக்கணக் கான வேதவாக்கியங்களை நினைக்கிறது. இப்படி ஸர்வாந்தர் யாமியாக சங்கப்பாடல்களில் சிவன், முருகன், காளி முத லான வேறு எந்த தெய்வத்தையும் குறிப்பிட்டதில்லை என்பது குறிக்கொள்ளத்தக்கது. வேறு எவர்க்கும் இப் பெருமையில்லை என்பதை மேலேயும் வலியுறுத்துகிறார்—(இங்நிலைத் தெரிபொருள் தேரின்) இப்படி அந்தர்யாமியா யிருக்கும் நிலையின் உண்மைப் பொருளை ஆராய்ந்தால். (இங்நிலை நின்னிலைத் தோன்றும் நின் தொன்னிலைச் சிறப்பே) இங்நிலை நின்னொருவனிடமே தோன்றும் உன் னுடைய அநாதிநிலைச் சிறப்பேயாகும். நீ அந்தர்யாமியா யிருப்பது இன்று நேற்றன்று. அநாதிகாலமாக உனக் குள்ள பெருமையாகும் இது. பிரமன் தன் அண்டத்திலே தன் ஞானத்தாலே வியாபித்திருப்பதொரு நிலையுண்டு; அஷ்டமூர்த்தியான சிவனும் பஞ்சபூ₄தங்கள் முதலான வற்றிலே ஞானத்தாலே வியாபித்திருப்பதொரு நிலை

acharya.org

யுண்டு. ஆனுல் அவர்கள் இப்படி வியாபித்திருப்பது அவரவர்களுடைய பதவிக்காலங்களிலேயேயாகையால் ஆதியந்தமுடையதாயிருக்கும். நீ எல்லாப் பொருள்களேயும் ஸ்வரூபத்தாலேயே வியாபித்திருக்கும் இந்நிலே அநாதியாயுள்ள நிலேயாகும் என்று கருத்து. இத்தால் ஸர்வாந்தர்யாமியாயிருக்கும் பெருமை திருமால் ஒருவனுக்கே உள்ளது என்று காட்டப்பட்டதாயிற்று.

ஓங்கு உயர் வானின் வாங்கு வில் புரையும்
பூண் அணி கவைஇய ஆர் அணி நித்தில
நித்தில மதாணி அத்தகு மதி மறுச்
செய்யோள் சோந்த நின் மாசு இல் அகலம்—
வளர் திரை மண்ணிய கிளர் பொறி நாப்பண்
வை வால் மருப்பின் களிறு மணன் அயர்பு,
'புள்ளி நிலனும் புரைபுடல் அரிது' என,
உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று.

இனி, எட்டு அடிகளாலே முன்சொன்ன வராஹாவதாரத்தின் பெருமையை மேலும் விவரிக்கிறது.

(ஓங்குயர் வானின் வாங்கு வில் புரையும் பூண் அணி) மிகவுயர்ந்திருக்கும் நீலநிறமுடைய ஆகாயத்தில் வளேந்திருக்கும் பல நிறமுடைய இந்திரன் வில்லே ஒத்திருக்கும் நின் திருநீலநன்மார்பில் பூண்டிருக்கும் திருவாபரணங்கள். (கவைஇய ஆரணி நித்தில நித்தில மதாணி) அவற்றின் நடுவேயுள்ள அழகிய ஆபரணம் முத்தாலான முத்துப்பதக்கம். **நித்திலம்**—முத்து. **மதாணி**—பதக்கம். (அத்தகு மதி மறுச் செய்யோள்) முத்தாலானதாகையாலே வெண்ணிறத்தாலும், பதக்கமாய் வட்டவடிவமாயிருக்கையாலும் அம் முத்துப்பதக்கம் நீலவானில் இந்திரன் வில்லினிடையே தோன்றிய முழுமதியை (பூர்ணசந்திரனே) ஒத்திருக்கும்; அச்சந்திரனில் மறுவைப்போலே அப்பதக்கத்தினிடையே ஹிரண்யவர்ணேயான ஸ்ரீதேவி எழுந்தருளியிருக்கிருள்.

acharya.org

(செய்யோள் சேர்ந்த நின் மாசில் அகலம்) அந்த மஹாலக்ஷ்மியானவள் வீற்றிருக்கையாலே குற்றமற்று விளங்குவது உன் திருமார்பு. **"ஶ்ரத்$_3$த$_4$யா தே$_3$வோ தே$_3$வத்வம் அஶ்நுதே"** [பிராட்டியாலே பெருமான் விளக்கமுறுகிறுன்] **"திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும்"** [திருவாய்] என்றன வடமொழித் தென்மொழி மறைகளும்.

(வளர்திரை மண்ணிய கிளர்பொறி வைவால்மருப்பின் நாப்பண் புள்ளிநிலனும் களிறு மணன் அயர்பு) மேல்மேல் வளராநின்ற அலைகளால் கழுவப்பட்டதாய், ஒளிவீசும் புள்ளிகளை உடையதாய், கூர்மையானதாய், வெளுத்ததான தந்தத்தின் நடுவே ஒரு புள்ளிபோல் விளங்கிய பூதேவியை வராஹம் மணம் புரிந்தபோது. **மண்ணிய** — கழுவப்பட்ட. **பொறி** — புள்ளி. **வை** — கூர்மை. **வால்** — வெண்மை. **மருப்பு**—தந்தம். **நாப்பண்**—நடு. **களிறு**—வராஹம். **மணன் அயர்பு**—மணம் புரியுங்கால். (புள்ளி நிலன்) பூதேவியானவள் புள்ளிபோல் தோன்றினுள் என்கையாலே வராஹப்பெருமானின் உருவப்பெருமை காட்டப்பட்டது. (புள்ளிநிலனும் புரைபடல் அரிது என) அக்காலத்திலே பூதேவியானவள் வெள்ளத்தாலே ஓர் புள்ளியளவும் துன்பமுற்றுளில்லை என்றுமாம். (உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று) கற்றுணர்ந்து ஓதுமவர்களுடைய வேதவாக்கியங்கள் இவ்வண்ணம் கூறுகின்றன. அவ்வுரையும் உன் அருஞ்செயலைப் பேசத்தக்க சிறப்பையுடையதன்று. (உள்ளுநர்) ஞானிகள். (உரைப்போர் உரை) வாய்வழியாக உரைத்தும் ஓதியும் அறியப்படும் வேதம். **"ஆபோ வா இத$_3$மக்$_3$ரே ஸலிலமாஸீத்। தஸ்மிந் ப்ரஜாபதிர் வாயுர் பூ$_4$த்வா அசரத்। ஸ இமாமபஶ்யத்। தாம் வராஹோ பூ$_4$த்வா அஹரத்। ஸா அப்ரத$_2$த। ஸா ப்ருதி$_2$வீ அப$_4$வத்॥"** [தை-ஸம் 7-1-5] [இவ்வுலகம் முதலில் நீராகவே யிருந்தது. அதில் ஸர்வேஶ்வரன் வாயுரூபமாக ஸஞ்சரித்தான். அவன் இந்த பூதேவியைக் கண்டான். அவளை

acharya.org

வராஹரூபியாய் எடுத்தான். அப்பூமி பெருகினுள். (அதனுலேயே) 'ப்ருதி₂வீ' (பெருகியவள்) என்று பெயருடையளானுள்] "இயதீ ஹ வா இயமக்₃ரே ப்ருதி₂வ்யாஸ ப்ராதே₃ஶமாத்ரீ। தாம் ஏ மூஷ இதி வராஹ உஜ்ஜக₄ாந। ஸோऽஸ்யா: பதி: ப்ரஜாபதி:॥" [சதபதப்ராஹ்மணம்] இந்த பூமி முதலில் இவ்வளவுபட்டதாகவன்றே இருந்தது. (கடலில்) சிறிய பிரதேசத்தை அடைப்பதாகவேயிருந்தது. அந்த பூமியை வராஹரூபியான பரம்பொருள் 'அடி பூமி! எங்கு ஒளிகிருய்' என்று கூறி (தந்தத்தால்) குத்தியெடுத்தார். அவரே உயிர்களுக்குத் தந்தையாய் இவளுக்குப் புருஷனுயிருப்பவர்] "உத்த்₄ருதாऽஸி வராஹேண க்ருஷ்ணேந ஶதபா₃ஹுநா" [தை-நா] [நூறு கையையுடைய கிருஷ்ணனுகிற வராஹத்தால் தூக்கப்பட்டாயன்றே] என்ற வேதவாக்கியங்களை நினைக்கிறது.

ஒடியா உள்ளமொடு உருத்து, ஒருங்கு உடன் இயைந்து,
இடி எதிர் கழறும்—கால் உறழ்பு எழுந்தவர்
கொடி அறுபு, இறுபு, செவி செவிடு படுபு,
முடிகள் அதிர, படிநிலை தளர,
நனி முரல் வளை முடி அழிபு, இழிபு,
தலை இறுபு தாரொடு புரள—
நிலை தொலைபு, வேர், தூர், மடல்,
குருகு, பறியா நீள் இரும் பனைமிசைப்
பல பதினுயிரம் குலை தரை உதிர்வபோல்—
நில்லாது, ஒருமுறை கொய்பு கூடி,
ஒருங்கு உருண்டு, பிளந்து, நெரிந்து, உருள்பு சிதறுபு,
அளறு சொரிபு, நிலம் சோர,
சேரார் இன் உயிர் செகுக்கும்—
போர் அடு குரிசில்! நீ ஏந்திய படையே
ஒன்னுர் உடங்கு உண்ணும் கூற்றம் உடலே;
பொன் ஏர்பு அவிர் அழல் நுடக்கு அதன் நிறனே.

இனி, பதினுறு அடிகளாலே பரமபுருஷனுடைய சங்கு சக்கரப் படைகளின் பெருமைகள் விவரிக்கப்படுகின்றன.

acharya.org

முதலைந்து அடிகளிலே சங்கத்தின் பெருமையும், பின்னடிகளாலே சக்கரத்தின் சிறப்பும் சொல்லப்படுகிறது.

(ஓடியா உள்ளமொடு...எழுந்தவர்) திருமாலின் எதிரிகளான அசுரராக்கரைப் பேசுகிறது. (ஓடியா உள்ளமொடு) வணங்காத உள்ளத்தோடு, "வணங்கலில் அரக்கன்" [பெரிய திரு 9-8-5] என்றார் ஆழ்வாரும். **"ந நமேயம்"** [ரா-யு 36-11] [வணங்கமாட்டேன்] என்பவரையன்றே இவன் அழிப்பது. 'வணங்கமாட்டேன்' என்று உதாரஸீநராயிருந்தனரோ? எனில்: (உருத்து) கோபங்கொண்டு எதிர்த்தும் வந்தனர். ஒருவரிருவரோ வந்தது? எனில்: (ஒருங்கு) பல்லாயிரவர் கூடிவந்தனர். கூடிவந்தாலும், கருத்து வேறுபாடு உண்டோ? எனில்: (உடன் இயைந்து) திருமாலை எதிர்க்கவேணும் என்பதில் ஒரே கருத்தை உடையவராய் வந்தனர். வந்தவர்தான் பலமற்றவரோ? எனில்: (இடி எதிர் கழறும் கால் உறழ்பு எழுந்தவர்) இடியை ஒத்து முழங்கும் சூறுவளிக் காற்றுப்போல் எழுந்து வந்தனர் போரிட. இடிபோல் முழங்கிக்கொண்டும், காற்றுப்போல் கடியவேகங்கொண்டும் எழுந்தனர் என்றுமாம். (கொடி அறுபு இறுபு) சங்கத்தின் ஒலி பட்டவுடன், அவர்களுடைய தேர்க்கொடிகள் இற்று அறுகின்றன. (செவி செவிடு படுபு) அவர்களுடைய செவிகள் செவிடாகின்றன. (முடிகள் அதிர) அவ்வொலியாலேயே அவர்களுடைய தலைகள் அதிர்கின்றன. (படி நிலை தளர) உலகமே நிலைகுலைந்துவிடுகிறது.

"ஸ கோ₄ஷோ தா₄ர்த்தராஷ்ட்ராணம் ஹ்ருத₃யாநி வ்யதா₃ரயத்" [அப்பாஞ்சசன்னியகோஷம் திருதராஷ்ட்ர புத்திரர்களின் இருதயத்தைப் பிளந்தது] என்ற கீதாவாக்கியத்தை நினைப்பது. (நனி முரல் வளை) இப்படியெல்லாம் ஆகும்படி மிகமுழங்கும் சங்கம். "நனி முரல்வளை இடியெதிர் கழறும்" என்று அந்வயித்து "உன் சங்கம் இடியென முழங்கும்" என்று பொருள்கொள்வர் பரிமேலழகர்.

acharya.org

இனி, சக்கரத்தின் பெருமையைப் பேசுகிறது. (முடி யழிபு இழிபு) அசுரரரக்கர் தங்கள் அபிமானத்தாலே தரித்த கிரீடங்களை அழித்துத் தள்ளியபடி. (தலை இறுபு) தலையை அறுத்துத்தள்ளியபடி. (தாரொடு புரள) கழுத்தில் தரித்த தாரோடு தலை புரளும்படியாக. கீழே விழுந்த கழுத்துக்குவியலோடுகூடிய இவர்களுடைய முண்டங்கள் நிற்கும் நிலைக்கு உவமை சொல்லுகிறது அடுத்தபடியாக: (நிலை தொலைபு) நின்ற நிலையில் அழிந்துபோய். (வேர் தூர் மடல்குருகு பறியா நீளிரும்பனை) வேரும், அடிமரமும் மடலும், குறுத்தும் பறிக்கப்பெருத பனைமரக்காடு. (பனை மிசைப் பல பதினுயிரம் குலை தரை உதிர்வபோல்) அப்பனை மரக்காட்டில் பனைமரங்களினின்றும் பல பதினுயிரம் பனம்பழக்குலைகள் தரையில் உதிர்ந்ததுபோலிருக்கிறது தலையற்ற இம்முண்டங்கள் நின்ற காட்சி. (நில்லாது ஒரு முறை கொய்புகூடி) தலைகள் உடலில் நிற்காமல் ஒரே க்ஷணத்தில் கொய்யப்பெற்று. (ஒருங்கு உருண்டு பிளந்து நெரிந்து உருள்பு சிதறுபு அளறு சொரிபு நிலம் சோர) ஒன்ருகத் தரையிலே உருண்டு, அதனுலே பிளந்து, மேலும் உருளுகையாலே நெரியப்பெற்றுச் சிதறி இரத்தம் சிந்தி நிலத்திலே கிடக்கும்படியாக. (சேரார் இன்னுயிர் செகுக்கும்) கூடாதவர்களுடைய இனிய உயிரை அழிக்கும். "கூடாரை வெல்லும்" [திருப்பாவை-27] என்ருள் ஆண்டாள். இப்படியெல்லாம் செய்வது எது எனில்: (போர் அடு குரிசில்! நீ ஏந்திய படையே) போரிலே வெற்றியே காணும் வீரனே! நீ திருக்கையிலே ஏந்திய திருச்சக்கரப் படையே இக்காரியத்தைச் செய்வது. (ஒன்ஞர் உடங்கு உண்ணும் கூற்றம் உடலே) அந்தச் சக்கராயுதத்தின் உடல் எதிரிகளின் உயிர்களை ஒருங்கே உண்ணும் யமனுயிராநின்றது. (பொன் ஏர்பு அவிர் அழல் நுடக்கு அதன் நிறனே) அச்சக்கரத்தின் நிறம், உருக்கிய பொன்னேடு எழுந்து விளங்குகின்ற அக்னிஜ்வாலையினுடையதைப் போலே இராநின்றது. இத்தால், சங்கசக்கரங்களை

acharya.org

தரித்துநிற்கும் தத்துவமே பரம்பொருள் என்பதே பழம் தமிழர் கொள்கை என்பதை அறியலாம்.

நின்னது திகழ் ஒளி சிறப்பு இருள் திருமணி
கண்ணே புகழ்சால் தாமரை அலர் இணைப் பிணையல்
வாய்மை வயங்கிய வைகல்; சிறந்த
நோன்மை நாடின், இரு நிலம் யாவர்க்கும்;
சாயல் நினது, வான் நிறை—என்னும்
நா வல் அந்தணர் அரு மறைப் பொருளே;
அவ்வும் பிறவும் ஒத்தனை; உவ்வும்
எவ் வயினோயும் நீயே:
செவ்வாய் உவணத்து உயர்கொடியோயே!

பரமபுருஷனுடைய திவ்யமங்களவிக்ரஹத்தையும், அவனுடைய ஸர்வாத்மபாவத்தையும் அஸாதாரணலக்ஷணத்தையும் விளக்குகின்றன இவ்வொன்பது அடிகளும்.

(நின்னது திகழொளி சிறப்பிருள் திருமணி) உன்னுடைய விளங்காநிற்கும் ஒளி, சிறப்பையுடைய நீலமணி போன்றதாகும். (புகழ்சால் கண்ணே தாமரை அலரிணைப் பிணையல்) புகழப்பெறும் உன் கண்களோவெனில், இரண்டு தாமரை மலரை ஒக்கும். (புகழ்சால் தாமரை) "**கப்யாஸம்**" [1. ஆழ்ந்த நீரில் முளைத்தது; 2. சூரியகிரணங்களால் மலர்ந்தது; 3. நன்கு பருத்த தண்டையுடையது] என்று வேதத்தால் புகழப்பெற்ற தாமரை என்றுமாம். (வாய்மை வயங்கிய வைகல்) தப்பாது வருகின்ற நாளைப்போலே, உன் உண்மையுரை தப்பாதது. (யாவர்க்கும் சிறந்த நோன்மை நாடின் இருநிலம்) அனைவர்க்கும் மிகச்சிறந்த நின் பொறுமைக்கு உவமை தேடப்புக்கால், பூமியே உவமையாகக் கூடியது. (நினது சாயல் நிறைவான்) உன் திருநிறம் நீர் நிறைந்த மேகம் போன்றது. மின்னல் நிறைந்த மேகம் என்றுமாம். இவ்விஷயத்தில் ப்ரமாணம் யாதெனில்: (என்னும் நாவல் அந்தணர் அருமறைப்

acharya.org

பொருளே) இவ்விஷயத்தையெல்லாம் சொல்லுவது நாவன்மையுடைய அந்தணர் ஓதும் அரிய மறையாகிற ப்ரமாணம். (நாவல் அந்தணர்) உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் முதலான ஸ்வரங்களை நன்கு உச்சரிக்கவல்ல மறையவர். (அருமறைப்பொருள்) அரிய மறையாகிற பொருள் என்று வேதத்தைச் சொல்லுதல்; அரியமறைப் பொருளை உணர்த்தும் இதிஹாஸபுராணங்களைச் சொல்லுதல். (நினது சாயல் நிறைவான் என்னும் அரு மறைப்பொருள்) **“நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா”** [நீலமேகங்கொண்ட மின்னற்கொடிபோல் ஒளி விஞ்சி நிற்பது அவன் திருமேனி] என்று தைத்திரீய நாராயணநுவாகம் கூறிற்று. (நோன்மை நாடின் இருநிலம் என்னும் அருமறைப்பொருள்) **“ க்ஷமயா ப்ருதிவீஸம: ”** [ரா-பா 1-18] [பொறுமையில் பூமியை ஒத்தவன்] என்றது வேதத்தின் அவதாரமாகக் கீர்த்திபெற்ற ஸ்ரீராமாயணம். (வாய்மை வயங்கிய வைகல் என்னும் அருமறைப்பொருள்) **“ ராமோ த்விர் நாபிபாஷதே ”** [ரா-அ 18-30] [ராமன் இரண்டுவிதமாகப் பேசமாட்டான்] **“அந்ருதம் நோக்த பூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந। ஏதத் தே ப்ரதிஜாநாமி ஸத்யேநைவ ச தே ஶபே॥’** [ரா-கி 7-22] [நான் பொய் சொன்னதுமில்லை; எப்போதும் சொல்லப்போவதுமில்லை. உனக்கு இதை ப்ரதிஜ்ஞை செய்துதருகிறேன். உண்மை யின்பேரில் உனக்கு ஆணையிடவும் செய்கிறேன்] என்று வேதாவதாரமான ஸ்ரீராமாயணமும்,

> **“த்யௌ: பதேத் ப்ருதிவீ ஶீர்யேத்**
> **ஹிமவாந் ஶகலீபவேத்।**
> **ஶுஷ்யேத் தோயநிதி: க்ருஷ்ணே !**
> **ந மே மோகம் வசோ பவேத்॥”** [பார-உத்]

[ஆகாயம் விழலாம்; பூமி பொடியாகலாம்; இமயமலை தூளாகலாம்; கடல் வற்றலாம்; திரௌபதியே! (இவையும் இன்னும்நடக்காதனவெல்லாமும்நடந்தாலும்)என் வார்த்தை

acharya.org

பொய்யாகாது.] என்று பஞ்சம (ஐந்தாம்) வேத₃மான பாரதமும் உரைத்தன. (புகழ்சால்......கண்ணே என்னும் அருமறைப்பொருள்) **''தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகமேவ மக்ஷிணீ''** [ச₂ாந்] [அவனுக்கு, சூரியனால் மலர்ந்த தாமரை போன்ற இரண்டு கண்கள் உள] என்றது சாந்தோக்கிய உபனிஷத்து. **'கப்யாஸம்'** என்று புகழ்ந்ததை 'புகழ்சால்' என்றும், **'அக்ஷிணீ'** [இரு கண்கள்] என்றதை 'இணைப் பிணையால்' என்றும் உணர்த்துவது அறியத்தக்கது. இத்தால் மூன்று கண்களையும், எட்டுக்கண்களையும், பன்னிரு கண்களையும் உடைய தெய்வங்கள் வேதவேத்யரான பரம் பொருளல்லர் என்றதாகிறது. (நின்னது திகழ்ஒளி சிறப்பிருள் திருமணி என்னும் அருமறைப்பொருள்) **''பீத கௌஶேயஸம்வீதம் ஹேம்நீவோபசிதம் மணிம்''** [ப₄ார-சாந்தி-44] [பீதாம்பரம் உடுத்தவனைப், பொன்னில் பதித்த மணிபோல் உள்ளவனை] **''அதஸீபுஷ்பஸங்காஶ: பீதவாஸா ஜநார்த்த₃ந:। வ்யப₄ராஜத ஸப₄ா மத₄யே ஹேம்நீவோபஹிதோ மணி:॥''** [ப₄ார-உத்₃] [காயாம்பூவண்ணனை, பீதாம்ப₃ரத₄ாரியான ஜநார்த்தனன் சபையின் நடுவே பொன்னில் பதித்த **மணிபோல்** விளங்கினான்] என்று பஞ்சமவேதம் பறைசாற்றிற்று. இவ்வளவால், பரமபுருஷனுக்கு குணமில்லை, ரூபமில்லை என்னும் அத்₃வைதிகளின் பக்ஷம் பண்டைத்தமிழர் ஏற்காததொன்று என்று அறியலாம். (யாவர்க்கும் சாயல் நினது நிறை வான்) ''யாவர்க்கும் ஒத்த நின் அருள், நீரால் நிறைந்த மேகத்தை ஒக்கும் என்று உணர்த்தும் அருமறைப்பொருள்'' என்று பொருள் கொள்வர் பரிமேலழகர். (நினது சாயல் நிறை வான்) ஆபரணங்களோடுகூடிய உன் நிறம் நக்ஷத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தை ஒக்கும் என்றும் கொள்ளலாம். கீழே சொன்ன இவைதானே இவனுக்கு உவமை? எனில்: (அவ்வும் பிறவும் ஒத்தனை) அப்பொருள்களை ஒரொரு வகைக்கு உனக்கு உபமானமாகச் சொன்னேமே யொழிய, உனக்கு உவமை தேடவேண்டில் பலபொருள்

acharya.org

களையும் எடுக்கவேண்டியிருக்கிறது என்று கருத்து. (அவ்வும் பிறவும் ஒத்தனை என்னும் அருமறைப்பொருள்) வேதம்—

"தஸ்ய ஹைதஸ்ய புருஷஸ்ய ரூபம் யதா₂ மாஹாரஜநம் வாஸோ யதா₂ பாண்ட்₃வாவிகம் யதே₂ந்த்₃ரகோ₃ப: யதா₂-க்₃ந்யர்ச்சி: யதா₂ புண்ட₃ரீகம் யதா₂ ஸக்ருத்₃ வித்₃யுத்தம்"

[ப்₃ருஹ 4-3-6]

[இந்தப் பரமபுருஷனுடைய ரூபம் பொன்வர்ணமான வஸ்திரம்போலவும், வெள்ளைக்கம்பளம்போலவும், பட்டுப் பூச்சியைப்போலவும், அக்நிஜ்வாலையைப்போலவும், தாமரை போலவும், ஒருங்கே ஒளிவிடும் மின்னல்போலவும் உள்ளது] என்று பரமபுருஷனின் ரூபத்திலுள்ள பீதாம்பரம், திருவாபரணங்கள், சக்கரம் முதலான திவ்யாயுதங்கள், கைகால் முதலான அவயவங்கள், திருமார்பில் லக்ஷ்மி முதலானவர்களுக்குப் பொன்வஸ்திரம், வெள்ளைக் கம்பளம், பட்டுப்பூச்சி, அக்நிஜ்வாலை, தாமரை, மின்னல் முதலானவற்றை உவமையாக எடுத்து அடுத்தபடியாக "நேதி நேதி" என்று அந்தப் பரமபுருஷனின் ஸ்வரூபம், ரூபம், குணம் முதலானவை இவ்வளவுபட்டவை மாத்திரமல்ல என்று உரைத்ததன்றோ. இப்படிப் பல உபமானங்களைச் சொல்லி இவனை அறிந்து விடலாமோ? எனில்: (உவ்வும் நீயே) எத்தனை உபமானங்களைச் சொன்னாலும் சொற்களுக்குள் அடங்காதவனாய், குறிப்பால் உணரத் தக்கவனாகவே இருப்பவன் நீ. இப்படி தனக்கு முற்றுவமையாக ஒன்றையும் சொல்ல முடியாதவனாக இருப்பதற்குக் காரணமென்னவெனில்: (எவ்வயினோயும் நீயே) உனக்கு உவமையாக எடுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் அந்தர்யாமியாய் நின்று, அவற்றின் ஸத்தாஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளுக்கு (இருப்பு, வாழ்வு, செயல்களுக்கு) காரணமாயிருப்பவன் நீயேயாகையால் உனக்கு முற்றுவமையாகச் சொல்லத்தக்கது ஒன்றுமில்லை என்று கருத்து. (உவ்வும் நீயே என்னும் அருமறைப்பொருள்)

acharya.org

"யஸ்யாமதம் தஸ்ய மதம் — விஜ்ஞாதம் அவிஜாநதாம்" [கேந 2-3] என்று எவனுக்குப் பரம்பொருள் அளவிட்டு அறியப்படவில்லையோ, அவனுக்கே அது அறியப்பட்டதாகிறது என்றது வேதம். (எவ்வயினேயும் நீயே என்னும் அருமறைப்பொருள்) **"அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:"** [தை-நா 11] [அவை எல்லாவற்றையும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்] என்றது வேதம்.

பரம்பொருளுக்கேயுரிய இப்பெருமைகளை உடையவன் யாரெனில்: (செவ்வாய் உவணத்து உயர்கொடியோயே) சிவந்த வாயையுடைய கருடன் எனும் பக்ஷியாகிற உயர்ந்த கொடியை உடையவனான நீயே இப்பெருமையுடையவன் என்கிறது. (உவணத்து உயர் கொடி) வேதஸ்வரூபனானையாலே மிகவுயர்ந்த கொடியென்கிறது கருடனை. (உயர் கொடியோயே) உயர்கடவுளுக்கு உயர்கொடியே பொருத்தம் என்று கருத்து.

கேள்வியுள் கிளந்த ஆசான் உரையும்,
படி நிலை வேள்வியுள் பற்றி ஆடு கொளலும்
புகழ் இயைந்து இசை மறை உறு கனல் முறை மூட்டி
திகழ் ஒளி ஒண் சுடர் வளப்பாடு கொளலும்,
நின் உருபுடன் உண்டி;
பிறர் உடம்படுவாரா
நின்னொடு புரைய
அந்தணர் காணும் வரவு,

ஸர்வயஜ்ஞங்களிலும் ஆராதி₄க்கப்படும் யஜ்ஞபுருஷனான திருமாலுக்கு யாகத்தில் உருவமும், உணவும், வரவும் யாவை என்பதை விவரிக்கிறது.

(கேள்வியுள் கிளந்த ஆசான் உரை நின் உருபு) கேள்வியாவது, கேட்டே அறியப்படும் வேதம்; அதனுள்

acharya.org

யஜமானனாக (யாகத்தலைவனாகச்) சொல்லப்படுகிற ஆசார்யன் "இந்த்₃ராய ஸ்வாஹா" "யமாய ஸ்வாஹா" என்று உச்சரிக்கும் அந்தந்த மந்திரங்கள் உன் உருவமாகும். (படிநிலை வேள்வியுள் பற்றி ஆடு கொளல் நின் உண்டி) ஒன்றுக்கொன்று படிப்படியாக உயர்ந்துதோன்றும் வேதி முதலான பல அங்கணங்களையுடைய யாக பூமியிலே மிகவுயர்ந்ததான யூபஸ்தம்ப₄மாகிநின்று யாகபசுவாகிற ஆட்டைப்பற்றிக் கொள்வதுதான் உன் உணவாகும். (புகழ் இயைந்து இசை மறை உறுகனல் முறை மூட்டித் திகழ் ஒளி ஒண் சுடர் வளப் பாடு கொளல் நின் வரவு) 'தன்னைச் செய்தார் ஒருவருமில்லை' என்னும் அபௌருஷேயத்வமாகிற புகழோடு பொருந்தி இசைக்கும் மறையில் சொல்லிய முறைப்படி வேதமந்திரங்களாலே உயர்ந்த தீயை மூட்டி, பூர்ணாஹுதியின்போது அச்சுடரொளியை மேலும் பேரொளிபெற்று விளங்கும்படி வளர்த்துக்கொள்ளுதலே உன் வரவு. வளப்பாடு—வளரும்தன்மை. இந்திராதிசப்தங்கள் உன் உருவமாகின்றன; அவற்றினுள்ளிருந்து நீயே யாகபலனைக்கொடுக்கிறாய் என்றும், யாகத்தில் ஹவிஸ்ஸான யாகபசுவை புஜிப்பவன் நீயே என்றும், பூர்ணாஹுதியை ஏற்றுக் கொள்ள ஜ்வலிக்கும் அக்னியிலே தோன்றுபவன் நீயே என்றும் இவ்வளவால் சொல்லிற்றாயிற்று. **"அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போ₄க்தா ச ப்ரபு₄ரேவ ச"** [கீ₃தை 9-24] [எல்லா யஜ்ஞங்களிலும் ஹவிஸ்ஸை பு₄ஜிப்பவனும், பலனளிக்கும் தலைவனும் யானே] என்றானன்றோ கீதையில் கண்ணனும். (ஒண் சுடர் வளப்பாடு கொளலும் அந்தணர் காணும் வரவு) **"அக்₃நௌ திஷ்ட₂தி விப்ராணாம்"** [அந்தணர்க்கு அச்யுதன் அக்னியிலே விசேஷித்து நிற்கிறான்.] என்ற புராணவசனத்தை ஒட்டியிருப்பது காணத் தக்கது. நின்வரவு மேலும் எப்படிப்பட்டதெனில்: (பிறர் உடம்படுவாரா நின்னொடு புரைய அந்தணர் காணும் வரவு) தெய்வமில்லையென்பவரும் உன் உண்மையை ஒப்புக்

acharya.org

கொள்ளவேண்டும்படி உனக்கேற்றதாயிருக்கிறது, அந்தணர் அக்னியிலே காணும் நின் வரவு. இத்தால், பழந்தமிழர் வேதத்தையும், வேள்விகளையும், வேதியரையும் வேத வேள்வி வேதியர் முதல்வனை திருமாலையும் போற்றுபவர்களாக இருந்தனர் என்பதும், நாத்திகவாதத்தைத் தமிழர் பண்பாட்டுக்குப் புறம்பானதாகக் கருதியிருந்தனர் என்பதும் தெளிவாகத் தெரியவருகிறது. சங்கநூல்களைப் பற்றி வானளாவப்புகழும் நம் கழகத்தோழர்களும் சமரச நண்பர்களும் ஏனோ இவற்றைக் காணுமலும், கேளாமலும், பேசாமலும், காட்டினும் காணவும், கேட்கவும், பேசவும், மனமில்லாமலும் இருக்கின்றனர்?

வாயடை அமிர்தம் நின் மனத்தகத்து அடைத்தர,
மூவா மரபும் ஓவா நோன்மையும்
சாவா மரபின் அமரர்க்காச் சென்ற நின்
..............மரபினோய் நின் அடி,
தலை உற வணங்கினேம், பல் மாண் யாமும்;
கலி இல் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்,
கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்—
'கொடும்பாடு அறியற்க, எம் அறிவு !' எனவே.

இரண்டாம்பாடலின் கடைசியடிகளான இவற்றில், தேவர்க்கு அமுதளித்த பெருமையை முன்னிட்டுக்கொண்டு பரமபுருஷார்த்தத்திற்காக அவனைச் சரண்புகுகிறது.

(வாயடை அமிர்தம்) வாயில் அடுப்பதாகிற உணவு வாயடை எனப்படுகிறது. தேவர்க்கு உணவாயிருக்கும் அமுதம் என்றபடி. (நின் மனத்தகத்து அடைத்தர) தேவர்க்கு அமுதம் அளிப்பதாக நின் மனத்திலே நீ நினைத்தவுடனே. (மூவா மரபும் ஓவா நோன்மையும் சாவா மரபின் அமரர்க்காச் சென்ற) மூப்படையாத் தன்மையும், தொலையாத

acharya.org

வலிமையும், சாவாத் தன்மையைப்போலே அமரரை வந்தடைந்தன. (நின்......மரபினோய்) நின்னாலே தேவர்களும் பலன்பெறவேண்டும்படியிருக்கும் இப்படிப்பட்ட தன்மையுடையவனே! (நின் அடி தலை உற வணங்கினேம்) உன் திருவடியிலே எம் தலை படும்படியாக வணங்கினோம். ஒருகால் வணங்கினவளவோ? (பல்மாண் யாமும்) விஷயத்தின் பெருமை ஒருகால் வணங்குவதுடன் நிறுத்துமோ? பலகால் யாம் வணங்கிக்கொண்டேயிருந்தோம். இப்படி மெய்வருத்தி வணங்கின அளவேயோ? (கலி இல் நெஞ்சினேம் ஏத்தினேம்)கலக்கம் அற்ற நெஞ்சை உடையவர்களாய் அந்நெஞ்சாலே துதித்தோம். நெஞ்சுக்குக் கலக்கமாவது,— பயன்பெறுவோமோ? என்னும் ஐயம், தாழ்ந்த பயன்களை விரும்புதல் முதலானவை. (வாழ்த்தினேம்) இப்படி மனமெய்களால் மாத்திரமல்லாமல் மொழியாலும் உனக்குப் பல்லாண்டு பாடினோம். தனியே நின்றோ இப்படி வாழ்த்தியது? எனில்: (கடும்பொடும் கடும்பொடும்) உற்றாரோடும் உறவினரோடும் வாழ்த்தினோம். முன் வாழ்த்தினவளவேயோ? எனில்: (பரவுதும்) இனிக்காலமெல்லாம் இப்படி வாழ்த்துவோம் என்கிறது. வாழ்த்தும் முறைதான் யாது? எனில்: (கொடும்பாடு அறியற்க எம் அறிவு எனவே) எம் அறிவானது உன் விஷயத்தில் அஜ்ஞாநம் (அறியாதிருத்தல்) அந்யதாஜ்ஞாநம் (வேறுபட அறிதல்) விபரீதஜ்ஞாநம் (மாறுபட அறிதல்) என்னும் கொடுமைகளை உடையதல்லாமல் ஆயிடுக என்றே வாழ்த்துவோம். உன்னையும் உன் விஷயமான அறிவையுமல்லாமல் வேறொன்றையும் உன்னிடத்தில் கேட்கமாட்டோம் என்கை.

ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்தின் ஸாரார்த்தங்களையெல்லாம் மிக அழகாக இப்பாடல்களில் உணர்த்தியிருப்பதைப் பாடிப்பாடிப் பருகவேண்டும். இனி, மூன்றும் பாடலைக் காண்போம்.

acharya.org

பரிபாடல் மூன்ரும் பாட்டு

மாஅயோயே! மாஅயோயே!
மறு பிறப்பு அறுக்கும் மாசு இல் சேவடி
மணி திகழ் உருபின் மாஅயோயே

இப்பாடலைப் பாடிய கடுவன் இளவெயினனுர், புருஷோத்தமனுடைய பெருமையைச் சொல்லப்புகுகிறவராய், முதல் மூன்றடிகளில், முகுந்தனுக்கேயுரியதான முக்தியளிக்கும் தன்மையை முன்னிட்டுக்கொண்டு, மாயக்கடவுளான அவனை ஈடுபாட்டாலே முக்கால் விளிக்கிருர்.

(மாஅயோயே மாஅயோயே) மாயோனே! மாயோனே! என்கிருர். மாயமாவது ஆச்சரியம். மாயோனுகிருன் ஆச்சரியத்தை உடையவன். ஆச்சரியமான ஸ்வரூபத்தையும், ரூபத்தையும், குணங்களையும், விபூ₄திகளையும் உடையவன் என்றபடி. மூலப்ரக்ருதியாகிற ஆச்சரியமான லீலாவிபூ₄தியை உடையவனே மாயவன் என்பதை, **"மாயாம் து ப்ரக்ருதிம் வித்₃யாத் மாயிநம் து மஹேஶ்வரம்"** [ப்ரக்ருதியை 'மாயை' எனப்படுவதாகவும், ஸர்வேஶ்வரனை இம்மாயையை உடைய மாயவனுகவும் அறிய வேண்டும்.] என்று சுவேதாச்வதர உபனிஷத் உணர்த்திற்று. மாநிறத்தை, அதாவது கருநிறத்தை உடையவன் மாயோன் என்று பொருள்கொள்வாருமுண்டு. பேரன்பாலே ஒருகால் விளித்ததில் திருப்தியுருமல் முக்கால் (மூன்றுமுறை) விளிக்கிருர். இவனுடைய ஸ்வரூபரூபகுணங்களுக்கு உள்ள ஆச்சரியந்தான் என்ன? எனில்: (மறுபிறப்பறுக்கும்) கீழேயும், மேலேயும் கூட்டலாம். உன் ஸ்வரூபரூபகுணங்கள் மறுபிறப்பறுக்கும் தன்மை வாய்ந்தவை. இவ்வாச்சரியம் உன்னெருவனுக்கேயுள்ளது; இது வேறெவரிடமும் கிடையாது என்று கருத்து. இவ்வுலகில் காணும் உருவங்கள்போலே ரஜஸ் தமஸ்ஸுக்கள் கலந்து குற்றமுள்ளதாயிருக்குமோ இவ

acharya.org

னுருவம்? என்ன,— (மாசில் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே) ரஜஸ்தமஸ்ஸுக்களற்று சுத்தஸத்வமாயிருக்கும் செவ்வையையுடைய திருவடிகளோடு கூடிய நீலமணிபோல் ஒளிவிடும் திருவுருவையுடைய மாயவனே! மறுபிறப்பறுக்கும் உருவையுடையவன் என்னும் இப் பெருமையை வேறு எந்த தெய்வத்திற்காவது சங்கநூல்கள் சொல்லியிருக்கின்றனவா என்பதை நடுநிலையாளர்கள் காணவேணும்.

தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்
ஞாயிறும், திங்களும், அறனும், ஐவரும்
திதியின் சிறுரும், விதியின் மக்களும்,
மாசு இல் எண்மரும், பதினொரு கபிலரும்
தா மா இருவரும், தருமனும், மடங்கலும்,
மூ-ஏழ் உலகமும், உலகினுள் மன்பதும்
மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம்
மாயா வாய்மொழி உரைதர வலந்து:
வாய்மொழி ஓடை மலர்ந்த
தாமரைப் பூவினுள் பிறந்தோனும், தாதையும்,
நீ என மொழியுமால், அந்தணர் அருமறை.

இவ்வடிகளில்—பகவானிடமிருந்தே எல்லாப் பொருள்களும் உண்டாயின என்றும், எல்லாப் பொருள்களையும் உண்டாக்கும் பிரமனும் அவனுக்குக் கருவியாகவே இருப்பவன் என்றும், அவனையும் இவனே படைத்தவன் என்றும் வேதத்தை ப்ரமாணமாகக் காட்டி அறுதியிடப் படுகிறது.

(தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்) "மாயோய்! நின் வயின் பரந்தவை" என்று மாயக்கடவுளிடமிருந்து உண்டானவற்றை வகை வகையாகக் கணக்கெடுக்கிறுர். முதலில் அசேதநமான (அறிவற்ற) வ்யஷ்டிப்பொருள்களுக்கெல்லாம் மூலமான தீ, காற்று, ஆகாயம், நிலன்,

acharya.org

நீர் என்னும் ஐந்து பூதங்களும் உன்னிடமிருந்து உண் டானவையே என்கிறார். (ஞாயிறும் திங்களும்) சூரிய சந்திரராகிற சுடர்கள் இரண்டும். (அறனும்) பகவானுக்கு ஆராதனமான யஜ்ஞங்கள் 'அறன்' (த₄ர்மம்) எனப்படு கின்றன. இங்கு த₄ர்மஸ்வரூபியான யாகம் செய்பவனைக் (வேள்வித்தலைவனைக்) குறிக்கிறது என்பர் பரிமேலழகர். ஐந்து பூதங்கள், சூரியசந்திரர், வேள்வித்தலைவன் ஆகிய எட்டும் உருத்திரன் பிறந்தவுடன் பிரமனால் அவனுக்கு ஸ்தானமாகக் கொடுக்கப்பட்டவையாகையாலே அவை எட்டையும் சேர்த்து எடுத்து, இவை திருமாலிடமிருந்தே உண்டாயின என்று காட்டுகிறது. அஷ்டமூர்த்தியான சிவனின் எட்டு மூர்த்திகளும் திருமாலால் படைக்கப் பட்டவையே என்கை. (ஐவரும்) நவக்கிரஹங்களுள் ராஹுகேதுக்கள் சா₂யாக்ரஹங்களாகையாலே அவற்றைத் தள்ளி, மற்ற எழுவரில் சூரியசந்திரர் முன்னமே சொல் லப்பட்டு விட்டதால், மற்ற ஐந்து கிரஹங்களும் நின்னிட மிருந்தே உண்டானவர் என்பதை 'ஐவரும்' என்று காட்டு கிறார். (திதியின் சிறாரும் விதியின் மக்களும்) தி₃தியின் பிள்ளைகளான அசுரரும், பிரஜாபதிகளிலே ஒருவராகை யாலே 'விதி₄' [படைப்பவன்] எனப்படும் கச்ய பனுக்குப் பிள்ளைகளான தேவர்களும். அடுத்தபடியாக அஷ்டவஸுக்களையும், ஏகாதசருத்ரர்களையும், அச்விநீ தேவர்கள் இருவரையும் குறிக்கையாலே இங்கு காசிபன் மக்கள் என்றது தேவர்களில் ஒருவகையான பன்னிரு ஆதி₃த்யர்களை என்று பொருள்கொண்டார் பரிமேலழகர். தேவர்களும், அசுரர்களும் காசிபன் மக்களாகவேயிருந்த போதிலும், அசுரர்கள் தாயான தி₃தியின் குணங்களைக் கொண்டவராயிருந்தமையாலே அவர்களை 'திதியின் சிறார்' என்றும், தேவர்கள் தகப்பனான கச்யபரின் குணங்களைக் கொண்டவராயிருந்தமையால் அவர்களை 'விதியின் மக்கள்' என்றும் உரைத்தார். (மாசில் எண்மரும்) அறிவில் குற்ற மற்ற அஷ்டவஸுக்களும். (பதினொரு கபிலரும்) ஏகாதச

acharya.org

ருத்ரர்களும். உருத்திரரைக் 'கபிலர்' என்றது அவர்கள் கபில (சிவப்பு) நிறம் உடையவராகையாலே. (தாமா இருவரும்) தாவும் மாவிலிருந்து (குதிரையிலிருந்து) உண்டான இருவரான அச்விநீதேவதைகளும். ஊர்வசியானவள் பெட்டைக்குதிரையுருவெடுத்துச் சென்றவளைக்கண்டு விரும்பி, ஆதித்யன் ஓர் ஆண்குதிரை வடிவத்துடன் அவள்பால் தாவினான் என்றும், அவ்வாண்குதிரையின் நாசிகைத்துளைகளிலிருந்து இரண்டு வீரியபிந்துக்கள் விழ, அதினின்றும் அச்விநீதேவதைகள் இரட்டையராய்த் தோன்றினார்கள் என்றும் கூறுவர். பன்னிரு ஆதித்யர்கள், அஷ்டவஸுக்கள், பதினொரு உருத்திரர்கள், அச்விநிகள் இருவர் ஆகிய முப்பத்துமூன்று தேவர்தலைவர்களும் திருமாலிடமிருந்தே தோன்றினர் என்று உரைக்கப்பட்டதாயிற்று. "முப்பத்து மூவர்" [திருப்பாவை 20] எனப்படும் இவர்கள் முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் உபலக்ஷணம். (தருமனும்) யமனும். (மடங்கலும்) அழிப்பவன் என்று பொருள்படும். யமனுடைய ஏவலைச்செய்யும் கூற்றத்தைச் சொல்லுகிறது என்பர் பரிமேலழகர். அந்த யமனையும் ஸம்ஹாரகாலத்தில் அழிக்கும் உருத்திரனைச் சொல்லுகிறது என்றும் கொள்ளலாம். இப்படித் தனித்தனியே சொல்லுவானேன்? (மூவேழ் உலகமும் உலகினுள் மன்பதும்) ஒவ்வொன்றும் ஏழுவகைப்பட்ட மூவுலகமும், அவ்வுலகிலுள்ள உயிர்களும். அசேதனமும் (அறிவற்றதும்) சேதநமும் (அறிவுள்ளதும்) ஆன எல்லாப் பொருள்களும் என்றபடி. இவையெல்லாம் எதற்காகச் சொல்லிற்று? எனில்: (நின்வயின் பரந்தவை உரைத்தேம்) உன்னிடமிருந்து உண்டானவை இவை என்று உரைத்தோம். (மாயோய்) 'மாயை' எனப்படும் மூலப்ரக்ருதியை சரீரமாக உடையவனாயிருப்பதாலன்றோ நீ இவற்றையெல்லாம் உண்டாக்கவல்லவனாயிருக்கிறாய் என்று கருத்து. "மாயா வயுநம் ஜ்ஞாநம்" என்கிற நிகண்டுவின்படியே மாயாசப்தம் ஞானத்தைக் குறிக்குமாகையாலே,

acharya.org

'மாயோன்' என்றது ஞானமயமான ஜீவர்களை சரீரமாகக் கொண்டவன் என்றும் பொருள்படும்; "ஸ தபோ ऽதப்யத" "யஸ்ய ஜ்ஞாநமயம் தப:" என்று ஞானமயமான ஜகத் ஸ்ருஷ்டிஸங்கல்பத்தை உடையவன் என்றும் பொருள் படும். இப்படிச் சேதநாசேதநங்களை சரீரமாக உடைய வனுகையால் உபாதாநகாரணமாகவும், ஸ்ருஷ்டி ஸங்கல் பத்தை உடையவனுகையாலே நிமித்தகாரணமாகவும் ஆகக்கூடியவன் நீயேயாகையாலே 'மாயோன்' என்னும் உன் பெயரே நீ ஸர்வகாரணன் என்பதைக் காட்டித்தரும் என்கை.

இதையெல்லாம் எந்த ப்ரமாணத்தைக் கொண்டு சொன்னது? எனில்: (மாயா வாய்மொழி உரைதர) அழியாத வேதம் சொன்னதைச் சொன்னேம். அழியும் பௌருஷேயவாக்குகளான புராணங்கள் சில சொல்லும் பொய்யுரைகளை ப்ரமாணமாகக் கொண்டு சொன்னேமல் லோம். அழியாத அபௌருஷேய வாக்யமான வேதம் சொல்லச் சொன்னேம்; ஆகையாலே இதில் தவறிருக்க இடமில்லை என்று கருத்து. வேதம் இப்படி எங்கே சொல்லிற்றெனில்: "நாராயணுத் ப்₃ரஹ்மா ஜாயதே நாராயணுத் ருத்₃ரோ ஜாயதே ... நாராயணுத் த்₃வாத₃ ஶாதி₃த்யா ருத்₃ரா வஸவ:" [நாராயணனிடமிருந்து பிரமன் பிறக்கிறுன்; நாராயணனிடமிருந்து உருத்திரன் உண்டா கிறுன்; நாராயணனிடமிருந்து பன்னிரு ஆதித்யர்களும், (பதினெரு) உருத்திரர்களும், (எட்டு) வஸுக்களும் உண்டா யினர்] என்று ஸகலாசாரியர்களும் எடுத்துக் கையாளும் நாராயணேபநிஷத் உத்கோஷித்ததன்றே. மற்றும் எத்தனையோ வேதவாக்கியங்களும் உண்டு. வேதவாக்கி யங்களைக்கொண்டே ஆயிரம் பக்கங்களுக்குமேல் எழுதி. விஷ்ணுசித்த விஜயத்திலே இதை நிலைநாட்டியிருக்கிறேம். ஆர்வமுடையார் காணலாம். நிற்க; வேதம் சொன்னபடி யெல்லாம் நீர் சொல்லிவிட்டீரோ? என்ன. சொல்லு கிறுர்: (வலந்து உரைத்தேம்) வேதம் சொன்னபடி சொல்ல

acharya.org

வல்லோமோ சிற்றறிவினரான யாம்? ஏதோ முறைதப்பிச் சொன்னோ மித்தனை என்கிறார்.

அதுசரி; எல்லா உலகத்தையும் பிரமன் படைத்ததாக வன்றோ உலகில் பிரசித்தியுள்ளது: புராணங்களும் அப்படிப் பேசுகின்றனவே? என்ன; அப்பிரமனும் உன் சரீரமே என்றும், அவனையும் படைத்தவன் நீயே என்றும் வேதம் கூறுகின்றது என்கிறார் அடுத்தபடியாக: (தாமரைப் பூவினுள் பிறந்தோனும் நீ) உன் உந்தியில் நீ படைத்த தாமரைப் பூவினில் பிறந்த ஒருவனன்றோ பிரமன்; அவன் உன்னையன்றியிலே இவற்றைப் படைத்து விடமுடியுமோ? பிரமன் படைத்தான் என்றாலும் அவனுக்கும் அந்தர்யாமியாய் நிற்கும் நீ படைத்தாய் என்றதேயாகுமன்றோ. மேலும், (தாதையும் நீ) அவனுக்கும் தந்தை நீயன்றோ. அவனையே நீ படைத்திருக்க, அவன் எப்படி எல்லாம் படைத்த பரம்பொருள் ஆகமுடியும்? என்று கருத்து, இவ்விஷயத்தில் ப்ரமாணம் என்ன? எனில்; (என மொழியுமால் அந்தணர் அருமறை) இதைச் சொல்லுவதும் அந்தணருடைய அருஞ்செல்வமான மறையன்றோ. எங்கே சொல்லிற்றெனில்: **"ப்${}_3$ரஹ்மா நாராயண:"** [ஸுபா${}_3$லோபனிஷத்] [பிரமனை சரீரமாகக் கொண்டவனும் நாராயணனே] **"ஸ ப்${}_3$ரஹ்மா ஸ சிவ: ஸேந்த்${}_3$ர:"** [தைத்திரீய நாராயணவல்லி] [நாராயணனே பிரமன், உருத்திரன், இந்திரன் ஆகியவரை சரீரமாகக் கொண்டவன்] என்ற விடங்களிலே "தாமரைப் பூவினுள் பிறந்தோனும் நீ" என்னுமர்த்தத்தைச் சொல்லிற்று. **"நாராயணாத் ப்${}_3$ரஹ்மா ஜாயதே"** [நாராயணோபநிஷத்] [நாராயணனிடமிருந்து பிரமன் உண்டாகிறான்] **"யோ ப்${}_3$ரஹ்மாணம் வித${}_3$த${}_4$ாதி பூர்வம்"** [ஶ்வே 6-18] [எவன் பிரமனை முன்படைத்தானோ] என்ற விடங்களில் "தாதையும் நீ" என்ற அர்த்தத்தைச் சொல்லிற்று. மற்றும் பல விடங்களிலும் சொல்லியிருப்பதை விஷ்ணுசித்தவிஜயத்திலே காணலாம்.

acharya.org

இப்பாடலில் முதல் பதினுலு அடிகளிலே, மறுபிறப் பறுக்கும் மாசில் சேவடியை உடையவனும், எல்லா உலகையும், அவற்றைப் படைக்கும் பிரமனையும் படைத் தவனும் மாயக்கடவுளே என்றும், இவ்வர்த்தத்தை அபௌருஷேயமான வேதம் உரைத்தது என்றும் மிகத் தெளிவாகப் பாடப்பட்டது. முன்னும் பின்னும், மற்றும் பல திருமாலைப்பற்றிய பாடல்களிலும் இவையும், மற்றும் பரம்பொருளுக்கேயான தனிப்பெருமைகளும் வலியுறுத்தப் பட்டிருப்பதையும் காட்டிவருகிருேம். இப்படி வேறு எந்த தெய்வத்தையும் பாடவில்லையென்பதையும், மாருகப் பரம் பொருளுக்கு ஒவ்வாத தாழ்வுகளை உடையவர்களாகப் பாடியிருக்கின்றது என்பதையும் காட்டிவருகிருேம்; காட்டவும் போகிருேம். தமிழ்நாட்டில் கேட்பவர்களுக் கெல்லாம் அடக்கவிலையிலும் குறைந்த விலைக்கு இந்நூலை வழங்கப்போகிருேம். இதைப்பெறும் ஒவ்வொரு அன்பரும் மற்றும் பலரைப் படிக்கச் செய்யவேண்டும் என்றும், பலருக்கு இந்நூலை வாசித்துக் காட்டவேண்டும் என்றும் வேண்டுகிருேம். தற்காலத்தில் சைவர்களும் அத்வைதி களும் சமரசவாதிகளும் 'பரமசிவன்தான் பரதெய்வம்' 'பராசக்திதான் பரதெய்வம்' 'கணபதிதான் பரம்பொருள்' 'முருகன்தான் பரம்பொருள்' 'ஐயனுர்தான் பரம்பொருள்' 'இவர்கள் எல்லாரும் ஒன்றுதானே' 'அரியும் சிவனும் ஒன்று; அறியாதவன் வாயில் மண்ணு' என்று மனம் போனவாறெல்லாம் கூறி, மோக்ஷமளிக்கும் ஒன்ருன ஆதி பரம்பொருள் நாரணனே என்னும் உண்மையை மறைத்து வருகின்றனர். இதனுல், பல கடவுளரை ஒப்புக்கொள்ளும் 'இந்துமதம்' என்று வழங்கப்பெற்றுவரும் வைதிகமதத்தின் முழுமுதற்கடவுள் யார் என்பது பெரும்பான்மையினருக்குத் தெரியாமலே இருந்துவருகிறது. இக்காரணத்தாலேயே கிறிஸ்தவர்களுக்கும், நாஸ்திகர்களுக்கும் இந்துக்களை மதம் மாற்றுவது எளிதாகிவிடுகிறது. இந்நூல் பிரசாரமடைந்த

acharya.org

தாகில் பழந்தமிழர் திருமால் ஒருவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டிருந்தனர் என்னும் உண்மை தமிழ்மக்களுக்குப் புலப்பட்டுவிடும். ஆகையால் இந்நூலைப் பெறும் அன்பர் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற வரையில் பத்துநூருயிரக்கணக்கான மக்களுக்கு இதைப் படிக்கக் கொடுக்கவேண்டும் என்று வேண்டுகிறோம். நிற்க; மேலே செல்வோம்.

'ஏஎர், வயங்கு பூண் அமரரை வௌவிய அமிழ்தின்,
பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை;
பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளின்
நிவந்து ஓங்கு உயர் கொடிச் சேவலோய்! நின்
சேவடி தொழாரும் உளரோ? அவற்றுள்
கீழ் ஏழ் உலகமும் உற்ற அடியினை;

இவ்வாறு அடிகளில் திருமாலின் வாஹனமும் கொடியுமான கருடனின் பெருமையும்,திருமாலின் திருவடிப் பெருமையும் உணர்த்தப்படுகின்றன.

(ஏஎர் வயங்கு பூண் அமரரை வௌவிய அமிழ்தின் பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை) அழகு விளங்குகின்ற ஆபரணங்களை அணிந்த தேவர்களை வென்று, அவர்களிடத்திலிருந்து கவர்ந்துவந்த அமுதத்தால், தன்னைப் பெற்ற தாயாகிய வினதையின் துன்பத்தைப் போக்கிய கருடப்பறவையை வாஹனமாக உடையவன் நீ. 'ஏர்'– எழுச்சி; (இங்கு) அழகின் மிகுதி. **வயங்கு** — விளங்கு. **பூண்** — ஆபரணம். **வௌவிய** — கவர்ந்த. **பயந்தோள்** — பெற்றவள். சுக்லயஜுர்வேதத்தைச் சேர்ந்த சதபதப்ராஹ்மணத்தின் ஐந்தாவது ப்ரபாடகத்தின் முதல் ப்ராஹ்மணத்தின் தொடக்கத்திலும், மஹாபாரதம் ஆதிபர்வம் இருபத்தொன்று முதல் முப்பத்துநாலாவது அத்தியாயம் முடியவும் இந்த விருத்தாந்தம் விளக்கப்பெற்றுள்ளது. நாகங்களின் தாயாகிய கத்ருவுக்கும், கருடனுடைய

acharya.org

தாயாகிய வினதைக்கும் ஓர் போட்டி ஏற்பட்டதில், வஞ்சனை யாலே வினதை தோற்கடிக்கப்பட்டு கத்₃ருவுக்கு அடிமை யானாள் என்றும், கருடன் தேவர்களை வென்று அமுதத்தைக் கொணர்ந்து அடிமைத்தனத்திலிருந்து தாயை மீட்டான் என்றும் இதிஹாஸம். நித்யஸூரியான கருடன், பகவான் அதி₃தியிற்றிற்பிறந்து உபேந்திரனாயிருந்தபோது, அவ னுக்கு வாஹனமாவதற்காக வினதை வயிற்றிற் பிறந்து, இவ்வருஞ்செயலைச் செய்தான். உன்னுடைய வாஹனமே தேவர்களை வெற்றிகொள்ளக் கூடியதாகில், நீ தேவாதி தேவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? என்று கருத்து. (பயங்தோள் இடுக்கண் களைந்த புள்ளின் நிவந் தோங்கு உயர் கொடிச்சேவலோய்) தன்னைப்பெற்றவ ளுடைய அடிமைத் துன்பத்தைப் போக்கிய மிகமிக உயர்ந்த கருடப்பறவையாகிற கொடியை உடையவனே! நிவந்து, ஓங்கு, உயர் என்னும் மூன்று பதங்களும் உயர்த் தியைக் காட்டும். இங்கு மிகமிக உயர்ந்த கொடி என்று காட்டுகின்றன. நீயே பரம்பொருளாகையாலே உன் கொடியே மிகமிக உயர்ந்தது என்கை. உன் வாஹன மும், கொடியுமான கருடனே தன்னோடு ஸம்பந்தமுடை யாரின் துன்பத்தைக் களைபவனாகும்போது, நீ உன்னடியார் துன்பத்தைப் போக்குமவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? என்று கருத்து. (நின் சேவடி தொழாரும் உளரோ) இப்படி தேவாதிதேவனாயிருக்கையாலும், அடி யார் துன்பம் அனைத்தையும் களைபவனாகையாலும் உன் திருவடியைத் தொழாத மனிதரும் உளரோ ? மற்ற தெய்வங்களின் அடிகளை—இம்மைப் பலன்களையும்,சுவர்க்கம் முதலான அழியும் சிற்றின்பப் பலன்களையும் விரும்பு வார்களே தொழுவார்கள். நீ பேரின்பமுள்ளிட்ட எல்லாப் பலன்களையும் அளிப்பவனாகையாலே, உன்திருவடியை எப்பலனை விரும்பும் எவரும் தொழுவார்கள். மோக்ஷத் தையே விரும்புவோர் மற்றதெய்வங்களை மறந்தும் தொழார்கள். உன்னொருவனையே அவர்கள் தொழுவார்

acharya.org

கள். ஆகையால் உன்னைத் தொழாதவர்களே இல்லை என்று கருத்து. எந்த தெய்வத்தைத் தொழுதாலும், அவர்களுக்கு அந்தர்யாமியான உன்னைத் தொழுததாகவே ஆகுமாகையால், உன் திருவடியைத் தொழாதவர்கள் உலகிலேயே இல்லை என்பதாகவும் கொள்ளலாம். **"ஆகாஶாத் பதிதம் தோயம் யதா₂ க₃ச்ச₂தி ஸாக₃ரம் । ஸர்வதே₃வநமஸ்கார: கேஶவம் ப்ரதி க₃ச்ச₂தி ॥"** [ஆகாயத்திலிருந்து விழும் ஜலம் கடலை அடைவதுபோல், எல்லா தேவதைகளைப்பற்றிய வணக்கமும் கேசவனை அடைகின்றது.] என்றனர் மஹரிஷிகளும். **"தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்தி"** [கீதை 9-23] [மற்ற தேவதைகளை ஆராதிப்பவர்களும் என்னையே ஆராதிக்கிறார்கள்] என்றான் கீதையில் கண்ணனும். இப்படிச் சொல்லியிருப்பதைக் கொண்டு சிலர், "எந்த தேவதையைத் தொழுதால் என்ன? எல்லாம் பரம்பொருளைத்தானே அடைகின்றது" என்று வாதாடுகின்றனர். அவர்களுக்குச் சொல்லுகிறோம்; ஓரூருக்குப்போகக் குறுக்குவழிகளுமுண்டு, சுற்றுவழிகளுமுண்டு; நல்ல பாதையுமுண்டு; முட்பாதைகளும் உண்டு. அறிவாளிகள் குறுக்குவழியிலும் நல்ல பாதையிலும் நடந்து சென்று லட்சியத்தை எளிதில் அடைவர். மற்றவர்கள் சுற்றுவழிகளிலும், முட்பாதைகளிலும் சென்று, அவ்வழிகளிலுள்ள சிரமங்களினாலே அடைய வேண்டிய இடத்தை அடையாமல் நசித்துப்போவதுமுண்டு. அப்படியே நாராயணனை நேரே சரணமடைபவர் எளிதிலே முக்தியடைவர்; மற்ற தேவர்களை உபாஸிப்பவர்கள் பல ஜன்மங்களில் படிப்படியாக முன்னேறி நாராயணனை உபாஸித்து முக்தியடைந்தாலும் அடைவர். நடுவிலே நழுவி ஸம்ஸாரத்திலே உழன்றாலும் உழல்வர். இதுவே இருவர்க்குமுள்ள வித்தியாசம். மற்ற தேவதைகளை உபாஸிப்பவர்கள் என்னையே உபாஸிக்கிறார்கள் என்ற கண்ணன், **"அவிதி₄பூர்வகம்"** [கீ₃தை 9-23] என்று அவர்கள் வழியல்லாவழியில் செல்கின்றனர் என்று உரைத்

acharya.org

தும் இக்கருத்தாலேயே ஆகும். (அவற்றுள் கீழேழுல கமும் உற்ற அடியினை) இவ்வடிகளில், கீழேயுள்ள ஏழுலகத்தையும் கடந்த ஓரடியை உடையவனே! இது மேலேழுலகத்தையும் கடந்த மற்றோரடியையும் உபலக்ஷண முறையாலே உணர்த்துகிறது. இப்படி அனைத்துலகிலு முள்ள அனைவர் தலையிலும் திருவடிகளை வைத்தவனாகை யாலும், உன்னைத் தொழாதவர் இல்லை என்று கருத்து.

> 'தீ செங் கனலியும், கூற்றமும், ஞமனும்,
> மாசு இல் ஆயிரம் கதிர் ஞாயிறும் தொகூஉம்
> ஊழி ஆழிக்கண் இரு நிலம் உருகெழு
> கேழலாய் மருப்பின் உழுதோய்' எனவும்
> 'மா விசும்பு ஒழுகு புனல் வறள அன்னச்
> சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோய்' எனவும்
> ஞாலத்து உறையுள் தேவரும் வானத்து
> நாலு எண் தேவரும் நயந்து நிற் பாடுவோர்
> பாடும் வகையே எம் பாடல்தாம் அப்
> பாடுவார் பாடும் வகை.

இவனே பரம்பொருள் என்பதைக் காட்டும் திரிவிக்கிரம விருத்தாந்தத்தைச் சொன்னவுடன், இவனுடைய பரத்து வத்தைக் காட்டும் மற்றுமிரு அருஞ்செயல்கள் நினைவிற்கு வந்து, அவற்றை விவரிக்கிறார் இப்பத்து அடிகளாலே.

(தீ செங்கனலியும் கூற்றமும் ஞமனும் மாசில் ஆயிரங் கதிர் ஞாயிறும் தொகூஉம் ஊழி) உலகங்களையெல்லாம் தீய்த்து அழிக்கும் சிவந்த ஊழிகாலநெருப்பும், யமனின் துணைவனான கூற்றுவனும், யமனும், குற்றமற்ற ஆயிரக் கணக்கான கிரணங்களைக்கொண்ட சூரியனும் உலகை அழிப்பதிலே ஒன்றுகூடிநின்ற பிரளயகாலத்திலே. கூற்றம் என்றது அழிப்பவனான உருத்திரனாகவுமாம். மற்ற அனைத்தையும் அழிக்கும் இவர்களும் அழிக்கப்படும் வஸ் துக்களாக ஒன்றுகூடிநிற்கும் பிரளயகாலத்திலே என்றும்

acharya.org

பொருள் கொள்ளலாம். **"ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்"** [கடோபனிஷத்] [(உலகங்களை அழிக்கும் விஷயத்தில்) யமன் எந்தப் பரம்பொருளுக்கு ஊறுகாய் ஆகிறானோ] என்றதன்றோ வேதமும். (ஊழி ஆழிக்கண்) அப்படிப்பட்ட அந்தப் பிரளயத்தின் முடிவில் இருந்த ஜலத்திலே. (இரு நிலம் உரு கெழு கேழலாய் மருப்பின் உழுதோய் எனவும்) அந்தப் பிரளயஜலத்திலே அமிழ்ந்திருந்த பெரிய பூமியின் வடிவத்தை, அழகிய வராஹமாகி, தந்தத்தால் பெயர்த்து எடுத்தாய்! என்றும். **கேழல்**-வராஹம்; **மருப்பு**-தந்தம். (மாவிசும்பு ஒழுகு புனல் வறள அன்னச் சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோய் எனவும்) கீழே ஜலத்தில் அமிழ்ந்துகிடந்ததை மேலே நிலைநிறுத்தியது மாத்திரமோ? பெரியதான ஆகாசத்திலிருந்து புஷ்கலம் முதலான ஏழு ஊழிகால மேகங்களும் இடைவிடாமல் பொழிந்துகொண்டிருந்த ஜலமானது வற்றும்படியாக ஹம்ஸபக்ஷியாய் அவதாரமெடுத்துத் தன் சிறகுகளாலே அந் நீரை வற்றச்செய்தவனே! என்றும். **அன்னச்சேவல்** - ஆண் ஹம்ஸப்பறவை. **வறள**-வற்றும்படியாக. **புலர்த்தியோய்**-உலர்த்தியவனே! இப்படியெல்லாம் இவனைத் துதிப்பவர்கள் யாரெனில்: (ஞாலத்து உறையுள் தேவரும்) இவ்வுலகத்தை இருப்பிடமாகக் கொண்ட 'பூஸுரர்கள்' (நிலத்தேவர்கள்) எனப்படும் மறையவர்களும். (வானத்து நாலு எண் தேவரும்) சுவர்க்க லோகத்திலிருப்பவர்களாய், பன்னிரு ஆதித்தியர், பதினொரு உருத்திரர், எட்டு வஸுக்கள், அச்வினிகள் இருவர் என்று நாலுவகையாக எண்ணப்படும் முப்பத்து மூவரான தேவர்களும். இப்படி நிலத்தேவரும், வானத் தேவரும் இவனைப் பாடுவது நிர்ப்பந்தத்தாலேயோ? எனில்: (நயந்து நின் பாடுவோர்) இவர்கள் அனைவர்க்கும் நீ ஸ்வாமியாகையாலே **விரும்பி** உன்னைப் பாடுவார்கள். இல்லாத இச்செயல்களை இவன் செய்ததாக இவர்கள் கற்பனை செய்து பாடுவார்களோ? எனில்: (பாடும் வகையே) அநாதியான வேத சாஸ்திரங்களில் சொல்லியபடியே பாடுவார்களேயொழி

acharya.org

யத் தாங்களே கற்பனைசெய்து பாடுவார்களல்லர். இவர்களும் இச்செயல்களை நேரேகண்டு பாடினவர்களல்லர்; தமக்கு முன்புள்ளார் கண்டு பாடியுள்ள வகையிலே பாடினார்களித்தனை என்றுமாம். இதனால் தேவர்களுக்கும் முன்னவனான தேவாதிதேவன் இவனே என்று காட்டப்படுகிறது. நீங்கள் பாடுவதுதான் எப்படி? எனில்: (எம் பாடல்தாம் அப்பாடுவார் பாடும் வகை) எம்முடைய பாடலும் அந்த நிலவானத்தேவர்கள் பாடும் வழியைப் பின்பற்றியிருக்கும். "நிலவானத்தேவர்கள் திருமாலின் தொன்மையை அறியமாட்டார்கள்; அதனால் அவர்கள் அவனைப் பாடும்போது தமக்கு முன்னிருந்தவர்கள் அவனை எப்படிப் பாடினார்களோ அப்படியே தாமும் பாடினர். அவர்களைப் பின்பற்றி நாமும் பாடினோம்" என்று கருத்து. இதனால் திருமாலின் தொன்மையை அறியாதவிஷயத்தில் பிரமன் முதலான தேவர்களோடும் இன்றுள்ள மனிதரோடும் வாசியில்லை என்றதாயிற்று. **"மஹார்ணவாந்த: கோ மஜ்ஜதோரணுகுலாசலயோர் விஶேஷ:"** [பெருங்கடலினுள் முழுகும் விஷயத்தில் அணுவுக்கும் மலைக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது?] என்றார் ஆளவந்தார். இப்படி அறியமுடியாத தொன்மையை உடையவனாக சங்கநூல்களில் சிவனையாவது முருகனையாவது காளியையாவது அல்லது துரீயம் (நாலாவது), துரீயாதீதம் (ஐந்தாவது) ஆன வேறு எந்த தேவதையையாவது, தத்துவத்தையாவது பாடியிருக்கிறார்களா என்பதை மனச்சாட்சி உள்ள தமிழர்கள் தேடிப்பார்த்து முடிவுகூறவேண்டும்.

கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல்
எரி சினம் கொன்றோய்! நின் புகழ் உருவின கை
நகை அச்சாக நல் அமிர்து கலந்த
நடுவுநிலை திறம்பிய நயம் இல் ஒரு கை
இரு கை மாஅல்!
முக் கை முனிவ! நாற் கை அண்ணல்!

acharya.org

ஐங் கைம் மைந்த! அறு கை நெடு வேள்
எழு கையாள! எண் கை ஏந்தல்!
ஒன்பதிற்றுத் தடக் கை மன் பேராள !
பதிற்றுக் கை மதவலி! நூற்றுக் கை ஆற்றல்!
ஆயிரம் விரித்த கைம் மாய மள்ள !
பதினுயிரம் கை முதுமொழி முதல்வ !
நூருயிரம் கை ஆறு அறி கடவுள் !
அனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல்
இனைத்து என எண் வரம்பு அறியா யாக்கையை

இவ்வடிகளில், பரமபுருஷனுடைய அவதாரங்கள் சில வற்றை அனுபவித்துக்கொண்டு, அவன் எல்லா உலகை யும் சரீரமாகக் கொண்டிருக்கிருன் என்னும் உண்மை உத்கோஷிக்கப்படுகிறது.

(கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல் எரிசினம் கொன் ருேய்) கூந்தல் என்பது கேசத்தைக் குறிக்கும்; ஆகுபெய ராகக் கொள்ளும்போது கூந்தலே உடையவனேக் குறிக்கும். கூந்தல் வடமொழியில் கேஶம் எனப்படும்; அழகிய கேசத்தை உடையவனுகையாலே கேசவன் என்று குறிக் கப்படுபவன் கண்ணன். இங்கு முதலிலுள்ள 'கூந்தல்' என்னும் பதம் அழகிய கூந்தலேயுடையவனுன கேசவனேக் குறிக்கிறது. இரண்டாவதாக உள்ள 'கூந்தல்' என்னும் பதம் கேசத்தையுடைய குதிரையாக வந்தவனுகையாலே 'கேசீ' எனப்படும் அசுரனேக் குறிக்கிறது. தமிழிலும் குதிரை 'கூந்தல் மா' எனப்படும். ஆக, கேசவன் என்னும் பெயரோடு அவதரித்து, கேசி என்னும் அசுரனுடைய கடுங்கோபத்தை அவனேடு அழித்தவனே! என்றதாயிற்று. முதலிலுள்ள கூந்தல் என்னும் பதமானது குதிரையைக் குறிப்பதாகவும், பெயர் என்றது ஆகுபெயராய் பெய்ரை யுடைய வடிவைக் குறிப்பதாகவும்கொண்டு, குதிரைவடி வோடுவந்த கேசியினுடைய கனல்கின்ற சினத்தை அழித் தாய் என்று பொருள்கொண்டார் பரிமேலழகர். இதனினும்

acharya.org

நாம் உரைத்த பொருளே பொருத்தமுடையது. கூறியது கூறல் முதலான தோஷமில்லாதது. கண்ணனுடைய பெயரையும் காட்டுவது. "'கூந்தல்' என்னும் பெயரைக் கொண்டவனுய் வந்தே கூந்தலை அழித்தான்" என்னும் சுவைமிக்க பொருளையும் காட்டுகிறது.

இனி, கேசியைக்கொன்ற அக்கையைப் பலவாறு துதிக்கிருர்: (நின் புகழ உருவின கை) உன்னுடைய புகழை ஒத்தவை உன் கைகள்; உன் புகழ் எப்படி கணக்கிட முடியாதபடியுள்ளதோ, அப்படியே உன் கைகளும் கணக்கிடமுடியாதவை. இங்கு கையைச்சொன்னது, கால், தலை, கண் முதலானவற்றுக்கும் உபலக்ஷணம். **"ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்"** என்று புருஷ ஸூக்தத்திலும், **"தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய், துணைமலர்க்கண்களாயிரத்தாய் தாள்களாயிரத்தாய்"**[திருவாய் 8-1-10] என்று திருவாய்மொழியிலும் கோஷிக்கப் பட்டதை நினைப்பது. **'தஸ்ய நாம மஹத்₃யஶ:"** [தை-நா] [அவனுக்கே பெரும்புகழுள்ளது] என்று மறைமுடியிலும், **" அச்சுதன் அனந்தகீர்த்தி "** [திருச்சந்த-117] என்று திருச்சந்தவிருத்தத்திலும் பரமபுருஷன் எல்லையற்ற புகழை யுடையவன் என்றும் உத்கோஷிக்கப்பட்டது.

கையைப் பற்றிய பேச்சு வந்தபடியாலே, அக்கை செய்த மற்ருெரு அருஞ்செயலை நிந்₃ராஸ்துதிமுறையிலே பாடுகிறது; (நகையச்சாக நல்லமிர்து கலந்த நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை) நகை—மகிழ்ச்சி; அச்சு—அச்சம்; பயம். மோகினியாகிய நின் வடிவழகைக் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சியே, அசுரர்க்கு பயமாய் முடியும்படியாக, தேவர் களுக்கு நலம்மிக்க அமுதத்தைப் பங்கிட்டுக் கொடுத்தமை யாலே, நடுநிலைமையை மீறிய நலமில்லாத ஒரு கையை உடையவனே! இருசாராரும் உடம்புநோவக் கடல் கடைந் திருக்க, தேவர்க்கு அமுதளித்து, அசுரரை ஏமாற்றி

சா—9

acharya.org

விட்டாயே. இப்பக்ஷபாதம் நலமாகுமோ? என்று மேலெழப் பார்க்கும்போது நிந்தையாகவும், ஊன்றிப்பார்க்கும்போது, இப்படிப் பக்ஷபாதி என்னும் பழிச்சொல்லைத் தான் ஏற்றுவது நல்லவர்களான தேவர்களை அளிப்பதும், தீய வர்களான அசுரர்களை அழிப்பதுமான செயல்களைச் செய்ப வனே! என்று துதியாகவும் கிடக்கிறது. ஆகையாலே நிந்தாஸ்துதி யெனும் அலங்காரம் (அணி) ஆகும்.

இனி, " தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம் தானே" [முதல் திருவ-44] என்றும், "நெஞ்சினல் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" [திருவாய் 3-6-9] என்றும், "யே யதா₂ மாம் ப்ரபத்₃யந்தே தாம்ஸ் ததை₂வ ப₄ஜாம்யஹம்" [கீதை 4-11] என்றும் சொல்லுகிறபடியே அடியார் வேண்டியவாறெல்லாம் உருவமெடுப்பவனாகை யாலே, அப்படிப்பட்ட பல உருவவேறுபாடுகளையும், அவர்களிட்ட பெயர்வேற்றுமைகளையும் காட்டுகிறார் மேலே: (இரு கை மாஅல்) இரண்டு கைகளையுடைய மாலே! (முக்கை முனிவ) மூன்று கைகளையுடைய முனி வனே! (நாற்கை அண்ணல்) நாலு கைகளையுடைய தலைவனே! (ஐங்கைம்மைந்த) மைந்து—ப₃லம்; ஐந்து கைகளையுடைய வலிமிக்கவனே! (அறுகை நெடுவேள்) வேள்—வேண்டப்படுமவன்; ஆறு கைகளையுடையவனாய், மிகவும் விரும்பப்படுபவனே! (எழுகையாள) ஏழு கைக ளால் (உலகை) அடக்கியாள்பவனே! (எண்கை ஏந்தல்) எட்டுக்கைகளையுடைய பெரியோனே! (ஒன்பதிற்றுத் தடக்கை மன்பேராள) ஒன்பது பெருங்கைகளை உடைய வனாய், நிலைநின்ற பெயர்களை உடையவனே! (பதிற் றுக்கை மதவலி) பத்துக்கைகளை உடையவனாய், மிக்க ப₃லங்கொண்டு விளங்குவோனே! (நூற்றுக்கை ஆற்றல்) நூறு கைகளோடு பெரியசக்தியைக்கொண்டவனாய் விளங்குமவனே! (ஆயிரம் விரித்த கைம்மாய மள்ள) ஆயிர மாகப் பரந்த கைகளை உடையவனாய், ஆச்சரியமான

acharya.org

வீரனே! மாயம்—ஆச்சரியம். மள்ளன்—மல்லன்; வீரன். (பதினுயிரம் கை முதுமொழி முதல்வ) பதினுயிரம் கைகளை உடையவனுய் அநாதியான வேதத்தில் முதல்வன் என்று ஓதப்படுமவனே! **"ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ:"** முதலான வேத வாக்கியங்களை நினைக்கிறது. (நூருயிரம் கை ஆறு அறி கடவுள்) நூருயிரம் கைகளை உடையவனுய், ஐந்து ஞானேந்திரியங்களுக்கும் மேற்பட்ட ஆருவது இந்திரிய மான மனத்தினுலேயே அறியத்தக்க கடவுளே! **"ந சக்ஷுஷா க்₃ருஹ்யதே" "மநஸா து விஶுத்₃தே₄ந"** என்று வேதமும் "எனறேனும் கட்கண்ணுல் காணுத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண் காணும்" [பெரிய திருவ-28] என்று ஆழ்வாரும் அருளினர். (ஆறு அறி கடவுள்) இச்சேதனன் தன்னை அடைய உபாயங்களை அறிந்த கடவுளே! என்றுமாம். **"ஆறு** எனக்கு **நின்** பாதமே சரணுகத் தந்தொழிந்தாய்" [திருவாய் 5-7-10] முத லானவிடங்களில் ஆறு என்று அடையும் வழியான உபாயத்தைக் குறித்ததன்றே.

ஒன்று தொடங்கி, நூருயிரம் வரையில் எண்ணிக்கை களைச் சொல்லுகையாலே இவ்வளவு கைகள்தான் இவ னுக்கு உளவோ? எனில்: (அனைத்தும் அல்ல) அவ்வளவே யல்ல. (பல அடுக்கல் ஆம்பல் இனைத்து என எண்வரம்பு அறியா யாக்கையை) ஆம்பல் என்றது மிகப்பெரியதொரு எண்; பல அடுக்குதல்களையுடைய ஆம்பல் என்னும் எண் ணிக்கையை அளவாகக்கொண்டு, 'இத்தனை ஆம்பல்கள் எண்ணுள்ளவை' என்று எண்ணி எல்லையை அறிய முடியாத சரீரங்களை உடையவனே! **"யஸ்ய ப்ருதி₂வீ சரீரம்"** [ஸுபா₃ல] என்று தொடங்கி உலகிலுள்ள எல்லாவற்றை யும் இவனுக்கு சரீரமாகவும், **"அந்தர்ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:"** [தை-நா] **"ஸர்வபூ₄தாந்தராத்மா தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:"** [ஸுபா₃ல] என்று இவன் ஒருவனையே அவையனைத்தையும் வியாபித்திருக்கும் ஆத்மா

acharya.org

வாகவும் வேதங்கள் ஓதினவன்றே. கணக்கற்ற சரீரங்கள் என்றதாலே கைகளும் கணக்கற்றவை என்றதாயிற்று.

நின்னைப் புரை நினைப்பின் நீ அலது உணர்தியோ,
முன்னை மரபின் முதுமொழி முதல்வ?

முன்னும் பின்னும் கூறிய பெருமைகளை நோக்கினல், இவன் பெருமையை இவனைத்தவிர எவராலும் அறிய முடியாதென்பதும், இவனே வேதமுதல்வனென்பதும் விளங்கும் என்கிருர் இவ்விரண்டடிகளாலே.

(நின்னை...உணர்தியோ) உன் உயர்வைக் கூற நினைத்தால், அதனை நீயே கூறவேண்டுமேயொழிய, பிறரால் கூடுமோ? 'உணர்தியோ' என்றதால் இவனுலும் முடியுமோ என்னும் ஐயம் உணர்த்தப்படுகிறது. **ஸோ அங்க$_3$ வேத$_3$ யதி$_3$ வா ந வேத$_3$''** [தை-ஸம் 2-8-7] [தன் பெருமையை அவனே அறிவானே மாட்டானே தெரியவில்லை] என்று வேதமும். **"தாம் தம் பெருமை அறியார்"** [பெரியதிரு 5-2-1] **"தனக்கும் தன் தன்மை அறிவரியானை"** [திருவாய் 8-4-6] என்று ஆழ்வார்களும் அருளினர். (முன்னைமரபின் முதுமொழி முதல்வ)உச்சாரணம் அநூச்சாரணம் (ஆசாரியன் ஓதுவிப்பதும், சிஷ்யன் ஓதுவதும்) ஆகிய அநாதியான முறையாலே வருவதாகையாலே, அநாதிவாக்காகிற வேதத்திலே முதல்வனுக ஓதப்படுபவனன்றே நீ; உனக்கு இப்படிப்பட்ட பெருமைகளிருப்பதில் வியப்பில்லை என்று கருத்து. 'முதுமொழி முதல்வ' என்று ஒருகால் சொன்னதில் திருப்தியுருமல் இருகால் சொல்லுகிருர்.

இவ்விடத்திலும், மற்றும் பலவிடங்களிலும் பண்டைத் தமிழர் திருமாலை வேதமுதல்வனுகவும், எவராலும் அறிய முடியாத பெருமையை உடையவனுகவும், எல்லா உலகங்களையும் சரீரமாக உடையவனுகவும், எல்லா உலகையும் படைத்துக்காத்து அழிப்பவனுகவும் பாடியிருப்பதைப் பல

acharya.org

விடங்களில் காட்டிவருகிருேம். வேருெரு தேவதையை ஓரிடத்திலாவது இப்படிப் பாடவில்லை என்பதை நல்லோர்கள் காணவேணும். திருமால் ஒருவனே வேத முதல்வன் என்பது அக்காலத்தில் அனைவரும் இசைந்த கொள்கையாயிருந்தது என்பது இதிலிருந்து கையிற்கனியென விளங்கவில்லையா? 'எல்லா உலகமும் பொய். ஜீவனே பரம்பொருள்' என்னும் அத்வைதக்கொள்கைக்கும் அக்காலத்தில் ஆதரவேயில்லை என்பதும் இப்பாடல்களிலிருந்து புலப்படும்.

நினக்கு—விரிந்து அகன்ற கேள்வி அனைத்தினும்
வலியினும், மனத்தினும், உணர்வினும், எல்லாம்
வனப்பு வரம்பு அறியா மரபினேயே!
அணி நிழல் வயங்கு ஒளி, ஈர்-எண் தீம் கதிர்,
பிறை வளர், நிறை மதி உண்டி.
அணி மணிப் பைம் பூண், அமரர்க்கு முதல்வன் நீ:
திணி நிலம் கடந்தக்கால், திரிந்து அயர்ந்து அகன்று ஓடி,
நின் அஞ்சிக் கடற் பாய்ந்த பிணி நெகிழ்பு அவிழ்புதண் தார்
அன்னவர் பட அல்லா அவுணர்க்கும் முதல்வன் நீ;
அதனுல், 'பகைவர் இவர்; இவர் நட்டோர் என்னும்
வகையும் உண்டோ நின் மரபு அறிவோர்க்கே?

'எவராலும் அறியப்படாத அழகையும், எல்லையையும் உடையவன் திருமால்' என்றும், 'தேவர்க்கும் அசுரர்க்கும் பொதுவான முதல்வன் இவனே' என்றும். 'அதனுல் இவனுக்கும் இவனடியார்க்கும் மித்திரர் என்றும் எதிரிகள் என்றும் பாகுபாடு கிடையாது' என்றும் இப்பதினெரு அடிகளில் கோஷிக்கப்படுகிறது.

'முதுமொழிமுதல்வ' என்றதால், வேதத்தாலே இவனை அறிந்துவிட முடியுமோ? எனில் (விரிந்து அகன்ற கேள்வி அனைத்தினும் அறியா மரபினேயே) **"அநந்தா வை வேதா:"** என்கிறபடியே அலகில்லன உள்ளனவான வேதங்கள்

acharya.org

அணைத்தினுலும் அறியமுடியாத தன்மையை உடையவனே! "யதோ வாசோ நிவர்த்தந்தே" [தை-ஆ] [எதனிடமிருந்து வாக்குக்கள் திரும்பிவிடுகின்றனவோ] என்று வேதங்களும் இவனை அறியமுடியாமல் திரும்பினவன்ரே. 'விரிந்து' என்ற தால் சப்தத்தினுலும், 'அகன்ற' என்றதால் அர்த்தத்தினு லும் அளவிடமுடியாததாயிருப்பதைக் காட்டுகிறது. 'கேள்வி' என்றதால் கேட்டே அறியப்படுவதாயிருக்கும் 'சுருதி' என்று சொல்லப்பட்டதாகிறது. (வலியினும் அறியா மரபினேயே) எத்தனையேனும் பலம் உடையவர்களாலும் அறியப்படாத தன்மையை உடையவனே! வலியென்று வலியுடையாரைச் சொல்லிற்று. ஸ்வயத்னத்தால் (தம் முயற்சியால்) எவராலும் இவனைக் காணமுடியாது என்கை. (மனத்தினும் அறியா மரபினேயே) யஜ்ஞம், தானம், தவம் முதலானவற்ருலே தூய்மைபெற்ற மனத்தினுலும் அறியமுடியாத தன்மையை உடையவனே! (உணர்வினும் அறியா மரபினேயே) எத்தனையேனும் தெளிந்த அறிவை யுடையவர்களுடைய அறிவினுலும் அறியப்படாத தன் மையை உடையவனே!

இவைகளால் அறியமுடியாதது இவனுடைய ஸ்வ ரூபமோ, ஸ்வபாவங்களோ, ரூபங்களோ, விபூதிகளோ (செல்வங்களோ?) எனில்: (நினக்கு எல்லாம் அறியா மரபி னேயே) உன்னுடையவையான ஸ்வரூபரூபகுணவிபூதிகள் எல்லாமே இப்பெருமையை உடையவை. ஒன்றை அறிய முடியாமலிருப்பது இரண்டுவிதமாக இருக்கக்கூடும், அதி கும்பீரமாயிருக்கையாலே ஒன்றின் பெருமையை அறிய முடியாமலிருப்பது ஒருவகை. மிகப்பெரியதாயிருக்கை யாலே ஒன்றின் எல்லையை அறியமுடியாமலிருப்பது மற்ருெருவகை. இவற்றில், இவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகள் எவ்வகையிலே அறியமுடியாதவை எனில்: இரண்டு வகையிலும் அறியமுடியாதவை என்கிருர். (நினக்கு எல்லாம் வனப்பு வரம்பு அறியா மரபினேயே)

acharya.org

உன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகள் எல்லாவற்றின் அழகையும் அறியமுடியாது; எல்லையையும் அறியமுடியாது என்கை.

இனி, தேவர்க்கு முதல்வன் இவனே என்கிறார்: (மதி உண்டி அமரர்க்கு முதல்வன் நீ) அமுதகிரணனான சந்திரனை உணவாகக்கொண்ட தேவர்களுக்கு முதல்வனாயிருப்பவன் நீ. தேவர்கள் சந்திரனின் கிரணங்களினின்றும் அமுதத்தைப் பெற்று உண்பர் என்று புராணங்கள் கூறும். (அமரர்க்கு முதல்வன் நீ) "அக்₃நிர் தே₃வதாநாமவம: விஷ்ணு: பரம:" [யஜுஸ் ஸம் 5-5] [அக்னியானவன் தேவர்களுக்குள் தாழ்ந்தவன்; விஷ்ணுவானவன் உயர்ந்தவன்.] என்றது வேதமும். (அணிமணிப் பைம்பூண் அமரர்க்கு முதல்வன் நீ) அழகியமணிகள் பதித்த சிறந்த ஆபரணங்களை அணிந்த தேவர்களுக்கு நீ முதல்வனாவாய். (அணி நிழல் வயங்கு ஒளி ஈர் எண் தீங்கதிர்ப் பிறை வளர் நிறை மதி உண்டி அமரர்க்கு முதல்வன் நீ) அணிமதி, நிழல்மதி, வயங்கொளிமதி, ஈரெண் தீங்கதிர் மதி, பிறை வளர்மதி, நிறை மதி என்று சந்திரனுக்கு ஆறு விசேஷணங்கள் (உரிச் சொற்கள்). (அணிமதி) அழகியமதி; உலகிற்கே அலங்காரமாய் விளங்கும் சந்திரன். (நிழல் மதி) குளிர்ச்சி பொருந்திய மதி. (வயங்கொளிமதி) விளங்குகின்ற ஒளியையுடைய மதி. (ஈர் எண் தீங்கதிர் மதி) ஈரெட்டு—பதினாறு இனிய கலைகளையுடைய மதி. (பிறை வளர்மதி—நிறைமதி) பிறையாகத் தோன்றி வளர்ந்து நிறையும் மதி. (மதி உண்டி அமரர்க்கு முதல்வன் நீ) அமுதமுண்டு சாவாவரம்பெற்ற தேவர்களுக்கும் முதல்வனாயிருப்பவன் நீ. அமரர் — மரணமற்றவர். (மதி உண்டி......பைம்பூண் அமரர்க்கு முதல்வன் நீ) அமுதமுண்டு தங்கள் தேகத்திற்குப் பூண்கட்டியிருக்கும் தேவர்க்கும் தேவனாயிருப்பவன் நீ. "மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவாவோ" [திருவாய் 8-1-5] என்றார் ஆழ்வாரும்.

acharya.org

(அமரர்க்கு முதல்வன் நீ) "நாராயணாத்₃ ப்₃ரஹ்மா ஜாயதே, நாராயணாத்₃ ருத்₃ரோ ஜாயதே, நாராயணாதி₃ந்த்₃ரோ ஜாயதே" [நாராயணோபனிஷத்] "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்– ந ப்₃ரஹ்மா நேஶாந:" [மஹோபனிஷத்] என்று பிரமன், உருத்திரன், இந்திரன் முதலான தேவரனைவரையும் படைத்துக் காத்து அழிக்கும் காரணப்பொருளாயிருப்பவன் நீ என்றுமாம். 'அமரர்கள்' [அழியாதவர்கள்] என்று பட்டஞ்சூட்டிக் கொண்டிருந்தபோதிலும், இவர்களும் ஒரு காலத்தில் உன்னால் படைக்கப்பட்டு மற்றொரு காலத்தில் அழிக்கப்படுபவர்களே என்று கருத்து. 'அமரர்' (அழியாதவர்) என்றது நீண்டநாள் வாழ்வதைப்பற்றச் சொல்லிற்று.

அமரர்க்கு முதல்வன் இவனானால், அசுரர்க்கு முதல்வன் வேறொருவனோ? எனில்: அசுரர்க்கும் முதல்வனாயிருப்பவன் நீயே என்கிறார். (திரிந்து அயர்ந்து) அறிவுமயங்கி உன்னை முதலில் பகைத்து. (திணி நிலம் கடந்தக்கால் நின் அஞ்சி அகன்று ஓடிக் கடற்பாய்ந்த அன்னவர்) அணுக்கள் செறிந்த இப்பூமியைத் திரிவிக்கிரமனாய் நீ அளந்தபோது, உன்னைக் கண்டு அஞ்சி, விலகிஓடிக் கடலிலே புக்கு ஒளிந்துகொண்ட அசுரர். (பிணி நெகிழ்பு அவிழ்பு தண் தார் அன்னவர்) ஓடுகையாலே கட்டவிழ்ந்து மலர்ந்து விடுகிற குளிர்ந்த மாலையை அணிந்த அசுரர். உலகத்தை ஆக்ரமித்து அரசு புரிந்தமைதோற்ற மாலையணிந்திருந்தவர்கள் அம்மாலைகள் கட்டவிழும்படி ஓடினார்கள் என்று கருத்து. (அன்னவர் முதல்வன் நீ) அப்படிப்பட்ட அசுரர்களையும் அடக்கி அழித்தவனாகையாலே அவர்களுக்கும் காரணமாயிருப்பவன் நீ. (பட அல்லா அவுணர்க்கும் முதல்வன்) அகப்பட அப்படிப் பிழைசெய்யாத மாவலி, விபீஷணன் போன்ற அசுரரரக்கர்களுக்கும் தெய்வமாயிருப்பவன் நீ (அன்னவர் பட அல்லா அவுணர்க்கும் முதல்வன் நீ) பிழைசெய்தவர்கள் அழிய, பிழை செய்யாத அசுரர்களுக்கு தெய்வமாயிருந்தவன் நீ என்றும் கொள்ள

acharya.org

லாம். (அமரர்க்கு முதல்வன் நீ-அவுணர்க்கும் முதல்வன் நீ) **"தே₃வாநாம் தா₃நவாநாம் ச ஸாமாந்யமதி₄தை₃வதம் சரணத்₃வந்த்₃வம்"** [ஜிதந்தே] [தேவர்க்கும் அசுரர்க்கும் பொதுத்தெய்வமாயிருப்பது உன் திருவடியிணை] என்றும், "பொதுநின்ற பொன்னங்கழல்" [மூன்-திருவ 88] என்றும் சொல்லப்பட்டதன்ரே.

இப்படி நீ இருவர்க்கும் பொதுவாயிருக்கையால், உன் அடியார்க்கும் நண்பர், பகைவர் என்னும் வேறுபாடு கிடையாது என்கிருர். (அதனுல்) **"ஸமோऽஹம் ஸர்வ பூ₄தேஷு ந மே த்₃வேஷ்யோऽஸ்தி கஶ்சந"** [கீ₃தை 9-29] [நான் எல்லார்க்கும் பொதுவாயிருப்பவன்; என்னுல் துவேஷிக்கப்படுபவன் ஒருவனுமில்லை] என்கிறபடியே அனைவர்க்கும் பொதுவான தெய்வமாயிருக்கையாலே. **(பகைவர் இவர், இவர் நட்டோர் என்னும் வகையும் உண்டோ நின் மரபறிவோர்க்கே)** உன் தன்மையை உள்ளபடி அறிந்தவர்களுக்கு, 'இவர் எனக்கு எதிரி; இவர் என் நண்பர்' என்று சொல்லும் வழியுண்டோ?

"ஸர்வபூ₄தாத்மகே தாத ஜக₃ந்நாதே₂ ஜக₃ந்மயே।
பரமாத்மநி கோ₃விந்தே₃ மித்ராமித்ரகதா₂ குத:॥" [வி-பு1-19-73]

[அப்பா! பரமாத்மாவான கோவிந்தன் எல்லா பூதங்களினுள்ளும் உறைபவனுகவும், எல்லார்க்கும் பொதுவான ஸ்வாமியாகவும், எல்லாமாயிருப்பவனுகவுமிருக்கும்போது நண்பனென்றும், பகைவனென்றும் பேசுவது எப்படிப் பொருந்தும்?] என்ருனன்ரே பிரஹ்லாதாழ்வான்.

ஆயிர அணர் தலை அரவு வாய்க் கொண்ட
சேவல் ஊர்தியும், 'செங் கண் மாஅல்!
ஓ!' எனக் கிளக்கும் கால முதல்வனை;
ஏஎ இன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்;

acharya.org

கீழே, வேதங்கள் முதலானவற்ருலும் அறியமுடியாதவன், அனைவர்க்கும் முதல்வனுயிருப்பவன் என்னும் பரம்பொருளுக்கே உரிய பெருமைகள் திரிவிக்கிரமனுன திருமாலைக்குறித்து உத்கோஷிக்கப்பட்டன. இந்நான்கு அடிகளில் இவனே காலமுதல்வன் என்றும், ஸாம வேதத்தினுல் முதல்வனுகப் பாடப்படும் புகழையுடையவன் என்றும் கூறப்படுகிறது.

(ஆயிரம் அணர்தலை அரவு வாய்க்கொண்ட சேவல் ஊர்தியும்) படம் எடுத்து உயர்த்தும் ஆயிரம் தலைகளைக் கொண்ட அரவுகளையும் எளிதில் தன் வாயில் கொள்ளும் கருடனுகிற உன் வாகனமும். ('செங்கண்மால் ஓ' எனக் கிளக்கும் காலமுதல்வனை) 'ஓ! செங்கண்மாலே! என்னை க்ஷமித்தருளவேணும்' என்று துதிக்கும் காலமுதல்வன் நீ. "எம்பெருமான் இந்திரனுக்கு இளையவனுன உபேந்திரனுய் அவதரித்தபோது, கருடனும் வினதையின் பிள்ளையாக ஓரம்சாவதாரமாய் அவதரித்தான். அவன் ஒரு சமயம் உபேந்திரனை நோக்கி 'நீ அசுரரை வெல்லுவது என் உதவியால்தான்; நான் உன்னைத் தாங்கிச் செல்லாவிடில் நீ வெல்லமுடியுமோ?' என்ருற்போலே வார்த்தை சொல்ல, 'நீ என்னைத் தாங்கவல்லையாகில், என்னுடைய கைவிரலைத் தாங்கு பார்ப்போம்' என்று அவன்மீது விரலை வைக்க, தாங்கமுடியாமல் சிறகுதிர்ந்து பாதாளத்தில் அழுந்தி, நெடுங்காலம் துதித்து மன்னிக்கப்பெற்ருன்" என்னும் புராணவரலாறு இங்கு குறிக்கப்படுகிறது என்பர் பரிமேலழகர். இவ்வுலகில் கார்ய வைகுண்டத்தில் ஜய விஜயர்கள் சாபம்பெற்றதும், இவ்விருத்தாந்தமும், ஞானக் குறைவற்ற நித்யஸூரிகளுக்கு எப்படிப் பொருந்தும்? எனில்: இந்த கருடனும், ஜயவிஜயரும் ஸம்ஸாரிசேதனரை அதி₄ஷ்டி₂த்து நிற்கும் அம்சாவதாரமேயாகையால் பொருந்தும். அல்லது பகவதபசார பாகவதாபசாரங்களின் கொடுமையை விளக்குவதற்காக நடிக்கப்பட்ட நாடகமாக

acharya.org

வும் கொள்ளலாம். (காலமுதல்வனே) காலத்திற்குக் காரணபூ₄தனானவன் நீயே ஆவாய். மற்றவர்கள் அனைவரும் காலத்தால் வேறுபாடு அடைபவர்கள். நீ ஒருவனே காலத்தால் வேறுபடாதவனாய், காலத்தையும் நியமிப்பவன் என்று கருத்து. இதுவும் பரம்பொருள் ஒருவனுக்கே உரிய பெருமையாகும். இப்படிப்பட்ட பெருமையை உடையவனிவன் என்று எப்படித் தெரிந்தது? எனில்: (ஏஎ இன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்) 'ஏஎ' என்னும் நீட்டிமுழக்கும் இசையையுடைய சாமவேதம் இப்படி உன் பெருமையைச் சொல்லுகையால், இதை நாங்கள் நன்கு அறிந்தோம்.

தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ் சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ ஆதலின்,
உறைவும் உறைவதும் இலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமார் அனையை;

இவ்வடிகளிலே எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபித்து, அவ்வப்பொருள்களுக்குப் பெருமையளிக்கும் எம்பெருமானின் தன்மையை உரைக்கிறார். கீதையில் விபூ₄த்யத்₄யாயத்தை [10] அடியொற்றியுள்ளது.

(தீயினுள் தெறல் நீ) நெருப்பிலிருக்கும் உஷ்ணம் நீயேயாவாய். உன்னாலேயே ஏற்படுவது என்று கருத்து. இப்படியே பின்பும் கொள்வது. இதையே **"தேஜஶ்சாஸ்மி விப₄ாவஸௌ"** [கீ₃தை 7-9] என்றான் கண்ணனும். (பூவினுள் நாற்றம் நீ) பூவிலிருக்கும் மணம் நீயே. (கல்லினுள் மணியும் நீ) நீலம், சிவப்பு, வைரம் முதலான விலையுயர்ந்த கற்களின் விலையுயர்வுக்குக் காரணமான மணியாகும் தன்மையும் நீயே. அல்லது, கற்களுக்கிடையே

acharya.org

விலைமதிப்பற்ற மாணிக்கக்கல் நீயே என்றுமாம். (சொல்லினுள் வாய்மை நீ) சொற்களிலுள்ள உண்மை நீயே. (அறத்தினுள் அன்பு நீ) தர்மத்திற்கு அடிப்படையான அன்பு நீயேயாவாய். (மறத்தினுள் மைந்து நீ) அதர்மத்திற்கு அடிப்படையான ப₃லமும் நீயே. (அன்பு நீ மைந்து நீ) த₄ர்மபுத்ராதி₃களின் அன்பும், ராவணுதி₃களின் ப₃லமும் உன்னால் ஏற்பட்டவையே என்று கருத்து. 'த₄ர்மத்தின் மென்மையும், அத₄ர்மத்தின் வன்மையும் நீயே' என்றுமாம். (வேதத்து மறை நீ) வேதத்தில் மறைந்து நிற்கும் பொருள் நீயே. வேதத்தில் உபநிஷத்₃ப₄ாக₃ம் நீயே என்றுமாம். உபனிஷத்துக்களின் உட்பொருள் நீயே எனக் கருத்து. (பூதத்து முதலும் நீ) பூதங்களில் முதலாகிய ஆகாயமும் நீயே. (வெஞ்சுடர் ஒளியும் நீ) சூரியனில் ஒளியும் நீயே. (திங்களுள் அளியும் நீ) சந்திரனில் தண்மையும் நீயே. **"ப்ரப₄ாऽஸ்மி ஶஶிஸூர்யயோ:"** [கீ₃தை 7-8] என்றதை நினைக்கிறது. இப்படி நாலிரண்டு விஷயங்கள் தான் இவனோ? எனில்: (அனைத்தும் நீ) உலகிலுள்ள எல்லாமே நீதான். **"ஸர்வம் க₂ல்வித₃ம் ப்₃ரஹ்ம"**[சா₂ந் 3-14-1] [இவையெல்லாம் ப்ரஹ்மமே] என்ற வேதத்தை அடியொற்றிச் சொல்லுகிறார். எல்லாம் நீ என்றால், சேதநாசேதனங்களோடு இவனுக்கு ஸ்வரூபைக்யமோ? எனில்: (அனைத்தின் உட்பொருளும் நீ ஆதலின்) எல்லாவற்றின் உட்பொருளாய் நீயிருக்கையால் நீ எல்லாமும் ஆகிறாய். **"தஜ்ஜலாந்"** [ப்ரஹ்மத்திடம் தோன்றி மறைந்து வாழ்வதால் எல்லாம் ப்ரஹ்மமே]**"ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸிஸர்வ:"** [கீ₃தை 11-40] [எல்லாவற்றையும் வியாபித்திருப்பதால் நீ எல்லாமுமாகிறாய்] **"ஸர்வக₃த்வாத₃நந்தஸ்ய ஸ ஏவாஹமவஸ்தி₂த:"** [வி-பு] [அநந்தன் எல்லாவிடத்திலும் வியாபித்திருப்பதால் நானும் அவனாகவேயிருக்கிறேன்.] **"அந்யஶ்ச ராஜந் ஸ பர: தத₂ாந்ய: பஞ்சவிம்ஶக:। தத்ஸ்த₂த்வாத₃நுபஶ்யந்தி ஹ்யேக ஏவேதி ஸாத₄வ: ॥"** [பாரதம்] [அரசனே! பரமாத்மா வேறானவனே!; இருபத்தைந்தாம் தத்துவமான

acharya.org

ஜீவன் வேறானவனே; முன்னவன் பின்னவனில் நிற்ப தாலே இருவரையும் நல்லோர்கள் ஒருவராகக் காண் கின்றனர்.] என்ற ஶ்ருதிஸ்ம்ருதி ப்ரமாண்ங்களை அடி யொற்றிப் பேசுகிறார். இதனால் சேதநாசேதநங்களோடு ஸ்வரூபைக்யத்தைச் சொல்லும் அத்₃வைதம், பே₄தா₃ பே₄த₃ம் முதலான மதங்கள் பழம் தமிழர் உகந்தவையல்ல என்று தெளிவாகத் தெரிகிறது.

'அனைத்தின் உட்பொருளும் நீ' என்றதாலே, எல்லா வற்றிலும் இவன் உள் நுழைந்து உறைகின்றான் என்றும், எல்லாப் பொருளும் இவனிடம் உறைவதாலே தரிக்கப்படு கின்றன என்றும் உணர்த்தப்பட்டது. இவன் உறை கின்றானால், தலையிலே சுமை உறைவதுபோலே, அவற்றாலே தாங்கப்பட்டு உறைகின்றானோ என்னும் ஐயம் எழக்கூடும். இவனிடம் அவை உறைகின்றனவாகில் தலையிலே உறையும் சுமைபோலே இவனுக்கு பா₄ரமா யிருக்கின்றனவோ என்னும் ஐயமும் எழக்கூடும். அவற் றைக் களைகிறது அடுத்த அடியாலே,- (உறைவும் உறை வதும் இலையே) தலையிலே சுமை உறைவதுபோலே நீ அவற்றாலே தாங்கப்பட்டு அவற்றில் உறையவுமில்லை; தலையிலே சுமையைத் தாங்குமிடத்திற்போலே உனக்கு பா₄ரமாக அவை உன்னிடம் உறைவதுமில்லை. அப்படி யானால் நீ அவற்றிலுறைகிறாய், அவை உன்னிடம் உறைகின்றன என்றது எப்படி? எனில்: (உண்மையும் மறவியில் சிறப்பின் மாயமார் அனையை) அவற்றில் உன் உறைவும், அவை உன்னிடம் உறைவதும் **உண்மையா யிருப்பதும்**, மறதியில்லாத சிறப்பையுடைய ஞானஸ்வரூப னாய் நீ இருக்கையாலே. "**மாயா வயுநம் ஜ்ஞாநம்**' என்கிற நிகண்டுவின்படி 'மாயம்' என்னும் சப்தம் ஞானத்தைக் குறிக்கும். "உன் மாயமுற்றும் மாயமே" [திருச்சந்த-41] முதலானவிடங்களில் ஞானப்பொருளில் தமிழில் பிரயோ கிக்கப்பட்டுமுள்ளது. ஞானமயனாயிருக்கையாலே, அவை உன்னைத் தாங்காமலே நீ அவற்றினுள் வியாபித்திருக்

acharya.org

கிருய்; ஞானமயமான உன் ஸங்கல்பத்தாலே அவற்றை த₄ரிக்கையாலே உனக்கு பாரமாக இல்லாமலே உன்னிடம் அவை உறைகின்றன என்று கருத்து. **"மயா ததமித₃ம் ஸர்வம் ஜக₃த₃வ்யக்தமூர்த்திநா। மத்ஸ்தா₂நி ஸர்வபூ₄தாநி ந சாஹம் தேஷ்வவஸ்தி₂த:॥ ந ச மத்ஸ்தா₂நி பூ₄தாநி"** [கீ₃தை 9-4,5] [அறியப்படாத ஞானஸ்வரூபத்தையுடைய என்னுலே இவ்வுலகனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளது. எல்லாப்பொருளும் என்னிடம் உறைகின்றன. (இருந்தபோதிலும் அவற்ருல் தாங்கப்பட்டு) நான் அவைகளில் உறைவதில்லை; (எனக்கு ப₄ாரமாக) என்னிடம் அவை உறைவதில்லை] என்ற கீ₃தா ஶ்லோகத்தை அப்படியே மொழி பெயர்த்திருக்கிருர். இப்படி இடரில்லாமல் பொருள்கொள்ளக் கூடியதாயிருக்க, 'ஆதலின்' என்பதைப் பின்னுல் கூட்டியும். 'மாயம்' என்பதற்கு 'பொய்' என்று பொருள் கொண்டும். 'உறைவும் உறைவதும் பொய்' என்று பரிமேலழகர் பொருளுரைத்தார். முன் பின்னடிகளுக்கு மாறுபட்டிருக்கையாலும், "ஆதலின்" "உண்மையும்" "மறவியில்" "சிறப்பின்" என்னும் பதங்கள் அப்பொருளில் பொருந்தாமையாலும் அது நடுநிலையாளரால் ஏற்கப்பட மாட்டாது.

முதல்முறை, இடைமுறை, கடைமுறை, தொழிலில்
பிறவாப் பிறப்பு இலை: பிறப்பித்தோர் இலையே;

இவ்விரண்டு அடிகளில் — **"அஜாயமாநோ ப₃ஹுதா₄ விஜாயதே"** [பு-ஸூ] [பிறப்பற்றவனுயினும் பலபடியாகப் பிறக்கிருன் பரமபுருஷன்] என்ற வேதவாக்கியத்தின் பொருள் விவரிக்கப்படுகிறது.

(முதல்முறை இடைமுறை கடைமுறை தொழிலில்) முதலில் நடைபெறுகிற ஸ்ருஷ்டி (படைத்தல்), இடையில் நடைபெறுகிற ஸ்தி₂தி (காத்தல்), கடைசியில் நடைபெறுகிற ஸம்ஹாரம் (அழித்தல்) என்னும் முத்தொழில்களையும் நீ செய்யும்போது. இதனுல் ஸ்ருஷ்டியைப் பிரமன்

acharya.org

செய்கிருன். ஸம்ஹாரத்தை உருத்திரன் செய்கிருன் என்னும் மயக்கத்தைத் தவிர்க்கிருர். முத்தொழிலேயும் செய்யும் முதல்வன் இவனே என உணர்த்துகிருர். ஐந்தாம் பாடலில் இவரே முருகனேயும் பாடியிருக்கிருர். இத்தகைய பெருமைகளே அங்கு முருகனுக்கும். சிவனுக்கும சொல்லவில்லே. பண்டைத் தமிழர் பரம வைதிகர்களாயிருந்தார்கள் என்பதற்கு இவை சான்று பகரும். (பிறவாப் பிறப்பிலே பிறப்பித்தோர் இலேயே) இம்முத்தொழில்களேயும் செய்வதற்காக ப்ரத்யும்நன், அநிருத்தன், ஸங்கர்ஷணன், ராமன், கிருஷ்ணன் முதலான திருநாமங்களோடு நீ பிறக்காத பிறப்புகள் இல்லே. ஆனல் நீயே உன் ஸங்கல்பத்தால் உன்னேப் பிறப்பித்துக்கொண்டாயே ஒழிய. உன்னேப் பிறப்பித்தோர் ஒருவருமில்லே. பிரமனே நீ படைத்தாய் என்றும், உருத்திரனேப் பிரமன் படைத்தான் என்றும் வேதங்கள் அறைகின்றன. அப்படி உன்னே ஒருவன் படைத்ததாக ஓரிடத்திலும் கிடையாது. நீயே முழுமுதல்வன் என்று கருத்து. (பிறவாப் பிறப்பிலே) தேவர், மனிதர், திர்யக் (ஊர்வன), ஸ்தாவரம் (நிற்பன) என்னும் நால்வகைப் பிறப்புகளில் நீ பிறக்காத பிறப்பில்லே. **''பஹுதா விஜாயதே''** [பலபடியாகப் பிறக்கிருன்] **''பிதா புத்ரேண பித்ருமாந் யோநி யோநெள''** [எல்லாவுலகுக்கும் தந்தை தன் பிள்ளேயொருவனேத் தந்தையாகக் கொண்டு **பிறப்புக்கள்தோறும்** பிறக்கிருன்] என்ற வேதவாக்கியங்களேத் தமிழ்ப்படுத்துகிருர். (பிறப்பித்தோர் இலேயே) **''அஜாயமாந:''** [பிறப்பற்றவன்] என்றதை விவரிக்கிருர். கீதையில் சொல்லிய அவதார ரஹஸ்யத்தை விவரிக்கிருர். இவன் இராமன், கிருஷ்ணன் முதலான உருவங்களோடு பிறந்தபோதும் தசரதன் வஸுதேவன் முதலாஞர் இவனேப் பிறப்பிக்கவில்லே என உணத்துகிருர். ஐந்தாம் பாடலில் இவரே முருகனேப் பாடும்போது சிவனும் பார்வதியும் புணர்ந்து, அதனுலுண்டான வீரியத்திஞல் முருகன் பிறந்தான் என்று பாடியிருப்பது நடுநிலே தவருத நல்லோர்களால் குறிக்கொள்ளத்தக்கது.

acharya.org

பறவாப் பூவைப் பூவினேயே!
அருள் குடையாக, அறம் கோலாக,
இரு நிழல் படாமை மூ-ஏழ் உலகமும்
ஒரு நிழல் ஆக்கிய ஏமத்தை மாதோ:

இவ்வடிகளில் அனைத்துலகையும் ஏகசக்ராதி,பதியாக ரக்ஷிப்பவன் நீ ஒருவனே என்று கோ,ஷிக்கிறார்.

(பறவாப் பூவைப் பூவினேயே) பூவையென்பது 'காயா' என்னும் செடியையும், 'நாகணவாய்ப்புள்' என்னும் பறவையையும் குறிக்கும் சொல். இங்கு காயாவை உணர்த்துவதற்காக, 'பறவாப்பூவை' [பறக்காத - பறவையல்லாத பூவை] என்கிறார். காயாம்பூவைப்போன்ற நிறத்தை உடையவனே என்கிறது. (அருள் குடையாக) ஸர்வ லோகத்துக்கும் ஏகசக்ராதி,பதியான உனக்குக் குடையெது வென்றால், உன் அருளே உனக்குக் குடையாகும். (அறம் கோலாக) உனக்குச் செங்கோல் எதுவெனில்; த,ர்மமே உன் செங்கோலாகும். கோல்-செங்கோல்; குடைக் காம்பு என்பர் பரிமேலழகர். அருள்வழியினின்றும், அறவழியினின்றும் இம்மியளவும் வழுவாது நடக்கும் ஸர்வேஶ்வரன் இவன் என்று கருத்து. பிரமன், உருத்திரன் முதவான சிலரும் இப்படிப்பட்டவரோ? எனில்: (இருநிழல் படாமை) உலகை ரக்ஷிக்கும் விஷயத்தில் உன் குடை நிழல் ஒன்று தவிர, இரண்டாம் நிழல் ஒன்று தேவையில்லாதபடி ரக்ஷிக்கிறாய் நீ. பிரமன், உருத்திரன், இந்திரன் முதலானவரைப்போலே சில சில உலகங்கள்தான் உன் ஆளுகைக்குட்பட்டனவோ? எனில்:(மூவேழுலகமும்)இருபத்தொரு வகைப்பட்ட எல்லா உலகங்களையும் நீ ரக்ஷிக்கிறாய். (ஒரு நிழலாக்கிய ஏமத்தை) இவ்வுலகங்களெல்லாம் உன் ஒரு குடைநிழலின்கீழ் ஆக்கிய ரக்ஷணத்தை உடையவன் நீ. ஏமம்-ரக்ஷணம்; காவல். (மாதோ) ஆச்சரியத்தைக் காட்டுகிறது.

acharya.org

பாழ் என, கால் என, பாகு என, ஒன்று என,
இரண்டு என, மூன்று என, நான்கு என, ஐந்து என,
ஆறு என, ஏழு என, எட்டு என, தொண்டு என,
நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை.

இருபத்தைந்து தத்துவங்களாகவுமிருப்பவன் நீயே என்கிருர்-இந்நான்கு அடிகளிலும்.

(பாழ் என) 'நவிற்றும் சிறப்பினை' என்றதோடு ஒவ்வொன்றையும் கூட்டிப் பொருள் கொள்ளவேணும். சேதனன் போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ள வல்ல விளைநிலமாகையாலே **மூலப்ரக்ருதி** 'பாழ்' எனப்படுகிறது. அந்த மூலப்ரக்ருதிக்கும் அந்தராத்மாவாகையாலே, 'பாழ்' என்றும் சொல்லத்தக்க சிறப்பை உடையவனுயிருக்கிருய். **" சூழ்ந்தகன்று ஆழ்ந்துயர்ந்த முடிவிற்பெரும் பாழேயோ "** [திருவாய் 10-10-10] என்று ஆழ்வார் இவனைப் பாழ் என்னும் மூலப்ரக்ருதியாகவே பேசினுரன்ருே. (கால் என) கால்-முளை. ஸூக்ஷ்மமான அஹங்காரத்திலிருந்து முளை போலே ஸ்தூலரூபத்தோடு உண்டான ஆகாசம், வாயு, தீ, நீர், நிலம் என்னும் **ஐந்து பூதங்களையும்** "கால்" [முளை] என்னும் சொல்லாலே குறிப்பிடுகிருர். "நீராய் நிலனுய்த் தீயாய்க் காலாய் நெடுவானுய்" [திருவாய் 6-9-1] என்று ஆழ்வார் அருளியபடியே பஞ்சபூதங்களும் நீயே என்றும் சொல்லும் சிறப்பை உடையவன் நீ. (பாகு என) சொல்லல், கொடுத்தல், நடத்தல், விடுத்தல், இன்புறுதல் என்னும் ஐந்து தொழில்களுக்கும் உரியவையாகப் பாகுபடுவதான வாக்கு, கை, கால், பாயு (ஆஸனவாய்), உபஸ்தம் (குறி) என்னும் **ஐந்து கருமேந்திரியங்களும்** 'பாகு' எனப்படும். அவையும் நீ என்று சொல்லும் சிறப்பினையுடையாய் நீ. (ஒன்றென) முதலாவது குணமான **சப்தம்** என்னும் சொல்லப்படும் சிறப்பையுடையாய் நீ. (இரண்டென மூன்றென நான்கென ஐந்தென) இரண்டாவது மூன்ரு

acharya.org

வது நான்காவது ஐந்தாவது குணங்களான **ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம்** என்னும் புலன்களும் நீயே என்று சொல்லப்படும் சிறப்பையுடையாய் நீ. (ஆறெனெ) செவி, தோல், கண், நா, மூக்கு என்னும் **ஐந்து ஞாநேந்திரியங்களும்,** எல்லா இந்திரியங்களேயும் நியமிக்கும் ஆருவது இந்திரியமாகிய **மனமும்** நீயே என்று சொல்லப்படும் சிறப்பினை உடையாய். இவ்விடத்திலும், "ஆறறி கடவுள்" [3-43] என்றவிடத்திலும் மனத்தை ஆறும் இந்திரியமாக எடுக்கையாலே, மனம் இந்திரியமல்ல என்னும் அத்வைதிகளின் பக்ஷம் பழந்தமிழர்க்கு உடன்பாடன்று என்று விளங்குகிறது. (ஏழெனெ) இவ்விந்திரியங்களுக்கும் காரணமாகையாலே ஏழாவதான **அஹங்காரமும்** நீயே என்று சொல்லும் சிறப்பினே உடையாய். (எட்டெனெ) இவ்வஹங்காரத்துக்கும் காரணமான **மஹானும்** நீயே என்று சொல்லும் சிறப்பை உடையாய். "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மான் ஆங்கார மனங்களே" [திருவாய் 10-8-10] என்று ஆழ்வாரால் அருளப்பட்ட இருபத்துநாலு அசேதன தத்துவங்களும் இவ்வளவால் உரைக்கப்பட்டன. (தொண்டென) தொண்டு 'ஒன்பது' என்றும், 'அடிமை' என்றும் பொருள்படும். முற்கூறிய அசேதன தத்துவங்கள் எல்லாவற்றைக்காட்டிலும் மேலானதாகையால் 'ஒன்பது' எனப்படுகிறது **சேதன தத்துவம்.** மேலும், அத்தத்துவம் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருக்கையையே இயல்வாக உடையதாகையாலும் 'தொண்டு' எனத்தக்கது. ஆக இவ்விருவகையாலும் 'தொண்டு' எனத்தக்க சேதநதத்துவமும் நீயே என்றும் சொல்லும் சிறப்பினே உடையாய். **"க்ஷேத்ரஜ்ஞும் சாபி மாம் வித்$_3$தி$_4$"** [கீ$_3$தை 13-2] [க்ஷேத்ரமாகிற அசித்தும், அதை அறியும் க்ஷேத்ரஜ்ஞனை ஜீவனும் நானே என்றறி] என்ற கீதையை விளக்குகிருர். இவையெல்லாம் இவனுக்கு அதீ$_4$னமான ஸ்வரூபஸ்தி$_2$தி ப்ரவ்ருத்தியை உடையவையாய், இவனுக்கு சரீரமாயிருக்கை

acharya.org

யாலே எல்லாம் நீயே என்று கூறும் சிறப்பினையுடையவன் நீ என்கிறார். இப்படி இருபத்தைந்து தத்துவங்களை எடுக்கையால், தத்துவங்கள் முப்பத்தாறு என்னும் சைவாகமபக்ஷம் பழந்தமிழர் உகந்ததன்று என்றதாயிற்று. 'பாழ்' என்று சாங்கிய மதரீதியில், ப்ரக்ருதியாகவும் (தான் ஒன்றுக்குக் காரணமாகவும்) விக்ருதியாகவும் (ஒன்றின் காரியமாகவும்) ஆகாத புருஷனைச் சொல்லுகிறது என்றும், 'தொண்டு' என்று எட்டாவதான மஹானுக்குக் காரணமாகையாலே ஒன்பதாம் தத்துவமான மூலப்ரகிருதியைக் குறிக்கிறது என்றும் கூறுவர் பரிமேலழகர்.

(நால்வகை யூழி எண் நவிற்றும் சிறப்பினை) கிருதம், திரேதை, துவாபரம், கலி என்னும் நாலு வகைப்பட்ட ஊழிகளிலும் (யுகங்களிலும்) இவ்வெண்களால் சொல்லப்படும் சிறப்பை உடையவன் நீயே. இத்தால் இவனே ஸர்வாந்தர்யாமி என்றும், ஸர்வசப்தவாச்யன் என்றும் உணர்த்தப்பட்டது.

செங்கட்காரி! கருங்கண் வெள்ளை!
பொன்கட் பச்சை! பைங்கண் மாஅல்!
இடவல! குடஅல! கோவல! காவல!
காணுமரப! நீயா நினைவ!
மாயா மன்ன! உலகு ஆள் மன்னவ!
தொல் இயல் புலவ! நல்லியாழ்ப் பாண!
மாலைச் செல்வ! தோலாக் கோட்ட!
பொலம் புரி ஆடை! வலம்புரி வண்ண!
பருதி வலவ! பொருதிறல் மல்ல!
திருவின் கணவ! பெருவிறல் மள்ள!

இப்பத்து அடிகளிலும், பரமபுருஷனின் வியூஹப் பெருமைகளையும், ஸ்வரூபரூபகுணவிபூதிப்பெருமைகளையும், பகவதநுபவம் தலைமண்டையிடப் பேசுகிறார்.

acharya.org

(செங்கண் காரி) "தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீக மேவமக்ஷிணீ" [சாங் 1-6-7] [அவனுக்கு சூரியனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள.] என்கிறபடியே செந் தாமரைக் கண்ணனாய், "நீலதோயத₃ மத்₄யஸ்தா₂ வித்₃யுல் லேகா₂" [தை-நா] [நீலமேகங்கொண்ட மின்னன்னமேனி] என்கிறபடியே கார்மேகம் போன்ற நிறத்தவனான வாஸு தேவனே! (கருங்கண்வெள்ளை) கறுத்த கண்ணையும், வெளுத்த நிறத்தையுமுடைய ஸங்கர்ஷணனே! (பொன் கண்பச்சை) பொன்போன்று சிவந்த உடம்பையுடைய பிரத்யும்னனே! பச்சை - 'பிரத்யும்நன்' என்ற வடமொழிப் பெயரின் திரிபு. இது பரிமேலழகர் காட்டிய பொருள். கிருஷ்ணாவதாரத்தில் பிரத்யும்னன் காமனின் மறுபிறப் பாகையாலே காமனே என்றும் பொருள் உரைப்பர் அவர். காமன் பொன்னிறமாகையாலே இப்படிக் கொண்டார். முன்பின் தொடர்களை நோக்கும்போது, பொன்னிறமான கண்களையும், பச்சைமாமலைபோல் மேனியையும் உடைய வன் பிரத்யும்னன் என்றுகொள்வது பொருத்தம். (பைங் கண் மாஅல்) பச்சைநிற மேனியையுடையவன் அநிருத்தன் என்பர் பரிமேலழகர். பசுத்த கண்களையும், மாநிறத்தையு முடையவன் அநிருத்தன் என்றுமாம். இதிலிருந்து, நான்கு வியூஹங்களைப்பற்றியும் பரக்கப்பேசும் பாஞ்சராத்ர சாஸ்திரத்தைப் பயின்றவர்களாயிருந்தனர் பழந்தமிழர் என்று தெரியவருகிறது.

இனி, கடைசியில் சொல்லப்பட்ட அநிருத்தனிட மிருந்து தோன்றிய அவதாரங்களில் சிலவற்றையும், இவ னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிப் பெருமைகளையும் பரவச மாய்ப் பேசுகிறார். (இடவல) ஆய்ச்சியரோடு குரவைகோக் கும்போது, அவர்களுக்கு இடமும் வலமும் ஆனவனே! (குட வல) குடஅல! கண்ணனானபோது கூத்தாடுவதற்கு எடுத்த குடத்தையும், பலராமனானபோது பகைவரைக் கொல்ல எடுத்த 'அலம்' (ஹலம்) [கலப்பை] என்னும் ஆயுதத்தை

acharya.org

யும் உடையவனே! 'இடவலவ!' 'குடவலவ!' என்பவை 'இட வல! குடவல!' என்று குறைந்து கிடக்கின்றன. (கோவல) கோக்களாகிற பசுக்களை மேய்க்கும் கோபாலனாய் அவதரித் தவனே! (காவல) பசுக்களைமாத்திரமல்லாமல் எல்லா உல கங்களையும் ரக்ஷிக்கும் ஸர்வரக்ஷகனே! (காணமரப) பிரமன் உருத்திரன் முதலான தேவர்களாலும், ஸனகர் முதலான முனிவராலும் மற்று எவராலும் அளவிட்டு அறியமுடியாத முறைமையினை உடையவனே! (நீயா நினைவ) நீங்காத நினைவையுடையவனே! மற்றுள்ளாருடைய நினைவுகள் பிர ளயகாலத்திலே நீங்கிவிடும். நீ என்றுமிருப்பவனாகையாலே நீங்காத நினைவையுடையவனாகிறாய். "ய: ஸர்வஜ்ஞ:" என்று வேதம் சொல்லிற்று. அன்பரின் நீங்காத நினைவிலிருப் பவனே! என்பர் பரிமேலழகர். நீங்காத நினைவையுடையவ னாகைக்குக் காரணத்தைச் சொல்லுகிறது மேலே,–(மாயா மன்ன) என்றும் அழியாமல் நிலைத்திருப்பவனே! **"ந ப்₃ரஹ்மா நேஶாந:"** [மஹோபனிஷத்] [பிரளயகாலத்தில் பிரமனு மில்லை; சிவனுமில்லை] என்று கூறப்படும் பிரமருத்திரர் முதலானாரைப்போலே அழியாமல், **"ஏகோ ஹ வை நாரா யண ஆஸீத்"** [நாராயணன் ஒருவனேயிருந்தான்] என்று என்றும் நிலைத்திருப்பவன். (உலகாள் மன்னவ) **"பதிம் விஶ்வஸ்ய நாராயணம்"** [தை-நா] [உலகத்திற்குப் பதியா யிருப்பவன் நாராயணனே] என்கிறபடியே அனைத்துலகை யும் ஆளும் அரசனாயிருப்பவனே! இப்பெருமைகளெல் லாம் இருள் துயக்கு மயக்கு மறப்புக்களையே இயல்வாக உடைய ஒருவன் சொன்னதோ? எனில்; (தொல்லியல் புலவ) அநாதியாய் அபௌருஷேயமாயிருக்கையாலே இருள்துயக்கு (ப்₄ரமம், ப்ரமாத₃ம்) முதலான குற்றங்களற்ற வேதத்திலே புலப்படுமவனே! வேத₃ப்ரதிபாத்₃யனே! என்றபடி. வேதத்திற்சொல்லப்பட்ட ஸர்வஜ்ஞனே! என்று மாம். **"யோ வை வேதா₃ம்ஶ்ச ப்ரஹிணோதி"** [ஶ்வே] [எவன் பிரமனுக்கு வேத₃த்தைக் கற்பிக்கிறானோ] என்கிறபடியே. வேதத்தை முதலில் ஓதுவித்தவனே! என்றுமாம். (நல்லி

acharya.org

யாழ்ப்பாண) நல்ல யாழினுல் பாடப்படுபவனே! **"யே வீணயாம் கூாயந்தி ஏதம் தே கூாயந்தி"** [சாங் 1-7-6] [வீணேயில் எவர்கள் பாடுகிறுர்களோ அவர்கள் இவனேயே பாடுகிறுர்கள்.] என்று வேதம் நவின்றதன்ருே. **"யாழின் இசையே"** [திருவாய் 5-8-6] என்ருர் ஆழ்வாரும். யாழிசை யில் வல்ல பாணனே! என்று பொருள் கூறுவாருமுண்டு. (மாலேச்செல்வ) வைஜயந்தி யென்னும் வனமாலேயை அணிந்த செல்வனே! வனமாலேயை அணிந்திருப்பவனு கையாலே, உபயவிபூதிச் செல்வத்தையுமுடைய சக்கர வர்த்தியிவன் என்று தோற்றுகிறது என்று கருத்து. (தோலாக்கோட்ட) தோல்வியே அறியாத சங்கினே உடையவனே! கோடு-சங்கு. யுத்தங்களில் தன் முழக்கத் தாலேயே எதிரிகளே உயிர்விடச்செய்யும் சங்கையுடைய வனுகையாலே "தோலாக்கோட்ட" என்கிறது. **"பெரு முழக்கால் அடங்காரை எரியழலம்புகவூதி"** [திருவாய் 4-8-8] என்ருர் ஆழ்வாரும். (பொலம்புரி ஆடை) **"மாஹாரஜநம் வாஸ:"** என்கிறபடியே பொன்னிறத்தையுடைய பீதாம் பரத்தை உடையவனே! (வலம்புரிவண்ண) வலம்புரிச் சங்கை யொத்த நிறத்தையுடையவனே! **"வளேயுருவாய்த் திகழ்ந்தான்"** [திருநெடு-3] என்கிறபடியே கிருதயுகத் திரு மேனியைச் சொல்லுகிறது. 'தோலாக்கோட்ட' என்று தோல்வியறியாத தந்தத்தையுடைய வராஹமானவனே! என்று பொருளானபோது, வலம்புரிச்சங்கானது அவயவம் போலே பொருந்தியிருக்கப்பெற்றவனே! என்றதாகிறது. (பருதி வலவ) சக்கரத்தை வலக்கையிலே தரித்தவனே! (பொருதிறல்மல்ல) சாணூரன், முஷ்டிகன் முதலான மஹா மல்லர்களோடும் போர்புரியவல்ல மஹாபலசாலியான மல் லனே! "மல்லாண்டதிண்டோள் மணிவண்ணு" [திருப்பல் லாண்டு-1] என்ருர் பெரியாழ்வாரும். (திருவின் கணவ) ஸகலஜகந்மாதாவும், மங்களங்களுக்கெல்லாம் உறைவிடமு மான ஸ்ரீதேவியின் நாதனே! (மாலேச்செல்வ......வலம்புரி வண்ண பருதிவலவ...திருவின் கணவ) வைஜயந்தியையும்,

acharya.org

சங்கசக்கரங்களேயும், ஸ்ரீதேவியையும் தரித்துநிற்பவனே பரம்பொருள் என்று காட்டுகிருர். (பெருவிறல் மள்ள) பெரிய வெற்றியுடைய வீரனே!

ஆக, இவ்வளவால் பரம்பொருளுக்கேயுரிய பெருமை களேயும் லக்ஷணங்களேயுமுடையவன் திருமாலே என்று காட்டப்பட்டதாயிற்று. "காணு மரப" "நீயா நினேவ" "மாயாமன்ன" "உலகாள் மன்னவ" "தொல்லியல்புலவ" முதலான பரம்பொருளுக்கேயுரிய தன்மைகளேப் பழந்தமிழர் சிவனுக்காவது, முருகனுக்காவது, சக்திக்காவது, அல்லது வேறு எந்த தெய்வத்திற்காவது பாடியிருக்கிருர்களா என்பதை நடுநிலேயாளர் காணவேணும்.

மா நிலம் இயலா முதல்முறை அமையத்து,
நாம வெள்ளத்து நடுவண் தோன்றிய
வாய்மொழி மகஞெடு மலர்ந்த
தாமரைப் பொகுட்டு நின் நேமி நிழலே.

இந்நான்கு அடிகளாலே, மஹாப்ரளயத்திலே பிரமனே யும் படைத்த முழுமுதற்கடவுள் திருமாலே என்பதையும் அவனே ஸர்வரக்ஷகன் என்பதையும் காட்டி இப்பாடலே முடிக்கிருர்.

(மாநிலம் இயலா முதல்முறை அமையத்து) மாநிலம் எனப்படும் மஹாப்ருதிவியாலே உபலக்ஷிக்கப்பட்ட கார்யப் பொருள் எல்லாம் இப்போதுள்ளது போல் ஸ்தூலரூபத் தோடு இயங்காமல், ஸூக்ஷ்மரூபமாய் "ஏகமேவ" என் னும்படி பரமாத்மாவோடு ஒன்றிக்கிடந்த ஆதி ஊழி காலத்தில்; **"ஏகோ ஹ வை நாராயண ஆஸீத், ந ப்₃ரஹ்மா நேஶாந:। நேமே த்₃யாவாப்ருதி₂வீ"** [நாராயணன் ஒருவனே இருந்தான்; பிரமனுமில்லே; சிவனுமில்லே; மேல் கீழுலகங் களுமில்லே] என்னும் மஹாப்ரளயகாலத்தில். (நாம வெள்ளத்து நடுவண்தோன்றிய தாமரை) பிரஸித்தி பெற்ற பிரளய ஜலத்தின் நடுவே தோன்றிய தாமரை. (நாம

acharya.org

வெள்ளம்) **“அப ஏவ ஸஸர்ஜாதௌ$_3$”** [மநு] [முதலில் நீரையே ஸ்ருஷ்டித்தான்] “நன்மைப் புனல்பண்ணி நான்முகனைப்பண்ணி” [திருவாய் 7-5-4] என்று பிரமனுக்கும் முன்னால் படைக்கப்பட்டதென்னும் பிரஸித்தியுடைய பிரளயவெள்ளத்தின் நடுவிலே தோன்றிய தாமரை. (தாமரைப் பொகுட்டு) ‘பொகுட்டு’ என்பது தாமரையின் நடுவில் கொட்டை போலுள்ள பாகம். பொகுட்டோடு கூடிய தாமரை என்றபடி. (வாய்மொழி மகனொடு மலர்ந்த தாமரை) வாயால் ஓதப்பட்டே பரவுகையாலே ஆம்நாயம் (வாய்மொழி) எனப்படும் வேதத்தை முதலில் எம்பெருமானிடமிருந்து ஓதுகையாலும், பிறருக்கு ஓதுவிக்கையாலும், அவ்வேதத்தையிட்டே நிரூபிக்கப்படுமவனாய், உனக்குப் பிள்ளையான பிரமனோடு மலர்ந்த தாமரை. தாமரை உண்டாகும்போதே பிரமனும் உண்டானான் என்று கருத்து. (வாய்மொழி மகன்) “செய்ய மறையான் நின் உந்தியான்” [முதல்திருவ 28] என்றார் முதலாழ்வாரும். (மகன்) **“நாராயணாத்$_3$ ப்$_3$ரஹ்மா ஜாயதே”** [நாராயணோபனிஷத்] [நாராயணனிடமிருந்து பிரமன் உண்டாகிறான்] முதலான வேதவாக்கியங்களை நினைக்கிறார். இதனால், எல்லாவுலகையும் படைத்த பிரமனையும் படைத்தவன் இவனே என்றதாயிற்று. (வாய்மொழி மகனொடு மலர்ந்த தாமரை) **“ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமப$_4$வத்”** [தை-ஆர 23-1-2] [மிகச்சிறந்தவனான அப்பிரமன் தாமரையிதழிலே தோன்றினான்.] **“யந்நாபி$_4$பத்$_3$மாத$_3$ப$_4$வந் மஹாத்மாப்ரஜாபதி:”** [மஹோபனிஷத்] [எந்த பகவானுடைய நாபீகமலத்திலிருந்து மஹாத்மாவான பிரமன் உண்டானானே] **“ப்$_3$ரஹ்ம வை ப்$_3$ரஹ்மாணம் புஷ்கரேऽஸ்ருஜத்”** [ஆதர்வணம்] [ப்$_3$ரஹ்மம் பிரமனைத் தாமரையில் படைத்தது] என்று வேதங்களிலும்.

“யத் தத் பத்$_3$மமபூ$_4$த் பூர்வம் தத்ர ப்$_3$ரஹ்மா வ்யஜாயத ||
ப்$_3$ரஹ்மணஶ்சாபி ஸம்பூ$_4$த: ஶிவ இத்யவத$_4$ார்யதாம் ||
ஶிவாத் ஸ்கந்த$_3$: ஸம்ப$_3$பூ$_4$வ ஏதத் ஸ்ருஷ்டி சதுஷ்டயம் ||”
[ப$_4$ாரதம் ஸௌபர்ணவைகுண்ட$_2$ஸம்வாத$_3$ம்]

acharya.org

[1. முதலில் யாதொரு தாமரை உண்டாயிற்றோ அதில் 2. பிரமன் உண்டானான். 3. பிரமனிடமிருந்து சிவன் உண்டானான் என்று அறியப்படட்டும். 4. சிவனிடமிருந்து முருகன் உண்டானான். இது ஆதியில் உண்டான நான்கு ஸ்ருஷ்டிகள்.] என்று இதிஹாஸங்களிலும் சொல்லப்பட்ட ஸ்ருஷ்டி க்ரமத்தை நினைக்கிறார். பிரமனையும், சிவனையும், முருகனையும் மூவருக்கும் மேலே ஸதாசிவன் என்றோ. பராசக்தி என்றோ ஒரு தத்துவத்தைக்கற்பித்து அவர்களையும் ஜகத்காரணமாகச் சொல்லும் பக்ஷங்கள் சங்கத் தமிழர்கள் காலத்தில் எழும்பியதேயில்லை என்பதையும் மூவரில் முதல்வனான திருமாலே ஜகத்காரணம் என்னும் பக்ஷம் ஒன்றே பழந்தமிழர் காலத்தில் வழங்கிவந்தது என்பதையும் இவற்றிலிருந்து நல்லோர்கள் காணலாம்.

(தாமரைப் பொகுட்டு நின் நேமி நிழலே) நிழல்-காப்பு. எல்லா உலகுக்கும் மூலமான தாமரையை உடைய உன்னுடைய ஸுதர்சன சக்கரமே எல்லாவுலகுக்கும் காப்பாகும். ஸுதர்சனத்தைக்கொண்டு நீயே அனைத்தையும் ரக்ஷிக்கிறாய் என்று கருத்து. “மாநிலம் இயலா முதன் முறை அமையத்து வாய்மொழி மகனொடு மலர்ந்த தாமரைப் பொகுட்டு நின்” என்றதாலே எல்லாவுலகங்களையும் ஸம்ஹரிப்பவனும் ஸ்ருஷ்டிப்பவனும் இவனே என்பதும், “நின் நேமி நிழலே” என்கையாலே எல்லா உலகையும். ரக்ஷிப்பவன் இவனே என்பதும் காட்டப்பட்டன. இதனால் ஸம்ஹாரத்தைச் சிவன் செய்கிறானாகையாலே அவன் ஜகத்காரணன் என்றும், ஸ்ருஷ்டியைப் பிரமன் செய்கிறானாகையாலே அவன் ஜகத்காரணன் என்றும் கூறும் பக்ஷங்கள் பழந்தமிழரால் புறக்கணிக்கப்பட்டவை என விளங்குகிறது. முதற் பரிபாடலிலே—“மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ” என்று சிவனும், அவன் செய்யும் ஸம்ஹாரகாரியமும் திருமாலின் வசப்பட்டதே என்றும், “பூவனும் நாற்றமும்

acharya.org

நீ'' என்று பிரமனும், அவன் செய்யும் படைப்புத் தொழிலும் அவனதீனமே என்றும் கூறப்பட்டதும் குறிக் கொள்ளத்தக்கது. இப்படிப்பட்ட ஸர்வஜகத் காரணத்வம் முதலான பெருமைகள் 'ஸதாசிவ'னுக்கோ, 'பராசக்தி'க்கோ, முருகனுக்கோ மற்ற எந்த தெய்வத்திற்கோ சொல்லப்படவில்லை என்பதையும், பிரஸித்த சிவனிலும், காளியிலும் வேறுபட்ட ஸதாசிவன், பராசக்தி என்னும் தத்துவங்கள் உள்ளதாகவே பழந்தமிழர் எடுக்கவில்லை என்பதையும் மனஸ்ஸாக்ஷியுள்ளவர்கள் காணவேணும்.

நடுநிலைநிற்கும் நல்லோர்களே! ஆரியர்களே! நற்றமிழர்களே! சாதிமத ஆராய்ச்சி யென்னும் இந்நூலில் நிலைநாட்டப்படுவது யாது என்பதைச் சிறிது விளக்க விரும்புகிறோம். தற்சமயம் நம் தெய்வத்தமிழ்நாடு பல்வேறுபட்ட மதக்கருத்துக்களாலே சிதைந்துகிடக்கிறது. புதிதாக வந்த இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய மதங்களைத் தள்ளிவிட்டு, வைதிக மதத்தைப்பற்றியவர்களை எடுத்துக் கொண்டால், ஒருவன் சிவன்தான் பரம்பொருள் என்கிறான்; மற்றொருவன் முருகன்தான் பரமாத்மா என்கிறான்; ஒருவன் கணபதிதான் கடவுள் என்கிறான்; ஒருவன் எல்லாரிலும் மேம்பட்ட பராசக்திதான் பரதெய்வம் என்கிறான். ஓங்கிநிற்கும் இக்குரல்களிடையே ஒருவன் தன் மெலிந்த குரலாலே 'திருமால்தான் வேதமுதல்வன்' என்றும் கூறுகிறான். 'ஊரிரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது' என்னும் ரீதியில் ஒருவன் 'இவர்கள் ஒருவருமே பரம்பொருளல்லர், கடவுள் என்பதே கிடையாது' என்கிறான்; மற்றொருவன் 'இவையெல்லாம் பரம்பொருளல்ல; இவற்றுக்கெல்லாம் மேலே ஏதோவொன்று பரம்பொருள். அதனுடைய அம்சமே இவையெல்லாம், ஆகையால் எல்லாமே பரம்பொருள்தான்' என்கிறான். மற்றொருவன் 'இவையெல்லாம், பொய்த்தோற்றம்; ஒரு குணமுமற்ற அறிவொன்று தான் உண்மைப் பரம்பொருள்' என்றும் கூறுகிறான். இத்தனை கருத்து வேறுபாடுகளைக்

acharya.org

கொண்ட வைதிகமதம் மேல்நாட்டாரிட்ட 'இந்து மதம்' என்னும் பெயரைத் தாங்கிக் கொண்டு விளங்குகிறது. பாமர ஜனங்கள் இவற்றில் எது உண்மையென்று உணர மாட்டாமல் பெரும்பாலும் நாஸ்திகர்களாகியும், ஒன்றே தெய்வமென்னும் கிறிஸ்துவம், இஸ்லாம் முதலான மதங் களைத்தழுவியும் வேதமார்க்கத்திலிருந்து நழுவி அழிகின் றனர். பண்டைத் தமிழர்கள் காலத்திலே இந்நிலையில்லை என்பதையும், அவர்கள் திருமால் ஒருவனையே வேதமுதல் வனாகவும், முழுமுதல்வனாகவும், மோக்ஷமளிக்கவல்லவனாக வும் கொண்டிருந்தனர் என்பதையும், பிரமன், சிவன், முருகன் முதலான தெய்வங்களை - அவனுக்கு அடங்கி நின்று பற்பல தொழில்களைப் புரிந்து, மோக்ஷம் தவிர்ந்த பற்பல பலன்களை அளிப்பவர்களாகக் கொண்டிருந்தனர் என்பதையும், இதுவே உண்மையான வைதிக மதம் என் பதையும், உலகமெல்லாம் பொய், அறிவொன்றே உண்மை என்று கூறும் அத்வைதக் கொள்கையும், கடவுளில்லை என்னும் நாஸ்திகக் கொள்கையும் அக்காலத்தில் அறிவாளி களால் ஆதரிக்கப்பட்டதில்லை என்பதையும் தமிழ்மக்க ளுக்கு நடுநிலை நின்று எடுத்துக்காட்டி, அவர்களை உண் மையை உணரவைக்கவே இந்நூலை எழுதுகிறோம். இங்கு நாம் நிலைநாட்டும் விஷயங்களை மறுத்துரைக்க வல்லார் உளரேல், அவர்களை வரவேற்கிறோம். இனி பரிபாடல் களிலே நாலாம்பாடலைக் காண்போம்.

நாலாம் பாடல்

ஐந்து இருள் அற நீக்கி, நான்கினுள் துடைத்து, தம்
ஒன்று ஆற்றுப்படுத்த நின் ஆர்வலர் தொழுது ஏத்தி,
நின் புகழ் விரித்தனர்: கிளக்குங்கால், அவை நினக்கு
இறும்பூது அன்மை நன்கு அறிந்தேம் ஆயினும்,
நகுதலும் தகுதி, ஈங்கு ஊங்கு நிற்கிளப்ப.

மூன்றும் பாடலைப்பாடிய கடுவன் இளவெயினனாரே இப்பாடலையும் பாடியவர். இதில் முதலைந்து அடிகளாலே

acharya.org

உலகியலைக் கடந்த ஞானிகளே திருமாலின் புகழைப் பாட முடியுமேயொழிய, மற்றையோரால் பாட இயலாது என்கிறார்.

(ஐந்திருள் அற நீக்கி) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களாலும் உண்டாகும் அஜ்ஞாந அந்யதா₂ஜ்ஞாந விபரீதஜ்ஞானங்களை வாஸனையோடு போக்கி. சப்தஸ்பர்சரூபரஸக₃ந்த₄ங்களாகிற ஐந்து புலன் களும் போ₄க்₃யமானவை என்று நினைக்கும் அஜ்ஞானத்தை வாஸனையோடுபோக்கி என்றுமாம். எப்படிக்கொண்டாலும் பஞ்சேந்திரியங்களின் பரிசுத்தியைச் சொல்லிற்றாயிற்று. அடுத்தபடியாக, ஆறாவது இந்திரியமான மனத்தின் சுத்தி சொல்லப்படுகிறது. (நான்கின் உள் துடைத்து) மைத்திரி, (நட்பு), கருணை, முதி₃தை (இன்பம்), உபேட்சை (இகழ்ச்சி) என்னும் நான்கு குணங்களாலும் உள்ளத்தைத் துடைத்து. யோகசாஸ்திரங்களிலே சித்தபரிகர்மமாகச் (மனத்தை அழகுசெய்பவையாகச்) சொல்லப்பட்டவை இவை. **மைத்ரியாவது,**— எல்லா உயிர்களிடத்தும் நட்பு. **கருணையாவது,**— துன்பமுறும் உயிரைக்கண்டு தானும் துன்புறுமளவும் இரங்கி அருளுதல். **முதி₃தையாவது,**— இன்பதுன்பங்களை ஒன்றாகக் கருதி, எது வந்தாலும் இன்புற்றிருக்கும் மனமுடைமை. **உபேட்சையாவது,**— நிலையில்லாத இவ்வுலகப்பொருள்களில் விருப்புவெறுப் பின்றியிருக்கும் நடுநிலைமை. (தம் ஒன்றாற்றுப்படுத்த நின் ஆர்வலர்) தம்மைத் தியானமாகிய ஒரு நெறியின் கண் செலுத்திய நின் அன்பர்கள். (தொழுது ஏத்தி நின் புகழ் விரித்தனர்) 'தொழுது' 'ஏத்தி' என்று காயிக வாசிக நமஸ்காரங்களைச் சொன்னது மாநஸிக நமஸ்காரத்துக்கும் உபலக்ஷணம். மனோவாக்காயங்களாகிற முக்கரணங்க ளாலும் உன்னைத்தொழுது, அதனாலே பெற்ற உன் அருளாலே உன் புகழைப் பாடினர். (அவை நினக்கு இறும்பூது அன்மை நன்கு அறிந்தேம்) அவர்களுடைய

acharya.org

அப்புகழுரைகளும் உன் இயல்பையே சொல்லுகின்றன வாகையாலே, உனக்கு வியத்தற்கு உரியவையல்ல என்பதை நாம் நன்கு அறிந்தோம்.

"ஒட்டுரைத்து இவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதி"
[திருவாய் 3.1-2]

"கேழ்த்த சீர் அரன் முதலாக் கிளர்தெய்வமாய்க் கிளர்ந்து
சூழ்த்து அமரர் துதித்தால் உன் தொல்புகழ் மாசூணுதே"
[திருவாய் 3-1-7]

"மாசூணு வான்கோலத் தமரர்கோன் வழிபட்டால்
மாசூணு உனபாத மலர்ச்சோதி மழுங்காதே" [திருவாய் 3.1.8]

"பிறையேறு சடையானும் நான்முகனும் இந்திரனும்
இறையாதல் அறிந்தேத்த வீற்றிருத்தல் இது வியப்பே"
[திருவாய் 3.1.10]

என்று நம்மாழ்வாரும் இவ்வர்த்தத்தை வெளியிட்டருளினர்.

(ஆயினும் ஈங்கு ஊங்கு நின் கிளப்ப) பிறர்க்கு வியப்பானவையெல்லாம் நினக்கு வியப்பல்ல என்பதை நாங்கள் அறிந்திருந்தபோதிலும், எம் அன்புமிகுதியாலே அப்புகழுரைகளை முறையாகக் கூறமாட்டாமல் இங்கொன்றும் அங்கொன்றுமாக நின்னை நாங்கள் புகழ. (நகுதலும் தகுதி) நீ அதைக்கேட்டு, எம் அறியாமையை நினைத்துச் சிரிப்பதும் தகுந்ததே. (நகுதலும் தகுதி) உம்மையாலே, எங்கள் அறியாமையை நினைத்து நீ சிரிப்பதும் தகுந்ததே. அன்பாலே நாங்கள் முறைகெடப் புகழ்வதும் தகுந்ததே என்று உணர்த்துகிறார்.

"புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்
இகழ்வோம் மதிப்போம் மதியோம்—இகழோம் மற்(று)
எங்கண்மால் செங்கண்மால் சீறல் நீ தீவினையோம்
எங்கள்மால் கண்டாயிவை" [பெரியதிருவ 2]

என்றாரன்றே நம்மாழ்வாரும்.

acharya.org

திருமணி, திரைபாடு அவிந்த முந்நீர்,
வருமழை இருஞ்சூல்—மூன்றும் புரையும் மா மெய்,
மாஅ மெய்யொடு முரணிய உடுக்கையை;
நோனுர் உயிரொடு முரணிய நேமியை:

இந்நான்கு அடிகளாலே—குணமில்லை, ரூபமில்லை, விபூதியில்லை என்பாருடைய மிடற்றைப் பிடிப்பதுபோலே எம்பெருமானுடைய திருமேனி, திருப்பீதாம்பரம், திருச் சக்கரம் ஆகியவற்றின் சிறப்புக்களைப் பேசுகிருர்.

(திருமணி புரையும் மா மெய்) உன் திருமேனிக்கு உப மானம் சொல்ல நினைத்தால்—நிறம், விலைமதிப்பில்லாமை முதலானவற்றுக்கு ஸ்ரீகௌஸ்துபமாகிற் நீலமணியைச் சொல்லலாம். மற்றுள்ள ஸாதாரணமணிகளைச் சொல்ல முடியாது. (மாமெய்) கரியதிருமேனி; பெரிய திருமேனி என்றுமாம். (திரை பாடவிந்த முந்நீர் புரையும் மாமெய்) அலைகிளர்ந்து ஒலித்தலில்லாத அமைதியாக இருக்கும் கடலையும் ஒத்திருக்கும் உன் திருமேனி. **"வெண் திரைக் கருங்கடல்"** [திருச்சந்த-50] என்கிறபடியே அலைவீசும் போது வெளுத்திருக்குமாகையால், அலையெழும்பாத கருங் கடலை உவமையிடுகிருர். கொந்தளிப்போ பரபரப்போ இல்லாததாய், அதிகம்பீரமான பரமஸாத்விகத் திரு மேனியாகையாலும் திரைபாடவிந்த கடலை உவமையிடு கிருர். ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்னும் மூன்று நீர்களாலும் ஆனதாகையாலே கடல் முந்நீர் எனப்படு கிறது. (இருஞ்சூல் வருமழை புரையும் மா மெய்) நீரைப் பெரிய கர்ப்பமாகக்கொண்டு வரும் கார்மேகத்தையும் ஒத்திருக்கும் உன் திருமேனி. நிறம், கைம்மாறு கருதாது வரையாது கொடுக்கும் வண்மை முதலானவற்ருல் மேகத்தை ஒத்திருக்கை. நீரற்றமேகம் வெளுத்திருக்கு மாகையாலே 'இருஞ்சூல் வருமழை' என்று நீருண்ட மேகத்தை உவமையாகக் கூறுகிருர். (மூன்றும் புரையும் மாமெய்) ஒன்றை உவமை சொல்லித் திருப்திபெருமை

acharya.org

யாலே மூன்றையும் உவமையிடுகிறார். (மாஅ மெய் யொடு முரணிய உடுக்கையை) கறுத்த திருமேனியோடு முரண்பட்ட பொன்னிறமான பீதாம்பரத்தை உடையை. (முரணிய) மாறுபட்ட பரப₄ாக₃ரஸம் எனப்படும் வர்ணச் சேர்த்தியழகைச் சொல்லுகிறது. (நோனார் உயிரொடு முரணிய நேமியை) பகைவர் உயிரோடு முரண்பட்ட ஸுதர்சனமென்னும் சக்கரத்தையுடையை. இங்கு முரண் படுகையாவது விரோதியாகை. ஆக, இவ்வளவால் பரம புருஷனின் திருமேனி, பீதாம்பரம், திவ்யாயுதம் ஆகிய வற்றின் பெருமை அநுஸந்திக்கப்பட்டதாயிற்று.

செயிர் தீர் செங்கட் செல்வ! நிற்புகழ—
புகைந்த நெஞ்சின், புலர்ந்த சாந்தின்—
பிருங்கலாதன் பலபல பிணி பட
வலந்துழி, மலர்ந்த நோய் கூர் கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன், தாதை ஆகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சினனாக, நீ இகழா
நன்று நட்ட அவன் நன் மார்பு முயங்கி,
ஒன்று நட்டவன் உறுவரை மார்பின்—
படிமதம் சாம்ப ஒதுங்கு,
இன்னல் இன்னரொடு இடி முரசு இயம்ப,
வெடி படா ஒடி தூண் தடியொடு
தடி தடி பல பட—வகிர் வாய்த்த உகிரினை;

எம்பெருமான் நரசிங்கவுருக்கொண்டு இரணியனை ஸம்ஹரித்துப் பிரகலாதனை ரக்ஷித்தருளியதை விவரிக் கின்றன இப்பன்னிரண்டு அடிகளும்.

(செயிர்தீர் செங்கண் செல்வ) குற்றமற்ற சிவந்த கண்களையுடைய ஸர்வேச்வரனே! காமம்,க்ரோதம் முதலான வற்றால் சிவந்திருக்கை கண்களுக்குக் குற்றம். அங்ஙன மல்லாமல் ஐச்வர்யத்தாலும், அடியார்பக்கல் அன்பாலும் சிவந்திருக்கையாலே குற்றமற்ற செங்கண் என்கிறார்.

acharya.org

(செங்கண் செல்வ) **"தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகமே வமக்ஷிணீ"** [சாங்] [அந்தப் பரமபுருஷனுக்கு சூரியனால் மலர்ந்த இரு தாமரைபோன்ற கண்கள் உள] என்று மறையாலும் புகழப்படும் உன் திருக்கண்களே, நீயே ஸர்வேச்வரன் என்பதைக் கோட்சொல்லித்தருகின்றன என்று கருத்து. (நின் புகழ புகைந்த நெஞ்சின்) உன்னைப் புகழ்வதொன்றைத்தான் செய்தான் பிரகலாதன்; அதுகொண்டே இரணியனின் நெஞ்சம் புழுக்கமாகிற புகையை விடத் தொடங்கியது. (புலர்ந்த சாந்தின்) உடம்பெல்லாம் எரிகையாலே, மேனியில் தடவிக்கொண்டேயிருக்கும் சந்தனம் தடவத்தடவ உலர்ந்துவிடுகிறது. (பிருங்கலாதன் பலபல பிணிபட) முற்கூறியவாறு கடுங்கோபங்கொண்ட இரணியனாலே பிரகலாதன் பலபல வருத்தங்களை அனுபவித்தான்; (வலந்துழி) கட்டவும் பட்டான். (மலர்ந்தநோய் கூர்கூம்பிய நடுக்கத்து அலர்ந்த புகழோன்) இப்படிக் கட்டுப்பட்டதாலே உடலெங்கும் பரவிய துன்பத்தால் ஒடுங்கி நடுங்கியவனாய், **"உபமாநமஶேஷாணாம் ஸாதூ₄நாம் யஸ்ஸதா₃ऽப₄வத்"** [வி-பு 1-15-156] [எவன் எப்போதும் நல்லோர்கள் அனைவர்க்கும் உபமானமாயிருந்தானோ] என்கிறபடியே நல்லோர்களுக்கெல்லாம் உபமானமாயிருக்கத்தக்க பெரும் புகழை உடையவனான பி ர க ல ா த ன். (இகழ்வோன் தாதை ஆகலின் இகழா நெஞ்சினன் ஆக) ஸர்வேச்வரனையே இகழ்ந்தவனும், இகழத்தக்கவனுமான இரணியன் தன் தந்தையாகையாலே. அவனை இகழாதவனான பிரகலாதாழ்வான். (நீ இகழா) அவன் தந்தையாகையாலே இகழாதபோதிலும், உன் அடியவனைத் துன்புறுத்தியவனாகையாலே நீ இகழ்ந்தாய் அவனை. (நன்று நட்ட அவன் நன்மார்பு முயங்கி) மிகவும் அன்புபூண்ட பிரகலாதனுடைய நல்ல நெஞ்சிலே அவனுடைய வருத்தமெல்லாம்தீர நன்கு அணைந்துநின்று. (ஒன்று நட்டவன் உறுவரை மார்பின் படிமதம் சாம்ப ஒதுங்கு) ஒன்றுதவன் (பகைவன்) ஆக ஸம்பந்தப்பட்ட இரணியனுடைய வர

acharya.org

பலத்தாலே பெரிய மலைபோலிருந்த மார்பில், அவனுடைய பகைமதம் அழியும்படியாகப் பாய்ந்தான் நரசிங்கன். (ஒன்று நட்டவன்) ஒருவிதமாக வரங்கொண்டவன் என்றும் பொருள்கொள்வர். பகலிலும் இரவிலும், எல்லா வகைப் பிராணிகளாலும், ஆயுதங்களாலும் தனக்கு சாவில்லை என்று வரங்கொண்டமையைக் குறிக்கிறது. பிரமனுக்கு அந்தர்யாமியாய் நின்று தானே இப்படி வரங் கொடுக்கையாலே, அந்த வரவிரோதம் வாராதபடி அழித்தானன்றோ. (இன்னல் இன்னரொடு இடிமுரசு இயம்ப) இரணிய ஸம்ஹாரத்தின்போது துன்பந்தரும் பல உற்பாதங்களோடு, இடிபோல் முழங்கும் முரசங்கள் ஒலித்தன. (வெடிபடா ஒடிதூண் தடியொடு தடிதடி பல பட) நீ தோன்றும்போது வெடிபட்டு ஒடிந்த தூண் பிளவுகளோடு கூடவே இரணியனின் வெட்டப்பட்ட மாமிசபிண்டங்களும் பலவாக ஆயின. தடிதல் - வெட்டு தல். தடி - மரம்; மாமிசம். (வகிர் வாய்த்த உகிரினை) இப்படிப் பல துண்டங்களாகும்படி இரணியனின் மார்பைப் பிளந்த நகத்தையுடையாய்!

அன்பர்களே! இங்கும் மற்றும் பலவிடங்களிலும் திருமால் புரிந்த நரசிங்காவதாரம் முதலான பற்பல ஆனைத் தொழில்கள் பாடப்பட்டுள்ளன. நரசிங்கப்பெருமானை சிவன் சரப₄ரூபமாய்த் தோன்றிக் கொன்றான் என்றும், மற்றும் பலவிதமாகவும் சைவர்கள் பற்பல கேட்பார் செவிசுடும் கீழ்மைக் கதைகளைப் புனைந்து வைத்துக் கொண்டு இன்றும் கூறித்திரிகின்றார்கள். அக்கதைகளில் ஒன்றையாவது பழந்தமிழர்கள் தங்கள் பாடல்களில் பாடியிருக்கிறார்களா என்று ஆராய்ந்துபாருங்கள். நடு நிலை நின்று ஆராய்ந்து பார்த்தீர்களானால், திருமாலின் பெருமையைப் பொறாத சிலராலே இடைக்காலத்தில் புனையப்பட்ட பொய்க்கதைகளே அவை என்னும் ஒரு முடிவுக்குத்தான் வரமுடியும். திருமாலைத்தாழ்த்திப்பேசும்

acharya.org

அக்கதைகள் பழந்தமிழர் பாடல்களிலே உள்ளனவென்று காட்டவல்லார் உளரேல் காட்டுக. காட்டமுடியாவிடில், மனஸ்ஸாக்ஷியை மறைக்காமல் திருமாலே பழந்தமிழர் கண்ட முழுமுதல்வன் என்ருவது ஒப்புக்கொள்க.

புருவத்துக் கருவல் கந்தரத்தால்
தாங்கி, இவ் வுலகம் தந்து அடிப்படுத்ததை நடுவண்
ஓங்கிய பலர் புகழ் குன்றிஞேடு ஒக்கும்:

இம்மூன்றடிகளாலே, பரமபுருஷன் வராஹவுருக் கொண்டு பூமியைக் கடலிலிருந்து கொணர்ந்து நிலை நாட்டிய புகழைப் பாடுகிருர்.

(புருவத்து) பூர்வகாலத்திலே. பூருவத்து என்பது 'புருவத்து' எனக் குறுக்கல் விகாரம் பெற்றது. (கரு வல் கந்தரத்தால் தாங்கி) கருநிறமுடையதாய் வலியதான கழுத்தால் பூ₄மியைத் தாங்கி. "கந்தத்தால்" என்று பாடமானபோது 'தோளால் தாங்கி' என்று பொருளாகிறது. கந்த₄ரம் – கழுத்து. (ஸ்)கந்த₄ம் – தோள். (இவ் வுலகம் தந்து அடிப்படுத்ததை) அழியவிருந்த இவ்வுலகை உண்டாக்கித்தந்து நிலைநாட்டியசெயல். அடிப்படுத்தல் – நிலைபெறுத்தல். (அடிப்படுத்ததை) திரிவிக்கிரமனுய் உலகையெல்லாம் அடிப்படுத்திக்கொண்ட செயலைக் குறிப்பதாகவுமாம். (நடுவண் ஓங்கிய பலர் புகழ் குன்றிஞேடு ஒக்கும்) இவ்வுலகை நிலைநிறுத்துவதற்காக அதன் நடுவிலே ஓங்கியிருப்பதும், பல புராணரிஷிகளாலே புகழப்படுவதுமான மேருமலையின் பெருமையை ஒக்கும். மேருமலையைப்போலே மிகவுயர்ந்ததாய் என்றும் நிலைத்திருப்பவை உன்னுடைய வராஹ த்ரிவிக்ரமசேஷ்டிதங்கள் என்று கருத்து.

நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்று உள;
நின் தண்மையும் சாயலும் திங்கள் உள;
நின் சுரத்தலும் வண்மையும் மாரி உள;

acharya.org

நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்து உள;
நின் நாற்றமும் ஒண்மையும் பூவை உள;
நின் தோற்றமும் அகலமும் நீரின் உள;
நின் உருவமும் ஒலியும் ஆகாயத்து உள;
நின் வருதலும் ஒடுக்கமும் மருத்தின் உள;
அதனால், இவ்வும், உவ்வும், அவ்வும், பிறவும்,
ஏமம் ஆர்ந்த நிற் பிரிந்து,
மேவல் சான்றன, எல்லாம்.

கீதையில் விபூத்யத்யாயத்தை அடியொற்றி உலகி லுள்ள சிறந்த பொருள்களின் சிறந்த தன்மைகளெல் லாம் உன்னுடையவை என்றும், அவையெல்லாம் உன் னிடமிருந்து பிரிந்தும் பிரியாமலும் உள்ளன என்றும் கூறி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்டுகிறார் இப்பதினொரு அடிகளாலே.

முதல் எட்டடிகளாலே, "உன்னுடைய அழிக்கும் ஆற்றலும் பிரகாசமும் சூரியனிடம் உள்ளன; உன் அளிக்கும் தன்மையும் மென்மையும் சந்திரனிடமுள்ளன; நின் அருட்பெருக்கும் கொடையும் மழையினிடமுள்ளன. உன் காக்கும் தன்மையும் பொறுமையும் நிலத்தினிடம் பொருந்தியுள்ளன. உன் மணமும் ஒளியும் காயாம்பூவில் காணப்படுவன. நின் திருமேனி நிறமும் பெருமையும் கடலிடத்து நிலைநிற்கின்றன. உன் நுண்ணுருவமும் நுண் ணொலியும் ஆகாயத்தில் அமைந்திருக்கின்றன. எங்கும் தோன்றிமறையும் உன்தோற்றமும் மறைவும் காற்றிலே அமைந்துள்ளன." என்று கூறுகிறார். இதனால்—கீதையில் எல்லாம் நானேயென்றது எல்லாவற்றிலுமுள்ள பெருமை களும் என்னுடையவையே என்னும் பொருளையே உணர்த்துவது என்று காட்டுகிறார். (அதனால்...எல்லாம்) இப்படி எல்லாவற்றின் பெருமையும் உன்பெருமையே யாகையால், "இவையும் அவையும் உவையும்" [திருவாய் 1-9-1] என்று சுட்டிக் காட்டத்தக்க பொருள்களும்,

acharya.org

இப்படிக் காட்டமுடியாத பொருள்களும் ரக்ஷகனை உன்னைக்காட்டிலும் பிரிந்தும், உன் சரீரமாகச் சேர்ந்தும் உள்ளன. இவ்வடிகளிலிருந்து—விசிஷ்டாத்வைதமே பழந் தமிழர் உகந்ததென்றும், 'எல்லாம் பொய், ஜீவனே பரம் பொருள்' என்று கூறும் அத்வைதம் பழந்தமிழர் எண்ணாத தொன்று என்றும் நடுநிலையாளர்க்கு விளங்கும்.

சேவல் ஓங்கு உயர் கொடியோயே!
சேவல் ஓங்கு உயர் கொடி
நின் ஒன்று உயர் கொடி பனை;
நின் ஒன்று உயர் கொடி நாஞ்சில்
நின் ஒன்று உயர் கொடி யானை;
நின் ஒன்று உயர் கொடி ஒன்று இன்று!
விடமுடை அரவின் உடல் உயிர் உருங்கு உவணம்
அவன் மடிமேல் வலந்தது பாம்பு;
பாம்பு தொடி; பாம்பு முடிமேலன;
பாம்பு பூண்; பாம்பு தலைமேலது;
பாம்பு சிறை தலையன
பாம்பு படிமதம் சாய்த்தோய்! பசும் பூணவை
கொடிமேல் இருந்தவன் தாக்கு இரையது பாம்பு;

இப்பதின்மூன்று அடிகளும், திருமாலுடைய கொடி யான கருடனின் சிறப்பைக் கூறுகின்றன.

(சேவல் ஓங்கு உயர் கொடியோயே) சேவல்—ஆண்பறவையையும், இங்கு கருடனையும் குறிக்கிறது. கருடனாகிற ஓங்கி நிற்கும் உயர்கொடியை உடையவனே! (உயர்கொடியோயே) எருத்துக்கொடி முதலான மற்ற தெய்வங்களின் கொடிகளைக் காட்டிலும் இக்கொடிக்குள்ள உயர்வு சொல்லப்படுகிறது. (சேவலோங்கு உயர்கொடி நின் ஒன்றுயர்கொடி பனை) வாஸுதேவனாயிருக்கும்போது கருடனாகிற உயர்கொடியை உடைய உனக்கு பலராமனா யிருக்கும்போது "பொலம் பனைக்கொடியோற்கு முதியை" [பரிபாடல் 2-22] என்கிறபடியே பனையாகிற உயர்கொடியும்

acharya.org

உண்டு. (நின் ஒன்றுயர் கொடி நாஞ்சில்) நாஞ்சிலோனுகிற உன்னுடைய மற்றொரு உயர்கொடி 'நாஞ்சில்' எனப்படும் கலப்பையாகும். (நின் ஒன்றுயர் கொடி யானை) "எழில் வேழமேந்திய வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை" [பரிபாடல் 1-4, 5] என்கிறபடியே பலராமனுகிற உன்னுடைய மற்றொரு உயர்கொடி யானையாகும். இவற்றிலிருந்து கண்ணனுக்கு கருடக்கொடியும், பலதேவனுக்குப் பனை, கலப்பை, யானை ஆகியவை எழுதப்பெற்ற கொடிகளும் உண்டென்று உணர்த்தப்படுகிறது. (நின் ஒன்று உயர் கொடி ஒன்றின்று) இப்படி உனக்கு வேறு மூன்று கொடிகள் உளவாயினும், உன் முதலான உயர்கருடக் கொடிக்கு அவையும் ஒப்பாகமாட்டா. **ஒன்றுதல்** – முதலாதல்; முக்கியமாதல். **ஒன்றுதல்** — ஒத்தல்.

இதற்குக் காரணத்தை மேலே சொல்லுகிறார்: (விடமுடை அரவின் உடல் உயிர் உருங்கு உவணம் அவன்) விஷமுடைய பாம்பின் உடலையும் உயிரையும் உண்ணும் பறவை அக்கருடன். (மடிமேல் வலந்தது பாம்பு) அக்கருடனது வயிற்றில் (அரைக்கச்சாகக்) கட்டப்பட்டது பாம்பு. (பாம்பு தொடி) அவன் கையில் தோள்வளையாயிருப்பதும் பாம்பு. (பாம்பு முடிமேலன) முடியின்மேல் மாலைபோலே சூடியிருப்பவையும் பாம்பு களே. (பாம்பு பூண்) மற்ற ஆபரணங்களாயிருப்பவையும் பாம்புகளே. (பாம்பு தலைமேலது) தலைக்குமேல் குடை யாகக் கவிந்திருப்பதும் பாம்பே. (பாம்பு சிறை தலையன பாம்பு) தலையணியும் சிறகணியும் பாம்பே. (படிமதம் சாய்த்தோய்) பங்கவரின் வலியை அழித்தவனே! (பசும் பூணவை கொடிமேல் இருந்தவன் தாக்கு இரையது பாம்பு) பசும்பொன்னுலான அணிகளை அணிந்த நினது கொடி மேல் இருந்த கருடன் தாக்கி உண்ணும் உணவும் பாம்பேயாகும். இப்படி அறக்கருணையிலும் மறக்கருணை யிலும் சிறந்த கருடக்கொடியே சிறந்தது என்று கருத்து.

acharya.org

கடு நவை அணங்கும் கடுப்பும், நல்கலும்,
கொடுமையும் செம்மையும், வெம்மையும் தண்மையும்
உள்வழி உடையை; இல்வழி இலேயே:
போற்ருர் உயிரினும், போற்றுநர் உயிரினும்,
மாற்று ஏமாற்றல் இலேயே; 'நினக்கு
மாற்ருேரும் இலர்; கேளிரும் இலர்' எனும்
வேற்றுமை இன்று, அது போற்றுநர்ப் பெறினே,
மனக்கோள் நினக்கு என வடிவு வேறு இலேயே;

வேண்டுதல் வேண்டாமை இலாதவன் திருமால் என்றும், அடியார் விரும்பும் வடிவை உடையவன் அவன் என்றும் கூறுகிருர் இவ்வெட்டடிகளாலே.

(கடுநவை அணங்கும் கடுப்பும், கொடுமையும் வெம்மையும் உள்வழியுடையை இல்வழி இலேயே) உயிர்களுக்கு மிகவும் துன்பமுண்டாகுமாறு வருத்தும் கோபமும், உயிர்களிடத்து நேர்மையின்மையும், வெம்மையும் உடைய கொடியவர்களான இரணியன், இராவணன் முதலியவர்களிடத்து நீயும் அவற்றை உடையவனுகிருய். இத்துர்க்குணங்களில்லாத பிரகலாதன் விபீஷணன் முதலானுரிடத்து நீயும் அவையில்லாதவனுகிருய். (நல்கலும் செம்மையும் தண்மையும் உள்வழியுடையை, இல்வழியிலேயே) உயிர்களிடத்து அளியும், நேர்மையும், தண்மையும் உள்ளவர்களான பிரகலாதன் விபீஷணன் முதலானுர் பக்கல் நீயும் அவற்றை உடையவனுகிருய்; அவையற்ற இரணியராவணுதியர் பக்கல் நீயும் அவையற்றவனுகிருய். (போற்ருர் உயிரினும் மாற்று ஆற்றல் இலேயே) நின்னேப் போற்ருதவரை உயிரைப் போக்குவதென்பதும் உனக்கு இல்லே. உன்னேப் போற்ருததினுல் உனக்கொரு குறைவில்லே. அதனுல் உனக்குக் கோபமுமில்லே. இரணியராவணுதியர், உயிர்களே வருத்தியதால் அவர்களேக் கொன்ருெழித்தாயேயொழிய, உன்னேப் போற்ருமையால் அவர்களேக் கொன்ருெழித்தாயல்லே. (போற்றுநர் உயிரினும் ஏம் ஆற்றல் இலேயே) ஏம் - ரக்ஷை. உன்னேப் போற்று

acharya.org

கின்றவர் உயிரைக் காப்பாற்றுவது என்பதும் இல்லை. உன்னைப் போற்றியதால் மாத்திரம் அவர்கள் உன்னால் ரக்ஷிக்கத்தக்கவராகிவிடமாட்டார்கள். உயிர்களிடத்து அளியும், நேர்மையும், தண்மையும் உடையவர்களையே நீ ரக்ஷிப்பாய். மற்றதெய்வங்கள் தங்களைப் போற்றி விட்டால் உச்சிகுளிர்ந்து இரணியராவணாதியர்க்கும் வரங் கொடுத்துவிடுவார்கள். நீ அப்படிப்பட்டவனல்லை என்று கருத்து. (நினக்கு மாற்றோரும் இலர்; கேளிரும் இலர்) உனக்கென்று ஒருவன் எதிரியுமில்லை; நண்பனுமில்லை. உயிர்களுக்கு எதிரியே நினக்கு எதிரி; உயிர்களுக்கு நண்பனே உனக்கு நண்பன். (எனும் வேற்றுமையின்று; அது போற்றுநர்ப் பெறினே) 'இரணிய ராவணாதியரைக் கொன்றொழிக்கிறாய்; பிரகலாத விபீஷணாதியரை ரக்ஷிக்கிறாய்' என்றும், 'உனக்கு எதிரிகளுமில்லை; நண்பருமில்லை' என்றும் கூறுவதில் முரண் ஒன்றுமில்லை ஆராய்ந்து உணர்வாரைப் பெற்றால். உயிர்களது இயல்பால் நினக்குப் பகையும், நட்பும் ஏற்படுகின்றனவேயன்றி நின் இயல்பால் உனக்குப் பகைவரும் இல்லை, நண்பரும் இல்லை என்று ஆராய்ந்து அறியவல்லார்க்கு, இதிலே ஒரு முரணும் இல்லை என்று கருத்து. (மனக்கோள் நினக்கென வடிவு வேறு இலையே) "யே யதா₂ மாம் ப்ரபத்₃யந்தே தாம்ஸ்ததை₂வ ப₄ஜாம்யஹம்" [கீ₃தை 4-11] [அன்பர் நினைத்தபடியே அவர்களையடைகிறேன்] "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே" [முதல்திருவ-44] "நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள் கடல் வண்ணனே"[திருவாய் 3-6-9] என்கிறபடியே தம் குணநலங்களாலே உனக்கு அன்பராயினார் மனத்தில் கொண்டதையே நீ வடிவாகக் கொள்கின்றாயேயொழிய, உனக்கென நீ ஒரு வடிவமெடுப்பதில்லை. அன்பர் மனத்தில் கொள்ளப்பட்ட நீ, உன் ஸ்வரூபரூபகுணவிபூ₄திகளை உனக்கெனக் கொள்வதில்லை; உன் அன்பர்களுக்காகவே கொண்டிருக்கிறாய் என்றுமாம். **வடிவு** - ஸ்வரூபரூபங்கள்; **வேறு** - குணவிபூதிகள்.

acharya.org

"ந தே ரூபம் ந சாகாரோ நாயுத₄ாநி ந சாஸ்பத₃ம்।
தத₂ாபி புருஷாகாரோ ப₄க்தாநாம் த்வம் ப்ரகாஶஸே ||"
[ஜிதந்தே 1-5]

[(உன்னுடைய) திவ்யாத்மஸ்வரூபமானது உனக்காக இராது; திவ்யமங்களவிக்ரஹமும் உனக்காயிராது; திவ்யாயுதங்களும் உனக்காயிருக்கவில்லை. இருப்பிடமான வைகுண்டம் முதலியவைகளும் உனக்காயிருக்கவில்லை. (இவை பக்தர்களுக்காகவேயுள்ளன); பக்தர்களின் உடைமையான நீ, இப்படி அடியார்க்கடியனுயிருந்தபோதிலும் பரமபுருஷனுயிருக்கையாகிற பரத்வத்துடன் பிரகாசிக்கிருய்] என்ற ஜிதந்தையை அடியொற்றிச் சொல்லுகிருர். இங்கு சொல்லப்பட்ட பெருமைகளும் ச்ருதிஸ்மிருதிகளில் பரம்பொருளுக்கேயுரியவையாகச் சொல்லப்பட்டவையென்பது நடுநிலையாளர்களால் குறிக்கொள்ளத்தக்கது.

கோள் இருள் இருக்கை ஆய் மணி மேனி,
நக்கு அலர் துழாஅய் நாறு இணர்க் கண்ணியை;
பொன்னின் தோன்றிய புனை மறு மார்ப!
நின்னில் தோன்றிய நிரை இதழ்த் தாமரை
அன்ன நாட்டத்து அளப்பரியவை:
நின்னின் சிறந்த நின் தாள் இணையவை;
நின்னில் சிறந்த நிறை கடவுளவை;
அன்னோர் அல்லா வேறும் உள; அவை
நின்ஓர் அன்ஓர் அந்தணர் அரு மறை.

இவ்வொன்பது அடிகளும் திருமாலின் வடிவச்சிறப்பையும் பெருமையையும் பேசுகின்றன.

(கோள் இருள் இருக்கை ஆய்மணி மேனி) எல்லாப் பொருள்களையும் மறைத்துக்கொள்ளலை இயல்வாகக் கொண்ட இருளுக்கு இருப்பிடமான நல்ல மணிபோன்றிருப்பது உன் திருமேனி. "இருளன்ன மாமேனி" [பெரியதிருவ 26] என்றும், "மணிவண்ணு" [திருப்பல்-1]

acharya.org

என்றும் சொல்லப்படும் வடிவாகையாலே, இருளுக்கு இருப்பிடமான மணிபோன்ற மேனி என்கிருர். விலக்ஷண மான திருமேனியாகையாலே 'ஆய்மணி' என்று ஆய்ந் தெடுத்த மணியை உவமிக்கிருர். (நக்கலர் துழாஅய் நாறிணர்க்கண்ணியை) நக்க—மலர்ந்த, இணர்—பூங் கொத்து; மிக அலர்ந்த பூங்கொத்துக்களோடு கூடிய துளவத்தின் மணம் வீசுகின்ற மாலையை அத்திருமேனி யில் அணிந்துள்ளாய்! (பொன்னின் தோன்றிய புனை மறு மார்ப) பொன்னலான ஆபரணம்போலே தோன்றும் ஸ்ரீவத்ஸம் என்னும் புகழப்படும் மறுவைத் திருமார்பிலே உடையவனே! "ஸ்ரீவத்ஸவக்ஷா:" [ரா-யு 114-15] என்று புகழப்படுகிறதன்ருே. பரிமேலழகர் திருமகளேயே மறு வென்ருர். இது சாஸ்திரவிருத்தம். (நின்னில் தோன்றிய நிரையிதழ்த்தாமரை அன்ன நாட்டத்து அளப்பரியவை) உன்னிடமிருந்து தோன்றியதாய், அடுக்கடுக்காயமைந்த (உலகிற்குக் காரணமான) தாமரைமலர்போன்ற கண் களேயுடையவனாய் அளத்தற்கரியவனாயிருக்கிருய். "நின் னில் தோன்றிய நிரையிதழ்த்தாமரை" என்கையாலே, உலகைப்படைத்த பிரமனுக்கும் முன் தோன்றியதாக ஓதப்படும் தாமரை திருமாலின் திருமேனியிலிருந்து தோன்றியதே என்பதையும், "அன்ன நாட்டத்து அளப் பரியவை" என்கையாலே—**"தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீக மேவமக்ஷிணீ। தஸ்ய உதி₃தி நாம"** [சா₂ந் 1-6] [அவனுக்கு சூரியனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள. அவனுக்கு 'உயர்ந்தவன்' என்று பெயர்] என்று வேதத் தின் பொருளேயும் கூறுகிருர். இவற்ருல் இவனே பரம் பொருள் என்று கையிலங்கு கனியாகக் காட்டிஞராயிற்று. (நின்னிற் சிறந்த நின்தாளிணையவை) அடியார்களுக்கு ஶுபா₄ஶ்ரயமாகி, அவர்களுக்கு எளிதிலே மோக்ஷமளிக்கை யாலே, உன் ஸ்வரூபத்தைக்காட்டிலும் சிறந்த திருவடி யிணைகளே உடையை. ஸ்வரூபம் கண்ணுக்கு விஷய

acharya.org

மாகாதாகையால், அதை தியானித்தல் அரிது; விக்ரஹம் கண்ணுக்குத் தோன்றுவதாகையாலே அதை தியானித்தல் எளிது. அதிலும் மற்ற எல்லா அவயவங்களுமிருக்க, கைக்குழந்தைக்குத் தாய்முலேபோலே இனிதாயிருப்பவை திருவடிகள். அதனுலேயே "நின்னிற்சிறந்த நின் தாளிணே" என்கிருர். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்₃த₄ாந்தத்தின் கடைந் தெடுத்த ஸாரார்த்த₂மான இதைப் பல்லாயிரம் வருஷங் களுக்கு முற்பட்ட பண்டைத்தமிழர் உணர்ந்திருந்ததை நோக்கும் நடுநிலேயாளர்கள் வைணவத்தின் தொன் மையை அறியலாம். (நின்னில் சிறந்த நிறைகடவுளவை) நின்னிடத்தில் சிறந்ததும் நிறைந்ததுமான கடவுள் தன் மையை உடையை. மற்றுமுள்ள தெய்வங்களிடமுள்ள கடவுள் தன்மை சிறந்ததுமல்ல, நிறைந்ததுமல்ல; உன் னிடமுள்ள கடவுள்தன்மையே சிறந்ததும் நிறைந்தது மாகும் என்கிருர். பண்டைத்தமிழர்கள் பரம்பொருளுக்கே யுரிய இப்பெருமையை வேறெந்த தெய்வத்துக்கும் கூற வில்லே என்பதை நடுநிலேயாளர் நோக்கவேணும். (அன்னுேர் அல்லா வேறும் உள) உன் பெருமைகள் இவை மாத்திரமல்ல; மற்றும் பலவும் உள; அவற்றை எங்கே காணலாம் எனில்; (அவை நின்னுேர் அன்னுேர் அந்தணர் அருமறை) 'ஓர்' என்பது இரண்டிடத்திலும் அசை. "நின் அன்ன" என்றபடி. "ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் உத்₃த்₄ருத்ய பு₄ஜமுச்யதே। வேத₃ாச்ச₂ாஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தை₃வம் கேஶவாத் பரம்॥" [மூன்றுதரம் சத்தியம்செய்து கைதூக்கி நின்று கூறுகிறேன். வேதத் தைக்காட்டிலும் மேலான சாஸ்திரமில்லே. கேசவனேக் காட்டிலும் மேலான தெய்வமில்லே] என்ற வியாஸவாக்கி யத்தின்படியே தெய்வங்களில் திருமால் தலேசிறந்தவனு யிருப்பதுபோலே, சாஸ்திரங்களில் வேதம் தலேசிறந்தி ருக்கையாலே, மறையவர் ஓதும், நின்னேயொத்த வேதங் களே உன் பெருமையைச் சொல்லுபவை. நின்னேயொத்த அந்தணர் ஓதும் அருமறை என்றுமாம். அபௌரு

acharya.org

ஷேயமான வேதங்களிலே பெரியவனுகச் சொல்லப்படு மவனுகையாலே, இதில் தவறிருக்க இடமில்லை என்று கருத்து. சில புராணங்களிலும் ஆகமங்களிலுமே பெரிய வராகச் சொல்லப்படும் மற்ற தெய்வங்களைக் காட்டிலும் திருமாலுக்குள்ள சிறப்பு இதனுல் தெரிவிக்கப்பட்ட தாயிற்று. வேதமுதல்வன் திருமாலே என்று பழந்தமிழர் பலகால் கோஷிப்பதைக் கண்டோம். ஓரிடத்திலாவது சிவனையோ, பராசக்தியையோ, முருகனையோ அல்லது வேறு தெய்வத்தையோ அவ்வாறு கூறியிருக்கவில்லை என்பதை நடுநிலை நிற்கும் நல்லோர்கள் காணவேணும்.

அழல் புரை குழை கொழு நிழல் தரும் பல சினை
ஆலமும், கடம்பும், நல் யாற்று நடுவும்,
கால் வழக்கு அறு நிலைக் குன்றமும், பிறவும்,
அவ்வவை மே(வி)ய வேறு வேறு பெயரோய்!
எவ் வயினேயும் நீயே; நின் ஆர்வலர்
தொழுத கை அமைதியின் அமர்ந்தோயும் நீயே;
அவரவர் ஏவலாளனும் நீயே;
அவரவர் செய்பொருட்கு அரணமும் நீயே.

இப்பாடலின் கடைசியிலுள்ள இவ்வெட்டு அடிக ளாலே, அடியார்க்காக இவனெடுத்த பல விபவரூபங்களை யும் அர்ச்சாரூபங்களையும் அறிவிக்கிருர்.

(அழல் புரை குழை கொழு நிழல்தரும் பல சினை ஆல மும்) நெருப்பினையொத்துச் சிவந்த தளிர்களையும், செழுமை யான நிழலைத்தரும் பல கிளைகளையுமுடைய ஆலமரத்தின் இலையும். 'ஆலமும்' என்றது ஆலிலையைக் குறிக்கிறது. 'ஆலமும் மேய' என்று மேலோடே கூட்டவேணும். பிரளயகாலத்தில் ஆலந்தளிரில் சாய்ந்த வடதளசாயியை நினைக்கிறது. (கடம்பும் மேய) காளியனைக் கொல்லக் கடம்பில் ஏறிய கண்ணனை நினைக்கிறது. (நல்யாற்று நடுவும் மேய) கங்கையிற் புனிதமாய காவிரியின் நடுவில்

acharya.org

துயிலும் அரங்கனை நினைக்கிறார். (கால் வழக்கு அறு நிலைக் குன்றமும் மேய) தன்னையடைந்தவர்களுடைய கால வழக்கை — காலத்திற்கு வசப்பட்டிருக்கும் தன்மையை— அழிக்கும் நிலையையுடைய திருமலையில் மேவிய வேங்கட வனை நினைக்கிறார். (பிறவும்) திருமாலிருஞ்சோலைமலை முதலான மற்றுமுள்ள திவ்யதேசங்களையும் நினைக்கிறார். (அவ்வவை மேய வேறு வேறு பெயரோய்) அந்தந்த ஸ்தானங்களிலிருக்கும்போது வடதளசாயியென்றும், கிருஷ்ணன் என்றும், அரங்கனென்றும், வேங்கடவ னென்றும் மற்றும் அந்தந்த ஸ்தானத்திற்குரிய பெயர்க ளாலும் அழைக்கப்படுபவனே! (எவ்வயினோயும் நீயே) ஸ்வரூபத்தாலும் விக்ரஹத்தாலும் நீ பரவாத இடம் இல் லாமையால் எல்லாவிடத்திலுமிருப்பவன் நீயே. நாராயண விஷ்ணு வாஸுதேவநாமங்களின் பொருளைச் சொல்லு கிறது. (நின் ஆர்வலர் தொழுதகை அமைதியின் அமர்ந் தோயும் நீயே) உன் அடியார்கள் கூப்பிய கையில் பொருந்தி நிற்பவனும் நீயே. (அவரவர் ஏவலாளனும் நீயே) அடியார்க்கு அடியனாயிருப்பவனும் நீயே. (அவரவர் செய்பொருட்கு அரணமும் நீயே) அவரவர் விரும்பும் த₄ர்மார்த்த₂ காமமோக்ஷங்களாகிற புருஷார்த்தங்களுக்குக் காவலாயிருப்பவனும் நீயே.

எல்லாவிடத்திலும் வியாபித்திருக்கை முதலான பரம்பொருளுக்கேயுரிய தன்மைகள் திருமாலுக்கே பழந் தமிழர்களால் கூறப்பட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

இதுவரையில் - முதல் நாலு பரிபாடல்களிலே, உல கனைத்தையும் படைத்துக் காத்து அளிக்கை, ஸர்வாந்தர் யாமியாயிருக்கை, அதனாலேயே எல்லாமாயிருக்கை, வேத முதல்வனாயிருக்கை, முழுமுதல்வனாயிருக்கை முதலான பரம்பொருளுக்கே உரிய பெருமைகள் திருமாலுக்கே பண்டைத் தமிழர்களால் படிக்கப்பட்டிருப்பதைக் கண் டோம். இனி மற்ற பரிபாடல்களிலும் இவ்வுண்மையே

acharya.org

உத்கோஷிக்கப்பட்டிருப்பதையும், வேறெந்த தெய்வத்திற்கும் இப்பெருமைகளில் ஒன்றுகூடச் சொல்லப்படவில்லையென்பதையும் ஜீவர்களுக்குரிய தாழ்வுகளே சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் காட்டுவோம்.

பரிபாடல் - ஐந்தாம் பாடல்

இப்பாடல் 'செவ்வேள்' எனப்படும் முருகனின் வாழ்த்தாக அமைந்துள்ளது. மூன்று நான்காம் பாடலில் திருமாலைப் பாடிய கடுவன் இளவெயினனாரே இப்பாடலைப் பாடியுள்ளார் என்பது குறிக்கொள்ளத்தக்கது. திருமால், முருகன் ஆகிய இருவரிடமும் ஈடுபாடிருந்தபோதிலும் திருமாலையே வேதமுதல்வனாகவும், முழுமுதல்வனாகவும் இவ்வாசிரியர் பாடியிருப்பதிலிருந்தும், முருகனை அப்படிப் பாடாமல் தேவர்சேனைத் தலைவனுக்குரிய பெருமைகளை மாத்திரம் பாடியிருப்பதிலிருந்தும், முருகனுக்குப் பிராகிருதமான பிறப்பைச் சொல்லியிருப்பதிலிருந்தும் பண்டைத் தமிழர் திருமாலையே பரம்பொருளாகக் கருதினர் என்பது கல்வெட்டாகிறது. இனி பாடலைக் காண்போம். [நூல் விரிவுக்கு அஞ்சி முக்கியமான அடிகளை மாத்திரம் இங்கு விவரிக்கிறோம். மற்ற அடிகளின் சுருக்கத்தையே கொடுத்திருக்கிறோம். பரிபாடல் முழுவதையும் காணவிரும்புவோர் மர்ரே அண்டு கம்பெனி, 5, தம்புசெட்டித்தெரு, சென்னை-1. என்னும் விலாசத்தில் பெறலாம்.]

1—12 அடிகளின் சுருக்கம்

சூரபதுமன் என்னும் அரக்கன் முருகனுக்கு அஞ்சி மாமரமாகிக் கடலில் ஒளிந்துகொண்டான். பிணிமுகம் என்னும் யானையிலேறி, கடலில் மலைகளைப் பொடியாக்கி, வேலாயுதத்தால் அம்மாமரத்தை வெட்டினான் முருகன். சூரபதுமனையும், மற்ற அசுரர்களையும் அழித்த வேலால் கிரௌஞ்ச மலையைத் துளைத்து அதன் வழியால் மக்கள் போய்வர வழிசெய்தான். முருகன் மெல்லிய ஆறு முகங்

acharya.org

களையும், மத்தளம்போன்ற பன்னிரு தோள்களையும் உதயசூரியனின் நிறத்தையும் உடையவன். தாமரையில் பிறந்தவன்.

13—21 அடிகளின் சுருக்கம்

'அழிக்கும் கடவுளின் மகனே! (சிவந்த நிறத்தையும், அழகையும் உடையவனுகையாலே) செவ்வேள் எனப்படுபவனே! நற்குணமுடையோனே! (சேனைத்) தலைவனே!' என்று வேலைக் கையிலே உடைய பூசாரி உன்னைப் பாடித் துதிக்கும் வெறிப்பாடல்களும் உள. வரம்பில்லாத இவ்வுலகிற்கு நீ தலைவனுதலால் அவ்வெறிப்பாடல்களை (முழு) உண்மையென்றும் கூறமுடியாது; பொய்யென்றும் கூற முடியாது; அவை உன் முழுப்பெருமையையும் கூறுகின்றனவெனக்கொண்டால், சிறந்தவனை நீ சிறப்பற்றவனுகி விடுவாய்; உன் ஆணையால் பலர் உயர்ந்தவராகவும், பலர் தாழ்ந்தவராகவும் பிறக்கின்றனர். [இப்பெருமைகள் எல்லாம் தேவர் சேனைத்தலைவனுக்குத் தக்கவையே. இவற்றுள் பரம்பொருளுக்கேயுரிய வேதமுதல்வனுயிருக்கை, முழுமுதல்வனுயிருக்கை முதலான பெருமைகள் காணப்படவில்லை என்பது குறிக்கொள்ளத்தக்கது. இனி, மேல் வரும் அடிகளில், சிவனும் பார்வதியும் புணர்ந்ததனுல் முருகன் உண்டானமை விவரிக்கப்படுகின்றது. அவ்வடிகளை அப்படியே கொடுத்து விவரிப்போம்.]

ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ,
வேத மா பூண் வையத் தேர் ஊர்ந்து,
நாகம் நாணு, மலை வில்லாக,
மூவகை ஆர் எயில் ஓர் அழல் - அம்பின் முளிய,
மாதிரம் அழல, எய்து அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங் கட் பார்ப்பான்
உமையொடு புணர்ந்த காமவதுவையுள்,
அமையாப் புணர்ச்சி அமைய, நெற்றி
இமையா நாட்டத்து ஒரு வரம் கொண்டு,

acharya.org

'விலங்கு' என, விண்ணோர் வேள்வி முதல்வன்
விரி கதிர் மணிப் பூணவற்குத் தான் ஈத்தது
அரிது என மாற்றான், வாய்மையன் ஆதலின்
எரி கனன்றானுக் குடாரி கொண்டு அவன் உருவு
திரித்திட்டோன், இவ் உலகு ஏழும் மருள:

(ஆதி அந்தணன் அறிந்து பரிகொளுவ) முதலிற் பிறந்த மறையோனான பிரமன் திரிபுரஸம்ஹாரகாலத்தில் சிவனுக்கு நன்றாகத் தேரோட்டினதைக் கூறுகிறது. (வேத மா பூண் வையத்தேர் ஊர்ந்து) வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பட்ட உலகமாகிய தேரில் ஏறிச் சென்றான் சிவன். (நாகம் நாணா மலை வில்லாக) ஆதிசேஷன் நாணாகவும் இமயமலை வில்லாகவுமாயிற்று. (மூவகை ஆரெயில் ஓர் அழல் அம்பின் முளிய மாதிரம் அழல எய்து) **" அயஸ்மய்யவமாத₃ ரஜதாத₃ ஹரிணீ "** [யஜுஃஸ்ஸம் 6-2] என்று வேதத்திற் சொல்லியபடியே இரும்பு, வெள்ளி, பொன் என்னும் மூவகையுலோகங்களாலான முப்புரங்களும் ஒப்பற்ற அக்னிரூபமான ஓர் அம்பாலே எரியும்படியும், திசைகளெல்லாம் வேகும்படியும் சிவன் எய்தமையைக் காட்டுகிறது. இதையெல்லாம் செய்தவன் யாரெனில்: (அமரர் வேள்விப்பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான்) இத்திரிபுரஸம்ஹாரத்திற்குப் பிரதிப் பிரயோஜனமாக **"ஸோப்₃ரவீத் வரம் வ்ருணீ - அஹமேவ பஶூநாமதி₄பதிரஸானீதி"** என்று கிருஷ்ண யஜுர்வேதத்தில் சொல்லியபடி யாகபசுக்களுக்குப் பதியாயிருக்கையாகிற வரத்தைப்பெற்ற சிவன். வேள்வியில் ஹவிர்ப்பாகம் இல்லாமலிருந்து இச் செயலுக்குக் கைம்மாறாக ஹவிர்ப்பாகம் பெற்றமையைக் கூறுகிறதாகவுமாம். இத்தால், சிவன் வேண்டுதல் வேண்டாமையிலாத பரம்பொருளல்ல என்று விளங்குகிறது. (பைங்கண்) பசுமையான கண்ணையுடையவன். (பார்ப்பான்) சிவனுடைய அறிவுச்சிறப்பைக் காட்டுகிறது. 'ஸர்வஜ்ஞன்' என்னும் பெயரையுடையவனன்றோ. (உமையொடு புணர்ந்த காமவதுவையுள் அமையாப் புணர்ச்சி

acharya.org

அமைய) சிவன் பார்வதியோடு புணர்ந்த காமக் கலவியுள், இராப்பகலாகப் பலநாட்கள் புணர்ந்தும் அடங்காத காமக் கலவியில் சிவன் ஈடுபட. இதிலிருந்து, சிவனும் பார்வதியும், அவர்களுடைய புணர்ச்சியால் தோன்றிய முருகனும் பிராகிருதரான ஜீவர்களே என்று தெளிவாக விளங்குகிறது. (நெற்றி இமையா நாட்டத்து) நெற்றியிலே இமைக்காத ஒரு கண்ணைக்கொண்ட சிவனிடம். நாட்டம் – கண்; நாட்டத்தையுடையவனை ஆகுபெயரால் நாட்டம் என்கிறார். (விண்ணோர் வேள்விமுதல்வன் 'விலங்கு' என ஒரு வரம் கொண்டு) நூறுயாகங்களைச்செய்து தேவர்தலைவனான இந்திரன், சிவனிடம் 'இப்புணர்ச்சியால் தோன்றிய கருவைச் சிதைக்கவேண்டும்' என்று ஒருவரம் பெற்றுக் கொண்டான். (விரி கதிர் மணிப்பூண் அவற்குத் தான் ஈத்தது அரிதென மாற்றான் வாய்மையன் ஆதலின்) சிவன் உண்மையுரைப்பவனாகையால், விரிந்த கிரணங்களைக்கொண்ட மணிகள் பதித்த அணிகளை அணிந்த இந்திரனுக்குத் தான் தந்த வரத்தை 'நிறைவேற்ற அரிது' என்று எண்ணி மாற்றாதவனானான். (எரி கனன்றானைக் குடாரி கொண்டு அவனுருவு திரித்திட்டோன் இவ்வுலகேழும் மருள) இவ்வுலகெல்லாம் அஞ்சும்படியாக நெருப்பைப்போல் கிளர்ந்தெழுந்து தன் மழுவாயுதத்தைக் கொண்டு அக்கருவைத் துண்டு துண்டாக்கினான் சிவன். (எரி கனன்று ஆனைக் குடாரி) எரிவதில் குறையாத மழு என்றுமாம். (மருள) வியப்ப என்றுமாம்.

கருப் பெற்றுக் கொண்டோர், கழிந்த சேய் யாக்கை
நொசிப்பின், ஏழ் உறு முனிவர், நனி உணர்ந்து,
வசித்ததைக் கண்டம் ஆக மாதவர்,
'மனைவியர், நிறைவயின், வசி தடி சமைப்பின்,
சாலார்; தானே தரிக்க' என, அவர் அவி
உடன் பெய்தோரே, அழல் வேட்டு: அவ் அவித்
தடவு நிமிர் மூத் தீப் பேணிய மன் எச்சில்,

acharya.org

வடவயின், விளங்கு ஆல், உறை எழு மகளிருள்
கடவுள் ஒரு மீன் சாலினி ஒழிய,
அறுவர் மற்றையோரும் அந் நிலை அயின்றனர்;
மறு அறு கற்பின் மாதவர் மனைவியர்
நிறைவயின் வழாஅது நிற் சூலினரே;
நிவந்து ஓங்கு இமயத்து நீலப் பைஞ் சுனைப்
பயந்தோர் என்ப, பதுமத்துப் பாயல்:
பெரும் பெயர் முருக! நிற்பயந்த ஞான்றே
அரிது அமர் சிறப்பின் அமரர் செல்வன்,
எரி உமிழ் வச்சிரம் கொண்டு, இகந்து வந்து, எறிந்தென,
அறு வேறு துணியும் அறுவர் ஆகி,
ஒருவனை; வாழி, ஓங்கு விறல் சேஎய்!

(கழிந்த சேய் யாக்கை கண்டமாக வசித்ததை கருப் பெற்றுக்கொண்டோர் ஏழுறு முனிவர்) பார்வதியின் வயிற்றிலிருந்து கழிந்ததும், குழந்தையின் உடம்பாக ஆவ தற்குரியதும், பல துண்டுகளாக (சிவனால்) வெட்டப் பட்டதுமாகிய அக்கருவை அத்ரி, பிருகு, குத்ஸர், வஸிஷ்டர், கௌதமர், காச்யபர், ஆங்கிரஸர் எனப்படும் ஸப்தரிஷிகளும் பெற்றுக்கொண்டனர். (நொசிப்பின் நனி உணர்ந்து கருப் பெற்றுக்கொண்டோர்) நொசிப்பு-சமாதி. 'இக்கரு தேவசேனாதிபதியாகும்' என்று சமாதி யாலே நன்கு உணர்ந்து அக்கருவை ஸப்தரிஷிகளும் பெற்றுக்கொண்டனர். (கண்டமாக வசித்ததை மாதவர் கருப்பெற்றுக்கொண்டோர்) சிவன் துண்டுதுண்டாக்கிய கருவை வருங்காலமுணரும் மஹாதபஸ்விகளான ஸப்த ரிஷிகள் பெற்றுக்கொண்டனர். அதைப் பெற்றுக்கொண்டு என்ன செய்தனர்? எனில்: ('மனைவியர் வசிதடி சமைப் பின் நிறைவயின் சாலார்; தானே தரிக்க' என அவர் அழல் வேட்டு அவியுடன் பெய்தோரே) 'துண்டாக்கப்பட்ட கரு வின் துண்டங்களை அப்படியே தம் மனைவியர் உட்கொண்டு தம் வயிற்றில் வைத்துக் குழந்தையாக வளர்த்தால்,

acharya.org

அவர்கள் தம் கற்புநிலையில் சிறந்து விளங்கமாட்டார்கள்' என்று கருதி, அம்முனிவர்கள் யாகத்தீயை வளர்த்து, 'இத்தீதானே இக்கருவை த₄ரிக்கக்கடவது' என்று அத் தீயில் இக்கருவையும் ஹவிஸ்ஸுடன் ஹோமம் செய் தனர். **நிறை**—கற்பு. **சாலார்**—நிறையார். **வேட்டு**—விரும்பி வளர்த்து. (அவ்வவித் தடவு நிமிர் முத்தீப் பேணிய மன் எச்சில் வடவயின் விளங்கு ஆல் உறை எழு மகளிருள் கடவுள் ஒரு மீன் சாலினி ஒழிய அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர்) அப்படி இடப்பட்ட ஹவிஸ்ஸோடு யாககுண்டத்தில் ஓங்கி எழுந்த (ஆஹவனீயம், கார்ஹ பத்யம், தக்ஷிணுக்னி என்னும்) மூன்றுவகையான தீயா லும் விரும்பி உண்ணப்பட்ட எச்சிலாகிய கருவை, வானத்தின் வடதிசையில் நட்சத்திரங்களாய் விளங்கும் ஸப்தரிஷிகளின் பத்தினிகளான ஏழு பெண்களுள், தெய் வக்கற்பினையுடைய ஒப்பற்ற நட்சத்திரமான அருந்ததி என்னும் ஒருத்தி நீங்கலாக, கார்த்திகைப்பெண்கள் என்ற பெயரோடு விளங்கும் அறுவரும் அப்போதே உண்டனர். **தடவு**—யாககுண்டம்; **பேணிய**—விரும்பி உண்ட. **எச்சில்**—யாகசேஷமான புரோடாசம். **ஆல்**—ஆரல்; கார்த்திகைப் பெண்கள். **சாலினி**—அருந்ததி. தீயில் இட்டபின்பும் சிவ பார்வதிகளின் கருவை உண்ணமறுத்ததால் 'கடவுள் ஒரு மீன் சாலினி' [தெய்வக்கற்பையுடைய ஒப்பற்ற நட்சத்திர மான அருந்ததி] எனப்படுகிருள். இன்றும் கற்புக்கு உதாஹரணமாகக் கூறப்படுபவளன்றே வஸிஷ்டபத்னி யான அருந்ததி. **அயின்றனர்**—உண்டனர். (மறு அறு கற்பின் மாதவர் மனைவியர் நிறை வயின் வழா அது நிற் சூலினரே) தீயால் பரிசுத்தப்படுத்தப்பட்ட கருவையே உண்டமையாலே குற்றமற்ற கற்பினை உடைய அந்த ஆறு ரிஷிபத்தினிகளும், சிவனுடைய கருவை உட் கொண்டதால் தம் கற்புநிலையினின்று நழுவாதவராய் (கார்த்திகேயனுகிற) உன்னைத் தம் வயிற்றில் கருவாகக் கொண்டிருந்தனர். (நிவந்து ஓங்கு இமயத்து நீலப் பைஞ்

acharya.org

சுனைப் பயந்தோர் என்ப பதுமத்துப் பாயல்) பின்னர் மிகவும் உயர்ந்து விளங்குகின்ற இமயமலையில் உள்ள—நீலநிறமான தருப்பைப்புற்கள் வளர்ந்துள்ள—சரவணப் பொய்கை என்னும் பசுமையான சுனையில், தாமரை மலராகிய படுக்கையில் நின்னைப் பெற்றனர் என்று பௌராணிகர் சொல்லுவர். (பெரும்பெயர் முருக) பெரிய புகழையுடைய முருகனே! (நின் பயந்த ஞான்றே அரிது அமர் சிறப்பின் அமரர் செல்வன் எரி உமிழ் வச்சிரம் கொண்டு, இகந்து வந்து எறிந்தென அறுவேறு துணியும் அறுவர் ஆகி ஒருவனை) உன்னைப் பெற்ற அன்றே அரிதாகப் பொருந்திய பெருமையையுடைய தேவர்தலைவனான இந்திரன், நெருப்பைக் கக்கும் வஜ்ராயுதத்தால், தான் கொடுத்த வரத்தை மீறிவந்து தாக்கினான். அதனால் வெவ்வேறான ஆறுபிரிவுகளாயிருந்த நீ ஆறு குழந்தைகளாகிப் பின் (ஆறுமுகத்தையுடைய) ஒரு குழந்தையாக ஆனாய்! (வாழி ஓங்கு விறல் சேஎய்) ஓங்குகின்ற பூலத்தையுடைய 'சேய்' எனப்படும் முருகனே! நீ வாழ்க!

ஆரா உடம்பின் நீ அமர்ந்து விளையாடிய
போரால் வறுங்கைக்குப் புரந்தரன் உடைய,
அல்லல் இல் அனலன் தன் மெய்யின் பிரித்து,
செல்வ வாரணம் கொடுத்தோன்: வானத்து
வளம் கெழு செல்வன் தன் மெய்யின் பிரித்து,
திகழ் பொறிப் பீலி அணி மயில் கொடுத்தோன்:
திருந்து கோல் ஞமன் தன் மெய்யின் பிரிவித்து,
இருங்கண் வெள்யாட்டு எழில்மறி கொடுத்தோன்;
ஆங்கு அவரும் பிறரும் அமர்ந்து படை அளித்த
மறியும், மஞ்ஞையும், வாரணச் சேவலும்,
பொறி வரிச் சாபமும், மரனும், வாளும்,
செறி இலை ஈட்டியும், குடாரியும், கணிச்சியும்,
தெறு கதிர்க் கனலியும், மாலையும், மணியும்,
வேறு வேறு உருவின் இவ் ஆறு இருகைக் கொண்டு,

acharya.org

**மறு இல் துறக்கத்து அமரர் செல்வன்தன்
பொறி வரிக் கொட்டையொடு புகழ் வரம்பு இகந்தோய்.**

(ஆரா உடம்பின் நீ அமர்ந்து விளையாடிய போரால் வறுங்கைக்குப் புரந்தரன் உடைய) குழந்தைப் பருவத்தை உடையவனுதலால், வளர்ச்சியடையாத உடம்பையுடைய நீ, விரும்பி விளையாட்டாகச்செய்த போரிலே, ஆயுதமும் தாங்காத நின் வெறுங்கையால் செய்த போருக்கே இந்திரன் தோற்ருன். இதைக்கண்ட தேவர்கள் பலர் பல படைக் கலங்களை முருகனுக்களித்தனர் என்கிறது மேலே. (அல்லல் இல் அனலன் தன் மெய்யின் பிரித்துச் செல்வவாரணம் கொடுத்தோன்) துன்பமற்ற அக்னி தன் உடலினின்று ஒரு பகுதியைப் பிரித்து சிறந்த சேவற்கோழியாக்கி உனக்குக் கொடியாகக் கொடுத்தான். (வானத்து வளம்கெழு செல்வன் தன் மெய்யின் பிரித்து திகழ்பொறிப் பீலி அணி மயில் கொடுத்தோன்) வானுலகின் வளம்மிக்க செல்வத்துக்கு உரிய அவ்விந்திரனே தன் உடம்பினின்றும் ஒரு பகுதியைப் பிரித்து, கண்போல் விளங்கும் புள்ளிகளைக்கொண்ட பீலியால் அழகுடைய மயிலை வாஹனமாகக் கொடுத்தான். (திருந்துகோல் ஞமன் தன் மெய்யின் பிரிவித்து இருங்கண் வெள்யாட்டு எழில் மறி கொடுத்தோன்) அறவழி பிறழாத தண்டத்தையுடைய யமன் தன் உடம்பினின்றும் ஒரு பகுதியைப் பிரித்து, கரிய கண்களையுடைய வெள்ளாட்டின் அழகிய குட்டியைக் கொடுத்தான். (ஆங்கு அவரும் பிறரும் அமர்ந்து படை அளித்த மறியும் மஞ்ஞையும்...... கைக்கொண்டு) அவ்வாறு அக்னி, இந்திரன் முதலியோரும் மற்ற தேவர்களும் விரும்பிப் படைக்கலமாக அளித்த வெள்ளாட்டுக் குட்டியும், மயிலும், சேவற்கோழியும், முத்திரையோடுகூடிய கட்டமைந்த வில்லும், தோமரமும், வாளும், தழை மாலை அணியப்பெற்ற வேலும், கோடரியும், கணிச்சி எனும் ஆயுதமும், சுடும் கனலைக்கொண்ட மழுவும், பாசமும், ஒலிக்கும் மணியுமாகிற வெவ்வேறு

acharya.org

உருவையுடைய இப்படைக்கலங்களை நின் பன்னிரண்டு கைகளிலும் ஏற்றுக்கொண்டாய். (பொறி வரிக் கொட்டையொடு மறு இல் துறக்கத்து அமரர் செல்வன் தன் புகழ் வரம்பு இகந்தோய்) நீ பிறந்த தாமரை மலரிலுள்ள புள்ளிகளையுடைய அழகிய கொட்டையை விட்டு நீங்காத குழந்தைப் பருவத்திலேயே குற்றமற்ற தேவலோகத்தின் தலைவனான தேவேந்திரனின் புகழின் எல்லையையும் கடந்து நின்றவனே!

71—80 அடிகளின் சுருக்கம்

நின் அருளை நிரம்பப்பெற்றவர்களும், அறவழிநிற்பவர்களும், நற்குணமுடையவர்களும், தவம் செய்தவர்களும் உன்னை அடைகிறார்கள். உயிர்களைக் கொல்லும் தீய நெஞ்சில் சினம் கொண்டவர்களும், அறவழிநில்லாதவர்களும், தவம் செய்யாதவர்களும், மறுபிறப்பேயில்லை என்னும் நாஸ்திகர்களும் உன்னை அடையமாட்டார்கள். கடம்பமாலையை அணிந்தவனே! உன்னை அடைந்த நாங்கள் உன்னிடம் பொருளையும், பொன்னையும், போகத்தையும் விரும்பவில்லை; அருளையும், அன்பையும், அறத்தையுமே வேண்டுகிறோம்.

இவ்வைந்தாவது பரிபாடலில் — பரம்பொருளுக்குரிய பெருமை ஒன்றுகூட முருகனுக்குப் படிக்கப்படவில்லையென்பதும், தேவர்சேனைத்தலைவனுக்குரிய பெருமைகளே படிக்கப்பட்டுள்ளன என்பதும், ஆண்பெண் சேர்க்கையால் உண்டானமை முதலான தாழ்வுகள் சொல்லப்பட்டுள்ளன என்பதும் விளங்குகிறது. சிவனும், சக்தியும், முருகனும் பரம்பொருளல்ல, சில விசேஷ சக்திகளிருந்தபோதிலும் நம்மைப்போன்ற ஜீவர்களே என்பதை இவ்வொரு பாடலே விளக்குகிறது.

acharya.org

எட்டாம் பரிபாடல்

ஆருவது, ஏழாவது பரிபாடல்கள் வையை நதியைப் பற்றியவையாகையாலும், குறிப்பிடத்தக்க கடவுட் குறிப்புகள் இல்லாமையாலும் அவற்றை விடுத்து, எட்டாம் பரிபாடலைக் காண்போம். இதைப் பாடியவர் ஆசிரியன் நல்லந்துவனர். 130 அடிகள் கொண்ட செவ்வேளைப் பற்றிய இப்பாடலில் முதல் இருபத்தொரு அடிகளும், கடைசியில் உள்ள ஏழு அடிகளுமே முருகன் பெருமையைக் கூறுவன. அவற்றை விரிவாகவும், மற்ற அடிகளிலுள்ள சில குறிப்புகளையும் காண்போம்.

மண்மிசை—அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புள்மிசைக் கொடியோனும், புங்கவம் ஊர்வோனும்,
மலர்மிசை முதல்வனும், மற்று அவனிடைத் தோன்றி
உலகு இருள் அகற்றிய பதின்மரும், இருவரும்
மருந்து உரை இருவரும், திருந்து நூல் எண்மரும்,
ஆதிரை முதல்வனின் கிளந்த
நாதர் பன்னொருவரும், நன் திசை காப்போரும்,
யாவரும், பிறரும், அமரரும், அவுணரும்,
மேஅரு முதுமொழி விழுத் தவ முதல்வரும்—
பற்றுகின்று, நின் காரணமாக;
பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்.

முதல் பதினொரு அடிகளாலே தேவர்கள் அனைவரும் முருகனைக் காண்பதற்காகப் பரங்குன்றுக்கு வருகையாலே பரங்குன்றம் இமயக்குன்றத்தை ஒத்திருக்கிறது என்கிறார். (மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப் புள் மிசைக் கொடியோனும்) மலர்ந்த துழாய்மாலையையும், அளவற்ற செல்வத்தையும், கருடக்கொடியையும் உடைய திருமாலும். வேதமுதல்வனும், முழுமுதல்வனும் ஆகையாலே திருமாலை முதலிற் கூறினர். 'மலர்தரு செல்வத்து' என்கையாலே உந்தித்தாமரையில் தோன்றிய எல்லாவுலகமும் இவனுக்

acharya.org

குச் செல்வமாகும் என்று உணர்த்தப்படுகிறது, (புங்கவம் ஊர்வோனும்) "ஏருளும் இறையோனும்" [திருவாய் 4-8-1] என்கிறபடியே காளைமாட்டை வாஹனமாகவுடைய சிவனும். திருமாலுக்கு அடுத்தபடியாகப் பிரமனைச் சொல்லவேண்டியிருந்தும் முருகனின் தந்தையான சிறப்பை நோக்கி, பிரமனுக்கு முன் சிவனைச் சொன்னார். (மலர்மிசை முதல்வனும்) திருமாலின் உந்தித்தாமரையில் முதலிற் பிறந்த பிரமதேவனும். இதனால் சிவனும் பிறகு பிறந்தவனே என்று காட்டப்படுகிறது. (மற்று அவனிடைத்தோன்றி உலகிருள் அகற்றிய பதின்மரும் இருவரும்) அந்தப் பிரமதேவனிடம் உண்டாகி, உலகத்தின் இருளைப்போக்கும் பன்னிரு ஆதித்தியர்களும். (மருந்துரை இருவரும்) தேவர்களின் மருத்துவரான அச்வினீதேவர்கள் இருவரும். (திருந்துநூல் எண்மரும்) திருந்திய சாஸ்திரஞானமுடைய அஷ்டவஸுக்களும். (ஆதிரை முதல்வனிற்கிளந்த நாதர் பன்னொருவரும்) திருவாதிரையில் பிறந்தவனுகையாலும், அந்த நக்ஷத்திரத்திற்கு அதி₄தே₃வதையாகையாலும் 'ஆதிரை முதல்வன்' எனப்படும் உருத்திரனின் அம்சம் பெற்றவர்களாகையாலே அவன் பெயராலேயே அழைக்கப்படும் பதினொரு உருத்திரர்களும். ஆக, ஆதித்தர் முதலாக உருத்திரர் ஈருகக் கூறியமையால் "முப்பத்து மூவர் அமரர்" [திருப்பாவை 20] எனப்படும் முப்பத்து மூன்று அமரர் தலைவரையும் கூறினாராயிற்று. (நன்திசை காப்போரும்) நன்மைமிக்க எட்டுதிசைகளையும் காக்கும் இந்திரன் முதலான அஷ்டதிக்பாலகர்களும். (யாவரும்) இவர்கள் அனைவரும். (அமரரும் அவுணரும் பிறரும்) இவர்களிற்சேராத மற்ற தேவர்களும் அசுரர்களும். (மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்) அத்₄யயனம் செய்வதற்கரிய அபௌருஷேயமான வேதத்தை அதி₄கரித்த மஹாதபஸ்விகளான முனிவர்களும். (பற்றுகின்று நின் காரணமாகப் பரங்குன்று) முன்சொன்ன அனைவரும் உன்னைக் காண்பதற்காக வந்து தங்குமிடமாயிருக்கிறது பரங்குன்றம்.

acharya.org

முருகனின் தந்தையாகிய சிவனையும், பாட்டனாகிய பிரமனையும், முப்பாட்டனும் முழுமுதல்வனுமாகிய திருமாலையும் முதலிற் கூறுகையாலே, 'நின்னைத் தொழுவதற்காக' என்று கூறுமல் 'நின் காரணமாக' என்று கூறினார். பரிமேலழகரும் 'நின்னைக் காண்டல் காரணமாக' என்று உரையிட்டார். இப்படியிருக்க, நவீனர் சிலர் 'நின்னை வழிபடுவதற்காக' என்று உரையிடுவது மூலத்துக்கும் பரிமேலழகர் உரைக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் பொருந்தாது. தந்தை முதலானோர் பிள்ளையைப் பிரியத்தோடு காணவருவது முறையேயொழிய, வழிபடவருவது முறையல்லவே. (பரங்குன்று இமயக்குன்றம் நிகர்க்கும்) இப்படி எல்லா தேவர்களும், முனிவர்களும் உறையுமிடமாகையாலே, அப்பெருமைபெற்ற இமயக்குன்றத்தை ஒத்துள்ளது பரங்குன்றம்.

இமயக் குன்றினில் சிறந்து
நின் ஈன்ற நிறை இதழ்த் தாமரை
மின் ஈன்ற விளங்கு இணர் ஊழா
ஒருநிலைப் பொய்கையோடு ஒக்கும்—நின் குன்றின்
அருவி தாழ் மாலைச் சுனை.
முதல்வ! நின் யானை முழக்கம் கேட்ட
கதியிற்றே காரின் குரல்.
குரல் கேட்ட கோழி குன்று அதிரக் கூவ,
மத நனி வாரணம் மாறுமாறு அதிர்ப்ப,
எதிர்குதிர் ஆகின்று அதிர்ப்பு, மலை முழை.

பரங்குன்றத்திலுள்ள சுனைகள், முருகனுடைய யானை, கோழி, குகைகளின் எதிரொலி ஆகியவற்றைப் புகழ்கின்றன இவ்வடிகள்.

(இமயக்குன்றினில்...மாலைச்சுனை) உன்னுடைய பரங்குன்றிலுள்ள அருவிநீர்கள் தங்கும் சுனைவரிசைகள் உன்னைப்பெற்றெடுத்த சரவணப்பொய்கையை ஒக்கும்.

acharya.org

அச்சரவணப்பொய்கை, வரிசையான் இதழ்களைக்கொண்ட தாய், மின்னலையொத்த உதிராத இதழ்களையுடைய தாய் உன்னைப்பெற்றதான தாமரையைத் தன்னகத்தில் கொண்டது; என்றும் வற்றுமலிருப்பது. (முதல்வ) தேவர் சேனைகளுக்கு முதல்வனுகையாலே 'முதல்வனே!' என விளிக்கிறுர். முதலிற் பிறந்தமையால் பிரமனை 'மலர்மிசை முதல்வன்' என்றும், ஆதிரையிற் பிறந்தவனுகையாலே உருத்திரனை ஆதிரை முதல்வனென்றும் குறிப்பது போலே, தேவர்சேனை முதல்வனுகையாலே 'முதல்வ' என்று இவனையும் விளிக்கிறுர். இவர்களில் எவரையும் திருமாலைப்போல் வேதமுதல்வனென்றோ, முழுமுதல்வ னென்றோ அழைப்பதில்லை என்பது குறிக்கொள்ளத் தக்கது. "முதலாவார் மூவர் அம்மூவருள்ளும் முதலா வான் மூரிநீர்வண்ணன்" என்று பொய்கையாழ்வாரும், சிற்சில பெருமைகளைப் பற்ற வரும் முதன்மை மற்றுள் ளார்க்கு உண்டென்பதையும், முழுமுதல்வன் திருமாலே என்பதையும் காட்டினுரன்றோ. இப்பாடலிலேயே முருகன் சிவபார்வதிகளுக்குப் பிறந்தவன் என்று கடைசியில் காட்டப்பட்டிருக்கிறபடியால், முருகனை முழுமுதல்வ னென்பது ஒட்டாது. இங்ஙனமிருக்க, இவ்விடத்தில் 'உலகங்கட்கெல்லாம் முதல்வனுக உள்ள பெருமானே' என்று நவீனர் சிலர் உரையெழுதுவது அபிமானத்தால் ஆயதேயாம். (நின் யானை...குரல்) உன்னுடைய யானை யின் முழக்கத்தைக் கேட்டால், அது மேகத்தின் முழக்கம் போன்ற தன்மையுடையது. (குரல் கேட்ட நின் கோழி குன்று அதிரக்கூவ) நின் யானை முழங்குவதைக் கேட்ட நின் கோழி உன் குன்று அதிரும்படியாகக் கூவ. (மத நனி வாரணம் மாறு மாறு அதிர்ப்ப) அக்குரலைக் கேட்குந் தோறும் மிகவும் மதம் பொருந்திய உன்னுடைய யானை யும் மாறி மாறிப் பிளிறும். (எதிர்...முழை) இவ்வொலி கள் மலைக்குகைகளில் எதிரொலியை உண்டாக்கும். இவ்

acharya.org

வெதிரொலி அந்த யானையின் முழக்கத்திற்கும், கோழியின் கூக்குரலுக்கும் பதிலொலியாக அமையும்.

22—123 அடிகளின் சுருக்கம்

இவ்வடிகளில் பரங்குன்றத்திற்கும் கூடலென்னும் மதுரைக்கும் இடையிலுள்ள வழியும் (22-28), குன்றத்தின் முழக்கமும் (29-35), தலைமகன் தலைமகட்குக் குன்றத்தின் சிறப்புக் கூறுதலும் (36-46), தலைமகள் புலந்து உரைத்தலும் (47-50), தலைமகன் சூளும் தலைவி விலக்கலும் (51-55), தோழி தலைமகனைச் சூள் விலக்கிக் கூறுதலும் (56-71), தலைமகனது உரையும் (72-82), தோழி தலைமகளின் கற்புடைமை கூறுதலும் (83-89), தலைமகளிரது செய்தியும் (90-123) கூறப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்க கடவுட்குறிப்புகள் இல்லை. இனி, கடைசியிலுள்ள ஏழு அடிகளைக் காண்போம்.

என ஆங்கு,
உடம் புணர் காதலரும் அல்லாரும் கூடி,
கடம்பு அமர் செல்வன் கடி நகர் பேண—
மறு மிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த—
நெறி நீர் அருவி அசும்பு உறு செல்வம்,
மண் பரிய வானம் வறப்பினும், மன்னுகமா,
தண் பரங்குன்றம்! நினக்கு.

(என ஆங்கு) என்று இவ்வாறுக. (உடம்புணர் காதலரும் அல்லாரும் கூடி) காதலால் ஒன்றுகலந்த காதலர்களும், மற்றையோரும் கூடி. (மறுமிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த கடம்பமர் செல்வன் கடிநகர் பேண) நஞ்சின் கறை பொருந்திய கழுத்தையுடைய சிவபிரானுக்கு, குற்றமற்ற பார்வதி பெற்ற குழந்தையும், கடம்ப மலரை விரும்பி அணிபவனுமான முருகனுடைய காவலமைந்த கோயிலை விரும்பி வழிபட்டனர். இப்படி ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்தவனைக் குறிப்பிடுகை

acharya.org

யாலே, 'முதல்வ' என்று பதினேழாமடியிலும், 'ஏழுலகும் ஆளி' என்று அறுபத்துநாலாமடியிலும் முருகனைக் குறிப்பிட்டிருப்பதுகொண்டு இவனை முழுமுதல்வனுக்க முடியாது. திருமாலுக்குப் போலே அனைத்துலகையும் படைத்தழித்துக் காக்கும் முழுமுதல்வனுயிருக்கை, எல்லாவற்றையும் வியாபித்திருக்கையாலே எல்லாமாயிருக்கை, வேதமுதல்வனுயிருக்கை, வீறுபெறதுறக்கமாகிற மோக்ஷத்தை அருள வல்லவனுயிருக்கை முதலான பரம்பொருளுக்கேயுரிய தன்மைகளில் ஒன்று கூட இப்பாடலிலோ, வேறு எப்பாடலிலோ, முருகனுக்கோ, அல்லது சிவனுக்கோ பண்டைத் தமிழர்களால் ஓரிடத்தில் கூடப் பாடப்பட வில்லை என்பதை நடுநிலைநிற்கும் நல்லோர்கள் குறிக்கொள்ளவேண்டும். (நெறி நீர்...நினக்கு) முற்கூறியவாறு முருகனை வழிபட்டபின்னர், அவன் வாழும் குன்றினை நோக்கி, 'குளிர்ந்த பரங்குன்றமே! மண்ணுலகம் வருந்து மாறு வானம் மழை பொழியாது வறந்தாலும், ஒழுங்காக விழும் நீரையுடைய அருவியூற்ருகிய பெருஞ்செல்வம் உனக்கு நிலைபெறுவதாக' என்று வாழ்த்தினர். இப்பாடலிலிருந்து காதலர்களும், மோக்ஷம் தவிர்ந்த மற்ற பயன்களை விரும்புகிறவர்களும், காதல் முதலான தங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்காகத் தொழுதுவந்த தெய்வமே முருகன் என்று விளங்குகிறது. இவ்வுண்மையை முருகனைப் பற்றிய மற்ற பாடல்களிலும் காணலாம்.

ஒன்பதாம் பரிபாடல்

இப்பாடலும் முருகனைப்பற்றியது. நாம் கூறிவரும் விஷயங்கள் இதிலும் வலியுறுத்தப்படுவதைக் காண்போம்.

இரு நிலம் துளங்காமை வடவயின் நிவந்து ஓங்கி,
அரு நிலை உயர் தெய்வத்து அணங்குசால் தலை காக்கும்
உருமுச் சூழ் சேண் சிமை—உயர்ந்தவர் உடம்பட—
எரி மலர்த் தாமரை இறை வீழ்த்த பெரு வாரி

acharya.org

விரி சடைப் பொறை ஊழ்த்து, விழு நிகர் மலர் ஏய்ப்ப,
தணிவுறத் தாங்கிய தனி நிலைச் சலதாரி
மணி மிடற்று அண்ணற்கு, மதி ஆரல் பிறந்தோய்! நீ
மை இரு நூற்று இமை உண்கண் மான்மறி தோள்
மணந்த ஞான்று,
ஐ இரு நூற்று மெய்ந் நயனத்தவன் மகள் மலர் உண்கண்
மணி மழை தலைஇயென, மா வேனில் கார் ஏற்று,
தணி மழை தலையின்று, தண் பரங்குன்று.

இவ்வடிகளில்—முருகன் சிவனுக்குப் பிறந்தவன் என்று வர்ணிக்கும்போது, பிரமன் திருமால் திருவடிகளில் விழ விட்ட ஜலமே கங்கையாகிச் சிவனால் தலையிலே தாங்கப் பட்டது என்னும் பிரமாணப்ரஸித்த விருத்தாந்தத்தைக் காட்டுகிறார்.

(இருநிலம் துளங்காமை) பெரிய நிலப்பரப்பானது அசையாதபடி; (வடவயின் நிவந்து ஓங்கி) வடதிசையில் மிக ஓங்கி; (அரு நிலை அணங்கு சால் உயர்தெய்வத்து தலை காக்கும்) ஏறமுடியாத நிலையை உடையதாய், வருத்தும் தன்மை அமைந்த உயர்ந்த தேவர்களுக்குத் தலைவனான இந்திரனால் காக்கப்படுவதாய். (உருமுச் சூழ் சேண் சிமை பிறந்தோய்) இடிகளுடன் கூடிய மேகங் களால் சூழப்பட்ட உயர்ந்த சிகரங்களோடு கூடிய இமய மலையிலே பிறந்தவனே! தாய்தந்தையர் யாரெனில் (எரி மலர்த் தாமரை இறை வீழ்த்த பெருவாரி...பிறந்தோய் நீ) தீயைப்போல் சிவந்து விளங்கும் தாமரை மலரில் பிறந்த பிரமதேவன் கீழே விழவிட்ட நீர்ப்பெருக்கை, மலர்ந்துவிழும் மலரைத் தாங்குவதுபோலே தன்னுடைய விரிந்த சடா பாரத்தில் அவ்வாகாசகங்கையின் வேகம் தணியும்படி தாங் கியவனாய், நீலமணிபோன்று கறுத்த கழுத்தை உடைய தேவனான சிவனுக்குப் பிறந்தவன் நீ. (உயர்ந்தவர் உடம் பட மதியாரல் பிறந்தோய் நீ) உயர்ந்தவரான ஸப்தரிஷி களில் அறுவர் தங்களுடைய பத்னிகளிடம் சிவனுடைய

acharya.org

வீர்யம் வளருவதற்கு உடன்பட்டிருக்க, மதிக்கத்தக்க அவ்வாறு கார்த்திகைப் பெண்களிடம் பிறந்தவன் நீ. (எரிமலர்த் தாமரை இறை வீழ்த்த பெருவாரி ... சலதாரி).

“த்$_3$ரவீபூ$_4$தஸ் தத$_3$ா த$_4$ர்மோ ஹரிப$_4$க்த்யா மஹாமுநே।
க்$_3$ருஹீத்வா த$_4$ர்மபாநீயம் பத$_3$ம் நாத$_2$ஸ்ய துஷ்டயே ॥
க்ஷாளிதம் பரயா ப$_4$க்த்யா பாத்$_3$யார்க்$_4$யாதி$_3$பி$_4$ரர்ச்சிதம்।
தத$_3$ம்பு$_3$ பதிதம் த்$_3$ருஷ்ட்வா த$_3$த$_4$ார ஶிரஸா ஹர: ॥
பாவநார்த்த$_2$ம் ஜடாமத்$_4$யே யோக்$_3$யோऽஸ்மீத்யவத$_4$ாரணாத்।
வர்ஷாயுதாந்யத$_2$ ப$_3$ஹூநி ந முமோச தத$_2$ா ஹர: ॥”

[ஈஶ்வரஸம்ஹிதை: பிரமன் வாக்யம்]

[ரிஷிச்ரேஷ்டரே! (பகவான் திருவுலகளந்தருளின) அச்சமயம், ஹரியினிடம் பக்தியினால் தர்மம் ஜலமாயிற்று. தர்மமாகிய அந்த ஜலத்தை எடுத்து, ஜகந்நாதனுடைய ஸந்தோஷத்திற்காக (அவனுடைய) திருவடியானது (என்றால்) மேலான பக்தியுடன் விளக்கப்பட்டது; பாத்யம், அர்க்யம் முதலியவைகளாலும் பூஜிக்கப்பட்டது. விழுந்த அந்த ஜலத்தைப் பார்த்து, ‘நான் (பரிசுத்தப்படுத்தத்) தகுந்தவனாயிருக்கிறேன்’ என்று நிச்சயித்து, சிவன் தன்னைப் பரிசுத்தப்படுத்திக்கொள்வதற்காக ஜடையின் நடுவில் தலையால் தாங்கினான். பிறகு, பல பதினாயிரக் கணக்கான வருஷங்கள், உருத்திரன் அப்படியே (அதை) விடவில்லை.]

“யச்சௌ$_2$சனிஸ்ஸ்ருதஸரித் ப்ரவரோத$_3$கேந
தீர்த்தே$_2$ந மூர்த்$_4$நி வித்$_4$ருதேந ஶிவ: ஶிவோऽபூ$_4$த்”

[பாகவதம்]

[எந்தப் பரமபுருஷனுடைய திருவடி விளக்கிய நீராகிய கங்கையைத் தலையில் தரித்து சிவன் பரிசுத்தனானானே] என்று பிரமாணங்களில் சொல்லப்பட்டதை உணர்த்துகிறார். இத்தால் திருவடி விளக்கியவனும், திருவடி விளக்கிய தீர்த்தத்தைத் தலையிலே தரித்தவனும் பரம்பொருளல்லர், திருவடி விளக்கப்பட்டவனே பரம்பொருள் என்பதே

acharya.org

பழந்தமிழர் கருத்து என்று விளங்குகிறது. இப்படித் திருவடி விளக்கிய நீரைத்தலையிலே தரித்துப் பரிசுத்தி பெற்றவனின் வீர்யத்திலிருந்து தோன்றிய முருகனைப் பரம்பொருளாகப் பழந்தமிழர் கருதுவதற்குச் சிறிதேனும் இடமுள்ளதா என்பதை நடுநிலை வகிக்கும் நல்லோர்களே முடிவுகட்டவேண்டும்.

(மை இருநூற்று...தண்பரங்குன்று) முருகனாகிய நீ, மை பூசியவளாய் மானின் மகளான வள்ளியை மணந்தாய்; அதனால், ஆயிரங்கண்ணனான இந்திரன் மகளும் உன்னைக் காதலித்தவளுமான தேவசேனையின் மலர்போன்ற மையுண்ட கண்கள், மழைபோலே நீரைப்பொழிந்தன. அக்கண்கள் நீரைப்பொழிந்ததுபோலவே, வெயில்மிகுந்த வேனிற்பருவம், மழைகாலத்தின் தண்மையைக்கொண்டு குளிர்ந்த பரங்குன்றில் மிக்க மழையைப் பொழிந்தது.

பின் உள்ள அடிகளின் சுருக்கம்

அடுத்த பதினைந்து அடிகள் வடமொழிப் புலவர்கட்குத் தமிழ்மொழியிலுள்ள களவொழுக்கம், கற்பொழுக்கம் ஆகியவற்றின் சிறப்பை விளக்குகின்றன. அடுத்த பல அடிகள்—முருகன் களவுத்துறையில் வள்ளியையும், கற்புத் துறையில் தேவசேனையையும் மனைவியராகக் கொண்டிருந்தான் என்றும், முருகன் வள்ளியை அணைந்தபொழுது தேவசேனை சீறினாள் என்றும், தேவசேனையைச் சேர்ந்த பொழுது வள்ளி அவனைக் கட்டி அடித்தாள் என்றும், அப்போது அவ்விருவரையும் சேர்ந்த மயில், கிளி, வண்டுகள், தோழிமார் ஆகியவர்கள் ஒருவர்க்கொருவர் போர்புரிந்துகொண்டார்கள் என்றும், வள்ளியின் தோழிகள் தேவசேனையின் தோழிகளை வென்றனர் என்றும், அதனால் தேவசேனையின் தோழிகள் அஞ்சி முருகனை அடைந்து, வண்டு, மயில், குயில் முதலிய உருவத்தோடு மறைந்தனர் என்றும், பரங்குன்றில் உள்ளவர்களும் எப்போதும் வெற்றியுடனே விளங்குகின்றனரென்றும் கூறுகின்றன.

acharya.org

கடைசியிலுள்ள ஏழு அடிகள், "விரும்பத்தகும் வேலை உடையவனே! பகைவரை வென்று உயர்த்திய சேவற் கொடியால் வெற்றிப்புகழ் பெற்றவனே! கற்பொழுக்கம் பொருந்திய நின் தேவிமார் அன்போடும் கூடி நின்னோடு ஊடுகின்ற உரிமையை விரும்பி ஏற்கும் பண்பினையுடைய குமரனே! நின்னை யாம் தலைவணங்கி வாழ்த்தி வேண்டிக் கொள்கின்றோம். நின்னிடம் மிகுந்த அன்புள்ள நாம் நின் அடிக்கீழ் வாழும் வாழ்வு எமக்கு நாள் தோறும் சிறந்து பயனோடு பொலிவதாக" என்று உரைக்கின்றன. இத்துடன் இவ்வொன்பதாம் பரிபாடல் முடிகின்றது.

இப்பாடலிலிருந்து முருகன் ஒரு காதல்தெய்வம் என்பதும், வீரம்மிக்க தேவஸேநாபதி என்பதும் விளங்குகின்றன. சிவனுடைய வீர்யத்தைக் கார்த்திகைப் பெண்கள் கருவாகத் தரித்ததனால் உண்டானவனாகையாலே இவனும் சிவனும் பரம்பொருளாக முடியாதென்று விளங்குகிறது. பரம்பொருளுக்குரிய ஒரு பெருமையாவது சிவனுக்காவது முருகனுக்காவது இப்பாடலில் சொல்லப்படவில்லை. ஜீவர்களின் தன்மைகளே கூறப்பட்டுள்ளன. பரிபாடல்களில் திருமாலுக்குக் கூறப்பட்டிருக்கும் பெருமைகளையும், முருகனுக்கும், சிவனுக்கும் கூறப்பட்டிருக்கும் பெருமைகளையும் நடுநிலையாளர்கள் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இனி, 10, 11, 12 இலக்கமுள்ள பாடல்கள் வையை நதியைப் பற்றியவையாகையாலும், அவற்றில் குறிப்பிடத்தக்க கடவுட்குறிப்பு ஒன்றுமில்லாமையாலும் அவற்றைவிட்டு, திருமாலைப்பற்றிய பதின்மூன்றும் பரிபாடலைக் காண்போம்.

பதின்மூன்றும் பரிபாடல்

மணி வரை ஊர்ந்த மங்குல் ஞாயிற்று
அணி வனப்பு அமைந்த பூந் துகில், புனை முடி
இறு வரை இழிதரும் பொன் மணி அருவியின்
நிறனொடு மாறும் தார், புள்ளுப் பொறி புனை கொடி,

acharya.org

விண் அளி கொண்ட வியன் மதி அணி கொளத்
தண் அளி கொண்ட அணங்குடை நேமி மால் !
பருவம் வாய்த்தலின் இரு விசும்பு அணிந்த
இறு வேறு மண்டிலத்து இலக்கம் போலே.
நேமியும் வளையும் ஏந்திய கையால்—
கருவி மின் அவிர் இலங்கும் பொலம் பூண்,
அருவி உருவின் ஆரமொடு, அணிந்த நின்
திருவரை அகலம்—தொழுவோர்க்கு
உரிது அமர் துறக்கமும் உரிமை நன்கு உடைத்து.

இப்பதின்மூன்றும் பரிபாடல் திருமால் வாழ்த்தாக அமைந்துள்ளது. பாடியவர் நல்லெழுநியார். முதல் பதின் மூன்று அடிகளில் திருமாலின் திருமேனியை வருணித்து, அவனைப் பற்றுவார்க்கு மோக்ஷலோகம் கைப்பட்டிருக்கும் என்கிறார்.

(மணிவரை ஊர்ந்த மங்குல் ஞாயிற்று அணிவனப்பு அமைந்த பூந்துகில்) நீலமலையில் பரந்த இருளைக்கெடுக்கும் சூரியனைப்போன்ற பேரழகு அமையப்பெற்ற மெல்லிய பீதாம்பரத்தை உடையையாய்; மங்குல் ஞாயிறு— இருளைக்கெடுக்கும் சூரியன். "மங்குல் ஊர்ந்த மணிவரை ஞாயிற்று" என்று கூட்டி, "மேகம் தோய்ந்த நீலமலையில் ஆதித்தியனைப்போலே" என்றும் பொருள் கொள்ளலாம். (புனைமுடி) அச்சூரியனைப்போன்றே பேரழகுடைய பொன்னாலும் இரத்தினங்களாலும் இழைக்கப்பெற்ற முடியை உடையையாய். (இறுவரை இழிதரும் பொன் மணி அருவியின் நிறனொடு மாறும் தார்) அந்தப்பெரிய மலையினின்றும் கீழிறங்குவதும், பொன்னையும், மணியையும் அடித்துக்கொண்டு வருவதுமான மலையருவியின் நிறத்தை ஒத்த வனமாலையை உடையையாய். (புள்ளுப்பொறி புனை கொடி) (வேதஸ்வரூபனான) கருடனால் பொறிக்கப் பெற்ற அழகிய கொடியை உடையையாய்; இவ்வளவால், பரம்பொருளுக்கே உரியனவாய், "**மாஹாரஜநம் வாஸ:**"

acharya.org

[பொன்ஞலான உடையையுடையவன் பரமாத்மா] **"ஸர்வ ஏவ ஸுவர்ண:"** [திருமேனி முழுவதும் பொன்மயமாயிருப்பவன்] **"நீலதோயத₃ மத்₄யஸ்த₂ா வித்₃யுல்லேகே₂வ ப₄ாஸ்வரா"** [நீலமேகத்தின் நடுவிலிருக்கும் மின்னற்கொடிபோல் ஒளிவிடும் திருமேனி] **"ஸுபர்ணோ஽ஸி க₃ருத்மாந்......"** [அழகிய இறக்கைகளையுடைய கருடன் வேதஸ்வரூபி] என்று வேதங்களாலும் புகழப்படும் வெளியிலக்கணங்களை (ப₃ாஹ்ய லக்ஷணங்களை) உடையவன் திருமால் என்று காட்டப்பட்டது. இனி பரம்பொருளுக்கேயுரிய திவ்யாத்ம குணங்களையுடையவனும் திருமாலே என்று காட்டுகிருர்,— (விண்ணளி கொண்ட வியன்மதி அணிகொளத் தண்ணளி கொண்ட) விண்ணிலே நின்று உலகைத் தன் குளிர்ந்த கிரணங்களாலே ரக்ஷித்து வரும் சந்திரனைப்போலே, உலகத்தைதக் காப்பதற்காகக் குளிர்ந்த கருணையை உடையையாய். இதனுல் பரம்பொருளுக்கேயுரிய கருணைப் பெருக்கு உரைக்கப்பட்டது. வெறுங்கருணையையுடையவனுய், சௌர்ய வீர்ய பராக்ரமாதிகுணங்களற்ற பயங்கொள்ளியோவெனில்: (அணங்குடை நேமி மால்) அசுரர்களை வருத்துவதையே இயற்கையாக உடைய சக்கரபாணியே! இதனுல் பரம்பொருளுக்கேயுரிய சௌர்யவீர்ய பராக்ரமாதிகுணங்களையும் பரிபூர்ணமாக உடையவன் என்று காட்டப்படுகிறது. **அணங்கு—**தீயவரை வருத்துதல்; இது மாலுக்கும், அவனுடைய படையாகிய நேமிக்கும் விசேஷணமாகக்கூடியது."தண்ணளிகொண்ட"என்றதால், கீதையில் **"பரித்ராணய ஸாதூ₄நாம்"** எனப்படும் சிஷ்டபரிபாலனமும், "அணங்குடைமால்" என்கையாலே, **"விநாஶாய ச து₃ஷ்க்ருதாம்"** என்று கீதையில் கோஷிக்கப்பட்ட துஷ்டநிக்ரஹமுமாகிய பரமாத்மகுணங்களைப் பரிபூர்ணமாக உடையவன் இவனேயென்று காட்டப்படுகிறது. (பருவம் வாய்த்தலின் இருவிசும்பு அணிந்த இருவேறு மண்டிலத்து இலக்கம்போலே நேமியும் வளையும் ஏந்திய கையால்) கார்

acharya.org

காலத்திலே நீருண்டு கறுத்துப் பெருத்து விளங்கும் மேக மானது, தன் இருபுறத்திலும் வெம்மையும் தண்மையுமாகிற வேறுபட்ட குணங்களையுடைய சூரியனையும் சந்திரனையும் கொண்டு விளங்குவதுபோல், சக்கரத்தையும் சங்கையும் உன் கைகள் தாங்கிநிற்கின்றன. கார்மேனியை மேகத் திற்கும், **"திகிரிசுடரென்றும், வெண்சங்கம் வானில் பகரும் மதியென்றும்"** [மூன்-திருவ 67] என்கிறபடியே சங்கசக்க ரங்களை முறையே சந்திரசூரியர்களுக்கும் ஒப்பிடுகிறார். (கருவி மின்னவிர் இலங்கும் பொலம்பூண்) மின்னற்கூட்டம் போல் ஒளிவிட்டு விளங்கும் பொன்மாலைகளையும்; (அருவி உருவின் ஆரமொடு அணிந்த) நீரருவிபோல் விளங்கும் முத்துமாலைகளையும் அணிந்த. பொன்முடி, பொன்னுடை, வனமாலை, பொன்மாலைகள், முத்துமாலைகள் முதலான வற்றை அணிந்திருக்கையாலே இவன் ஸர்வலோகசக்ர வர்த்தியாகிற ஸர்வேச்வரன் என்று உணர்த்தப்படுகிறது. (நின் திருவரை அகலம் தொழுவோர்க்கு உரிதமர் துறக்க மும் உரிமை நன்கு உடைத்து) இப்படி பொன்முத்து மாலைகளை அணிந்த உன் அழகிய மலைபோன்ற திருமார் பைத் தொழுவார்க்கு, நீ விரும்பி அமரும் மோக்ஷலோக மாகிற வைகுண்டம் மிகவும் உரிமையுடையதாய் விளங்கு கிறது. 'திருவரை அகலம்' என்றதால் ஸ்ரீதேவியின் வாஸஸ்தானம் இவனுடைய திருமார்பே என்று குறிக்கப் படுகிறது. **"ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ"** என்று வேதங்களில் லக்ஷ்மீஸம்பந்தமும் பரம்பொருளின் அடை யாளமாகக் காட்டப்பட்டதன்றோ. (தொழுவோர்க்கு) 'எம் கையால் ஆவதில்லை; நீயே எங்களுக்கு கதி' என்று கைகூப்பி சரணமடைவோருக்கு. (திருவரை அகலம் தொழுவோர்க்கு) பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றிச் சரணடைபவர்களுக்கு. (உரிதமர் துறக்கமும்) நீ விரும்பி உறையும் மோக்ஷலோகமும்; "வைகுந்தம் புகுவது மண்ண வர் விதியே" [திருவாய் 10-9-9] என்கிறபடியே பாக்கிய சாலிகள் உரிமையுடன் அமரத்தக்க மோக்ஷலோகமும்.

acharya.org

18390

'துறக்கம்' என்று—எல்லாப் பாபங்களையும், அதுகாரணமாக வரும் இன்பதுன்பங்களையும், ஸம்ஸாரஸம்பந்தத்தையும் துறந்து நிற்குமிடமாகையாலே மோக்ஷவுலகம் குறிப்பிடப் படுகிறது. இவ்வுலகத் துன்பங்களைத் துறக்குமிட மாகை யால், சுவர்க்கலோகமும் 'துறக்கம்' எனப்படுவதுண்டு. ஆயினும், அமுதமுண்டமையாலேயே அவ்வின்பம் என் பதை **'சாறு கொள் துறக்கம்'** [பரிபாடல் 19-6] என்னு மிடத்தில் காட்டினர் பழந்தமிழர். திருமாலின் உலகமோ வெனில் எல்லாத் துன்பங்களும் அடியோடு கழியப்பெற்ற மோக்ஷலோகமாகையாலே, அதை இங்கு **"உரிதமர் துறக் கம்"** என்றும், பதினைந்தாம் பரிபாடலில் **"வீறுபெறு துறக் கம்"** என்றும் அழைக்கின்றனர். (உரிதமர் துறக்கமும் உரிமை நன்குடைத்து) மோக்ஷலோகம் மிகவும் உரிமையை உடையது. திருவரையகலம் தொழுதவுடன் அதை உடையவனை திருமாலைக்காட்டிலும் இவர்களுக்கே அதில் உரிமை அதிகம் ஏற்படுகிறது. (தொழுவோர்க்கு உரிமை நன்குடைத்து) தொழுதவுடனேயே மோக்ஷலோகம் இவர் கள் கைப்பட்டு நிற்கிறது. நம்பிள்ளையின் கைச்சீட்டைப் பெற்று மோக்ஷமடைந்த அம்மையாரின் விருத்தாந்தத்தை நினைப்பது. இத்தால்—பரம்பொருளுக்கே உரிய மோக்ஷ ப்ரதத்வமாகிய அருங்குணம் பேசப்பட்டது; மற்ற தெய் வங்களைப் பரம்பொருள் எனக்கூறுவாரும், பரம்பொருளுக்கு குணமில்லை, உருவமில்லை, உலகமில்லை எனக்கூறுவாரும், பிடரிபிடித்துத் தள்ளப்பட்டனர். அத்வைதிகளுக்கோ, சைவர், சாக்தர் முதலானார்க்கோ பரிபாடல்களில் சிறிதே னும் இடமில்லையென்பதை நடுநிலை யாளர் காணவேணும்.

சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு,
அவையும் நீயே, அடு போர் அண்ணல்!
அவை அவை கொள்ளும் கருவியும் நீயே;
முந்து யாம் கூறிய ஐந்தனுள்ளும்,
ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே;

acharya.org

இரண்டின் உணரும் வளியும் நீயே;
மூன்றின் உணரும் தீயும் நீயே;
நான்கின் உணரும் நீரும் நீயே;
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே;
அதனால், நின் மருங்கின்று—மூ-ஏழ் உலகமும்
மூலமும், அறனும், முதன்மையின் இகந்த
காலமும், விசும்பும், காற்றொடு கனலும்.

எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி நிற்கையால் எல்லாமாகவேயிருக்கும் தன்மையாகிற பரம் பொருட்கேயுரிய பெருமையைப் பேசுகிறார் இவ்வடிகளில்.

(அடு போர் அண்ணல்) தீயவர்களோடு போர்புரிந்து அவர்களைக் கொன்றழிக்கும் ஸ்வாமியே! (சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு அவையும் நீயே) நாவினாலே சுவைக்கப்படும் சுவையும், காதினால் கேட்கப்படும் ஒலியும், கண்ணால் காணப்படும் உருவமும், மூக்கால் முகரப்படும் கந்தமும், தோலினால் அறியப்படும் ஸ்பர்சமுமாகிய பஞ்சபூதகுணங்களும் நீயே; அவை உன்னதீனமே என்றபடி. (அவை அவை கொள்ளும் கருவியும் நீயே) முற்கூறிய குணங்களை முறையே அறியும் நாக்கு, செவி, கண், மூக்கு, மெய் (தோல்) என்னும் ஐந்து இந்திரியங்களும் உன்னதீனமே. (முந்து யாம் கூறிய ஐந்தனுள்ளும் ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே) முதலில் யாம் கூறிய ஐந்து குணங்களில் சப்தமாகிற ஒரே குணத்தால் உணரப்படும் ஆகாசமெனும் பூதமும் நீயே. (இரண்டின் உணரும் வளியும் நீயே) சப்தஸ்பர்சங்களாகிற இரண்டே குணங்களால் உணரப்படும் வாயுவென்னும் பூதமும் நீயே. (மூன்றின் உணரும் தீயும் நீயே) சப்த ஸ்பர்ஶ ரூபங்களாகிற மூன்றே குணங்களால் உணரப்படும் அக்னி யென்னும் பூதமும் நீயே. (நான்கின் உணரும் நீரும் நீயே) சப்தஸ்பர்சரூபரஸங்களாகிற நாலே குணங்களால் உணரப்படும் ஜலமெனும் பூதமும் நீயே. (ஐந்துடன் முற்றிய

acharya.org

நிலனும் நீயே) சப்தஸ்பர்சரூபரஸகந்தங்களாகிற ஐந்து குணங்களாலும் உணரப்படும் பூமி என்னும் பூதமும் நீயே. ஐந்து பூதங்களும் உன்னதீனமே என்றபடி. (அதனல்) இப்படி எல்லா பூதங்களும் உன் வசப்பட்டிருப்பதால். (நின் மருங்கின்று மூ ஏழ் உலகமும்) மூன்று வகையாகவும். ஏழு ஏழாகவும் பிரிக்கப்படும் எல்லா உலகங்களும் உன்னிடத்திலேயே அடங்கியிருப்பனவாகும். இவை மாத்திரமோ? (மூலமும்) இவையனைத்துக்கும் காரணமான மூல ப்ரக்ருதியும் உன்னில் அடங்கியதே. (அறனும்) எல்லாப் பொருள்களும் நிலைநிற்கக் காரணமான தர்மமும் நின்னில் அடங்கியதே. (முதன்மையின் இகந்த காலமும்) ஆதி யற்றதான காலமும் உன்னில் அடங்கியதே. (விசும்பும் காற்ருெடு கனலும்) இவை மூன்றும் முன் எடுத்த பஞ்ச பூதங்களுக்கும் உபலக்ஷணம். ஐந்து பூதங்களும் நின்னி லடங்கியவையே. எல்லாம் உனக்கு சரீரமாகவும். ப்ரகார மாகவுமிருந்துகொண்டு உன்னிடத்தில் தோன்றி வாழ்ந்து மறைபவையே என்றபடி. பரம்பொருளுக்கேயுரிய இப் பெருமை திருமாலைத் தவிர வேறு எந்த தெய்வத்திற்கும் பழந்தமிழர்களால் கூறப்படுவதில்லை என்பதை நடுநிலை யாளர் காணவேணும். இதற்குக் காரணம் பரமப்ரமாண மான வேதத்தில், திருமால் ஒருவனே முழுமுதல்வனுகக் கூறப்படுகையேயாகும். இதை, இப்பாடலாசிரியரே மேலே "பாப்புப்பகையைக் கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை ஏவலின் முதுமொழி கூறும்" என்று கூறப் போகிருர்.

தன் உரு உறழும் பாற்கடல் நாப்பண்,
மின் அவிர் சுடர் மணி ஆயிரம் விரித்த
கவை நா அருந் தலைக் காண்பின் சேக்கைத்
துளவம் சூடிய அறிதுயிலோனும்—
மறம் மிகு மலி ஒலி மாறு அடு தானையால்,
திறன் இகந்து வருஉம் அவர் உயிர் அகற்றும்

acharya.org

விறல் மிகு வலி ஒலி பொலிபு அகழ் புழுதியின்,
நிறன் உழும் வளை வாய் நாஞ்சிலோனும்—
நானிலம் துளக்கு அற முழு முதல் நாற்றிய
பொலம் புனை இதழ் அணி மணி மடற் பேர் அணி
இலங்கு ஒளி மருப்பின் களிறும்—ஆகி.
மூஉரு ஆகிய தலைபிரி ஒருவனை!
படர் சிறைப் பல் நிறப் பாப்புப் பகையைக்
கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை;
ஏவல் இன் முது மொழி கூறும்,
சேவல் ஓங்கு உயர் கொடிச் செல்வ! நல் புகழவை;

பாற்கடலில் துயிலும் மூர்த்தியாகவும், கலப்பையாயு தத்தையுடைய பலதேவன், உலகை நிலைநிறுத்திய ஆதி வராகம் என்னும் விபவமூர்த்திகளாகவும், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்னும் மூன்று வியூகமூர்த்தி களாகவும் ஆகின்றவனும், வேதத்தால் பரம்பொருளாக ஓதப்படுபவனும் திருமாலே என்கிறார்.

(தன் உரு உறழும் பாற்கடல் நாப்பண்) நீலமேகத் திருவுருவான தன் உருவோடு வேறுபட்டு நிற்கையாலே வர்ணச்சேர்த்தியழகையளிக்கும் வெண்ணிறப் பாற்கட லின் நடுவே. (மின் அவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த) மின்னலைப் போன்று சுடர் விடும் ஆயிரம் ரத்தினங்களைக் கொண்ட. (கவை நா அருந்தலைக் காண்பின் சேக்கை) பிளவுபட்ட நாவையுடைய ஆயிரம் அரிய தலைகளையுடைய காணவினிய படுக்கையான ஆதிசேஷன்மேலே. **கவை—** பிளவையுடைய. **காண்பு இன்—**காண இனிய. **சேக்கை—** படுக்கை. (துளவம் சூடிய அறிதுயிலோனும்) துளவ மாலை சூடி யோகநித்திரை செய்பவனும். (அறிதுயி லோன்) ஜகத் ரக்ஷண சிந்தையுடன் உறங்குவான்போல் யோகு செய்யும் க்ஷீராப்திநாதனைச் சொல்லுகிறது. (மறம் மிகு மலி ஒலி மாறுஅடு தானையால் திறன் இகந்து வரூ உம் அவர் உயிர் அகற்றும்) அதர்ம வீரம் மிகுந்தவர்க

acharya.org

ளாய், பேரொலி செய்கின்றவர்களாய், பகைவரைக் கொல்லும் சேனையை மிகுதியாக உடையவர்களாய், அற நெறியை மீறியவர்களாய் எதிர்த்துவரும் எதிரிகளின் உயிரை உடலிலிருந்து பிரிக்கிறவனுய். (விறல்மிகுவலி ஒலி பொலிபு அகழ் புழுதியின் நிறன் உழும் வளைவாய் நாஞ்சிலோனும்) வெற்றியில் மிகுந்தவனுய், பலத்தாலும், ஒலியாலும் பொலிகின்றவனுய், புழுதிச்சேற்றை உழுவதுபோலே பகைவரின் மார்பை உழுகின்ற வளைந்த வாயையுடைய கலப்பையாகிற ஆயுதத்தை உடையவனுன பலராமனும்; **நிறன்**—(பகைவரின்) மார்பு, **நாஞ்சில்**—கலப்பை. (நானிலம் துளக்கு அற முழுமுதல் நாற்றிய) நெய்தல், குறிஞ்சி, மருதம், முல்லை என்று நாலுவகைப்பட்ட நிலங்களில் உள்ளோர் அனைவரும் நடுக்கம் தீரும்படியாக, அடிப் பகுதி வரை குத்திய. "மருப்பின்" [கொம்பையுடையவன்] என்று மேலே கூட்டுவது. (பொலம்புனை இதழ் அணி மணிமடல் பேர் அணி இலங்குஒளி மருப்பின் களிறும் ஆகி) பொன்னுல் செய்யப்பட்டதும், தகடுகளில் அழகிய ரத்தினங்கள் பதிக்கப்பெற்றதுமான 'கிம்புரி' என்னும் பெரிய ஆபரணத்தாலே ஒளிவிடும் தந்தத்தையுடைய வராகமும் ஆகி. (மூவுருவாகிய தலைபிரி ஒருவனை) இம் மூர்த்திகளுக்கும் முந்தியவராய், தலைமை பெற்றவரான ஸங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் என்னும் மூன்று வியூஹமூர்த்திகளாயும் இருப்பவன் நீயே. பிரம விஷ்ணு ருத்திரர்களான முதன்மை பெற்ற மும்மூர்த்திகளாயிருப்பவன் என்றும் கொள்வர். பிரமருத்திரர்களும் நாராயணனின் சக்த்யாவேசாவதாரமேயாகையாலே குறையில்லை. ஸ்வரூபைக்யம் கொள்ளப்பார்த்தால், கீழே பஞ்ச பூதங்களும், அவற்றின் குணங்களும், மூவேழுலகுமாவதாகக் கூறுகையாலே, அவற்ருேடும் ஸ்வரூபைக்யம் கொள்ளவேண்டிவரும். (படர்சிறைப் பல்நிறப் பாப்புப் பகையைக் கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை) விரிந்த சிறகுகளையுடையவனுய், பல நிறங்களைக் கொண்ட

acharya.org

பாம்புகளுக்குப் பகையானவனான கருடனைக் கொடியாகக் கொண்டு குறைவற்ற செல்வத்தை உடையாய்! இப் பெருமைகள் இவனுக்கு உண்டு என்பதற்கு ப்ரமாணம் என்ன? எனில்: (சேவல் ஓங்கு உயர்கொடிச் செல்வ! ஏவலின் முதுமொழிகூறும் நற்புகழவை) கருடப்பறவை யாகிற மிகவுயர்ந்த கொடியையுடைய ஸ்ரீமானே! ஒருவ ரால் ஏவப்படாததாய் அநாதியாகையாலே அபௌருஷேய மான வேதங்களும் ஓதும் இப்புகழ்களையும், மற்றும் பல நல்ல புகழ்களையும் உடையவன் நீயே. 'ஏவல்' என்பதை 'ஓதல்' என்று கொண்டு, 'ஏவல்இன்' என்றதற்கு 'ஓது தற்கு இனிய' என்று பொருள் கொண்டார் பரிமேலழகர். அப்போதும் 'முதுமொழி' என்கையாலே இவ்வேதத்தின் அபௌருஷேயத்வம் தோற்றும். ஆகையால் இதுவே மிகச்சிறந்த பிரமாணமென்றும் இதில் பரம்பொருளுக்கே உரிய பெருமைகளை உடையவனாக உத்கோஷிக்கப்படுபவன் திருமாலே என்றும் சொல்லிற்றாயிற்று. இதனால் பழந் தமிழர் பரமவைதிகர்களாயும், விஷ்ணுபரத்வஜ்ஞான முடையவர்களாயும் வாழ்ந்தனர் என்று விளங்குகிறது.

கார், மலர்ப் பூவை, கடலை, இருள், மணி
அவை ஐந்தும் உறழும் அணி கிளர் மேனியை;
வலம்புரி, வாய்மொழி, அதிர்புவான், முழக்குச்செல்:
அவை நான்கும் உறழும்—அருள், செறல், வயின்மொழி
முடிந்ததும், முடிவதும், முகிழ்ப்பதும், அவை மூன்றும்
கடந்து, அவை அமைந்த கழலின் நிழலவை;
இருமை வினையும் இல, ஏத்துமவை;
ஒருமை வினை மேவும் உள்ளத்தினை;
அடை இறந்து அவிழ்ந்த வள் இதழ்த் தாமரை—
அடியும், கையும், கண்ணும், வாயும்;
தொடியும், உந்தியும், தோள் அணி வலயமும்,
தாளும், தோளும், எருத்தொடு, பெரியை;
மார்பும், அல்குலும், மனத்தொடு, பரியை;

acharya.org

கேள்வியும், அறிவும், அறத்தொடு நுண்ணியை;
வேள்வியும், மறனும், விருப்பொடு வெய்யை;

இவ்வடிகளில்—திருமாலின் திருமேனியழகு, மொழிப் பெருமை, காலங்கடந்த தன்மை, வினைகளைப் போக்கும் தன்மை, காத்தல் தொழிலில் பொருந்தியிருக்கும் பெருமை, அவயவங்கள், குணங்கள் ஆகியவற்றின் சிறப்பு முதலானவை உத்கோஷிக்கப்படுகின்றன.

(கார், மலர்ப்பூவை, கடலை, இருள், மணி அவை ஐந்தும் உறழும் அணிகிளர்மேனியை) நீருண்ட மேகம், காயாம்பூ, கடல், இருள், நீலமணி என்னும் ஐந்து பொருள்களையும் ஒக்கும் அழகு விளங்கும் திருமேனியை உடையாய். சாஸ்திரங்களிலும் ஆழ்வார்களாலும் காரொளிவண்ணனென்றும், காயாம்பூ வண்ணனென்றும், கடல்வண்ணனென்றும், இருளன்ன மாமேனியென்றும், மணிவண்ணனென்றும் புகழப்படுகிருனன்ரே இவன். **"நீலதோயதமத்யஸ்தா"** என்று, வேதம் பரம்பொருளுக்கேயுரிய திருமேனியைக் கார்மேனி என்றதன்ரே. 'அணிகிளர் மேனியை' என்று— "பலபலவே ஆபரணம்" [திருவாய் 2-5-6] என்று ஆழ்வார்களால் புகழப்படும் ஆபரணச்சேர்த்தியைச் சொல்லுகிறதாகவுமாம். இதனல் இவன் ஸர்வலோக சக்ரவர்த்தியென்று காட்டப்படுகிறது. (வலம்புரி, வாய்மொழி, அதிர்பு வான், முழக்குச்செல் அவை நான்கும் உறழும் அருள், செறல், வயின்மொழி) (அருள்வயின் மொழி வலம்புரி வாய்மொழி முழக்கு உறழும்) நின் அருளினல் பிறந்த சொல், வலம்புரிச் சங்காகிற பாஞ்சசன்னியத்தின் ஒலியையும், வேதகோஷத்தையும் ஒக்கும்; உறழும்—ஒத்திருக்கும். (செறல்வயின்மொழி அதிர்பு வான் செல்முழக்கு உறழும்) நின் சீற்றத்தால் பிறந்த சொல் அதிரும் மேகத்தின் முழக்கத்தையும், இடியோசையையும் ஒத்திருக்கும். செல்-இடி. (நான்கும் உறழும்) இவ்வண்ணமாக வலம்புரிச் சங்கு,

acharya.org

வாய்வழியாகவே பரவி வருவதாகையாலே வாய்மொழி யெனப்படும் வேதம், மேகம், இடி ஆகிய நான்கின் முழக் கத்தையும் ஒத்திருப்பது உன் சொல். (முடிந்ததும், முடிவதும், முகிழ்ப்பதும், அவை மூன்றும் கடந்து) கழி காலம், நிகழ்காலம், வருங்காலம் எனப்படும் மூன்று காலங்களையும் கடந்தவன் நீ; காலத்தால் அளவுபடாத பரம்பொருள் இவனே என்று தெளிவுறக் காட்டுகிறார். (அவை அமைந்த கழலின் நிழலவை) அவற்றைக் கடந்த மையேயன்றி, அவை வந்து தங்கியிருக்கும் திருவடி நிழ லினையும் உடையவன் நீயே. இத்தால், காலத்துக்குத் தான் வசப்படாமல், காலத்தைத் தன் வசப்படி ஆட்டி வைக்கும்படியான பரம்பொருள் இவனேயென்று காட்டப் படுகிறது. **"காலம் ஸ பசதே யத்ர ந காலஸ் தத்ர வை ப்ரபு₄:"** [பார-சாந்தி 196-9] [விஷ்ணுபகவான் காலத்தை எங்கிருந்து கொண்டு ஆட்டிவைக்கிறானோ, அப்பரமபதத்தில் காலத் தின் திறமை செல்லாது.] என்று கூறப்பட்டதன்றோ. (இருமை வினையுமில ஏத்துமவை) உன்னைத்துதிக்கும் சேத னர்கள் புண்ணிய பாபங்கள் நீங்கப்பெறுவார்கள்; மோக்ஷ மளிக்கும் பரம்பொருள் இவனே என்று காட்டுகிறார். (ஒருமை வினைமேவும் உள்ளத்தினை) ரக்ஷணத்தில் பொருந் திய திருவுள்ளத்தை உடையாய்; முத்தொழிலையும் செய் யும் முதல்வன் இவனேயானாலும், சுவையற்றதான படைப் புத்தொழிலையும், அழிப்புத்தொழிலையும் பிரமனையும், உருத்திரனையும்கொண்டு செய்வித்து, மிகுந்த சுவையுள்ள காத்தல் தொழிலிலேயே பொருந்தி நிற்கும் திருவுள்ளத்தை உடையவனாயிருக்கிறான் என்று கருத்து.

"நஹி பாலந ஸாமர்த்₂யம் ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம் ।
ஸ்தி₂தௌ ஸ்தி₂தம் மஹாப்ராஜ்ஞ ப₄வத்யந்யஸ்ய கஸ்யசித் ॥"
[வி-பு 1-22-21]

[பேரறிவாளனே! ரக்ஷணத்திலே நிலைநிற்கும் ஸர்வேஶ் வரனை ஹரியைத்தவிர வேறொருவனுக்குக் காக்கும்

acharya.org

திறமை இல்லையன்ரே] என்று கோஷிக்கப்பட்டதன்ரே. இதனுலும் இவனே பரம்பொருள் என்று காட்டப்படுகிறது. (அடை இறந்து அவிழ்ந்த வள் இதழ்த் தாமரை அடியும், கையும், கண்ணும், வாயும்) இலைகளுக்குமேல் உயர்ந்து, மலர்ந்து நிற்கும் வளம்பொருந்திய இதழ்களையுடைய தாமரை மலர்களை, நின்னுடைய திருவடிகளும், திருக்கைகளும், திருக்கண்களும், திருப்பவளங்களும் ஒத்திருக்கும். வேதத்தில் புண்டரீகாக்ஷனுக ஓதப்படும் பரம்பொருள் இவனே என்று உணர்த்துகிருர். **அடையிறந்து**—இலைகளுக்குமேல் உயர்ந்து; இங்கு தாமரையிலையைச் சொன்னது திருமேனிக்கு அவ்விலை உவமையாகும் என்னும் கருத்தாலே.

> **"செக்கமலத்தலர்போலும் கண் கைகால் செங்கனிவாய்**
> **அக்கமலத்திலைபோலும் திருமேனி அடிகளுக்கே"**
>
> [திருவாய் 9-7-3]

என்ருரன்ரே ஆழ்வாரும். இனி, பரமபுருஷ லக்ஷணங்கள் இவனிடம் பூர்ணமாயுளவெனக்காட்டுகிருர்(தொடியும் உந்தியும் தோளணி வலயமும் தாளும் தோளும் எருத்தொடு பெரியை) கைவளைகளும், கொப்பூழும், தோள்வளைகளும், திருவடிகளும்,தோள்களும்,கழுத்தும் பெரியவையாக உடையாய். (மார்பும் அல்குலும் மனத்தொடு பரியை) மார்பும், முதுகின் கீழ்ப்புறமும், மனமும் விசாலமாகப் பெற்றிருக்கிருய். (கேள்வியும் அறிவும் அறத்தொடு நுண்ணியை) கேள்வித் திறமையும், அறிவும், தர்மமும் ஸூக்ஷ்மமாக உடையவனுயிருக்கிருய். (வேள்வியும் மறனும் விருப்பொடு வெய்யை) யஜ்ஞபுருஷனுய், யஜ்ஞத்தால் ஆராதிக்கப்படுபவனுய், யஜ்ஞ பலபோக்தாவாய், யஜ்ஞஸ்வாமியாயிருக்கையாலே வேள்வியில் விருப்பத்தையும், ஸாதுக்களை ரக்ஷித்து, துஷ்டநிக்ரஹம் செய்து,தர்மத்தை நிலை நிறுத்துபவனுகையாலே அதர்மத்தில் சீற்றத்தையும் உடையவனுயிருக்கிருய். இவையெல்லாம் பரமபுருஷனுக்கேயுரிய இலக்க

acharya.org

ணங்கள் என்பதையும், இத்தகைய பெருமைகள் திருமாலைத்தவிர வேறொரு தெய்வத்திற்குப் பழந்தமிழர்களால் காட்டப்படவில்லையென்பதையும் நடுநிலையாளர் குறிக்கொள்ளவேண்டும்.

அறாஅ மைந்தின், செறாஅச் செங்கண்,
செரு மிகு திகிரிச் செல்வ! வெல் போர்
எரி நகை இடை இடுபு இழைத்த நறுந் தார்ப்
புரி மலர்த் துழாஅய் மேவல் மார்பினோய்!—
அன்னை என நினைஇ, நின் அடி தொழுதனெம்;
பல் மாண் அடுக்க இறைஞ்சினெம் வாழ்த்தினெம்—
முன்னும் முன்னும் யாம் செய் தவப் பயத்தால்:
இன்னும் இன்னும் எம் காமம் இதுவே;

இப்பாடலின் கடைசி அடிகளான இவற்றில்,ஸுதர்சன சக்கரத்தையும், துளசி மாலையையும் அணிந்த திருமாலைத் தாயாக நினைத்து வணங்கி வாழ்த்துகிறார்.

(அறாஅ மைந்தின் செறாஅச் செங்கண் செருமிகு திகிரிச்செல்வ) நீங்காத வலிமையினையும், கோபமுறாமலே இயற்கையிலேயே சிவந்திருக்கும் கண்களையும், போரில் சிறந்து நிற்கும் சக்கரப்படையையும் உடைய செல்வனே! **மைந்து**-பலம்; **அறாஅ**-என்றும் அழியாத, **செறாஅ செங்கண்**–கோபங்கொள்ளாமலே சிவந்திருக்கும் கண். உலகில் மற்றவர்களுடைய கண்கள் கோபத்தாலே சிவக்கும். இவன் இயற்கையிலேயே ஸர்வேஶ்வரனாகையாலே இவனுடைய கண்கள் ஐஶ்வர்யத்தாலே இயற்கையிலேயே சிவந்திருக்கும் என்று கருத்து. (செருமிகு திகிரிச் செல்வ) போரிலே சிறந்து நிற்கும் சக்கரப்படையை உடைய ஸர்வேஶ்வரனே!(வெல்போர்ச்செல்வ)ப₄ஸ்மாஸுரன் முதலான அஸுரர்களிடமும், பா₃ணாஸுரயுத்₃த₄ம் முதலானவற்றில் கண்ணனிடமும் புறமுதுகிட்ட புராரியைப்போலல்லாமல், போரிலே வெற்றியல்லது அறியாத செல்வனே! (அறாஅ

மைந்தின்...வெல்போர்ச் செல்வ) என்றும் குறையாத வலிமையையும், இயற்கையிலேயே சிவந்த கண்களேயும். போரில் சிறந்து நிற்கும் சக்கரப்படையையும் உடையவஞயிருப்பதும், போரில் ஒருநாளும் வெற்றியல்லது அறியாதிருப்பதும், இவனே ஸர்வேஶ்வரன் என்று காட்டித்தருகின்றன என்று கருத்து. சாஸ்திரங்களில் ஈடு இணையற்றதாகப் புகழப்படும் துழாய்மாலையை அணிந்தமையாலும் இவனே ஸர்வேஶ்வரன் என்று காட்டுகிருர் மேலே,–(எரி நகை) நெருப்பை ஒத்து மலர்கின்ற வெட்சிப்பூ. (எரிநகை இடை இடுபு இழைத்த நறுந்தார்ப் புரி மலர்த் துழாஅய் மேவல் மார்பிஞேய்) வர்ணச்சேர்த்தியழகுக்காக, நெருப்புப்போல் மலர்ந்துள்ள வெட்சிப்பூவை இடையிலிட்டுத் தொடுக்கப்பெற்றதும், மணம் மிக்கதும், முறுக்குண்டதுமான துழாய் மாலையை விரும்பி அணிந்த மார்பினே உடையவனே! சாஸ்திரங்களில், இத்துழாய் மலர்க்கே மோக்ஷமளிக்கும் தன்மை முதலான பெருமைகள் சொல்லப்பட்டிருக்கின்றபடியால், இதை அணிந்த இவனே ஸர்வேஶ்வரஞகமுடியும் என்று கருத்து. கடைசியாக, இவனே அடிதொழுது தம் விருப்பத்தைப் பேசுகிருர்: (அன்னே என நினேஇ நின் அடி தொழுதனெம்) நீ எங்களுக்கு இயற்கையிலேயே தாயாயிருப்பவன் என்று அறிந்து, உன் திருவடிகளேத் தொழுதோம். **"மாதா பிதா ப்₄ராதா நிவாஸ: ஶ ர ண ம் ஸுஹ்ருத்₃க₃திர் நாராயண;"** [ஸுபா₃ல]என்று சேதனர்களுக்கும் இவனுக்குமுள்ள உறவுகளேச் சொல்லப்புகுந்த வேதமும் முதலில் தாயென்றே பேசிற்றன்ருே. இங்கு அன்னேயென்றது தந்தை முதலான எல்லாவுறவுகளுக்கும் உபலக்ஷணம். (அடி தொழுதனெம்) காயத்தால் (உடலால்) வணங்கினதைக் காட்டுகிறது; மேலே வாக்காலும் மனத்தாலும் வணங்கியதைக் காட்டுகிருர்,—(பல் மாண் அடுக்க இறைஞ்சினெம்) அடுத்தடுத்துப் பலமுறை வாயாலே துதித்தோம்; (வாழ்த்தினெம்) மனத்தாலே மங்களாஶாஸனம் செய்தோம். ஆக, மனோ

acharya.org

வாக்காயங்கள் மூன்ருலும் வாழ்த்தி வணங்கியதைச் சொல்லுகிறது. (முன்னும் முன்னும் யாம் செய் தவப் பயத்தால்) கணக்கிறந்த முற்பிறவிகளில் நாம் செய்த தவப்பயனுல் உன்னை முக்கரணங்களாலும் வணங்கும் பேறு பெற்ருேம்.

ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதி₄பி₄:।
நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே ப₄க்தி: ப்ரஜாயதே॥

[பல்லாயிரக்கணக்கான ஜன்மங்களில் கர்மஜ்ஞானப₄க்தி யோக₃ங்களை அனுஷ்டித்துப் பாபம் நீங்கப்பெற்றவர்களுக்கே கிருஷ்ணனிடம் பக்தி உண்டாகிறது,] என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டதன்ருே. இப்படி முக்கரணங்களாலும் வணங்கியது ஒரு பலனை உத்தேசித்தோ? எனில்: (இன்னும் இன்னும் எம் காமம் இதுவே) இனி எவ்வளவு பிறவிகள் எடுத்தாலும் உன்னை வாழ்த்துவதொன்றையே நாம் விரும்புகிருேம். மோக்ஷத்தையும் இதற்குப் பலனுக விரும்பமாட்டோம் என்கிருர். இத்தால், இவர் பரஸம்ருத்₃தி₄யையே பயனுகக்கொண்டே மங்களாஶாஸன பரர் என்று விளங்குகிறது.

"ந காமகலுஷம் சித்தம் மம தே பாத₃யோ: ஸ்தி₂தம்।
காமயே வைஷ்ணவத்வம் து ஸர்வஜந்மஸு கேவலம்॥"

[ஜிதந்தே 1—13]

[தேவரீருடைய திருவடிகளில் நிலைநின்ற அடியேனுடைய மனம் வேறு எப்பலனையும் விரும்பிக் கலங்கவில்லை; எல்லாப் பிறப்புக்களிலும் வைஷ்ணவனுயிருக்கும் தன்மை ஒன்றையே ஆசைப்படுகிறேன்.] என்று ஜிதந்தே ஸ்தோத்ரத்திலும் சொல்லப்பட்டதன்ருே. இத்தால் இப்பாடலைப் பாடிய நல்லெழுனியார் பரம வைஷ்ணவர் என்று விளங்குகிறது.

இப்பாடலில் திருமாலுக்குச் சொல்லப்பட்ட பெருமைகள் பின்வருமாறு:— (1) கருணைமிகக்கொண்ட திருமாலைத் தொழுவோர்க்கு மோக்ஷம் வசப்பட்டிருக்கும். (2) எல்லாப்

acharya.org

பொருளாகவும் இருப்பவன் திருமால். (3) எல்லாவுலக மும் திருமாலிடம் அடங்கியுள்ளது. (4) பல அவதாரங்களை எடுத்து அருஞ்செயல்களைச் செய்து நிற்பவன் திருமால். (5) வேதத்தால் பரம்பொருளாகக் கூறப்படுபவன் திருமால். (6) அன்பர்களிடம் அருள்மொழியையும், தீயவர்களிடம் சினமொழியையுமுடையவன் திருமால். (7) காலத்துக்குத் திருமால் வசப்பட்டவனல்ல; காலம் அவனுக்கு வசப்பட்டி ருக்கிறது. (8) திருமாலைத் துதிப்பவர்களுக்குப் புண்ய பாபங்கள் கிடையாது. (9) ரக்ஷிப்பதிலேயே நிலைநிற்கும் திருவுள்ளத்தையுடையவன் திருமால். (10) திவ்யாத்ம குணங்களிலும், திவ்யமங்கள விக்ரஹகுணங்களிலும் மிகச் சிறப்புப்பெற்றவன் திருமால். (11) ஸர்வேஶ்வரனுக்கே யுரிய பல அடையாளங்களைப் பெற்றிருப்பவன் திருமால். (12) அன்னைபோலே கைம்மாறு கருதாத கருணையையுடைய வனாய் உதவுகிறவன் திருமால். (13) எத்தனையோ பிறப்புக் களில் பெருந்தவம் செய்தவர்களுக்கே திருமாலை வணங்கும் பேறு கிடைக்கும். (14) திருமாலடியார்கள் எப்பலனையும் விரும்பமாட்டார்கள். பரம்பொருளுக்கேயுரிய இத்தனை பெருமைகள் வேறு எந்த தெய்வத்திற்காவது பழந்தமிழர் களால் கூறப்பட்டுள்ளதா என்று நடுநிலையாளர் நோக்க வேணும். அத்துடன், பரம்பொருளுக்கு குணமில்லையென் றும், உருவமில்லையென்றும், உலகமெல்லாம் பொய்யென் றும், வெறும் அறிவு மாத்திரமேயான பரம்பொருள் மாயை யால் மறைக்கப்பட்டு மயங்கி உலகைக் காண்கிறது என்றும், பரம்பொருளுக்கும் தனக்கும் ஸ்வரூபைக்யத்தை அறிபவனுக்கே மோக்ஷம் என்றும் கூறும் அத்₃வைத மதமும் சங்ககாலத் தமிழர்களாலே எவ்விடத்திலும் ஆதரிக் கப்படவில்லை என்பதையும் குறிக்கொள்ளவேணும்.

பதினான்காம் பரிபாடல்

இப்பாடல் செவ்வேள் எனப்படும் முருகனைப்பற்றியது. இதில், முருகனுக்குப் பரம்பொருளின் தன்மை ஒன்று

acharya.org

கூடக்காட்டப்படவில்லை என்பதை நடுநிலையாளர் உணர்ந்து கொள்வதற்காக, மஹாமஹோபாத்யாய உ. வே. சாமிநாதய்யரவர்களின் பதிப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் இப் பாடலின் பொழிப்புரையை அப்படியே தருகிறோம் இனி இரண்டு பாராக்களில்.

முருகவேளே! மிக்க மழையை மேகம் பெய்தலால் நிறைந்த சுனைகளில் பூக்கள் மலர்ந்தன. குளிர்ந்த கடம்ப மலர்த் தாதை ஊதுகின்ற வண்டுகளின் குரல்கள் பண்களைப்போல இருந்தன. மலைப்பக்கங்களிலுள்ள மூங்கில்கள் அடியுறை மகளிர்களின் தோளையொத்தன. வாகைப்பூவைப்போன்ற கொண்டையுள்ள மயில்கள் கூவுங்குரல்கள், தலைவியரோடு அளவளாவிப் பிரிந்து சென்றோர்களை நோக்கி, 'இனித் தாமதம் செய்யன்மின்; மீண்டு வருக' என அழைப்பவர்களுடைய சொற்களைப் போன்றன. கொன்றை மலர்க் கொத்துக்கள் பொன்னாலாகிய மாலைகளைப்போன்றன. அழகையுடைய பேதைமகளிர்க்குத் தாய்மார்கள் புலி புலியென்று சொல்லும்படி பாறைகளில் வேங்கைமலர்கள் பரந்தன. நெருங்கிய மொட்டுக்களையுடைய காந்தள்கள் மலர்ந்தன; அவற்றினிடையே செங்காந்தளின் பூக்கள் பரந்தன. இங்ஙனம் நின்பரங்குன்றம் கார்காலத்தன்மை மிக்கது.

சூரபன்மாவைக் குலத்தோடு அழித்த வேற்படையையுடையோய்! கார்காலத்தில் வெண்மேகம் எழுந்தாற் போன்ற அகில் முதலியவற்றால் புகைத்த தூபத்தை விரும்பினோய்! ஆறு திருமுகத்தையும் பன்னிருதோளையும் கொண்டு வள்ளி யென்னும் மலர் போன்ற மகளை விரும்பியோய்! பிரிந்த தலைவர் வந்து சேர்ந்து பின்பு நீங்காமலிருக்கும்பொருட்டு மகளிர் யாழை வாசித்துப் பாடுகின்ற பாட்டை விரும்பியோய்! திருவவதாரம் செய்தவுடனே இந்திரன் முதலியோர் அஞ்சிய சிறப்புடையோய்! இரண்டு பிறப்பையும், அப்பிறப்பால் வந்த இரண்டு பெயரையும்

acharya.org

அன்பு பொருந்திய நெஞ்சத்தையுமுடைய அந்தணர்களது அறத்தை விரும்பியோய்! அத்தன்மைகளையுடையாயா தலின் நாங்கள் விரும்பி நின்பாற் பொருந்திப் பொருந்தி வழிபாடு செய்கின்றோம்; அங்ஙனம் செய்வதன் பயனைப் பின்னும் பின்னும் நின் புகழைக் காட்டிலும் பலவாக அவ்வழிபாடுகள் ஆகும்படி அருள்புரிவாயாக.

இப்பொழிப்புரையிலிருந்து முருகன் ஒரு தேவனே யொழிய தேவாதிதேவனை பரம்பொருளல்லன் என்பதே பழந்தமிழர் கொள்கை என விளங்குகிறது. இனி திருமாலைப்பற்றிய அடுத்த பாடலைக்காண்போம்.

பதினைந்தாம் பரிபாடல்

இப்பாடலைப் பாடியவர் இளம்பெருவழுதியார்; இசை யமைத்தவர் மருத்துவன் நல்லச்சுதனார்.

புல வரை அறியாப் புகழொடு பொலிந்து,
நில வரை தாங்கிய நிலைமையின் பெயராத்
தொலையா நேமி முதல், தொல் இசை அமையும்
புலவர் ஆய்பு உரைத்த புனை நெடுங் குன்றம்
பல: எனின், ஆங்கு-அவை பலவே: பலவினும்,
நிலவரை ஆற்றி, நிறை பயன் ஒருங்கு உடன்
நின்று பெற நிகழும் குன்று-அவை சிலவே:
சிலவினும் சிறந்தன, தெய்வம் பெட்புறும்
மலர் அகல் மார்பின் மை படி குடுமிய
குல வரை சிலவே; குல வரை சிலவினும்
சிறந்தது—கல் அறை கடலும் கானலும் போலவும்,
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்,
எல்லாம் வேறு வேறு உருவின் ஒரு தொழில் இருவர்த்
தாங்கும் நீள் நிலை ஓங்கு இருங்குன்றம்.

இவ்வடிகளில், கண்ணனும் பலதேவனும் எழுந்தருளி யிருக்கும் திருமாலிருஞ்சோலைமலை மலைகளில் சிறந்த

acharya.org

தென்கிருர். முதலேந்து அடிகளாலே உலகில் கீர்த்தி பெற்ற பல மலேகள் உள்ளன என்கிருர்,—(புல வரை அறியாப் புகழொடு பொலிந்து) (புல வரை - புலம் வரை; அறிவின் எல்லே) அறிவின் எல்லேயாலும் அறியப் படாத புகழொடு பொலிந்து நின்று. (நிலவரை தாங்கிய நிலேமையின் பெயரா) நிலத்தின் எல்லேயைத் தாங்கிய நிலேயினின்றும் என்றும் நீங்காத. இப்படிப்பட்ட பெருமை யுடையது எது எனில்: (தொலேயா நேமி) ஊழிகாலம் வரையில் அழியாதிருக்கும் சக்கரவாள மலேயைக் குறிக் கிறது. (நேமி முதல் நெடுங் குன்றம் பல) சக்கரவாள மலே முதலான நீண்ட மலேகள் பல இருக்கின்றன. அம் மலேகளின் பெருமை எத்தகையது எனில்: (தொல் இசை அமையும் புலவர் ஆய்பு உரைத்த புனே நெடும் குன்றம்) பழைமையான புகழ் அமையப்பெற்ற புலவர்களால் (இதிஹாஸ புராணங்களே அருளிய ரிஷிகளால்) ஆராய்ந்து உரைக்கப்பெற்ற அழகிய நீண்ட மலேகள். (குன்றம் பல) அத்தகைய மலேகள் பல உள்ளன. (ஆங்கு அவை பலவே எனின் (உம்)) அப்படிப்பட்ட மலேகள் பல உள்ளனவாஞலும். (பலவினும்) அந்தப் பல மலேகளி னுள்ளும். (நிலவரை ஆற்றி) இந்நிலத்தின் எல்லேக்குள் உள்ள மக்களின் பசி, வெம்மை முதலான துயரத்தைத் துடைத்து. (நிறை பயன் ஒருங்கு உடன் நின்று பெற நிகழும் குன்று அவை சிலவே) அம்மக்கள், நிறைந்த பயன்களேயெல்லாம் மொத்தமாக நிலேயாகப் பெறும்படி பயன்படும் குன்றுகள் சிலவேயாகும். (சிலவினும் சிறந் தன...சிலவே) அந்தச் சில மலேகளிலும் மிகச் சில மலே களே சிறப்புப்பெற்றன. அவற்றின் சிறப்புக்குக் காரண மென்ன? எனில்: (தெய்வம் பெட்புறும் மலர் அகல் மார்பின் மை படி குடுமிய குலவரை சிலவே) தெய்வங் களால் விரும்பப் பெற்றனவாய், மலர்களேக்கொண்ட பரந்த சுனேகளேயும், மேகங்கள் தழுவும் சிகரங்களேயும் உடையனவாயிருப்பதே அவற்றின் சிறப்புக்குக் காரணம்.

acharya.org

பெட்புறும்—விரும்பும். மார்பு-தடங்கள்; சுனைகள். (குல வரை சிலவினும் சிறந்தது) சிறந்த அந்த மலைகள் சில வற்றிலும் மிகச் சிறப்புப்பெற்றது ஒரு மலையுண்டு. அது யாதெனில்: (ஓங்கு இருங்குன்றம) ஓங்கிநிற்கும மாலிருஞ் சோலைமலையே அது என்கிறார். அதன் சிறப்புக்குக் காரணமென்ன? எனில்: (இருவர்த் தாங்கும் நீள்நிலை ஓங்கு இருங்குன்றம) கண்ணனும பலராமனுமாகிய இரு வரையும தன்பாற்கொண்டு தாங்கிநிற்கையால் புகழில் நீண்டும நிலைபெற்றும் ஓங்கியுமிருக்கும் மாலிருங்குன்றம். 'நீள்' என்று அநாதியான இறந்தகாலத்தில் புகழ்பெற் றிருப்பதையும், 'நிலை' என்று அநந்தமான வருங்காலத்தில் புகழ் பெறப்போவதையும, 'ஓங்கு' என்று புகழின் பெருமையையும் காட்டுகிறது. அக்கண்ணனும் பலராம னும் எப்படிப்பட்டவர்? எனில்: (கல் அறை கடலும் கானலும் போலவும்) 'கல்' என ஒலிக்கும் கடலைப்போன்ற முழக்கத்தையும் கருமை நிறத்தையுமுடையவன் கண்ணன்; அக்கடலையொட்டிய சோலையில் பரந்திருக்கும் மணல் போலே வெளுத்த நிறத்தையுடையவன் பலராமன். கானல் - கடற்கரைச் சோலைமணலைக் குறிக்கிறது. இப்படி நிறத்தில் வேறுபட்டிருப்பது போலே செயலிலும் வேறு பட்டிருப்பரோ? எனில்: (புல்லிய சொல்லும் பொருளும் போலவும்) ஒன்றோடொன்று கூடியிருக்கும் சொல்லையும் பொருளையும்போலே (ரக்ஷணமாகிற) ஒரே தொழிலைச் செய்பவர்கள் அவ்விருவரும். (வேறு வேறு உருவின்) உருவில் மிகவும் வேறுபட்டவர்களே அவர்கள். (எல்லாம் ஒருதொழில் இருவர்) எல்லாவகையிலும் ஒன்றுபட்ட ஒப் பற்ற காத்தல் தொழிலை உடையவர்கள் அவ்விருவரும். (இருவர்த்தாங்கும் ... இருங்குன்றம்) அவ்விருவரையும் தாங்குவதனாலேயே, மலைகள் எல்லாவற்றிலும் மிகச் சிறப்புப்பெற்றது மாலிருஞ்சோலைமலை என்று கருத்து.

நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ, வீறு பெறு துறக்கம்?

acharya.org

அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம்
எளிதின் பெறல் உரிமை ஏத்துகம், சிலம்ப.

கண்ணனும் பலராமனும் எழுந்தருளியிருப்பதாலேயே மாலிருஞ்சோலைமலை மலைகளிற்சிறந்ததாகிவிடுமோ? என்னும் கேள்விக்கு பதிலுரைக்கின்றன இந்த நான்கு அடிகளும். (நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறு பெறு துறக்கம்) மணம் வீசுகின்ற பூங்கொத்துக்களையுடைய (பூவிற்சிறந்த) துழாய் மாலையை யுடைய தேவிற்சிறந்த திருமால் அளித்தாலல்லது மோக்ஷத்தை அடையமுடியுமோ? இணர்—பூங்கொத்து. துறக்கம்—துன்பங்களைத் துறந்திருக்கும் நிலை; இவ்வுலகத் துன்பங்களைத் துறந்திருக்கும் நிலையான சுவர்க்கத்தையும் 'துறக்கம்' என்று கூறுவதுண்டாகையாலே, அநித்தியமும் அற்பமுமான அதைக்காட்டிலும், நித்தியமும் அநந்தமுமான இதன் சிறப்பைக் காட்டுவதற்காக **"வீறு பெறு துறக்கம்"** என்று விசேஷிக்கிறார். **வீறு**-தனிச்சிறப்பு. பத்தொன்பதாம் பரிபாடலில் முருகனின் மனைவியான தேவசேனையைக் குறிக்கும்போது **"சாறுகொள் துறக்கத்து** அவள்" என்று கூறப்பட்டது. சாருவது பாற்கடலினின்றும் தோன்றிய அமுதம். அதில் பங்கு பெறலாமிடமாகையாலே, சுவர்க்கம் என்னும் தேவலோகம் **"சாறு கொள்** துறக்கம்" என்று கூறப்பட்டது. அதைக்காட்டிலும் பலகோடி மடங்கு சிறப்புப்பெற்ற மோக்ஷலோகமாகையாலே பரமபதம் இங்கு **'வீறுபெறு துறக்கம்'** எனப்படுகிறது. (துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்) துழாய் மாலையையணிந்த திருமால் அளித்தாலல்லது எவராலும் மோக்ஷலோகத்திற்கு ஏறமுடியாது. பிரமன், சிவன், முருகன் முதலான வேறு எந்த தெய்வமும் மோக்ஷலோகத்தை அளிக்கவல்லமையுடையதல்ல; திருமால் ஒருவனே மோக்ஷமளிக்கவல்லவன் என்று காட்டுகிறார். இப்படி மோக்ஷமளிக்கவல்ல ஒரே தெய்வமான திருமால் இந்த மாலிருங்குன்றத்தில் எழுந்தருளியிருப்பதாலேயே, **"தெய்வம்**

acharya.org

பெட்புறும் குலவரை'' என்று சொல்லப்பட்ட மற்ற தெய்வங்கள் வாழும் மலைகளைக்காட்டிலும் இம்மலை சிறப்புப் பெற்று விளங்குகிறது என்று கருத்து. (துழாயோன் நல்கின் அல்லதை வீறு பெறு துறக்கம் ஏறுதல் எளிதோ) ''அம்ருதத்வஸ்ய ஈஶாந:'' [பு-ஸூ] [மோக்ஷத்தைத் தரவல்லவன் பரமபுருஷனே] ''தமேவம் வித்₃வாநம்ருத இஹ ப₄வதி, நாந்ய: பந்தா₂ அயநாய வித்₃யதே'' [பு-ஸூ] [பரமபுருஷனை இவ்வண்ணமறிபவனே இப்பிறப்பின் முடிவில் மோக்ஷமடைகிருன்; மோக்ஷமடைய வேறு வழியில்லை.] ''மோக்ஷமிச்சேத் ஜநார்த்த₃நாத்'' [மோக்ஷத்தை ஜனார்த்தனனிடமிருந்தே பெறவிரும்பவேண்டும்.]

''ஆப்₃ரஹ்மபு₄வநால்லோகா: புநராவர்த்திநோऽர்ஜுந ।
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்₃யதே ॥''
[கீ₃தை 8-16]

[குந்தியின்பிள்ளையான அர்ஜுனனே! ப்₃ரஹ்மலோகம் வரையிலுள்ள எல்லாவுலகமும் மறுபிறப்பையளிக்கக்கூடியவை; என்னையடைந்த பின்போ மறுபிறப்பு கிடையாது.] முதலான ப்ரமாணங்களை நினைக்கிருர். 'முகுந்த₃ன்' [மோக்ஷமளிப்பவன்] என்னும் தனிப்பெரும் பெயரையுடையவனன்ருே இவன். இனி, பின்னிரண்டு அடிகளாலே திருமாலிருஞ்சோலைமலையே மோக்ஷத்தை எளிதில் அளிக்கவல்லமையுடையதாகையாலே அதைத் துதிப்போம் என்கிருர். (அரிதில் பெறு துறக்கம் மாலிருங்குன்றம் எளிதில் பெறல் உரிமை) ப₄க்தியாகில், செய்தற்கரிய கர்மஜ்ஞாநயோக₃ங்களை அபேக்ஷிப்பது; ப்ரபத்தியாகில், மஹாவிஶ்வாஸத்தை முன்னிட்டிருப்பது;

''ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதி₄பி₄: ।
நராணும் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே ப₄க்தி: ப்ரஜாயதே ॥''

[ஆயிரக்கணக்கான ஜன்மங்களில் கர்ம ஜ்ஞான ப₄க்தி யோகங்களை அனுஷ்டிப்பதாலே பாபம் நீங்கப்பெற்ற மனிதர்களுக்கே கிருஷ்ணன் விஷயத்தில் ப₄க்தி உண்டாகிறது.]

acharya.org

**"ப₃ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்₃யதே।
வாஸுதே₃வ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது₃ர்லப₄: ॥"**
[கீ₃தை 7-19]

[பல பிறப்புக்களுக்குப் பிறகே ஞானியானவன், தனக்கு ப்ராப்யமும், ப்ராபகமும் 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலை' முதலான த₄ாரகபோஷகபே₄ாக்₃யங்க ளெல்லாமும் கண்ணன் என்று என்னை ஶரணடைகிறான்; அத்தகைய மஹாத்மா மிகவும் கிடைத்தற்கரியவன்.] என் கிறபடியே ஆயிரம் சன்மங்களிற்செய்த நற்றவப்பயனாலே ஏற்படுவதான ப₄க்தியாலேயோ, ப்ரபத்தியாலேயோ அரி தில் பெறவேண்டிய மோக்ஷத்தை இம்மாலிருங்குன்றத் தில் வாழ்வதாலேயே எளிதில் பெற்றுவிடலாம. கேவல கர்மாநுஷ்ட₂ானத்தாலேயே எளிதில் பெறக்கூடிய சுவர்க் கம் முதலான உலகங்களிலும் சிறந்த மோக்ஷலோகத் தையே பெறலாம் என்று காட்டுவதற்காக **'அரிதில் பெறு** துறக்கம்' என்று விசேஷிக்கிறார். **"தே₃ஶோऽயம் ஸர்வ காமது₄க்"** [காருடம்] [இந்த தேசமே மோக்ஷமுள்ளிட்ட எல்லாப் பலன்களையும் அளிக்கவல்லது.] என்கிறபடியே திவ்யதேசத்தையே மோக்ஷஸாதனமாக நினைத்து, அதில் வாழ்வார்க்கு அந்த திவ்யதேசவாஸமே ப₄லகரணமாய் நின்று பக்திப்ரபத்திகளில் மூட்டியோ, தானே நேரேயோ பரமபுருஷனின் அருளை விளைத்து எளிதிலேயே மோக்ஷத்தை அவனைக்கொண்டு அளிக்கச் செய்யவல்லதாகவன்றோ திவ்ய தேச ப்ரப₄ாவமிருப்பது. (ஏத்துகம் சிலம்ப) ஆகவே, நாம் துதிக்கும் ஒலியானது உலகமெல்லாம் சென்று ஒலிக்கும்படி யாக இந்த மாலிருங்குன்றத்தைத் துதிப்போமாக. சிலம்ப— (உலகெல்லாம்) ஒலிக்கும்படி. இந்த நான்கு அடிகளிலிருந்து திருமால் ஒருவனே மோக்ஷமளிக்கவல்ல முழுமுதல்வன் என்பதைப் பழந்தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள் என்று விளங்குகிறது. இந்தப் பெருமையை வேறு எந்த தெய்வத்திற்கும் அவர்கள் பாடியதில்லை என்பதை நடு நிலையாளர்கள் குறிக்கொள்ளவேணும்.

acharya.org

அரா அணர் கயந் தலைத் தம்முன் மார்பின்
மரா மலர்த் தாரின் மாண் வரத் தோன்றி,
அலங்கும் அருவி ஆர்த்து இமிழ்பு இழிய,
சிலம்பாறு அணிந்த, சீர் கெழு திருவின்
சோலையொடு தொடர் மொழி மாலிருங்குன்றம்—

'ஏத்துசும் சிலம்ப' என்றபடியே மாலிருங்குன்றத்தைப் புகழத்தொடங்கி, இவ்வைந்து அடிகளிலும் (நூபுர கங்கை என்று பிரஸித்திபெற்ற) சிலம்பாற்றினால் அழகுபெற்று விளங்குகிறது மாலிருஞ்சோலைமலை என்று பாடுகிறார். (அரா அணர் கயம் தலை தம் முன்) பாம்பின் நிமிர்ந்த மென்மைமிக்க தலையையுடைய தமயனான பலதேவன். ஆதிசேஷனின் அவதாரமான பலதேவன் என்றபடி. **அரா**—பாம்பு; (இங்கு) ஆதிசேஷன். **அணர்**—நிமிர்ந்த, **கயம்**—மென்மைமிக்க, 'தம்' என்று கண்ணனைச் சொல்லி 'தம் முன்' என்று அவனுக்கு அண்ணனான பலராமனைக் கூறுகிறது. 'அராவணர்கயம்தலை' என்றது 'தம்' என்ற திருமாலுக்கு விசேஷணமாய், ஆதிசேஷனுடைய நிமிர்ந்த மெல்லிய தலையால் குடைபிடிக்கப்பெற்ற திருமாலாகிற கண்ணனுக்கு முன்பிறந்த பலதேவன் என்கிறதாகவுமாம். (தம்முன் மார்பின் மராமலர்த்தாரின் மாண்வரத்தோன்றி அலங்கும் அருவி...) கண்ணனுக்கு அண்ணனான அந்த பலதேவனுடைய மார்பில் விளங்கும் மராமரமாகிற வெண்கடம்ப மரத்தின் பூவினால் தொடுக்கப்பெற்ற மாலைபோல் மாட்சிமைபெற்று விளங்குவனவாய் அசைகின்றவையான அருவிகளை உடையது சிலம்பாறு. **மராமலர்த்தார்**—வெண்கடம்பு மாலை (பலதேவனுக்குரியது). **மாண்**—மாட்சிமை. **அலங்கும்** — அசையும். (அருவி ஆர்த்து இமிழ்பு இழியச் சிலம்பாறு) அருவிகள் மிகவும் ஒலித்துக்கொண்டு விழுகின்றபடியாலே 'சிலம்பு ஆறு' [ஒலிக்கும் ஆறு] என்று பெயர்பெற்று விளங்குகிறது இவ்வாறு. **ஆர்த்து இமிழ்பு**—மிகவும் ஒலித்து; மீமிசை (வீப்ஸைச்) சொல் ஒலியின் மிகுதியைக் காட்டுகிறது. அதனாலேயே சிலம்பாறு

acharya.org

(ஒலிக்கும் ஆறு) என்று பெயர்பெற்றதென்று கருத்து. 'சிலம்பு' என்னும் சொல் மலையைக்குறிக்குமாகையாலே மலையாறுன இதற்கு அப்பெயர் வந்ததென்றும், விஷ்ணுவின் கால் சிலம்பாகிற நூபுரத்தில் நின்றும் தோன்றியதாகையாலே நூபுரகங்கையென்றும் சிலம்பாறு என்றும் பெயர்பெற்றதென்றும் கூறுவதுண்டு. (சிலம்பாறு அணிந்த சீர்கெழு ... மாலிருங்குன்றம்) சிலம்பாற்றைத் தனக்கு ஆபரணமாகப்பெற்ற பெருமை நிறைந்த மாலிருஞ்சோலை மலை. (திருவின் சோலையொடு தொடர்மொழி மாலிருங்குன்றம்) திருவென்னும் சொல்லோடும் சோலையென்னும் சொல்லோடும் மாலிருங்குன்றம் என்னும் சொல் தொடர்ந்த மொழியாகிய திருமாலிருஞ்சோலைமலை என்னும் பெயரையுடையது இக்குன்றம் என்று கருத்து. 'சீர்கெழு' என்றதை 'திரு'வுக்கு விசேஷணமாக்கி 'அழகு பொருந்திய திருவென்னும் சொல்லொடும்' என்று பொருள்கொண்டார் பரிமேலழகர். ஆக, இவ்வைந்து அடிகளால் திருமாலிருஞ்சோலைமலையின் திருநாமப் பெருமையும் அதிலுள்ள சிலம்பாற்றின் பெருமையும் கூறப்பட்டதாயிற்று.

தாம் வீழ் காமம் வித்துபு விளைக்கும்—
நாமத் தன்மை நன்கனம் படி எழ.
யாமத் தன்மை இவ் ஐ இருங்குன்றத்து,
மன் புனல் இள வெயில் வளாவ இருள் வளர்வென,
பொன் புனை உடுக்கையோன் புணர்ந்து அமர் நிலையே
நினைமின் மாந்திர்! கேண்மின், கமழ் சீர்!

இத்திருமாலிருங்குன்றத்தில் மக்கள் கண்ணனிடத்தில் காமமுற்றிருப்பர்களென்று கூறி, இக்குன்றத்தில் கண்ணன் அமர்ந்திருக்கும் நிலையை எல்லா மனிதர்களும் நினைக்க வேண்டும் என்கிறுர்.

(தாம் வீழ் காமம் வித்துபு விளைக்கும்...இருங்குன்றத்து) மக்கள் தாம் விரும்பும் ப₄க₃வத்₃ப₄க்தியாகிற காமத்தை

acharya.org

விதைத்து அதையே பரப₄க்தி பரஜ்ஞான பரமப₄க்திகளாக விளைக்கும் இந்த மாலிருஞ்சோலைமலையில். வீழ்—விரும்பு கின்ற. வித்துபு—விதைத்து. (காமம்) "கண்ணனுக்கே ஆமது காமம்" [இராமாநுச—40] என்றார் அமுதனாரும். திருமாலிருஞ்சோலைமலை மோக்ஷத்தை விளைப்பது என்று கூறுகையாலே, மோக்ஷவிரோதி₄யான காமத்தை இங்கு கூறியிருப்பதாகப் பரிமேலழகர் முதலான உரைகாரர்கள் உரையிடுவது பொருத்தமற்றது. (நாமத்தன்மை நன்கனம் படி எழ) முற்கூறிய **திருமாலிருஞ்சோலைமலை** என்னும் நாமத்தின் புகழ் நன்றாக பூமியிலே பரவும்படியாக. **நாமத் தன்மை** — பெயரின் புகழ். **நன்கனம்** — நன்றாக. **படி** — உலகம். (யாமத்தன்மை இவ்வையிருங்குன்றத்து) ஒவ் வொரு யாமமும் மக்கள் தாம் வீழ் காமத்தை விதைத்து விளைக்கும் பெருமையையுடைய இந்த மாலிருங்குன்றத்து. ஐ - அனைவர்க்கும் ஐயனான மால்; வியப்பைக் குறிப்பதாய், வியக்கத்தக்க இருங்குன்றம் என்றும் கொள்ளலாம். (யாமத் தன்மை) "குறிஞ்சிக்குச் சிறுபொழுதாகலான் யாமங்கூறினார்" என்றார் பரிமேலழகர். (மன்புனல்...நிலையே) நிலைபெற்ற குளிர்ச்சியை உடைய இளவெயில் சூழ, அதனிடையே இருள் வளர்வதைப்போலே, பொன்னா லான பீதாம்பரத்தையுடைய இருளன்னமாமேனியனான கண்ணன் பலராமனுடன் கூடி அமர்ந்திருக்கும் நிலையையே. **மன்**— நிலைபெற்ற. **புனல்** — குளிர்ச்சி. **வளாவ** — சூழ. **பொன்புனை உடுக்கை** — பொன்னாலான பீதாம்பரம்; **"மாஹாரஜநம் வாஸ:"** என்று வேதத்தாலும் புகழப்பட்டது. **புணர்ந்து**—(ப₃லதே₃வனுடன்) கூடி. (நிலையே நினைமின் மாந்தீர்) உலகத்திலுள்ள மக்களே! பீதாம்ப₃ரத₄ாரியான கண்ணன் பலதேவனுடன் கூடி இம்மலையிலே அமர்ந்திருக் கும் நிலையையே நினைப்பீர்களாக. (கேண்மின் கமழ்சீர்) அவ னுடைய புகழ்மிக்க குணங்களையே கேட்பீர்களாக. அம்மலை யினுடைய மணங்கமழும் சிறப்பைக் கேட்பீராக என்றுமாம்

acharya.org

சுனையெலாம் நீலம் மலர, சுனை சூழ்
சினை யெலாம் செயலை மலர, காய் கனி
உறழ, நனை வேங்கை ஒள் இணர் மலர,
மாயோன் ஒத்த இன் நிலைத்தே.
சென்று தொழுகல்லீர் ! கண்டு பணிமின்மே—
இருங்குன்று என்னும் பெயர் பரந்ததுவே
பெருங் கலி ஞாலத்துத் தொன்று இயல் புகழது
கண்டு, மயர் அறுக்கும் காமக் கடவுள்.

இவ்வெட்டு அடிகளில்—இம்மலை திருமாலைப்போலவே விளங்குகின்றதென்றும், இம்மலையின் அருகில் சென்று அதைத்தொழாதவர், இருந்தவிடத்திலிருந்தாவது அதைப் பணியுங்கள் என்றும் கூறி அதன் புகழைப் பாடுகிறார்.

(சுனையெலாம் நீலம் மலர) திருமாலிருஞ்சோலை மலையிலுள்ள சுனைகள் அனைத்திலும் நீலப்பூக்கள் இடமற மலர்ந்திருக்கின்றன. இவற்றின் தோற்றம் திருமாலின் நீலநிற மேனியை ஒத்திருந்தது என்று கருத்து. (சுனை சூழ் சினை யெலாம் செயலை மலர) அச்சுனைகளைச் சூழ்ந்திருக்கும் அசோகமரங்களின் கிளைகளில் எல்லாம் சிவந்த அசோகமலர்கள் பூத்திருக்கின்றன. அவற்றின் தோற்றம் நீலநிறத் திருமாலைச் சூழ்ந்துள்ள பொன்னுடையை ஒத்திருந்தது என்று கருத்து. செயலை — அசோகம். சினை— கிளை. (காய்கனி உறழ நனைவேங்கை ஒள் இணர் மலர) மொக்குகளோடு கூடிய வேங்கைமரங்களில் மாறுபட்ட நிறங்களோடு காய்கனிகள் காட்சியளிக்க, ஒளிபொருந்திய பூங்கொத்துக்கள் மலர்ந்திருக்கின்றன. இக்காய்கனிகளின் வேறுபட்ட நிறங்களும், மலர்களின் பொன்னிறத்தோற்றமும், பலநிற மணிகளிழைத்துச் செம்பொன்னால் செய்யப்பெற்ற திருமாலின் திருமுடியை ஒத்திருக்கின்றன என்று கருத்து. உறழ—நிறத்தால் மாறுபட்டுத்தோன்ற. நனை— மொக்கு. இணர் — பூங்கொத்து. (மாயோன் ஒத்த இன்

acharya.org

நிலைத்தே) இவ்வொப்புமைகளால், மாயோனாகிற திருமாலை ஒத்த இனிய காட்சியை உடையதாயிருக்கிறது இம்மலை. (சென்று தொழுகல்லீர்! கண்டு பணிமின்மே) இம்மலையின் அருகில் சென்று தொழுவதற்கு இயலாதவர்களே! இதை மனக்கண்ணாலே கண்டாவது பணியுங்கள்! அன்றிக்கே, இம்மலைக்குச்சென்று திருமாலைத் தொழ இயலாதவர்களும் தூரத்திலிருந்து இம்மலையையாவது கண்டு தொழுங்கள் என்று கூறுகிறதாகவுமாம். "மாலிருஞ்சோலை தளர் விலராகில் சார்வது சதிரே" "பதியது ஏத்தி எழுவது பயனே" "அயன்மலை அடைவது அது கருமமே" "திருமலையதுவே அடைவது திறமே" "புறமலை சாரப் போவது கிறியே" "நெறிபட அதுவே நினைவது நலமே" "வலமுறையெய்தி மருவுதல் வலமே" "வலம் செய்து நாளும் மருவுதல் வழக்கே" "தொழக்கருதுவதே துணிவது சூதே" "போதவிழ் மலையே புகுவது பொருளே" என்றார் ஆழ் வாரும் (2-10). (பெருங்கலி ஞாலத்து இருங்குன்று என்னும் பெயர் பரந்ததுவே) பெரிய ஒலியையுடைய கடல் சூழ்ந்த உலகில் மாலிருங்குன்றம் என்னும் திருநாமம் எங்கும் பரவியிருக்கிறது. **பெருங்கலி**—பெரிய ஆரவாரத்தையுடைய கடல். **ஞாலம்**—பூமி. (பெருங்கலி ஞாலத்துத் தொன்றியல் புகழது) கடல் சூழ்ந்த உலகில் பழைமையாக அமைந்த புகழையுடையது அம்மலை. (கண்டு மயர் அறுக்கும் காமக்கடவுள்) தன்னை யார் வந்து கண்டாலும் அங்ஙனம் கண்டவருடைய பிறவிக்குக் காரணமாகிய மயக்கத்தை ஒழிக்கும் வழிபடுகடவுளாயிருப்பது அம்மலை. **மயர்**—மயக்கம். **காமக்கடவுள்**—வழிபடு கடவுள். இத்தால், திருமால் எழுந் தருளியிருக்கும் இம்மலையே தன்னைக் கண்டவர்களுக்குப் பிறவியை அறுத்து மோக்ஷமளிக்கச்செய்யவல்லது என்று உணர்த்தப்படுகிறது. இத்தகைய பெருமை, மற்ற தெய் வங்கள் வாழும் பரங்குன்று முதலான மலைகளுக்குச் சொல்லப்பட்டதில்லை என்பது காணத்தக்கது.

acharya.org

மக முயங்கு மந்தி வரைவரை பாய,
முகிழ் மயங்கு முல்லை முறை நிகழ்வு காட்ட,
மணி மருள் நல் நீர்ச் சினை மட மயில் அகவ,
குருகு இலை உதிர, குயிலினம் கூவ,
பகர் குழல் பாண்டில் இயம்ப அகவுநர்
நா நவில் பாடல் முழவு எதிர்ந்தன்ன,
சிலம்பின் சிலம்பு இசை ஓவாது—ஒன்னார்க்
கடந்து அட்டான் கேழ் இருங்குன்று.

இவ்வடிகளில் திருமாலிருங்குன்றத்தின் அழகிய இயற்கைக் காட்சிகளை அனுபவிக்கிறார்.

(மக முயங்கு மந்தி வரை வரை பாய) தன் குட்டியால் தழுவிக்கொள்ளப்பட்டிருக்கும் பெண் குரங்கு அம்மலைத் தொடரின் ஒரு சிகரத்திலிருந்து மற்றொரு சிகரத்துக்குப் பாய்கிறது. கிளைக்குக் கிளை தாவும்போது குட்டியானது தாயைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பது குரங்கின் வழக்கம். தாய் குட்டியைக் கவ்விக்கொண்டு செல்வது பூனையின் வழக்கம். மர்க்கடகிஶோரந்யாயமென்றும், மார்ஜாரகிஶோரந்யாயமென்றும் இவை (முறையே) கூறப்படும். ஸ்வகதஸ்வீகாரநிஷ்டர்களுக்கும், பரகதஸ்வீகார நிஷ்டர்களுக்கும் இவை (முறையே) உவமையாகும். "மக முயங்கு மந்தி" என்றதற்கு "தன் குட்டியைத் தழுவிக் கொண்டிருக்கும்" என்று சிலர் உரையிட்டது குரங்கின வழக்கத்தை அறியாமையாலாகும். "மகவால் முயங்கப் பட்ட மந்தி" என்று தெளிவுடன் உரையிட்டார் பரிமேலழகர். **மக**—மகவு; கடையெழுத்து குறைந்துகிடக்கிறது. **மந்தி**—பெண்குரங்கு. (முகிழ் மயங்கு முல்லை முறை நிகழ்வு காட்ட) மொக்குகள் பொருந்திய முல்லைக் கொடிகள் பெண்களின் கற்பு நிகழ்ச்சியைக் காட்டாநிற்கும். **முறை**—கற்பு. இக்கொடிகள் கொள்கொம்பைத் தழுவிநிற்கும்போது பூத்துக் குலுங்குகின்றன; கொள்கொம்பைப் பிரிந்தால் வாடிவிடுகின்றன. பெண்கள் தங்கள் கொழுந

acharya.org

ரோடு கூடியிருக்கும் போதே வாழ்ச்சி பெறுவரென்றும், பிரிந்தபோது உயிர் துறப்பர் என்றும் உணர்த்துவதன் மூலம், இது மகளிர் கற்பு நெறியைக் காட்டுகிறது. இருங் குன்றத்தானிடம் ஈடுபட்டிருக்கும் இம்மலையிலுள்ள மக்க ளும், அவனோடு கூடியிருக்கும்போது வாழ்ச்சி பெற்றி ருப்பவர்களாய், அவனைப் பிரிந்தபோது உயிர்துறப்பவர் களாய், பரமபுருஷனை அவன் திறத்திலே மேலான கற்பு நெறியை உடையவர்களாயிருப்பார்கள் என்பதைக் காட்டுகிறது முல்லைக்கொடி என்றும் கொள்ளலாம். (மணி மருள் நல் நீர்ச் சினை மட மயில் அகவ) நல்ல நிறத்தால் நீலமணியை ஒத்த இளம் மயில்கள் கிளைகள் தோறும் அகவுகின்றன. **சினை**—கிளை. **மருள்**—ஒத்த. (நல் நீர் மணி) நல்ல நீர்மையை (நிறத்தை) உடைய மணி; நல்ல நீரோட்டத்தையுடைய மணி என்றுமாம். (குருகு இலை உதிரக் குயிலினம் கூவ) குருக்கத்தியிலுள்ள இலைகளெல் லாம் உதிரும்படி அவற்றினுள் நுழைந்துசென்று குயில் கூட்டங்கள் கூவாநிற்கும். **குருகு**—குருக்கத்தி. இனி, இந்தக் குயிலின் கூவுதலும், மயிலின் அகவுதலும் மலை யிலே எதிரொலிப்பது எப்படியிருக்கிறது என்று வருணிக் கிறார்,—(பகர் குழல்) குயிலின் கூவுதல், சுருதியோடு சேர்ந்த குழலின் ஒலிபோல் உள்ளது. **பகர்**—சுருதியோடு சேர்ந்த. (பாண்டில் இயம்ப) மயிலின் அகவுதல் தாளம் ஒலித்ததுபோல் உள்ளது. **பாண்டில்**-தாளம். இவற்றின் எதிரொலிகள் எப்படியுள்ளனவெனில்; (அகவுநர் நா நவில் பாடல் எதிர்ந்தன்ன) பாடல் வல்லவர்களின் வாய்ப் பாட்டுப் போலேயிருந்தது குயில் கூவியதின் எதிரொலி. **அகவுநர்**—பாடுவோர். (முழவு எதிர்ந்தன்ன) மத்தளம் ஒலித்தது போலேயிருந்தது மயில் அகவியதின் எதிரொலி. (சிலம்பின் சிலம்பு இசை ஓவாது) மலையிலுள்ள எதிரொலி இவ்வண்ணமாக இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருக்கும். இப்பெருமைகள் எவ்விடத்திலேயுள்ளன? எனில்: (ஒன் னார்க் கடந்து அட்டான் கேழ் இருங்குன்று) அசுரர்

acharya.org

ளாகிற பகைவர்களைத் தோல்வியுறச்செய்து கொன்ற வனுகிற திருமாலின் நிறமுடைய மாலிருங்குன்றமே இப் பெருமைகளை உடையது என்கிறுர். **ஒன்ஞர்**-பகைவர். **கடந்து**-போர்புரிந்து வென்று. **அட்டான்**-கொன்றவனுகிய திருமால். **கேழ்**-நிறம்.

தையலவரொடும், தந்தாரவரொடும்,
கைம் மகவோடும், காதலவரொடும்,
தெய்வம் பேணித் திசை தொழுதனிர் செல்மின்—
புவ்வத் தாமரை புரையும் கண்ணன்,
வெளவல் கார் இருள் மயங்கு மணி மேனியன்
எவ்வயின் உலகத்தும் தோன்றி, அவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்
அன்பு அது மேஎய் இருங்குன்றத்தான்.

இவ்வடிகளில், ஒப்பற்ற குணங்களையுடைய மாலிருங் குன்றத்தானைச் சுற்றத்தாரோடு சூழ்ந்து நின்று போற்று மின்கள் என்கிறுர்.

(தையலவரொடும் தந்தாரவரொடும் கைம்மகவோடும் காதலவரொடும் தெய்வம் பேணித் திசை தொழுதனிர் செல்மின்) மக்களே! உங்களுடைய மனைவிமாரோடும், உங்களைப்பெற்றவராகிய தாய்தந்தையரோடும், கைக் குழந்தைகளோடும், உங்கள் அன்புள்ள உறவினரோடும் இயற்கையிலேயே 'தெய்வம்' எனத்தக்க திருமாலை விரும்பி அம்மலையினைத் திசைநோக்கித் தொழுது செல் லுங்கள். அம்மலையையே தெய்வமாக மதித்து, திசை நோக்கித் தொழுது செல்லுங்கள் என்றுமாம். அத் திருமாலின் பெருமைகள் யாவை? எனில்: (புவ்வத் தாமரை புரையும் கண்ணன்) தன் உந்தியில் முளைத்த தாமரைப்பூவை ஒத்த கண்ணையுடையவன். **புவ்வம்**— கொப்பூழ். உலகைப்படைத்த உந்தித்தாமரையை உடையவன் என்றும், **"தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீக**

acharya.org

மேவமக்ஷிணீ'' [சா₂ந்] [அவனுக்கு சூரியனால் மலர்ந்த தாமரைபோன்ற இரு கண்கள் உள.] என்று உபனிஷத்தில் ஓதிய பரப்₃ரஹ்மலக்ஷணத்தை உடையவனென்றும் உணர்த்துகிறார். (வெளவல் காரிருள் மணி மயங்கு மேனியன்) கடலில் உள்ள நீரைக் கவர்ந்து உண்ணும் கரிய மேகம், இருள், நீலமணி ஆகியவற்றை ஒத்த திருமேனியை உடையவன். **"நீலதோயத₃ மத்₄யஸ்த₂ா வித்₃யுல்லேகே₂வ ப₄ாஸ்வரா"**முதலான ப்ரமாணங்களை நினைக்கிறார். **வெளவல்**—(நீரைக்) கவர்கின்ற. **மயங்கும்**—ஒக்கும். (எவ்வயின் உலகத்தும் தோன்றி அவ்வயின் மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்) எல்லா உலகங்களிலும் அவதரித்து, அவ்வவ்விடங்களிலுள்ள மக்கள் கூட்டத்திற்கு மயக்கத்தைத் தரும் பிறவித்துன்பத்தைப் போக்குகிறவன். **எவ்வயின்**—எல்லாம். **மன்பது**—மக்கள் கூட்டம். **மறுக்கம்**—மயக்கம். **"பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநெள"** [ஸர்வலோக பிதாவானவன் தன் குழந்தைகளில் ஒருவனைத் தந்தையாகக் கொண்டு ஒவ்வொரு யோனியிலும் பிறக்கிறான்.] **"அஜாயமாநோ ப₃ஹு₄த₄ா விஜாயதே"** [பிறப்பற்றவனாயிருந்தும் பல படியாகப் பிறக்கிறான் பரமபுருஷன்.] முதலான வேதவாக்கியங்களை நினைக்கிறார். பிறவித்துன்பத்தைப் போக்குகிறவன் இவனே என்று கூறுவதன் மூலம் இவனே பரம்பொருள் என்று காட்டுகிறார். இப்படிப் பிறர்க்காக இவன் எங்கின்ற யோனியுமாய்ப் பிறக்கக் காரணமென்ன? எனில், அவனுடைய கருணை படுத்தும் பாடு இது என்கிறார் மேலே, (அன்பது மேஎய் இருங்குன்றத்தான்) உயிர்களிடத்தெல்லாம் அன்பு பொருந்தியவனன்றோ இந்த மாலிருங்குன்றத்துத் திருமால் என்கிறார். அவ்வன்பினாலேயே அனைவரையும் உய்விக்கும் பொருட்டு இந்த மாலிருஞ்சோலைமலையில் நித்யவாஸம் செய்கிறான் என்று கருத்து.

கள் அணி பசுந் துளவினவை, கருங் குன்றனையவை;
ஒள் ஒளியவை, ஒரு குழையவை;

acharya.org

புள் அணி பொலங் கொடியவை;
வள் அணி வளை நாஞ்சிலவை,
சலம் புரி தண்டு ஏந்தினவை;
வலம்புரி வய நேமியவை;
வரி சிலை வய அம்பினவை;
புகர் இணர் சூழ் வட்டத்தவை; புகர் வாளவை;
என ஆங்கு—
நலம் புரீஇ அம் சீர் நாம வாய்மொழி
இது என உரைத்த[லி]ன், எம் உள் அமர்ந்து
இசைத்து, இறை
'இருங்குன்றத்து அடி உறை இயைக!' என,
பெரும் பெயர் இருவரைப் பரவுதும், தொழுதே.

இதுவரையில், குன்றின் பெருமையைக்கூறி அக் குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலைப்போற்றுமின் என்றார். இனி, அக்குன்றில் நின்ற ஸங்கர்ஷணவாஸுதேவர்களை, சிறப்புடைய வேதமே பரம்பொருட்கேயுரிய அடையாளங்களைக்காட்டிப் பலவாருகப் புகழ்வதால் அவ்விருவரையும் வணங்கி, அவர்கள் எழுந்தருளியுள்ள மலையடியில் வாழும் வாழ்வு எமக்குக் கிட்டுவதாக என்று வேண்டுகிறோம் என்று கூறி இப்பாடலை முடிக்கிறார் இவ்வடிகளில்.

(கள் அணி பசும் துளவினவை) தேன் பொருந்திய பசுமையான துளவமாலையை அணிந்துள்ளனை. திருமேனியின் ஸ்பர்ஶத்தாலே துளவம் பசுமையும் தேனும் மாருமலிருக்கிறது என்று கருத்து. "ஸர்வக₃ந்த₄: ஸர்வரஸ:" என்கிற நறுமணமும், நற்சுவைகளும் நிரம்பியது திருமேனி என்று உணர்த்தப்படுகிறது. (கருங்குன்றனையவை) நீலமலைபோன்ற தோற்றமுடையை. இத்தால், திருமேனியின் நிறம், உறுதி, பலம் முதலானவை உணர்த்தப்படுகின்றன. இவ்விரண்டு தொடர்களும் கண்ணனுக்குரியவை; அடுத்த இரண்டு தொடர்களும் ப₃லதே₃வனுக்குரியவை: (ஒள் ஒளியவை) வெண்ணிறம் பொருந்திய மிக்க ஒளி

acharya.org

யினையுடையை. *பால்நிறவண்ணனன்றோ நம்பி மூத்த பிரான். (ஒரு குழையவை) ஒரு காதில் குழை எனப்படும் குண்டலத்தையுடையை. "ஒற்றைக்குழையும் நாஞ்சிலும்" [பெரிய திருமொழி 8-8-8] என்றார் திருமங்கையாழ்வாரும். (புள்ளணி பொலங்கொடியவை) கருடாழ்வாரால் அலங்கரிக்கப்பெற்ற அழகிய கொடியை உடையை. பரதத்வ ஸூசகமான இவ்வடையாளம் திருமாலுக்கேயுரியது. (வள் அணி வளை நாஞ்சிலவை) கூர்மை பொருந்திய வளைந்த கலப்பை என்னும் ஆயுதத்தை உடையை. **நாஞ்சில்**—கலப்பை. 'ஒற்றைக் குழையும் **நாஞ்சிலும்**" [பெரியதிருமொழி 8-8-8] என்கிறபடியே இக்கலப்பையாகிற படை பலதேவனுக்குரியது. (சலம் புரி தண்டு ஏந்தினவை) அசுரரிடம் சினம் பொருந்திய கதையாகிற ஆயுதத்தை உடையை. **சலம்**—சினம். இதனால் ஆயுதங்களும் அறிவுடைய நித்யஸூரிகளே என்று உணர்த்தப்படுகிறது. பரிமேலழகர் இவ்வடையாளத்தை பலதேவனுக்குரியதாகக் குறித்தாராயினும், இது சங்க சக்ர கதாபாணியான வாசுதேவனுக்கும் அடையாளமாகக் குறையில்லை. பின்வரும் அடையாளங்களனைத்தும் வாசுதேவனுக்கே உரியவை. (வலம் புரி வய நேமியவை) வலம்புரிச் சங்காகிற பாஞ்சசன்னியத்தோடு வெற்றி பொருந்திய ஸுதர்சனம் என்னும் சக்கரப்படையினையும் உடையாய். **வயம்**—வெற்றி. (வரிசிலை வய அம்பினவை) கட்டமைந்த சார்ங்கம் என்னும் வில்லோடு, வெற்றி பொருந்திய அம்புகளையும் உடையாய். (புகர் இணர் சூழ் வட்டத்தவை) புள்ளிகளின் ஒழுங்கு சூழ்ந்த பாராவளை என்னும் வளைதடியாகிற ஆயுதத்தை உடையாய். **புகர்**-புள்ளி. **இணர்**-ஒழுங்கு. **வட்டம்**-பாராவளை அல்லது சுழல்படை என்னும் ஒருவகைப் படைக்கலம் என்பர். (புகர் வாளவை) புள்ளிகளைக் கொண்ட நாந்தகம் என்னும் வாளாயுதத்தை உடையை. இவ்வளவால் ஸர்வலோக சக்ரவர்த்தியானபடிக்குச் சேர இவ

acharya.org

னுக்கு ஸர்வவித₄மான ஆயுத₄ங்களும் உண்டென்று உணர்த்தப்பட்டதாயிற்று.

இனி, இப்பெருமைகள் இவர்களுக்கு உண்டு என்பதற்கு ப்ரமாணமென்ன? என்னும் கேள்வியெழ, வேதமே இதற்கு ப்ரமாணம் என்கிறார் மேலே: (என ஆங்கு நலம் புரீஇ அஞ்சீர் நாம வாய்மொழி இது என உரைத்த(லி)ன்) அனைவர்க்கும் நலத்தை விரும்பி, அழகிய சிறப்பையும் புகழையும் உடைய வேதமானது, இப்பெருமைகளை அந்த ஸங்கர்ஷண வாஸுதேவர்களுக்குச் சொல்லுகையாலே. (நலம் புரீஇ) **"மாதா பித்ரு ஸஹஸ்ரேப்₄யோऽபி வத்ஸலதரம் ஶாஸ்த்ரம்"** [ஆயிரம் தாய்தந்தையரைக்காட்டிலும் வாத்ஸல்யம் மிக்கது வேதம்] என்று சொல்லுகிறபடியே எல்லாச்சேதனர்க்கும் நன்மையை விரும்பிப் பரம்பொருளான திருமாலின் பெருமைகளைச் சொல்லுகிறது வேதம் என்று கருத்து. **"தனக்கு நன்மையை விரும்பி** அவர் பெருமை ஈதென்று சொல்லுதலால்" என்றார் பரிமேலழகர். அவர் பெருமையைக் கூறித் தான் ஸத்தைபெற விரும்புகிறது என்று கருத்து. (அஞ்சீர்) அம் சீர்; அபௌருஷேயத்வம், நித்யத்வம் முதலான அழகிய சிறப்புக்களை உடையது என்று கருத்து. "அழகிய சீரையும் அஞ்சப்படுதலையும் உடைய வேதம்" என்று இரு பொருள்களை உரைத்தார் பரிமேலழகர். **நாமம்**—புகழ். **வாய்மொழி**—கு₃ருசிஷ்யக்ரமத்தில் வாய்வழியாகவே உபதேசிக்கப்பட்டுவரும் வேதம். (உரைத்தன்). உரைதத(லி)ன், என்பதில் 'லி' என்னும் எழுத்து குறைந்துகிடக்கிறது. (எம் உள் அமர்ந்து இசைத்து இறை பரவுதும்) இப்படி வேதம் கூறுகின்றபடியால், யாமும் அவர்களை எம் மனத்தால் விரும்பி, அவர்களுடைய புகழ்களை எங்களால் இயன்றவறையில் சிறிது படித்துத் துதிப்போமாக. (உள் அமர்ந்து) மாநஸமான காரியம். (இசைத்து-பரவுதும்) வாசிகமான செயல். (தொழுது) காயிகமான அஞ்ஜலிநமஸ்காராதி₃கள். (இறை) ஒருசிறிது.

acharya.org

யாரைத் துதிப்பது? எனில்: (பெரும் பெயர் இருவரை) பெரிய புகழையுடைய ஸங்கர்ஷண வாஸுதேவர்களை. எதற்காகத் துதிப்பது? எனில்: (இருங்குன்றத்து அடியுறை இயைக என) 'மாலிருங்குன்றத்து அடிவாரத்து வாழும் வாழ்க்கை எமக்குப் பொருந்தியிருக்கவேண்டும்' என்பதற்காக. இத்தால் இவர்கள் அநந்ய ப்ரயோஜந பகவத்கைங்கர்ய நிஷ்டர்கள் என்று விளங்குகிறது.

(1) திருமாலைத்தவிர வேறு எவராலும் மோக்ஷத்தைத் தரமுடியாது. (2) அரிதில் பெறக்கூடிய அந்த மோக்ஷத்தை மாலிருங்குன்றத்தில் வாழ்வதால் எளிதில் பெற்றுவிடலாம்; ஆகையால் அது குன்றங்களிற் சிறந்தது; தன்னைக் காண்பதாலேயே பிறவித்துன்பத்தை அறுக்கக்கூடியது இம்மலை. (3) இதில் எழுந்தருளியிருக்கும் திருமால் பரம்பொருளுக்கேயுரிய லக்ஷணங்களை உடையவன்; அவன் எல்லா உலகத்திலும் அவதரித்து ஜீவராசிகளின் துன்பத்தைப் போக்குபவன். (4) பரம்பொருட்கேயுரிய பெருமைகளை உடையவன் அவன் என்று ஒருவராலும் இயற்றப்படாத வேதமே சொல்லுகின்றது—என்று இப்பாடலில் பாடியிருப்பதிலிருந்து, பண்டைத்தமிழர் திருமாலையே பரம்பொருளாகக் கருதி வழிபட்டு வந்தனர் என்பது கையிலங்கு கனியாக விளங்குகிறது. இத்தகைய பெருமைகளை வேறு எந்த தெய்வத்திற்கும் அவர்கள் பாடவில்லை என்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

பதினேழாம் பரிபாடல்

வையை நதியைப்பற்றிய பதினாறும் பரிபாடலில் குறிப்பிடத்தக்க கடவுட்குறிப்புகள் ஒன்றுமில்லையாகையால், அதை விடுத்துப் பதினேழாம் பரிபாடலைக் காண்போம்.

இப்பாடல் செவ்வேள் எனப்படும் முருகனைப்பற்றியது. இதில் முருகனுக்குப் பரம் பொருளின் தன்மை ஒன்றுகூடக் காட்டப்படவில்லை என்பதை நடுநிலையாளர் உணர்ந்து

acharya.org

கொள்வதற்காக ம. ம. உ. வே. சாமிநாதய்யரவர்களின் பதிப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் இப்பாடலின் பொழிப் புரையை அப்படியே தருகிறேம் அடுத்த இரு பாராக்களில்.

நெருப்பையும் இசைக்கருவிகளையும் சந்தனம் முதலிய வாசனைப்பொருள்களையும் அகிற்புகையையும் கொடிகளை யும் உடன்வருவார் கொணரத் தாம் மலர்களையும் குழை களையும் பூந்துகில்களையும் மணியினையும் வேலினையும் சுமந்து வந்து முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் கடப்ப மரத்தைத் துதிபாடித் திருப்பரங்குன்றத்தின் அடியில் மாலைதோறும் பலர் உறைகின்றனர்; அவர்களுள் தேவ ருலகத்து உறைதலை வேண்டுவார் யார்? அக்குன்றத்தில் ஒரு பக்கம் பாணர்களுடைய யாழோசையெழ அதனெதிர் வண்டின் இன்னிசை எழும்; ஒருசார் புல்லாங்குழலின் ஒலியெழ அதனெதிர் தும்பி முரலும்; ஒருபால் முழவின் முழக்கம் உண்டாக அதனெதிர் அருவிநீர் ஒலிக்கும்; ஒருபுறம் ஆடு மகளிர் அசைய அவரெதிர் பூங்கொடிகள் வாடையினுல் அசையும்; ஓரிடத்திற் பாடுமகளது பாலைப் பண் நிறைகுறைவோடு ஒலிக்க அதனெதிர் ஆடுமயிலி னது அரித்தெழுங்குரல் எழும். இங்ஙனம் கல்விகளால் வென்றிபெற எண்ணியவர்கள் மாறுமாருக எழுந்தாற் போன்ற தன்மையை முருகனது பரங்குன்றம் உடையது. புகழ்பெற்ற மதுரைக்கும் பரங்குன்றத்துக்கும் இடையே உள்ள இடம் சமீபித்ததாயினும் மகளிரும் மைந்தரும் நெருங்கி விளையாடுதலால் மிகச் சேய்த்தாகாநின்றது. அம்மகளிரது கூந்தலினின்றும் மைந்தரது குஞ்சியினின்றும் வீழ்ந்த மாலைகளால் தடுக்கப்பட்டு வழியானது இல்லையா யிற்று. முருகக்கடவுள் அத்தகைய திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளி உலகில் அங்கங்கே செய்யப்படும் பூசைக் கண்ணே ஏற்றுக்கொள்ளும் அகிற்புகை மேலே போத லால் தேவர்கள் இமைப்பார்கள்; சூரிய மண்டிலமும் தோன்றுமல் மறையும்.

acharya.org

மகளிரும் மைந்தரும் சுனையின்கண் பாய்ந்து விளையாடினர்; அதனால் வண்டுகள் பயந்து அச்சுனைமலர்த் தாதினை ஊதாவாயின; பரங்குன்றத்தின் அலங்காரங்கள் அத்தன்மையன. மலையிலுள்ள அருவி பரந்து மலைக்குக் கீழுள்ள உழவரது வயல்களிலே பரக்கும். அவ்வருவியில் விளையாடு மகளிர் ஆபரணங்களினின்றும் விழுந்த நீலமணி அவ்வுழுநிலத்தைச் சிதைக்கும். தெய்வவிழாவும் விருந்தயர்தலுமாகிய இவை பரங்குன்றிற்கும், வையைக்கும், மதுரைக்கும் தடுமாறி வருதல் நல்லொழுக்கமாயிற்று. மணிநிறமயிலையும் உயர்ந்த கோழிக்கொடியையும் உடைய முருக! பிணிமுகத்தின்மேல் ஊர்ந்து போர்செய்து வெல்லுந் தலைவ! * பிறவித்துன்பம் நீங்கிய இன்பமலிந்த நாட்களை யாம் பெறுகவென்று வேண்டி யாமும் எம் சுற்றத்தாரும் மக்களைப் பணிந்தொழுகாமல் நின் புகழையேத்தி நின் பரங்குன்றத்தைப் பாடித்தொழுகின்றேம்! அருள்புரிவாயாக.

இதிலிருந்து முருகன் ஒரு காதல் தெய்வமென்றும் இவ்வுலகில் இன்பம் மிக்க வாழ்க்கையை அளிக்கவல்லவனென்றும் பரம்பொருட்குரிய ஒரு பெருமையையும் உடையவனல்லனென்றும் விளங்குகிறது.

பதினெட்டாம் பரிபாடல்

இப்பாடலும் முருகனைப் பற்றியது. இதன் முதல் ஆறு அடிகளின் பொழிப்புரை (ஐயரவர்கள் பதிப்பிலுள்ளபடி) வருமாறு:—

அசுரர்களுடைய படைவலியால் உண்டான பெருமிதம் கெடும்படியாகக் கடலிற் புக்கிருந்த சூரபன்மாவாகிய மாமரத்தை அழித்தோய்! நீ விரும்புதலால் இத்திருப்பரங்குன்றம் நின்னைப் பெற்ற இமாசலத்தைப்போலப் புகழ் பெற்றது.

---

* 'பிறவித்துன்பம் நீங்கிய' என்று காட்டும் பதமும் மூலத்தில் இல்லை.

acharya.org

இவ்வடிகளில் முருகன் பிறப்பையுடையவன் என்று கூறப்பட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. மேலேயுள்ள பதினைந்து அடிகளில், தலைமகன் ஊடல் உணர்ப்பிக்கும் திறமும், பாணனுக்குத் தலைமகனது பரத்தமை பற்றிக் கூறும் தலைமகளின் கூற்றும் விவரிக்கப்படுகின்றன. இதற்குப்பின் உள்ள அடிகளின் பொழிப்புரை (ஐயரவர் களின் பதிப்பில் உள்ளபடி) பின்வருமாறு:—

வேலையுடைய வேளே! விரைந்த மயிலின்மேல் வரும் ஞாயிறே! மழை முழங்கிய சிகரமும் அதன்கண் உள்ள கொடி மின்னும் நின் ஓடையையுடைய களிற்றை யொக்கும் நின் குன்றத்தின்கண் உள்ள சித்திரசாலை யானது காமவேளது படைக்கொட்டிலை ஒக்கும். சோலை களும் சுனைகளும் மலர்களின் செறிவால் அக்காமவேளது அம்பறாத் தூணியை ஒக்கும். கார்காலத்தில் தோன்றும் காந்தட்பூவின் குலைகள் அவன் போரில் தோற்றுக் கட்டுண்டார் கைகளை ஒக்கும். தும்பியினுற் கட்டவிழ்க் கப்படும் காந்தளின் முகைகள் யாழ் நரம்பினது கட்டை நெகிழ்ப்பவர் கையை ஒத்தன. அழகிய மேகம் முன் பனிக்காலத்தின் கண் முழங்கி இந்திரவில்லை வளைத்தது; நினது பரங்குன்றத்திலுள்ள மரங்கள் அவ்வில்லாற் சொரியப்படும் கணைகளைப் போல மெல்லிய மலரைப் பரப்பின. அக்குன்றத்தின்கண் தாள ஒலியும் சிறந்த வாத்யங்களின் ஒலியும் மேகங்களின் முழக்கமும் போர் முழக்கத்தைப் போல எழுந்தன. அருவிகள் ஒலித்து இழிவதால் சிகரங்கள் முத்தாரங்களை அணிந்தாற்போன் றுள்ளன. குருவிகள் ஆரவாரம் செய்யுமாறு தினைக் கதிர்கள் விளைந்தன. கரையினின்றும் சாய்ந்த கொறுக் காந் தட்டை முட்டுகின்ற பலநிற மலர்கள் நிறைந்த சுனை இந்திரவில்லை வளைத்த வானத்தை ஒத்தது. வேற் படையையுடைய செல்வ! யாழோசையும் இயற்பாட்டுக் களும் பொருந்தி வேதவொலியும் பூவும் தூபதீபங்களும்

acharya.org

ஆகிய உபசாரங்களை ஏற்றருளிய நின் அடியின்கண் எமக்குரிய இருப்பிடத்தைச் சேர்ந்தாற்போல எம் சுற்றத்தோடு உறைதலை நீங்காது இருப்போமாக! அங்ஙனம் இருக்க அருள் புரிவாயாக!

இப்பொழிப்புரையிலிருந்து இப்பாடலிலும் பரம்பொருட்குரிய பெருமையொன்றும் முருகனுக்குக் கூறப்படவில்லையென்று நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

பத்தொன்பதாம் பரிபாடல்

இப்பாடலும் முருகனைப்பற்றியது. இதன் முதல் ஏழு அடிகளின் பொழிப்புரை (ஐயரவர்கள் பதிப்பிலுள்ளபடி) வருமாறு,—

முருகவேளே! தேவலோகத்தில் நீ எழுந்தருளியிருப்பது போலவே இப்பூவுலகத்தும் எழுந்தருளியிருக்கும் விருப்பத்தைக்கொண்டு அறிவெல்லையால் அறியப்படாத கடம்பினை மேவித் தேவர்கள் அடையும் இன்பத்தை மக்களும் அடைக என்று திருவருள்புரியும் திருப்பரங்குன்றத்தின் கண்ணே நீ வள்ளிநாச்சியாரை மணம்புரிந்தருளியது வானுலகத்தில் தேவயானையை மணந்ததற்கு மாறாக இவ்வுலகத்தில் புரிந்த செயல் போலும்.

இதற்குப்பின் எழுபத்தேழு அடிகளில், கூடலார் பரங்குன்றைநோக்கி விடியலில் யாத்திரை செய்கின்ற வழியும், பாண்டியன் தன் பரிவாரங்களுடன் பரங்குன்றை வலம் வரும் காட்சியும், குன்றின் காட்சியும் விவரிக்கப்படுகின்றன. கடைசியிலுள்ள இருபத்தொரு அடிகளின் பொழிப்புரை பின்வருமாறு.

நின் குன்றத்தையடைந்து நினது கொடி ஏற்றப்படும் யானையின் கும்பத்தைக் குங்குமத்தால் அலங்கரித்துப் பூவும் நீரும் தெளித்துச் செவிக் கவரிகளைச் சார்த்திப்

acharya.org

பவளக்காம்புடைய பொற்குடையை மேலே கவித்துக் கல்யாணமான மகளிரும் கன்னிமகளிரும் பூசைசெய்தனர்: அப் பூசைக் கண் அந்த யானையுண்ட கவளத்தின் சேடத்தை அவர்கள் உவந்து உண்டனர்; அங்ஙனம் உண்ணுவிடின் மகளிர் தம் காதலருடைய சிறந்த அன்பை எய்தார். கன்னி மகளிர் குறைவற்ற மணாளரைப்பெறுர். குறப்பெண்ணுகிய வள்ளி நாச்சியாரை மணம்புரிந்தருள் வோய்! எம் வாழ்த்தை நின்செவிக்கு உணவாகக் கேட் டருளல் வேண்டும். நின் ஆடையும் மாலையும் சிவந்த நிற முடையன. அங்ஙனமே நின் வேலாயுதமும் பவளக் கொடியைப்போன்ற நிறத்தைக்கொள்ளும் நின் திருவுருவ மும் எரிகின்ற தீயை ஒக்கும். திருமுகவும் இளங்கதிரவனை ஒக்கும். உலகிற்குத் துன்பத்தைச் செய்த சூரபன்மா வாகிய மாமரத்தைத் தடிந்தோய்! பகைமையையுடைய கிரவுஞ்சமலையில் வேலைச் செலுத்தி அம்மலையை உடைத் தோய்! நீ இக்குன்றத்தில் கடம்ப மரத்தின்கண் விரும் பிப் பொருந்திய நிலையை உடன்மேவிய சுற்றத்தாரோடு துதித்துத் தொழுது வாழ்த்தினேம்; அருள்புரிவாயாக.

இதிலிருந்தும் முருகன் ஒரு காதல் தெய்வமேயொழி யப் பரம்பொருளல்லனென விளங்குகிறது.

இருபத்தொன்ரும் பரிபாடல்

இருபதாம் பரிபாடல் வையையைப் பற்றியதாகை யாலும், அதில் கடவுட்குறிப்பு ஒன்றுமில்லையாகையாலும் அதைவிட்டு, முருகனைப் பற்றியதான இருபத்தொன்ரும் பாடலைக் காண்போம். இதில் முதல் பதினேழு அடிகள் முருகனின் பெருமையைக் கூறுபவை. அவற்றின் பொழிப் புரை (ஐயரவர்களின் பதிப்பிலுள்ளபடி) வருமாறு:—

முருகா! நீ வாகனமாகக் கொண்டு எழுந்தருளுவது நெருப்பைப் போன்ற முகபடாம் விளங்கும் சென்னியை யுடைய வேழம்; திருவடியிலே கொண்டது தாமரை

acharya.org

போன்ற அவ்வடிக்கு இயைந்ததும் தோலால் தைத்த முது குடையதும் பீலிப்போழால் அலங்கரிக்கப்பட்டதுமாகிய செருப்பு; நின் திருக்கரத்தின்கண் உள்ளது சூர்மாவைத் தடிந்து கிரவுஞ்சகிரியைத் துளைத்த வேல்; நீ அணிந்து கொண்டது, வள்ளிப்பூவை யிடையிட்டுத் தொடுத்ததும் உருளுகின்ற பூக்களையுடையதுமாகிய கடப்பந்தார்; நீ விரும்பி வீற்றிருப்பது, மேலோர் நாவிலிருந்து எழும் புகழ் நிறைந்து ஏழிலைப்பாலையையுடைய தாழ்வரையாகிய இல கடத்தையும் அருவியாகிய முகபடாத்தினையும் உடைய யானையைப் போன்று விசும்புற நிவந்த தண்பரங்குன்றம். வென்றிக்கொடியணி செல்வனுகிய நின்னைத்தொழுது இக் குன்றத்து அடியின்கண் உறைதல் மறுபிறப்பினும் இயைகவென்று பரவுகின்றேம்.

இதற்குமேல் பனிரண்டு அடிகளில், பரங்குன்றின் மேல், ஓவியத்தின் அழகு போன்று விளங்கும் காட்சிகளை யும், அதற்கு மேல் ஒன்பதடிகளில், அக்குன்றத்தில் வேறு பட்ட பல ஒலிகள் ஒன்ருக ஒலிப்பதையும், அதற்கு மேல் ஏழு அடிகளில், அக்குன்றத்தில் சுனை நீரில் பாய்ந்து ஒரு வரையொருவர் தழுவிக்கொண்டு நீராடும் காதலரையும், அதற்குமேல் எட்டு அடிகளில், அக்குன்றத்தில் பலவகை மணத்துடன் வரும் காற்றுக்களையும், அதற்குமேல் பனிரண்டு அடிகளில், அக்குன்றில் கணவன் ஒலிக்கும் துடி யென்னும் வாத்தியத்தின் தாளத்திற்கேற்ப ஆடுகின்ற காதலியின் மேனியழகையும், கண்ணழகையும் வருணிக் கிருர். 'மா தடிந்திட்டோய்' என்று முருகன் சூரபன் மாவைக் கொன்ற விருத்தாந்தத்தைக்கூறி விளிக்கும் விளி தவிர வேறு கடவுட்குறிப்பு ஒன்றுமேயில்லை. இப்பாட லின் கடைசி ஐந்து அடிகளும், அவற்றுக்கு (ஐயரவர்கள் பதிப்பில் தரப்பெற்றுள்ள) பொழிப்புரையும் வருமாறு:—

மாறு அமர் அட்டவை மற வேல் பெயர்ப்பவை;

ஆறு இரு தோளவை; அறு முகம் விரித்தவை;

நன்று அமர் ஆயமோடு ஒருங்கு, 'நின் அடி உறை
இன்று போல் இயைக!' எனப் பரவுதும்—
ஒன்ருர்த் தேய்த்த செல்வ! நிற் தொழுதே.

மாற்ருரை அமரின்கண் அழித்த வேற்படையை உடையை; பன்னிரு தோளேயுடையை; ஆறு திருமுகத்துடன் விளங்குவை; பகைவரை அழித்த செல்வ! சுற்றத்தோடு ஒருங்கே நின் அடிக்கண் உறைதல் இன்றுபோல என்றும் எமக்கு இயைவதாகவென்று பரவுகின்றேம்; அருள்புரிவாயாக.

இப்பாடலிலிருந்தும் முருகன் தேவசேனாதிபதியாகவுள்ள காதல் தெய்வமேயொழியப் பரம்பொருளல்லன் என விளங்குகிறது. சூரபன்மனேக்கொன்ற விருத்தாந்தத்தை அடிக்கடி பேசும் சங்கத்தமிழர், முருகன் தகப்பனுக்கே உபதேசித்தான், பாட்டனுன பிரமனேச் சிறையிலடைத்தான், முருகனுடைய மயில் வைகுண்டத்தையே அழித்துவிட்டது முதலான கந்தபுராணப் பொய்க்கதைகளே எங்குமே பாடுவதில்லேயென்பதை நடுநிலேயாளர் குறிக்கொள்ளவேண்டும். இனி, இருபத்திரண்டாம் பரிபாடல் வையைநதியைப் பற்றியதாகையாலும், அதில் கடவுட் குறிப்பு ஒன்றுமில்லேயாகையாலும் அதை விடுத்து, பரிபாடல் திரட்டிலுள்ள சில பாடற் பகுதிகளேக் காண்போம்.

சங்கத்தார் தொகுத்த பரிபாடல்கள் 70 என்பது இறையனுரகப் பொருள் உரையாலும் (சூ 1) தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பேராசிரியர் உரையாலும் (செய்யு. சூ. 149) அறியக்கிடக்கிறது. இப்பாடல்களில் பாடப்படுவது யாரைப்பற்றி அல்லது எதைப்பற்றியென்பதைப் பின் வரும் பாடல் காட்டுகிறது.

திருமாற்கு இரு-நான்கு; செவ்வேட்கு முப்பத்
தொரு பாட்டு; காடுகாட்கு ஒன்று:-மருவினிய
வையை இருபத்தாறு; மா மதுரை நான்கு என்ப-
செய்ய பரிபாடல் திறம்.

acharya.org

இப்பாடலிலிருந்து—பரிபாடலில் திருமாலுக்கு எட்டுப் பாடல்களும், முருகனுக்கு முப்பத்தொரு பாட்டுகளும் காளிக்கு ஒரே பாட்டும், வையைநதிக்கு இருபத்தாறு பாட்டும், மதுரைக்கு நாலு பாடலும் அமைந்தனவென்று விளங்குகின்றது. இப்பாடலில் 'காடுகாள்' என்றது காளியை. 'காடுகாட்கு' என்பதற்கு பதில் 'கார்கோளுக்கு' என்றும் பாடபேதம் உண்டு. கார்கோள் என்பது கடல். அவ்வொருபாடல் இப்போது கிடைக்கவில்லையாகையால் அது காளியைப் பற்றியதா கடலைப் பற்றியதா என்று அறிய வழியில்லை. இப்போதுள்ள 22 பரிபாடல்களில் திருமாலுக்கு ஆறும், முருகனுக்கு எட்டும், வையைக்கு எட்டும் உரியவையாயுள்ளன. மற்ற பாடல்கள் இறந்துபட்டன. ஆயினும் நச்சினார்க்கினியருரை முதலான பழைய உரைகளிலிருந்தும், புறத்திரட்டுத்தொகை நூலிலிருந்தும் இரு முழுப் பாடல்களும், சில பாடல்களின் உறுப்புக்களும் கிடைக்கின்றன. இவை 'பரிபாடல் திரட்டு' என்னும் தலைப்பில் பரிபாடலின் கடைசியில் சேர்க்கப்பெற்றுள்ளன. திரட்டிலுள்ள முழுப்பாடல்களில் ஒன்று திருமாலைப் பற்றியதும், மற்றொன்று வையையைப்பற்றியதுமாகும். பாடற்பகுதிகளில் சில—மதுரையையும், வையையையும் பற்றி அமைந்தவை. இவற்றில் திருமாலைப் பற்றியதான முதற்பாடலையும், கடவுட் குறிப்புடைய மற்ற பாடற்பகுதிகளையும் காண்போமினி.

பரிபாடல் திரட்டு-முதற் பாடல்

திருமாலைப்பற்றிய இப்பாடல், தொல்காப்பியம் செய்யுள் இயல் சூத்திரம் 121. பேராசிரியர், நச்சினார்க்கினியர் உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பெற்றதாகும். இத்துடன், திருமாலைப்பற்றிய எட்டு பரிபாடல்களில், அவனுடைய பரமகருணையாலே ஏழு பாடல்கள் இவ்வுலகிற்கு இப்போதும் கிடைத்துள்ளனவென விளங்குகிறது. ஒரு பாடலே இவ்வுலகின் தௌர்ப்பாக்கியத்தாலே அழிந்துவிட்டது. நிற்க; இப்பாடலைக் காண்போம் இனி.

acharya.org

வான் ஆர் எழிலி மழை வளம் நந்த,
தேன் ஆர் சிமைய மலையின் இழிதந்து,
நான் மாடக் கூடல் எதிர்கொள்ள, ஆனு
மருந்து ஆகும் தீம் நீர் மலி துறை மேய
இருந்தையூர் அமர்ந்த செல்வ! நின்
திருந்துஅடி தலை உறப் பரவுதும், தொழுது.

முதல் ஆறு அடிகளில், நான்மாடக் கூடலில் வையைக் கரையிலுள்ள இருந்தையூர் என்னும் திவ்யதேசத்தில் அமர்ந்த திருமாலின் திருவடிகளைத் தொழுது போற்றுகிறார்.

(வான் ஆர் எழிலி மழை வளம் நந்த) ஆகாயத்தில் பொருந்திய மேகத்தினின்றும் மழை பெருக்கெடுத்து ஓட. எழிலி—மேகம். நந்த—பெருக. (தேன் ஆர் சிமைய மலையின் இழிதந்து) தேன் கூடுகள் நிரம்பிய உச்சிகளையுடைய மலையிலிருந்து இறங்கி. சிமையம்—உச்சி. இத்தால், இந்த வையை நதியின் இனிமை உணர்த்தப்படுகிறது. (நான் மாடக் கூடல் எதிர்கொள்ள) 'நான் மாடக் கூடல்' என்னும் பெயரையுடைய மதுரையிலுள்ள மக்கள் எதிர்கொண்டு அழைக்க. 'கூடல்' என்னும் நகரத்தின் பெயர் இங்கு அதிலுள்ள மக்களைக் குறித்தது. "மஞ்சா: க்ரோஶந்தி" என்னும் வடமொழி வழக்குப்போலே. (ஆனு மருந்து ஆகும் தீம் நீர் மலி துறை மேய) உயிர்களுக்கு இன்றியமையாத அமுதமாயிருக்கும் அந்த இனிய நீர் வையை ஆற்றில் புகுந்து நிறைந்து நிற்கும் துறை ஒன்றிலே பொருந்தி நிற்கும். (இருந்தையூர் அமர்ந்த செல்வ) இருந்தையூர் என்னும் திவ்யதேசத்திலே வீற்றிருந்த திருக்கோலத்திலே எழுந்தருளியிருக்கும் செல்வ நாரணனே! இந்நகர் கூடலிலே இருப்பதாகவும், அங்கு திருமால் வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருப்பதாகவும் கூறுகையால், 'இருந்தையூர்' என்பது இப்பொழுது கூடலழகப் பெருமாள் கோவில் இருக்கும் மதுரைப்பகுதியைக் குறிக்கிறது என விளங்குகிறது. 'இருந்த எந்தை ஊர்' என்

acharya.org

பதே இருந்தையூர் ஆயிற்று என்று கருதலாம். (நின் திருந்து அடி தலை உறப் பரவுதும் தொழுது) உன்னிலும் சிறப்புற்ற உன் திருவடிகள் எம் தலையிலே பொருந்தும்படி தொழுது, உன்னைப்போற்றுவோம். கைக்குழந்தைக்குத் தாய்முலை போலே ஶேஷபூ₄தனுக்குத் திருவடிகளே உத்₃தே₃ஶ்யமாகையாலே 'திருந்து அடி' என்கிறார்.

ஒருசார்—அணி மலர் வேங்கை, மராஅ, மகிழம்,
பிணி நெகிழ் பிண்டி, நிவந்து சேர்பு ஓங்கி,
மணி நிறம் கொண்ட மலை.
ஒருசார்—தண் நறுந் தாமரைப் பூவின் இடைஇடை
வண்ண வரி இதழ்ப் போதின்வாய் வண்டு ஆர்ப்ப,
விண் வீற்றிருக்கும் கய மீன் விரி தகையின்
கண் வீற்றிருக்கும் கயம்.
ஒருசார்—சாறுகொள் ஓதத்து இசையொடு மாறு உற்று
உழவின் ஓதை பயின்று, அறிவு இழந்து
திரிநரும், ஆர்த்து நடுநரும், ஈண்டி,
திரு நயத்தக்க வயல்.

இப்பதினொரு அடிகளில் இருந்தையூரின் மலை, குளம், வயல் ஆகியவற்றின் சிறப்பைப் பேசுகிறார்.

(ஒரு சார், அணி மலர் வேங்கை மராஅ மகிழம் பிணி நெகிழ் பிண்டி நிவந்து சேர்பு ஓங்கி மணி நிறம் கொண்ட மலை) திருமாலே! நீ விரும்பிவாழும் இருந்தையூரின் ஒரு பக்கத்தில், அழகிய மலர்களையுடைய வேங்கை மரங்களும், வெண்கடப்பமரங்களும், மகிழ மரங்களும், கட்டவிழ்ந்த மலர்களையுடைய அசோக மரங்களும் சேர்ந்து, மிகவும் ஓங்கி விளங்குகையால் நீலமணிபோன்ற நிறம் கொண்டு விளங்கும் மலை உள்ளது. **மராஅ**—மராமரம் எனப்படும் வெண்கடம்பு. **பிண்டி**—அசோகமரம். **சேர்பு**—சேர்ந்து. **நிவந்து ஓங்கி**—மிகவும் ஓங்கி. (ஒரு சார்...கயம்) இருந்தையூரின் மற்றொரு பக்கத்தில் குளம் இருந்தது. அக்குளம்

acharya.org

எப்படி இருந்தது? எனில்: (தண் நறும் தாமரைப்பூவின் இடைஇடை) குளிர்ந்த நறுமணம் மிக்க தாமரைப்பூக்களின் நடுவில். (இதழ்ப்போதின் வாய் வண்ண வரிவண்டு ஆர்ப்ப) இதழ்களைக்கொண்ட பலவகைப் பூக்களில், வரிகளை உடைய வண்டுகள் ஒலித்துக்கொண்டிருந்தன. (கயமீன் வீற்றிருக்கும் விண் விரிதகையின் கண் வீற்றிருக்கும் கயம்) பெரிய நட்சத்திரங்கள் பொருந்தியுள்ள ஆகாயம் விரிந்திருப்பதைப் போலே இடமுடைய பெரிய குளம் இருந்தையின் ஒரு பக்கத்தில் உள்ளது. **கயமீன்**—பெரிய நட்சத்திரங்கள். **கண்**—இடம். **கயம்**—குளம். (ஒரு சார் திரு நயத்தக்க வயல்) இருந்தையூரின் பிறிதொரு பக்கத்தில் திருமகளும் விரும்பத்தக்க வயல்கள் இருந்தன. அவை எப்படியிருந்தன? எனில்: (சாறு கொள் ஓதத்து இசையொடு மாறு உற்று உழவின் ஓதை பயின்று) அவ்வயல்களில் கரும்பை ஆலையில் இட்டுச் சாறு பிழியும்போது ஒலிக்கும் ஓசையும், அதோடு மாறுபட்டு, உழவர்கள் நிலத்தை உழும்போது எழும் ஓசையும் மிகவும் ஒலிக்கும். **ஓதத்து**—ஓசையின். **ஓதை**—ஓசை. (அறிவு இழந்து திரிநரும், ஆர்த்து நடுநரும் ஈண்டி) கள்ளுண்பதால் அறிவிழந்து திரியும் உழவர்களும், ஆரவாரத்தோடு நாற்று நடுவோரும் அவ்வயல்களில் நிறைந்திருப்பர். இப்படி செல்வச் சிறப்புடையதாயிருந்தமையால், ஸ்ரீதேவியும் விரும்பத்தக்கதாயிருந்தன அவ்வயல்கள் என்று கருத்து. இத்தால் அவ்வூரின் இயற்கைவளம் கூறினர். இனி அவ்வூரின் மக்களின் பெருமையைக் கூறுகிறார்.

ஒருசார்—அறத்தொடு வேதம் புணர் தவம் முற்றி,
விறல் புகழ் நிற்ப, விளங்கிய கேள்வித்
திறத்தின் திரிவு இல்லா அந்தணர் ஈண்டி,
அறத்தின் திரியா, பதி.

அவ்வூரிலுள்ள மக்களில், வேதம்வல்லவர்களாய். அறம், தவம், வெற்றிப்புகழ் நிறைந்தவர்களான அந்தணர்

acharya.org

கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர் என்கிறார் இந்நான்கு அடிகளில்,

(அறத்தொடு வேதம் புணர் தவம் முற்றி) தர்மத்தோடு, வேதத்திற் சொல்லப்பட்ட தவங்கள் அனைத்தையும் முடித்து. (விறல் புகழ் நிற்ப) "வைதிக ஸித்தாந்தமே மிகச்சிறந்தது; வேதத்தில் புகழப்படும் திருமாலே பரம் பொருள்" என்று நிலைநாட்டி, அவ்வெற்றியின் புகழ் நிலை நிற்கும்படியாக. பெரியாழ்வார் பரதத்துவநிர்ணயம் செய்ததும் இவ்வூரிலன்றோ. **விறல்**—வெற்றி. இப்படி வெற்றிப் புகழ் கொண்டு இவர்கள் விளங்கக்காரணம் என்? எனில் (விளங்கிய கேள்வித் திறத்தின் திரிவில்லா) மிக விளங்கி நிற்கும் கேள்வி ஞானத்தினின்று மாறுபடாமலிருக்கையே என்கை. (அந்தணர் ஈண்டி அறத்தின் திரியாப்பதி ஒருசார்) இத்தகைய அந்தணர்கள் நிறைந்து தருமவழி வழுவாமல் விளங்கிய பகுதி அவ்வூரில் முதலிடம் பெற்று விளங்கியது.

ஆங்கு ஒருசார்—உண்ணுவ, பூசுவ, பூண்ப, உடுப்பவை,
மண்ணுவ, மணி பொன் மலைய, கடல,
பண்ணிய, மாசு அறு பயம் தரு காருகப்
புண்ணிய வணிகர் புனை மறுகு ஒருசார்:
விளைவதை வினை எவன் மென் புல வன் புலக்
களமர் உழவர் கடி மறுகு பிறசார்:
ஆங்க அனையவை நல்ல நனி கூடும் இன்பம்
இயல் கொள நண்ணியவை.

அந்நகரத்தின் ஒரு புறத்தில் கடைத்தெருக்களும், வேறொரு புறத்தில் வணிகர்களுடைய தெருக்களும், பிறிதொரு புறத்தில் வேளாளர்களது தெருக்களும் இருந்தனவென்றும் அவை அனைவர்க்கும் இன்பமளிப்பனவாயிருந்தனவென்றும் கூறுகிறார்:

(ஆங்கு ஒருசார்) அங்கு ஒரு புறத்திலுள்ள (கடை வீதிகளில் இருப்பவையாவன:-) (உண்ணுவ) உண்ணத்

acharya.org

தக்க அரிசி, பருப்பு முதலான பொருள்கள்: (பூசுவ) உடம்பில் பூசிக்கொள்ளத்தக்க சந்தனக்குழம்பு, குங்குமக் குழம்பு, கஸ்தூரிக்குழம்பு முதலிய பொருள்கள்; (பூண்ப) அணிந்துகொள்ளவுரிய ஆபரணங்கள்; (உடுப்பவை) உடுத் துக்கொள்ளக்கூடிய ஆடைகள் முதலானவை; (மண்ணுவ) நீராடும்போது உடம்பில் தேய்த்துக்குளிப்பதற்குரிய மஞ்சள் தூள், அரப்புத்தூள் முதலான பொருள்கள்; (மலைய மணி பொன்) மலையில் தோன்றிய மணிகள் பொன் முதலிய பொருள்கள்; (கடல) கடலில் தோன்றும் முத்து பவழம் முதலிய பொருள்கள்; (பண்ணிய) கைத்திறமையால் செய்யப்பெற்ற பொருள்கள். (மறுகு ஒரு சார்) இவ்வளவு பொருள்களும் நிறைந்த கடைவீதிகள் ஒரு புறத்தில் உள்ளன என்றதாயிற்று. 'மறுகு' என்னும் பதத்தை வருவித்துக்கொள்க. (மாசறு பயந்தரு காருகப் புண்ணிய வணிகர் புனைமறுகு ஒரு சார்) குற்றமற்றவர்களும், பல பொருள்களைத் தருகிறவர்களும், ஆடை நெய்கின்றவர் களும் புண்ணியச் செயல்கள் நிறைந்தவர்களுமான வணி கர்கள் வாழும் அழகிய தெருக்கள் ஒரு பக்கத்தில் இருந்தன. **புனை**–அழகிய. **மறுகு**–வீதிகள். **காருகவணிகர்**– ஆடைநெய்வோர். (மென்புல வன்புலக் களமர் உழவர் கடிமறுகு பிறசார்) மருதமும், நெய்தலுமான மென்புலத் திலும், குறிஞ்சியும், முல்லையுமான வன்புலத்திலும் பயிர்த் தொழில் செய்யும் களமரும், அக்களமரைக்கொண்டு பயிர் விளைவித்துப் பயனுண்டாக்கும் உழவரும் கூடிவாழும் வீதிகள் மற்றொரு பக்கத்திலிருந்தன. (விளைவதை வினை எவன்) இவர்களில்லாவிடில் நாட்டில் பொருள்கள் விளைவ தெப்படி? வினைதொழில்கள்தான் நடப்பதெப்படி? என்று இவர்களின் சிறப்பைக் காட்டுகிறார். (ஆங்க) அந்நகரில், (அணையவை நல்ல) அத்தகைய நல்ல வீதிகள், (நனிகூரும்) மிகுதியாக இருந்தன. (இன்பம் இயல் கொள நண்ணியவை) அவை தம்மிடம் வாழும் மக்கள் இன்பத்தை எளிதாகப் பெறுமாறு வசதிகள் வாய்க்கப்பெற்றிருந்தன.

acharya.org

இவ்வடிகளிலிருந்து சங்ககாலத்தில் அந்தணர் தம் முடைய ஆசாரத்திற்கு ஏற்பத் தனியான தெருக்களில் சிறப்புற வாழ்ந்தார்கள் என்றும், வணிகர், உழவர் முத லான மற்றைச் சாதியார்கள் தனித்தனித் தெருக்களில் கூடி வாழ்ந்தார்கள் என்றும், இதனுல் அனைவர்க்கும் இன்பம் விளைந்ததென்றும் விளங்குகிறது; இக்காலத்தில், இப்படித் தனித்தெருக்களில் ஒவ்வொருவகையான சாதிகள் வாழ்வதைச் சிலர் வெறுப்பது மனமயக்கத்தினுல் ஏற் பட்டதே என்று தெளிவாகிறது.

வண்டு பொரேரென எழ,
வண்டு பொரேரென எழும்;
கடிப் புகு வேரிக் கதவமிற் ரேட்டி,
கடிப்பு இகு காதில் கனம் குழை தொடர—
மிளிர் மின் வாய்ந்த விளங்கு ஒளி நுதலார்
ஊர் களிற்றன்ன செம்மலோரும்
வாய் இருள் பனிச்சை வரி சிலைப் புருவத்து
ஒளி இழை ஒதுங்கிய ஒண் நுதலோரும்
புலத்தோடு அளவிய புகழ் அணிந்தோரும்,
நலத்தோடு அளவிய நாண் அணிந்தோரும்,
விடையோடு இகலிய விறல் நடையோரும்,
நடை மடம் மேவிய நாண் அணிந்தோரும்,
கடல் நிரை திரையின் கரு நரையோரும்,
சுடர் மதிக் கதிரெனத் தூ நரையோரும்—
மடையர், குடையர், புகையர், பூ ஏந்தி,
இடை ஒழிவு இன்றி, அடியுறையார் ஈண்டி,
விளைந்தார் வினையின் விழுப்பயன் துய்க்கும்
துளங்கா விழுச் சீர்த் துறக்கம் புரையும்—
இரு கேழ் உத்தி அணிந்த எருத்தின்
வரை கெழு செல்வன் நகர்.

acharya.org

இவ்வடிகளில் இருந்தையூரிலிருந்த ஆதிசேஷனுடைய கோயிலில் பலவகைப்பட்ட மக்கள் வணங்கி நிற்பர்; அதனால் அக்கோயில் மோக்ஷலோகமான வைகுந்தம்போல் விளங்கியது என்கிறார்.

முதலில் காதலிகளோடு கூடிய காதலர் அக்கோயிலில் நிறைவதைக் குறிக்கிறார். முதல் ஐந்து அடிகள் காதலிகளை வருணிப்பவை; (வண்டு பொரேரே என...நுதலார்) 'கடிப்பு' என்னும் காதணி (கர்ணபூரணம்), காதைப் பெருக்கிக் கொள்வதற்காகப் பெண்கள் இட்டுக் கொள்வது; கனங் குழை என்னும் பொற்காதணி, பெருகிய காதில் பெண்கள் அணிந்துகொள்வது. (கடிப்பு இகு காதில் கனங்குழை தொடர வண்டு பொரேரே என எழ) பெண்கள் கடிப்பைக் கழற்றிவிட்டுக் கனங்குழையை அணிந்துகொள்ளக் கையை அசைக்கும்போது அவர்களுடைய சங்கு வளைகள் 'பொரேரே' என்று ஒலிசெய்கின்றன. **வண்டு**—வளைகள். **கடிப்பு இகு**—கடிப்பு தொங்கும். **தொடர**—அணிய. (கடி வேரி தோட்டி கதவம் புகு இல் வண்டு பொரேரே என எழும்) மணமும், தேனும் மாறாத, இதழ்களைக் காவற்கதவாகக்கொண்ட வீடுகள் போன்ற (அப்பெண்களணிந்த) பூக்களிலிருந்து வண்டுகள் (வளையொலியைக் கேட்டுச்) சடக்கென விரை வாக எழுகின்றன. **கடி**—மணம்; **வேரி**—தேன்; **தோட்டிக் கதவம்**—இதழ்களாகிற காவற்கதவுகள்; **புகு**—பொருந்திய; **இல்**—பூக்களாகிற வீடுகள். (மிளிர் மின் வாய்ந்த விளங் கொளி நுதலார்) (கனங்குழையின்) மிகுந்த ஒளி பொருந்தியதனால் ஒளி வீசுகின்ற நெற்றியை உடைய பெண்கள்; **மின்**—ஒளி. **நுதல்**—நெற்றி. (ஊர் களிற்றன்ன செம்மலோரும்) இத்தகைய பெண்கள் ஏறிச்செல்லும் ஆண்யானைகள் போன்ற காதலர்களும். (இருள்வாய் பனிச்சை வரிசிலைப் புருவத்து ஒளியிழை ஒதுங்கிய ஒண்நுதலோரும்) இருள் போன்ற கூந்தலையும், கட்டமைந்த வில்லையொத்த புருவத் தையும், ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்துள்ள ஒளி

acharya.org

வீசும் நெற்றியையும் உடைய பெண்களும்; **இருள்வாய்**—இருள்போன்ற, **பனிச்சை**—கூந்தல். **வரி சிலை**—கட்டமைந்த வில். **இழை**-ஆபரணங்கள், **ஒதுங்கிய**—பொருந்திய. (புலத்தோடு அளவிய புகழ் அணிந்தோரும்) அறிவோடு கூடிய புகழையே ஆபரணமாகக்கொண்ட புலவர்களும். **புலம்**—அறிவு. **அளவிய**—கலந்த. (நலத்தோடு அளவிய நாண் அணிந்தோரும்) கற்பு முதலிய நற்குணங்களோடு கூடிய நாணத்தையே ஆபரணமாகக்கொண்ட மங்கையரும். (விடையோடு இகலிய விறல் நடையோரும்) எருதோடு போட்டியிடும் வெற்றி நடை வீரர்களும். **விறல்**—வெற்றி. **இகலிய**—போட்டியிடும். (நடை மடம் மேவிய நாண் அணிந்தோரும்) ஒழுக்கமும் இளமையும் பொருந்திய நாணமுடைய இளமங்கையரும். **நடை**-ஒழுக்கம். (கடல் நிரை திரையின் கருநரையோரும்) கடலில் வரிசையாகத் தோன்றும் அலைகளைப்போலே கருமையும் வெண்மையும் கலந்த கேசங்களையுடைய நடுத்தரவயதினரும். **திரை** — அலை. (சுடர்மதிக் கதிரெனத் தூநரையோரும்) ஒளிபொருந்திய சந்திரனின் கிரணம்போலே முற்றும் நரைத்த கேசங்களையுடைய முதியவர்களும். (மடையர் குடையர் புகையர் பூ ஏந்தி) ஆதிசேஷன் அமுது செய்வதற்காக உணவுப்பொருள்களையும், மங்கலப்பொருளான குடையையும், நறுமணப்புகைகளையும், பூக்களையும் சுமந்துகொண்டு. **மடை**—சோறு. (இடையொழிவின்றி அடியுறையார் ஈண்டி) அவனுடைய திருவடி நிழலில் வாழ்வதற்காக இடைவிடாமல் திரண்டு நிற்பதால். (விளைந்தார் வினையின் விழுப்பயன் துய்க்கும் துறக்கம் புரையும்) முற்றிய உபாயாநுஷ்டானத்தின் சிறந்த பயனை அனுபவிக்கும் மோக்ஷ லோகத்தை ஒத்திருக்கும். **விளைந்து ஆர்**—பயன் கொடுப்பதற்கு ஏற்றவாறு முதிர்ந்து நிற்கும். **வினை**—கர்ம ஜ்ஞாந பக்தியோகங்கள் முதலான மோக்ஷோபாயங்கள். **விழுப்பயன்**—இவ்வுபாயங்களின் சிறந்த பயன். **துய்க்கும்**—அநுபவிக்கும். **துறக்கம்**—துன்பங்களைத் துறக்கும் மோக்ஷலோகம். அப்படியானால் மோக்ஷவுலகில் இன்ப

acharya.org

மில்லேயோ? இந்திராதிலோகங்களைப்போலே அழிவுள்ளதோ? எனில்; (துளங்கா விழுச்சீர் துறக்கம் புரையும்) அழிவு முதலான மாறுபாடுகள் அற்றதாய்; பேரின்பம் முதலான பெருமைகளை உடையதான மோக்ஷலோகத்தை ஒக்கும்; இந்திராதி தேவர்களின் 'சாறுகொள் துறக்கம்' போன்று அற்பமாயும், நிலையற்றதாயும் இராமல், "நாறு இணர்த்துழாயோன் நல்கும் வீறு பெறு துறக்கம்" ஆகையாலே, இது அளவற்றதாயும், நிலையாயும் இருப்பது என்று காட்டுகிறார். **புரையும்—ஒத்திருக்கும்.** இப்படி மோக்ஷவுலகை ஒத்திருப்பது எதுவெனில்: (இரு கேழ் உத்தி அணிந்த எருத்தின் வரை கெழு செல்வன் நகர்) கருநிறம் பொருந்திய இரண்டு படப்புள்ளிகள் அமைந்த தலையையுடையவனாய், மலைபோன்ற வடிவையுடையவனான ஆதிசேஷனுடைய கோயிலே மோக்ஷலோகத்தை ஒத்திருப்பது. **கேழ்**—நிறம்; **உத்தி**—படப்புள்ளி; **எருத்து**—தலை; **வரை கெழு**—மலைபோன்ற; **நகர்**—கோயில். (செல்வன்) "**சென்றால் குடையாம்**" என்கிறபடியே பரமபுருஷனுக்கு எல்லா விதமான கைங்கரியங்களையும் செய்யும் செல்வத்தையுடையவன். "**லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:**" என்று வால்மீகியுரைத்தாற்போலே.

வண்டொடு தும்பியும் வண் தொடை யாழ் ஆர்ப்ப,
விண்ட கட கரி மேகமொடு அதிர,
தண்டா அருவியொடு இரு முழவு ஆர்ப்ப,
அரி உண்ட கண்ணுறொடு ஆடவர் கூடிப்
புரியுண்ட பாடலொடு ஆடலும் தோன்ற,
சூடு நறவொடு காமம் முகிழ் விரிய,
சூடா நறவொடு காமம் விரும்ப,
இனைய பிறவும், இவை போல்வனவும்,
அனையவை எல்லாம் இயையும்—புனை இழைப்
பூ முடி நாகர் நகர்.

இவ்வடிகளில் அவ்வாதிசேஷனுடைய கோயிலை மேலும் வர்ணிக்கிறார்.

acharya.org

(வண்டொடு தும்பியும் வண் தொடை யாழ் ஆர்ப்ப) வண்டுகளும் தும்பிகளும் வளம்மிக்க நரம்பின் தொடர்ச்சியையுடைய யாழிசையோடு பொருந்தி ஒலிக்க. **வண் தொடை**—வளம்மிக்க நரம்பின் தொடர்ச்சி. (விண்ட கட கரி மேகமொடு அதிர) வாயைத் திறந்து பிளிறுகின்ற மதயானை மேகத்தின் முழக்கத்தோடு சேர்ந்து முழங்க. **விண்ட**—வாய்திறந்து பிளிறிய. **கட கரி**—மதயானை. (தண்டா அருவியொடு இரு முழவு ஆர்ப்ப) நீங்காத அருவியின் ஓசையோடு பெரிய மத்தளம் ஒலிக்க. **தண்டா**—நீங்காத. **இரு**—பெரிய. (அரியுண்ட கண்ணுறரொடு ஆடவர் கூடிப் புரியுண்ட பாடலொடு ஆடலும் தோன்ற) செவ்வரி பொருந்திய மையுண்ட கண்களையுடைய ஆடற்பெண்களோடு கூத்தர் ஒன்று கூடி யாவரும் விரும்பும் பாடல்களைப்பாடி, அனைவரும் காணும்படி ஆடலையும் நிகழ்த்த. **புரியுண்ட**—விரும்பத்தக்க. (சூடு நறவொடு காமம் முகிழ் விரிய சூடா நறவொடு காமம் விரும்ப) சூடத்தக்க நறவப் பூவோடு, அவற்றைச் சூடிய பெண்களின் உள்ளத்தில் அரும்பிய காமமும் மலர. சூடத்தகாததாய் பருகவே தக்கதான நறவாகிற கள்ளோடு காமத்தையும் ஆடவர் விரும்ப. நறவு என்பது ஒருவகைப் பூவிற்கும், கள்ளிற்கும் பொதுப்பெயர். **சூடு நறவு** என்று சூடக்கூடிய பூவையும், **சூடா நறவு** என்று மற்றையதான கள்ளையும் குறிக்கிறது. பெண்கள் சூடும் நறவம்பூவோடு அவர்களுடைய காதலும் முகிழ்விரிகிறது; ஆடவர் சூடாநறவோடு காமம் விரும்புகிறார்கள் என்று பொருத்தம் நோக்கி வருவித்துப் பொருள்கொள்ளப்பட்டது. "சூடு நறவொடு **தாமம்** முகிழ் விரிய" என்று பாடமானபோது 'நறவப் பூமாலை முகிழ் விரிய' என்று பொருளாகிறது. (இனைய பிறவும் இவை போல்வனவும் அனையவை எல்லாம் இயையும்) இவை போன்ற பல காட்சிகளும், இத்தகைய மற்றும் பல இனிய காட்சிகளும் பொருந்திநிற்கும். எவ்விடத்தில் ? எனில்: (புனை இழைப் பூ முடி நாகர் நகர்) அழகிய ஆபரணங்களை

acharya.org

அணிந்த அழகிய முடியையுடைய ஆதிசேஷனுடைய கோயிலிலே என்கை. **புனை**—அழகிய; **பூ—**அழகிய.

மணி மருள் தகை வகை நெறி செறி ஒலி பொலி
அவிர் நிமிர் புகழ் கூந்தல்,
பிணி நெகிழ் துணையிணை தெளி ஒளி திகழ் ஞெகிழ் தெரி அரி
மது மகிழ்பு அரி மலர் மகிழ் உண்கண், வாணுதலோர்—
மணி மயில் தொழில் எழில் இகல் மலி திகழ் பிறிது
இகழ் கடுங் கடாக் களிற்று அண்ணலவரோடு,
அணி மிக வந்து இறைஞ்ச, அல் இகப்ப, பிணி நீங்க,
நல்லவை எல்லாம் இயைதரும்—தொல் சீர்
வரை வாய் தழுவிய கல் சேர் கிடக்கைக்
குளவாய் அமர்ந்தான் நகர்.

பெண்கள், தம் கணவர்களோடு மயில்போல் நடந்து சென்று, ஆதிசேஷன் கோயிலை அடைந்து வணங்கித் துன்பமெல்லாம் நீங்கி இன்பம் அடைவர் என்கிறார் இவ்வடிகளில்.

(மணி மருள்...கூந்தல்) நீலமணி போன்ற கருநிறம் பொருந்திய அழகையும், முடிக்கப்படும் வகைகளையும், உயர்ந்தும் தாழ்ந்தும் விளங்குகின்ற நெருங்கிய நெறிப்பையும், தழைத்தும் பொலிவுபெற்றும் விளங்கும் சிறப்பையும், மிக்க புகழையும் உடைய கூந்தலையுடைய வாணுதலோர்—என்று அடுத்த அடியின் கடைசியில் உள்ள பதத்தோடு கூட்டுவது. **மருள்**—ஒத்த. **தகை—**அழகு. **வகை**—சுருள், குழல், பனிச்சை, விலோதம், கொண்டை என்று ஐந்தாக முடிக்கப்படும் வகை. **நெறி—**நெறிப்பு. **ஒலி**—தழைத்த. **அவிர்**—விளங்குகின்ற, **நிமிர்—**மிக்க. (பிணி நெகிழ்...ஞெகிழ்) இப்பெண்கள் தம் கால்களில் இறுக்கமின்றி நெகிழ்ந்திருக்கும்படி கட்டிக்கொண்டுள்ள சிலம்புகள், இரண்டிரண்டாகத் தம்முள் ஒத்தும், தெளிந்த ஒளி பெற்றும் விளங்கின. **நெகிழ் பிணி—**

acharya.org

தளர்ந்த கட்டு. **துணே இணே**—ஒத்த இரண்டு. **ஞெகிழ்**—சிலம்பு. (தெரி அரி...வாள் நுதலோர்) ஒளி பொருந்திய நெற்றியையுடைய அப்பெண்கள் ஆராய்ந்து வடிகட்டிய மதுவையுண்டு மகிழ்ந்து, அதனல் செவ்வரி படர்ந்த தாமரை போன்ற மகிழ்ச்சி பெற்ற மையுண்ட கண்களே உடையவராயிருந்தனர். **தெரி அரி**—ஆராய்ந்து வடிகட்டப் பட்ட. **அரி**—செவ்வரி. **மகிழ்**—களிப்பு. **வாள் நுதலோர்**—ஒளிபொருந்திய நெற்றியை உடையோர். இவ்வளவும் பெண்களேச் சிறப்பிப்பவை. முற்கூறியபடியான கூந்தலே யும், சிலம்பிணேயும், கண்களேயும் உடைய பெண்கள் செய் ததைக் கூறுகின்றன இனிவரும் அடிகள்: (மணி மயில் தொழில் எழில் இகல்) நீலமணி போன்ற நிறத்தையுடைய மயிலின் தொழிலாகிய நடையோடும், எழிலாகிய அழ கோடும் போட்டியிடுகின்றது இப்பெண்களின் நடையும் அழகும். **இகல்**—போட்டியிடும். (மலி திகழ்) திரளாகத் திகழ்கின்றனர் இப்பெண்கள். **மலி**—திரள். (பிறிது இகழ்) நடையிலும், அழகிலும் மிக்க அன்னம் கிளி முதலான மற்றவைகளே, இவர்கள் தங்கள் நடையாலும் அழகாலும் இகழ்ந்திருக்கின்றனர். (அணிமிக) ஆபரணங்களே மிகுதி யாகப் பூண்டிருக்கின்றனர் இப்பெண்கள். (கடுங்கடாக் களிற்று அண்ணல் அவரோடு வந்து இறைஞ்ச) மிக்க மதத்தையுடைய யானேபோன்ற தங்கள் கணவன்மார்க ளோடு இவ்வாதிசேஷன் கோயிலுக்கு வந்து வணங்கு கிருர்கள். **கடுங்கடா**—மிக்க மதம். **களிற்று அண்ணல்**—பலம், நடை முதலானவற்றில் மதங்கொண்ட யானே போலிருக்கும் கணவர்கள். இப்படி வணங்குவதால் அவர் களுக்கு ஏற்பட்ட பயன் யாது? எனில்: (அல் இகப்ப) அவர்களுடைய மனத்துன்பங்கள் அனேத்தும் நீங்கு கின்றன; **அல்**—அல்லல் என்னும் பதம் குறைந்து கிடக் கிறது. மேலே பிணி என்று உடல் நோயைத் தனியே எடுக்கையாலே, இது இங்கு மனநோயை மாத்திரம் குறிக்கிறது. (பிணி நீங்க) உடல் நோய்களும் நீங்கு

acharya.org

கின்றன. இப்படி அநிஷ்டநிவ்ருத்தி (தீயவை நீங்குவது) மாத்திரமேயோ? எனில்: (நல்லவை எல்லாம் இயைதரும்) உலகில் புருஷார்த்தஙகளாகப் புகழ்பெற்ற அறம், பொருள், இன்பம், வீடு என்னும் எல்லா நற்பயன்களும் அவரவர் விருப்பத்துக்கு ஏற்றவாறு இவர்களை அடைகின்றன என்கை. (தொல்சீர்) இத்தகைய பழமையான சிறப்பையுடையது இக்கோயில் என்கை. (வரைவாய் தழுவிய கல்சேர் கிடக்கைக் குளவாய் அமர்ந்தான் நகர்) மலைச்சாரலை ஒட்டியிருப்பதாய், கல்லாலான கர்ப்பக்ருஹம் அமையப்பெற்ற குளவாயிலே கோயில்கொண்டிருக்கும் ஆதிசேஷனின் கோயிலே இத்தகையது. "ஒரு சார் மலை" என்று இருந்தையூரின் ஒரு புறத்திலே மலையிருந்ததாகவும், "ஒரு சார் கயம்" என்று மறுபுறத்தில் குளமிருந்ததாகவும் கூறுகையாலே, குளக்கரையிலே மலையையொட்டி ஆதிசேஷன் கோயில் இருந்ததென விளங்குகிறது. கால வெள்ளத்தில் இப்போது இது அழிந்துள்ளது. (குளவாய்) குளக்கரையில் அமைந்ததாகையாலே குளவாய் என்று பெயர்பெற்றது.

திகழ் ஒளி முந்நீர் கடைந்த அக்கால், வெற்புத்
திகழ்பு எழ வாங்கித் தம் சீர்ச் சிரத்து ஏற்றி,
மகர மறி கடல் வைத்து நிறுத்து,
புகழ்சால் சிறப்பின் இரு திறத்தோர்க்கும்
அமுது கடைய, இரு வயின் நாண் ஆகி,
மிகாஅ இரு வடம் ஆழியான் வாங்க,
உகாஅ வலியின் ஒரு தோழம் காலம்
அறாஅது அணிந்தாரும் தாம்;
மிகாஅ மறலிய மே வலி எல்லாம்
புகாஅ, எதிர் பூண்டாரும் தாம்;
மணி புரை மா மலை ஞாறிய ஞாலம்
அணிபோல் பொறுத்தாரும் தாஅம்; பணிவு இல் சீர்ச்
செல் விடைப் பாகன் திரிபுரம் செற்றுழி,

acharya.org

கல் உயர் சென்னி இமய வில் நாண் ஆகித்
தொல் புகழ் தந்தாரும் தாம்.

இப்பதினைந்து அடிகளாலும், ஆதிசேஷனுடைய பல வகைப் பெருமைகளைக் கூறுகிறார்.

(திகழ் ஒளி முந்நீர் கடைந்த அக்கால்) தூய வெள்ளை ஒளி திகழும் பாற்கடலைக்கடைந்த அக்காலத்தில். **முந்நீர்**— ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்னும் மூன்று நீர்க ளால் ஆன கடல். (திகழ்பு வெற்பு எழ வாங்கி) விளங்கா நிற்கும் மந்தரமலையை மேலே எடுத்து. (தம் சீர் சிரத்து ஏற்றி) உலகையே தாங்கும் பெருமையை உடைய தம் தலைகளின்மேலே அம்மலையை ஏற்றி. **சீர்** — பெருமை; **சிரம்**—தலை. (மகரம் மறி கடல் வைத்து) திமிங்கிலங்கள் உலாவும் அப்பாற்கடலிலே மத்தாக நாட்டி. **மறி** — உலாவும். (நிறுத்து) அது அசையாதபடி நிறுத்தி. (புகழ்சால் சிறப்பின் இருதிறத்தோர்க்கும் அமுது கடைய) புகழமைந்த சிறப்பையுடைய தேவர் அசுரர் ஆகிய இரு வகுப்பினர்க்கும் அமுதத்தைக் கடைந்து கொடுக்க. (மிகாஅ இருவடம் ஆழியான் வாங்க) மிகவும் நீண்டுநின்ற கடைகயிறின் இரண்டு புறங்களையும், சக்கரத்தை ஏந்தி நிற்கும் திருமால் பிடித்துக் கடைய. (இருவயின் நாண் ஆகி) இருபுறமும் கடைகயிறாகி. வாஸுகியே கடைகயிறு என்று புராணங்களில் கூறப்பட்டபோதிலும், தன் அடியானான வாஸுகிக்குத் தன் அமிசத்தை ஆதிசேஷனே கொடுத்திருந்தபடியால், இங்கு அந்த ஆதிசேஷனே கடைகயிறானதாகக் கூறப்படுகிறது. (உகாஅ வலியின்) அழிவதோ குறைவதோ செய்யாத தன் பலத்தாலே. (ஒரு தோழம் காலம் அறாஅது அணிந்தாரும் தாம்) 'தோழம்' என்பது ஒரு பேரெண்ணின் பெயர்; மிகநீண்ட காலம் இப்படிக் கடல் கடையப் பட்டதாகையாலே, அக் காலம் முழுவதும் (வாஸுகியாகிற) அக்கயிறு அறுந்து போகாதபடி தன் சக்தியை அக்கடைகயிற்றுக்குக்

சா—24

acharya.org

கொடுத்து மந்தரமலையை அழகு செய்ததும் இவ்வாதி சேஷனே என்கை. ஆக, மந்தரமலையைப் பறித்துக் கொண்டுவந்து நாட்டி, கடைகயிருனதும் ஆதிசேஷனே என்றதாயிற்று. மந்தரமலையைப் பறித்துக் கடலிலே நாட்டியது திருமாலே என்று சில புராணங்களில் காண்கையாலே, அதற்குச் சேர இவ்வடிகளுக்கு வேறுவகையாகவும் பொருள் கொள்ளலாம். (ஆழியான் திகழ்பு வெற்பு எழ வாங்கி) சக்கரத்தானுகிற திருமால்—விளங்காநிற்கும் மலையை மேலே எடுத்து. (மகர மறிகடல் வைத்து) மகரங்கள் உலாவும் கடலிலே மத்தாக நாட்டி. (தம் சீர் சிரத்து ஏற்றி நிறுத்து) ஆமையான தன் பெருமைமிக்க முதுகிலே அம்மலையைச் சுமந்து அமிழாதபடி நிறுத்தி. **சிரம்—முதுகு.** (புகழ்சால் சிறப்பின் இரு திறத்தோர்க்கும் அமுது கடைய மிகாஅ இருவடம் வாங்க) புகழ் அமைந்த சிறப்பையுடைய தேவாசுரர்களுக்கு அமுதத்தைக் கடைந்து கொடுப்பதற்காக,கடைகயிற்றின் நீண்ட இருபுறத்தையும் பற்றிக்கடைய. ஆக, இவ்வளவும் திருமால் செய்ததைச் சொல்லுகிறது. (இருவயின் நாண் ஆகி, உகாஅ வலியின் ஒரு தோழம் காலம் அறாஅது அணிந்தாரும் தாம்) என்று ஆதிசேஷன் செய்ததைச் சொல்லுகிறது. இதற்குப் பொருள் முன் போலவே. (மிகாஅ மறலிய மேவலி எல்லாம் புகாஅ எதிர் பூண்டாரும் தாம்) பூலம் மிகுந்து நின்ற காற்றுக் கடவுளின் மிகுந்த பூலம் முழுவதும் (மேருமலையை) அணுகாதபடி எதிரிட்டு நின்றவரும் இவ்வாதிசேஷனே. **மறலி**—பகைவன்; (இங்கு) வாயு. ஒரு காலத்தில் வாயுதேவனுக்கும், ஆதிசேஷனுக்கும் பூலத்தில் யார் பெரியவர் என்னும் போட்டியுண்டாக, மேருமலையின் சிகரங்களில் மூன்றைத் தான் பெயர்த்துத் தள்ளுவதாகவும், ஆதிசேஷன் வலிமிகுந்தவனுல் அதைக்காக்கலாம் என்றும் வாயுதேவன் கூறி, அப்படியே தன் பூலத்தையெல்லாம் கொண்டு காற்றடிக்க, அவ்வலிமையில் சிறிதும் அம்மேருவை அணுகாதபடி தன் ஆயிரம் படங்களாலும் அதை அணைத்துக் காத்தான்

acharya.org

ஆதிசேஷன்—என்னும் புராணவிருத்தாந்தத்தைக் கூறுகிறார் இவ்வடிகளில். (மணிபுரை மாமலை ஞாறிய ஞாலம் அணி போல் பொறுத்தாரும் தாஅம்) நீலமணியை ஒக்கும் கருநிறம் பொருந்திய பெரிய மலைகளோடு விளங்கும் இவ்வுலகை ஓர் ஆபரணம்போலே தலையில் தாங்கிக்கொண்டிருப்பவனும் ஆதிசேஷனே! **ஞாறிய** — விளங்கப்பெற்ற. (பணிவில் சீர் செல் விடைப் பாகன் திரிபுரம் செற்றுழி கல் உயர் சென்னி இமயவில் நாண் ஆகித் தொல் புகழ் தந்தாரும் தாம்) பணியவேண்டியவர்களுக்கும் பணியாதவன் என்னும் சிறப்பையுடையவனாய், ஓடுவதையே இயல்வாகக்கொண்ட எருதை ஊர்கின்றவனான சிவன் திரிபுரத்தை அழித்தபோது, அவன் தாங்கிய மிகவுயர்ந்த உச்சியையுடை இமயமலையாகிற வில்லுக்கு நாணாயிருந்து, அத்திரிபுரத்தை வெல்ல உதவிசெய்து, 'திரிபுரம் செற்றவன்' என்னும் புகழை அவனுக்குக் கொடுத்தவனும் இவ்வாதிசேஷனே! (பணிவில் சீர்) **"ருத்₃ரோ வை க்ரூர:"** [உருத்திரன் கொடியவனன்றோ] என்று வேதமே சொல்லும்படி ஈஶ்வராபி₄மானியாய், எவர்க்கும் பணியமாட்டேன் என்றிருப்பதே இவனுடைய பெருமை. ஸர்வேஶ்வரனோடும் எதிரம்பு கோத்தவனன்றோ இவன். (செல்விடைப்பாகன்) போதாக்குறைக்கு முரட்டு எருது ஒன்றையும் வாஹனமாகக் கொண்டவன். (திரிபுரம் செற்றுழி) அவன் செய்யத் தொடங்கிய காரியமோ அழிக்க அரிதான திரிபுரங்களை அழித்தல். (கல் உயர் சென்னி இமயம் வில்) அவன் தாங்கிய வில்லோ மலைகள் அனைத்திலும் உயர்ந்த உச்சியையுடைய இமயம். (நாணாகி...) இந்த சந்தர்ப்பத்திலே நாண் மிக உறுதியாயிருக்கவேண்டுமன்றோ; நாண் சிறிது உறுதிகுலைந்தாலும், **"தஸ்யேந்த்₃ரோ வம்ரீரூபேண த₄நுர் ஜ்யாம் அசி₂நத் — ருத்₃ரஸ்ய ஶிர உத்பிபேஷ"** [தை-ஆர 1-5] [இந்திரன் கரையானாகி வில்நாணை அறுத்தான்; நாண் உருத்திரனின் சிரத்தை அறுத்து உயர எறிந்தது.] என்று யஜுர்வேதத்திற் சொல்லியபடியே இவன் பூட்டிய

acharya.org

வில்நாணே இவன் தலையை அறுத்து விடுமன்றே. அப்படியாகாமல், உறுதியுள்ள நாணாயிருந்த ஆதிசேஷனேயன்றே திரிபுரம் எரித்த புகழைச் சிவனுக்குத் தந்தது என்று கருத்து. இதிலிருந்து திரிபுரம் செற்றதைக்கொண்டு சிவனுக்குப் பரத்துவம் சொல்லும் சைவர்கள் கொள்கை பழந்தமிழரால் ஆதரிக்கப்படவில்லை என்று விளங்குகிறது.

"ஆவாய் அதன் கன்றாய் அந்தரியாமிப்பொருளாய்
ஏவாய்ப் பவுத்தனுமாய் எம்பெருமான்—காவாக்கால்
போரும் பொருமோ புராந்தகனென்றே பேரும்
சீரும் பெறுமோ சிவன்"

என்று பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் பாடியபடியே பலவிதங்களிலும் எம்பெருமான் உதவியதாலேயன்றே சிவன் திரிபுரம் எரித்தது. ப₄ாரத ஹரிவம்ஶாதி₃களில் இது மிகப் பிரஸித்தமன்றே.

"விஷ்ணுராத்மா ப₄க₃வதோ ப₄வஸ்யாமிததேஜஸ: ।
தஸ்மாத்₃ த₄நுர்ஜ்யா ஸம்ஸர்க்க₃ம் ஸ விஷேஹே
மஹேஶ்வர: ॥" [ப₄ார-கர்ண 35.50]

[அளவற்ற தேஜஸ்ஸை உடைய பகவான் உருத்திரனுக்கு விஷ்ணுவானவர் ஆத்மாவாயிருந்தார்; அதனாலேயே மஹேஶ்வரரான அவர் வில்லை நாணேற்ற முடிந்தது.] என்றாரன்றே வியாஸரும். ஆக, இவ்வளவால் ஆதிஶேஷனுக்கு உள்ள அரிய பெருமைகள் உரைக்கப்பட்டன.

அணங்குடை அருந்தலை ஆயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத்து அண்ணலை வணங்கி,
நல் அடி ஏத்தி நிற் பரவுதும்—
எல்லேம் பிரியற்க எம் சுற்றமொடு ஒருங்கே.

இப்பாடலின் கடைசி அடிகளான இவற்றில், ஆதிசேஷனை முன்னிட்டுக்கொண்டு திருமாலை வணங்கி, என்றும் அவனைப் பிரியாதிருக்க வேண்டுகிறார்.

acharya.org

(அணங்குடை அருந்தலை ஆயிரம் விரித்த கணங்கொள் சுற்றத்து அண்ணலை வணங்கி) கண்டவர்க்கு அச்சத்தை விளைக்கும் தன்னுடைய அரியவையான ஆயிரம் தலைகளையும் குடைபோலே விரித்து உனக்கு நிழலைத்தருகிறவனும், கூட்டமாக விளங்கும் துணைவரை உடையவனுமான ஸ்வாமியான ஆதிசேஷனை வணங்கி; புருஷகாரத்தை முன்னிட்டே பரமபுருஷனைப் பற்றவேண்டும் என்னும் வைஷ்ணவ ஸித்₃த₄ாந்தத்தைக் காட்டுகிருர். (நின் நல் அடி ஏத்திப் பரவுதும்) நின்னிலும் சிறந்த நின் திருவடிகளை ஏத்திப் புகழ்வோம். ஏதேனும் ஒரு பயனை அபேக்ஷித்தோ புகழ்வது? எனில்: (எல்லேம் பிரியற்க எம் சுற்றமொடு ஒருங்கே) உறவினரோடு கூடிய நாங்கள் அனைவரும் ஒன்றுகூடி உன் திருவடிகளைப் பிரியாதிருக்கவேண்டும் என்பதற்காகவே புகழ்வோம். "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்" [திருப்பாவை-29] என்னும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்₃த₄ாந்தத்தின் பரமஸாரமான பரமார்த்த₂த்தைக் கூறி இப்பாடலை முடித்தாராயிற்று. "நின் திருந்தடி தலையுறப் பரவுதும்" என்று தொடங்கியவர், "நல் அடி ஏத்தி நிற்பரவுதும்" என்று முடிக்கிறபடியால், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் சங்ககாலத்தில் தமிழர்களிடையே மிகப்பரவியிருந்தது என விளங்குகிறது. திருமாலின் அடியவனை ஆதிசேஷனின் திருக்கோயிலைத் துளங்கா விழுச்சீர்த் துறக்கமான மோக்ஷலோகத்திற்கு ஒப்பிடுவதிலிருந்தும், சிவனுடைய திரிபுரமெரித்த பெருமையும் ஆதிசேஷனுல் வந்தது என்று பாடுவதிலிருந்தும் சங்ககாலத்தமிழர்கள் திருமாலையே பரம்பொருளாகக் கருதினர் என்றும், சிவன் முதலான தேவர்களை அப்படிக் கருதவில்லை என்றும் விளங்குகிறது. "துளங்கா விழுச்சீர்த் துறக்கம்" என்று அழியாத மோக்ஷலோகம் ஒன்று இருப்பதாகப் பாடுவதிலிருந்து, அத்தகைய உலகம் ஒன்று இல்லை எனக் கூறும் அத்வைதஸித்தாந்தமும், பௌத்தம் முதலான புறச்சமயங்

acharya.org

களும் சங்ககாலத்தில் தமிழகத்தில் நடையாடவில்லை என்றும் விளங்குகிறது.

இனி, பரிபாடல் திரட்டில் எட்டாவது பாடலைக் காண்போம்.

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும், சிர் ஊர்: பூவின்
இதழ் அகத்து அனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே, அண்ணல் கோயில்:
தாதின் அனையர், தண் தமிழ்க் குடிகள்;
தாது உண் பறவை அனையர், பரிசில் வாழ்நர்;
பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில் குரல் எடுப்ப
ஏம இன் துயில் எழுதல் அல்லதை,
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாது, எம் பேர் ஊர் துயிலே.

இப்பாடல் மதுரையைப் பற்றியது. மாயோனாகிற திருமாலே பிரமனைப் படைத்தவன் என்று முழங்குகை யால் திருமாலே பரம்பொருள் என்று இப்பாடலும் தெளியக் காட்டுகிறது.

(மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப் பூவொடு புரையும் சீர் ஊர்) சிறப்புடைய மதுரையாகிற ஊர், மாயோனாகிற திருமாலின் உந்தியில் பூத்த தாமரைப் பூவைப் போல் அமைந்திருக்கிறது. (பூவின் அகத்து இதழ் அனைய தெருவம்) அப்பூவின் உள்ளிதழ்களைப் போன்றவை அவ்வூரின் தெருக்கள். (இதழ் அகத்து அரும் பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்) அவ்விதழ்களின் நடுவிலே உள்ள அரிய தாமரைக் கொட்டையைப் போலே விளங்குவது ஸ்வாமியான அம்மாயோனின் கோயில். ‘அண்ணல் கோயில்’ என்று தலைவனான பாண்டியனின் அரண்மனையைக் குறிப்பதாகச் சொல்லு

acharya.org

வாருமுண்டு. இக்காலத்தில் மதுரையில் காணும் மீனுட்சி சுந்தரேசுவரர் கோவில் சங்ககாலத்திற்கு நெடுங்காலத் திற்குப் பின்னரே தோன்றியது என்பது ஆராய்ச்சியாளர் ஒருமிடருகக் கண்ட முடிவு. (தாதின் அனையர் தண் தமிழ்க்குடிகள்) அந்நகரிலே குளிர்ந்த தேனில் இனிய தமிழ்மொழியைப் பேசும் குடிமக்கள், அத்தாமரை மலரில் உள்ள மகரந்தப்பொடிகளை ஒப்பர். (தாது உண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்) அம்மக்களிடம் பரிசு பெற்று வாழ்வதற்காக வேற்று நாட்டிலிருந்து வருகின்றவர்கள், அம்மகரந்தப்பொடிகளை உண்ண வரும் வண்டுகளை ஒத்திருப்பர். இப்பெருமைகளுக்கெல்லாம் மேலானதொரு பெருமையைச் சொல்லுகிருர் இனி: (பூவினுள் பிறந் தோன்) திருமாலின் உந்தித்தாமரையில் பிறந்தவன் பிரமன். (நாவினுள் பிறந்த நான்மறைக் கேள்வி) அவ னுடைய நாவினுள் தோன்றியவை, கேட்டே அறியப்படும் நாலு வேதங்கள். இதிலிருந்து, **"யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம் யோ வை வேத₃ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை"** [ஶ்வே] [எவனொருவன் பிரமனை முன் படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசிக்கிருனே] என்று பிரமனைப்படைத்து அவனுக்கு வேதம் ஓதுவித்தவனுக உபனிஷத்தில் உத்₃கே₄ாஷிக்கப்படும் பரம்பொருள் திருமாலே என்பதே பழந் தமிழர் கருத்து என விளங்குகிறது. (நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப ஏம இன் துயில் எழுதல் அல்லதை வஞ்சியும் கோழியும் போலக் கோழியின் எழாது எம் பேர் ஊர் துயிலே) எங்களுடைய பெரிய ஊரான மதுரை—அந்த நாலு வேதங்களை (அந்தணர்) ஓதும் ஒலியானது எழுப்ப, மிக இன்பமாகத் தூக்கத்தினின்றும் எழுந்திருக் குமேயொழிய, சேர நாட்டின் தலைநகரான வஞ்சியைப் போலும், சோழநாட்டின் தலைநகரான கோழியூரைப்போலும் கோழி கூவ எழுந்திருக்காது. (வாழிய) இப்பெருமை இவ் வூருக்கு நித்யமாக விளங்குக. **எடுப்ப**—எழுப்ப. **ஏமம்**—இன்பம். **ஏம இன் துயில்**—மிக இனிய துயில். இதிலிருந்து—

acharya.org

சங்ககாலத் தமிழர்கள் பரமவைதிகர்களாயிருந்தார்கள் என்றும், வேதத்தால் முழுமுதல்வனாக முழங்கப்பட்ட திருமாலையே பரம்பொருளாகக் கொண்டிருந்தார்கள் என்றும் தெளிவாக விளங்குகிறது.

பரிபாடல் திரட்டில் பத்தாம் பாடலில் "**செய்யாட்கு** இழைத்த திலகம்போல்" [**செய்யாள்** — சிவந்த மேனியை யுடைய திருமகள்] என்று மதுரையானது லக்ஷ்மீதேவியின் திலகம்போல் விளங்கியது என்று கூறப்பட்டுள்ளது.

ஈவாரைக் கொண்டாடி, ஏற்பாரைப் பார்த்து உவக்கும்—
சேய் மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்,
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார்; மற்றையார்
போவார் ஆர், புத்தேள் உலகு ?

என்னும் பனிரண்டாம் பாடலில், பாண்டியனின் மதுரையிலும், முருகனின் பரங்குன்றிலும் வாழ்வாரே 'புத்தேள் உலகு' எனப்படும் தேவலோகத்திற்குச் செல்வார்கள் என்று கூறப்பட்டது. இவை தவிரக் கடவுட் குறிப்புகள் ஒன்றுமில்லை.

பரிபாடலில் முதற்பாடல் தொடங்கிக் கடவுட்குறிப்பு களுள்ள எல்லாப்பாடற் பகுதிகளையும் நாம் இதுகாறும் கண்டோம். இவற்றிலிருந்து—பரம்பொருளுக்கு உரிய எல்லாப்பெருமைகளும் திருமால் ஒருவனுக்கே கூறப்பட்டிருக்கின்றன என்பதும், சிவன் முருகன் முதலான தேவதைகளுக்கு அப்பெருமைகளில் ஒன்றுகூடக் கூறப்படவில்லையென்பதும், நேர்மாறாக (ஐந்தாம் பரிபாடலில்) சிவன் பார்வதியுடன் புணர்ச்சியை (பிராகிருதமான ஆண் பெண் சேர்க்கையை) உடையவனாயிருந்தான் என்றும், அப்புணர்ச்சியினால் உண்டானவன் முருகன் என்றும் கூறியிருப்பதிலிருந்து, சிவனும் முருகனும் விசேஷசக்தியுடைய தேவர்களாயினும், நம்மைப் போன்ற ஜீவர்களே யாவர் என்றே பழந்தமிழர்கள் கருதினார்கள் என்பதும்,

acharya.org

சிவனுடைய திரிபுரமெரித்த புகழும் திருமாலின் தூாஸனை ஆதிசேஷனல் வந்ததென்று கூறியிருப்பதிலிருந்தும் சிவனைப் பழந்தமிழர் பரம்பொருளாகக் கருதவில்லையென்பதும் தெளிவாக விளங்குகிறது. இக்கருத்துக்கள் தொல்காப்பியம் என்னும் மிகப்பழைய இலக்கண நூலிலும், சங்கநூல்களான எட்டுத்தொகையின் மற்ற நூல்களிலும், பத்துப்பாட்டிலும் வலியுறுததப்பட்டிருப்பதை விளக்குவோம் இனி.

தொல்காப்பியம்

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"

என்று, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலங்களுக்கும் உரிய திருமால், முருகன், இந்திரன், வருணன் என்னும் தெய்வங்களைக்கூற வந்தபோது தலைமைத்தெய்வமானது பற்றி மாயோனை முதலில் எடுத்தார். "அஸ்மாந் **மாயீ** ஸ்ருஜதே விஶ்வம்" [**ஶ்வே**] [மாயோன் இப்பிரகிருதியிலிருந்து உலகைப் படைக்கிறன்.] **"மாயாம் து ப்ரக்ருதிம் வித்₃யாத் மாயிநம் து மஹேஶ்வரம்"** [ஶ்வே] [பிரகிருதியை மாயை எனப்படுவதாக அறியவேண்டும்; அப்பிரகிருதியை உடையவனுகையால் மாயோன் எனப்படுகிறன் ஸர்வேஶ்வரன் என்று அறியவேண்டும்.] என்று வேதத்தில் மூலப்ரக்ருதியை நியமிப்பவனுகையாலே **'மாயீ'** எனப்பட்டவனே தமிழர்களால் 'மாயோன்' என்று வழங்கப்படுகிறன் என்பது வெளிப்படை. தொல்காப்பியர் முதலான சங்ககாலச் சான்றோர் இப்பெயரால் திருமால் ஒருவனையே குறிப்பதிலிருந்தும் பழந்தமிழர் அவனையே பரம்பொருளாகக் கருதினர் என்று விளங்குகிறது. பரிபாடல் முதலான சங்கநூல்கள் இதைக் கையிலங்கு கனியாகக் காட்டித்தருகின்றன. தெய்வம் நால்வரில் மாயோனை

சா—25

acharya.org

முதலில் எடுத்த தொல்காப்பியர், அடுத்தபடியாக இந்திரனையும் வென்ற முருகனையும், அடுத்தபடியாக தேவேந்திரனையும், அடுத்தபடியாக அவனுக்கு அடங்கிய வருணனையும் எடுப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. இதே தொல்காப்பியர், மன்னர்க்குத் திருமாலை உவமை கூறும் பூவை நிலை என்னும் புறத்துறையைக் கூறும்போது,

"மாயோன் மேஎய மன்பெருஞ்சிறப்பில்
தாவா விழுப்புகழ் பூவை நிலையும்"

என்று பாடினர். "மன்பெரும் சிறப்பில் தாவா விழுப்புகழ்" என்னும் அடைமொழிகளை "பூவை நிலை" என்னும் துறைப்பெயரோடு கூட்டிப் பொருள்கொள்வது பொருந்தாதாகையால் அவ்வடைமொழிகளை மாயோனின் சிறப்பைச் சொல்லுகின்றவையாகவே கொள்ளவேண்டும். அப்படிப் பொருள் கொள்ளும்போது **"மன் பெரும் சிறப்பு இல்**-அழியாத பெரிய சிறப்பை உடைய ஸ்தானமாகிய மோக்ஷ லோகத்தையும், **தாவா விழு புகழ்**-அழியாத சீர்மைமிக்க புகழையும் உடைய. **மாயோன்**-திருமால். **மேஎய**-பொருந்தி நிற்கும், **பூவை நிலையும்**—அரசர்க்கு, திருமால் முதலிய தேவர்களை உவமிக்கும் துறையும்" என்று இவ்வடிகளுக்குப் பொருளாகிறது. இதிலிருந்து தொல்காப்பியர்—திருமாலையே வீட்டுலகத்தை உடையவனாகவும், அழியாத புகழை உடையவனாகவும் கருதினர் என்று விளங்குகிறது. **"நாறு இணர்த் துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறு பெறு துறக்கம்"** என்று பரிபாடலில் பாடியிருப்பதும் இதையே வலியுறுத்துகிறது.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க்குரிய"

என்று முற்றுந்துறந்த முனிவர்களாகிய அந்தணர்க்குப் பூணூலும், முக்கோல் எனப்படும் திரிதண்டமும் உரியவை என்று தொல்காப்பியர் பாடுவதிலிருந்து, பழங்காலத்தில்

acharya.org

தமிழ்நாட்டில் பூணூலும் திரிதண்டமும் தரித்த வைஷ்ணவ ஸங்யாஸிகளே வாழ்ந்துவந்தனர் என்று விளங்குகிறது. பூணூலை அறுத்து ஏகதண்டத்தை தரித்த அத்வைத ஸங்யாஸிகளைப் பற்றிப் பழந்தமிழ் நூல்களில் எங்குமே கூறப்படவில்லை. இதிலிருந்து, ஆதிசங்கரர் காலத்தில் ஏற்பட்டதே இவ்வாசாரம் என்பது விளங்கும். சைவஸங்யாஸிகளைப் பற்றியும் சங்கநூல்களில் எங்குமில்லை. பூணூலும், திரிதண்டமும் இல்லாத சைவஸங்யாஸிகளும் பிற்காலத்தில் ஏற்பட்டவர்களே. கலித்தொகை பாலைக்கலியில்,

"எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை ஒழுக்கத்தீர்" [37]

என்ற பகுதியில், அந்தணர் எனப்பட்ட ஸங்யாஸிகள் கரகமும் முக்கோலும் உடையவராய், சிஷ்யர்களோடு யாத்திரையாய்ச் சென்றுகொண்டிருப்பார்கள் என்றும், அவர்கள் இறைவன் திருவடியன்றி வேறு இன்பங்களைக் கருதாதவர் என்றும் கூறப்பட்டுள்ளது. அந்த ஸங்யாஸிகளின் முக்கோல் **"உரைசான்ற** முக்கோல்" என்று சாஸ்திரங்களில் புகழப்பட்டிருப்பதாகவும் எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், நெய்தற்கலியில்,

"செக்கர்கொள் பொழுதினான் ஒலிநீவி இனநாரை
முக்கோல்கொள் அந்தணர் முதுமொழி நினைவார் போல்"

என்று, இந்த முக்கோற்பகவர் முதுமொழியாகிற வேதத்தையே எப்போதும் நினைத்திருந்தனர் என்று கூறியதிலிருந்து இவர்கள் பரமவைதிகர்கள் என்றும் விளங்குகிறது.

கலித்தொகை

கலித்தொகை என்பது, ஐந்து நிலங்களையொட்டி, குறிஞ்சிக்கலி, பாலைக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி, நெய்

acharya.org

தற்கலி என்று ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளது. இதில் முல்லை நிலத்திற்குத் திருமால் தெய்வமாகையாலே, அக்கலியைச்சேர்ந்த பல பாடல்களில், திருமாலைப்பற்றிய துதிகள் காணப்படுகின்றன. முல்லைக்கலி நாலாம் பாடலின் கடைசியில்,

"தொல் கதிர்த் திகிரியான் பரவுதும்—ஒல்கா
உரும் உறழ் முரசின் தென்னவற்கு
ஒரு மொழி கொள்க, இவ் உலகு உடன்! எனவே"

என்று, பாண்டியனின் சிறப்பின் பொருட்டுத் திருமாலைத் துதிப்போம் என்று கூறும்போது, திருமாலைத் தொன்மையான கதிர்களை-கிரணங்களை-உடைய திகிரியாகிற சக்கரத்தை உடையவன் என்று பாடப்பட்டது. இதில் திருமால் தொன்மையான-அநாதியான தெய்வம் என்று உணர்த்தப் பட்டது. ஐந்தாம் பாடலின் கடைசியில்,

"பாடு இமிழ் பரப்பு அகத்து அரவணை அசைஇய
ஆடு கொள் நேமியான் பரவுதும்"

என்று யாகபசுவாகிற ஆட்டை ஏற்றுக்கொள்பவன் நேமியானுகிற சக்ரதாரியே என்று பாடப்பட்டது. இதிலிருந்து யஜ்ஞபோக்தாவாகிற பரம்பொருள் திருமாலே என்பதே பழந்தமிழர் கொள்கையென்று பெறப்பட்டது. ஏழாம் பாடலின் கடைசியில் ஒரு நாடகக்காட்சி விவரிக்கப்படுகிறது. ஆயர் வழக்கப்படி ஒரு தலைவன் ஏறுதழுவும்போது அவன் தலையில் அணிந்திருந்த முல்லை மாலை காளையின் கொம்பில் அகப்பட்டு, அக்காளை துள்ளியதனால் அம்மாலை அருகில் நின்ற தலைவியின் கூந்தலில் வந்து விழுகிறது. அதுகண்ட ஆயர், திருமாலே அவனை அவளுக்குக் கணவனாகுமாறு காட்டியதாகக்கருதி இருவர்க்கும் மணம் முடிக்கக் கருதினர் என்று தோழி தலைவிக்குக் கூறும் பாடற் பகுதியில், **"திண்ணிதா, தெய்வமால் காட்டிற்று இவட்கு"** என்று திருமாலை **'தெய்வமால்'** என்று சிறப்பித்திருப்பதும்

acharya.org

காணவுரியது. இப்படி முல்லைக்கலியில் திருமாலைத் துதிக்கும் பழக்கம் உள்ளதைக்காணும் நடுநிலையாளர்க்கு, முல்லைக்கலி மூன்றும் பாடலின் கடைசியில்.

"குரவை தழீஇ யாம், மரபுளி பாடி,
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்"

என்று '**அழியாத சிறந்த புகழையுடைய தெய்வம்**' என்று பாடப்பட்டவன் திருமாலே என்பது எளிதில் விளங்கும். **"தாவா விழுப்புகழ் மாயோன்"** என்று தொல்காப்பியர் மாயோனைப் பாடியதையும், இங்கு **"தேயா விழுப்புகழ் தெய்வம்"** என்று முல்லைத்தெய்வமான திருமாலைப்பாடியதையும் காண்பார்க்கு, பழந்தமிழர் திருமாலையே அழியாத பரம்பொருளாகக் கருதினர் என்பது கையிலங்கு கனியெனத் தோன்றும். நாலாம் பாடலில், **"வான் உற ஓங்கிய வயங்கு ஒளிர்ப் பனைக் கொடிப் பால் நிற வண்ணன்"** என்று பலதேவனையும், **"பொரு முரண் மேம்பட்ட பொலம் புனை புகழ் நேமித் திருமறுமார்பன்"** என்று திருமாலையும் மிகச் சிறப்பித்துப் பாடிவிட்டு, **"மிக்கு ஒளிர் தாழ் சடை மேவரும் பிறை நுதல் முக்கணன்"** என்று சடைமுடி தரித்த தபஸ்வியாகச் சிவனைப் பாடியிருப்பதிலிருந்து, பழந்தமிழர் சிவனைப் பரம்பொருளாகக் கருதியதில்லை என்று விளங்குகிறது. ஐந்தாம் பாடலில், **"வள் உருள் நேமியான் வாய் வைத்த வளை"** [**நேமியான்**—சக்ரதாரி; **வளை**—ஶங்கம்;] என்று திருமாலையும், **"ஒரு குழையவன் மார்பில் ஒண் தார்"** என்று பலதேவனையும் பாடியிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. மூன்றும்பாடலில்,

"மேவார் விடுத்தந்த கூந்தற்குதிரையை
வாய் பகுத்திட்டுப் புடைத்த ஞான்று
இன்னன்கொல் மாயோன் என்று உட்கிற்று என் நெஞ்சு"

[**கூந்தற்குதிரை**— கேசி என்னும் பெயருடைய குதிரை. **வாய் பகுத்திட்டு புடைத்த ஞான்று**— வாயைப் பிளந்து

acharya.org

அழித்தபோது.] என்று குதிரை வடிவாக வந்த கேசி என்னும் அசுரனை மாயோனாகிற கண்ணன் கொன்ற வரலாறு பேசப்பட்டது.

"மல்லரை மறஞ்சாய்த்த மால்போல்" [குறிஞ்சிக்கலி 16]

"மல்லரை மறஞ் சாய்த்த மலர்த்தண்டார் அகலத்தோன்
ஒல்லாதார் உடன்று ஓட உருத்து உடன் எறிதலின்
கொல்யானை அணிநுதல் அழுத்திய ஆழிபோல்
கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலின்" [நெய்தற்கலி17]

என்ற பகுதிகளில் கண்ணன் மல்லரைக்கொன்ற வரலாறும் கூறப்பட்டது. இது கம்ஸஸபையில் சாணூரமுஷ்டிகர் களையோ, துரியோதனசபையில் பொய்யாசனமிட்டபோது படுகுழியில் இருந்த மல்லரையோ கொன்றதைக் குறிப்ப தாகக் கொள்ளலாம். இத்துடன் இந்த நெய்தற்கலிப் பாடலில் கண்ணன் பகைவர் யானையின் நெற்றியில் சக்கரப் படையை எறிந்து கொன்ற செய்தி கூறப்படுகிறது. இது எப்புராணத்தில் உள்ளதென்பதை ஆராயவேணும்.

"பால் மதி சேர்ந்த அரவினைக் கோள் விடுக்கும்
நீல் நிற வண்ணனும் போன்ம்" [முல்லைக்கலி-4]

என்னும் பகுதியில் சந்திரனைப் பாம்பினின்றும் நீலநிற வண்ணனை திருமால் விடுவித்த விருத்தாந்தம் பேசப் பட்டது. இந்நிகழ்ச்சி, **" மதி கோள் விடுத்தாய் "** [நான் திருவ 12] என்று திருமழிசையாழ்வாராலும், **"பனி சேர் விசும்பில் பான்மதிக்கோள் விடுத்தானிடம்"** [பெரிய திரு 1-8-9] **"பால்மதிக்கு இடர் தீர்த்தவன்"** [பெரிய திரு 1-8-6] என்று திருமங்கையாழ்வாராலும், " கோள்வாய் மதியம் **நெடியான்** விடுத்தாங்கு " என்று சீவகசிந்தாமணியிலும் திருமாலின் அருஞ்செயல்களில் ஒன்றாகப் பேசப்பெற்றி ருப்பது அறியத்தக்கது. இவ்விதிஹாஸமும் புராணங்களில் எங்குள்ளதென்பதை ஆராயவேண்டும். நெய்தற்கலி ஏழாம் பாடலிலே, **"ஞாலம் மூன்றடித் தாய முதல்வற்கு"** என்று உலகளந்த திரிவிக்கிரமனே முதல்வன் என முழங்கப்பட்டது.

acharya.org

"கதிர் விரி சுனேசுடர்க் கவின் கொண்ட நனஞ்சாரல்
எதிர் எதிர் ஓங்கிய மால் வரை அடுக்கத்து
அதிர் இசை அருவிதன் அம் சினை மிசை வீழ
முதிர் இணர் ஊழ் கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை
வரி நுதல் எழில் வேழம் பூ நீர்மேல் சொரிதர
புரி நெகிழ் தாமரை மலர் அம் கண் வீறு எய்தி
திரு நயந்து இருந்தன்ன தேம் கழல் விறல் வெற்ப!"
[குறிஞ்சிக்கலி-8]

என்னும் குறிஞ்சிக்கலிப்பாடலில் ஓர் அழகிய காட்சி வருணிக்கப்படுகிறது. குன்றுகள் இரண்டு எதிர் எதிராக உள்ளன. இடையே பெரிய பள்ளத்தாக்கு. அப்பள்ளத் தாக்கிலே ஒரு பாறையிலே வேங்கைமரம் ஒன்று பூத்துக் குலுங்கி நிற்கிறது. அவ்விரு குன்றுகளிலிருந்து பாய்ந்து வரும் அருவிகள் வேங்கைமரத்தின்மேல் வீழ்ந்து அதன் பூவோடு கீழே விழுவது, தாமரை மலரில் வீற்றிருக்கும் லக்ஷ்மீதேவியின் இருபக்கத்திலும் இரு யானைகள் நின்று பூவுடன் கூடிய நீரைச் சொரிவதை ஒத்துள்ளது என்பது இப்பாடலில் வருணிக்கப்படும் காட்சி. "ஹஸ்திநாத₃ ப்ரபே₃ாதி₄நீம்" "கரீஷிணீம்" என்று ஸ்ரீ ஸூக்தத்திலும்,

"கோணபத்ரக₃ஜைர் தி₃வ்யைர் ஹிரண்யகலஶோத₃கை:।
ஸம்ப்ரீதை: ஸ்நாப்யமாநாம் தாம் பே₃ாத்₄யமாநாம் ச
தைர் க₃ஜை: ॥"

[ஆஸனத்தாமரையின் ஒவ்வொரு கோணத்திலுமிருக்கும் பேரன்புகொண்ட தி₃வ்யக₃ஜங்களாலே பொற்குடநீர் கொண்டு திருமஞ்சனம் செய்விக்கப்படுபவளாகவும், பள்ளி யுணர்த்தப்படுபவளாகவும் உள்ள பிராட்டியை] என்று ஸ்வாயம்பு₄வத்திலும் கோ₄ஷிக்கப்பட்ட க₃ஜலக்ஷ்மியின் வடிவம் சங்ககாலத் தமிழர்களாலே மிகவும் போற்றப்பட்டு வந்தது என்பது இதிலிருந்து விளங்கும். இத்தகைய வடிவம் வீடுகளுக்குச்செய்யும் சித்திரவேலைப்பாடுகளிலும் அமைக்கப்பெற்றிருந்தது என்று பத்துப்பாட்டிலுள்ள

acharya.org

நெடுநல் வாடையிலும் கூறப்படுகிறது. இதிலிருந்து திருமால் வழிபாட்டைப்போலே இலக்குமி வழிபாடும் சங்ககாலத்தில் பரவியிருந்ததென விளங்குகிறது.

"இமைய வில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலே இருந்தனனுக
ஐயிரு தலேயின் அரக்கர்கோமான்
தொடிப் பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலே
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல"[குறிஞ்சிக்கலி-2]

என்னும் பாடலில், சிவன் உமையுடன் வீற்றிருந்த கயிலே மலேயை இராவணன் எடுக்கத்தொடங்கி, எடுக்க முடியாமல் துன்புற்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இங்கு சிவனே "ஈர்ஞ்சடை அந்தணன்" என்று (திருமாலின் திருவடி யிலிருந்து பிறந்த) கங்கையைத் தலேயில் தரித்த தபஸ்வி யாகப் பாடியிருப்பது காணத்தக்கது. திருமாலின் பரத்து வத்தைப் பரிபாடல் முதலானவற்றில் பலவிடங்களில் பறைசாற்றியிருப்பதுபோலே, சிவனுக்கு எங்கும் பரத்துவம் சொல்லுவதில்லே என்பதும், சிவபரத்துவஞ்சொல்லும் அடிமுடி தேடிய கதை முதலான பொய்ப்புராணக்கதை களேச் சங்கநூல்களில் எங்கும் எடுப்பதில்லே என்பதும் நடுநிலேயாளர்களால் குறிக்கொள்ளத்தக்கது. இனி, புற நானூற்றிலுள்ள கடவுட்குறிப்புகளேக் காண்போம்.

புறநானூறு

"ஏற்று வலன் உயரிய எரி மருள் அவிர் சடை
மாற்று அரும் கணிச்சி மணி மிடற்றேனும்
கடல் வளர் புரிவளே புரையும் மேனி
அடல் வெந் நாஞ்சில், பனேக் கொடியோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண் உயர் புட்கொடி விறல் வெய்யோனும்
மணி மயில் உயரிய மாறு வென்றி
பிணிமுக ஊர்தி, ஒண் செய்யோனும்—என

acharya.org

ஞாலம் காக்கும் கால முன்பின்
தோலா நல் இசை நால்வர்உள்ளும்
கூற்று ஒத்தியே, மாற்று அரும் சீற்றம்;
வலி ஒத்தியே, வாலியோனை;
புகழ் ஒத்தியே, இகழுநர் அடுநனை
முருகு ஒத்தியே, முன்னியது முடித்தலின்''

[கணிச்சி-மழு, **மணி மிடற்றோன்**-நீலகண்டன். **வளை...பனைக் கொடியோன்**-சங்கம்போல் வெளுத்தமேனியையும், போரில் வல்ல கலப்பைப்படையையும், பனைக்கொடியையும் உடைய பலதேவன். **மண்ணுறு...வெய்யோன்**-அழுக்கு நீங்கப்பெற்ற நீலமணியை ஒத்த திருமேனியையும், வானோங்கி நிற்கும் கருடக்கொடியையும் உடைய வெற்றிமிக்க திருமால். **மணி மயில்...செய்யோன்**—வெற்றி மாருத நீலமயிலை வாகனமாக உடைய ஒளிபொருந்திய முருகன். **கூற்று**—ஸம்ஹாரகனை சிவன்; **வாலியோன்**—நம்பிமூத்தபிரானை பலதேவன்: **இகழுநர் அடுநன்**—இகழ்ந்தாரை அழிக்கும் திருமால். **முருகு**—முருகன்.] என்று தொடங்கும் ஐம்பத்தாறும் பாடல், திருமுருகாற்றுப்படையெழுதிய நக்கீரரால் பாடப்பெற்றது என்று பிரஸித்தியுள்ளது. இதில்—பாண்டியனை நாலு வகைக்குணங்களில் நாலு தெய்வங்களை ஒத்திருப்பதாகப் பாடுகிறார். ஏருகிற வாகனத்தையும், சிறந்த தீப்போல் விளங்கும் விரி சடையையும், மாற்ற முடியாத மழுவையும் உடையவனாக முதலில் சொன்ன நீலகண்டனையே, அவன் செய்யும் ஸம்ஹாரத்தொழிலை யிட்டு '**கூற்று**' [அழிப்பவன்] என்று எடுத்து, மாற்ற முடியாத கோபத்தில் பாண்டியன் அவனை ஒத்திருக்கிறான் என்றார். நாஞ்சில் பனைக்கொடியோன் என்று எடுக்கப் பெற்ற பலதேவனையே வாலியோன் என்று பின்னால் எடுத்து, பலத்தில் அவனை ஒத்தவன் பாண்டியன் என்றார். நீலமணியை ஒத்த மேனியையும் வானோங்கிநிற்கும் கருடக் கொடியையும் உடையவனாய் வீரியத்திற்சிறந்தவனாக

acharya.org

முதலில் எடுத்த திருமாலையே 'இகழுநர் அடுநன்' என்று பிறகு எடுத்து, புகழில் அவனை ஒத்தவன் பாண்டியன் என்றார். 'விறல்வெய்யோன்' 'இகழுநர் அடுநன்' என்று திருமாலை எடுப்பதிலிருந்து, ஸௌர்யவீர்ய பலபராக்ரமங்களில் அவனே சிறந்தவன் என்றும், அனைவரையும் அழிக்கும் கடுஞ்சீற்றமுடைய சிவனைப்போலல்லாமல் துஷ்டர்களையே அழிப்பவன் திருமால் என்றும், அதனாலேயே பெரும்புகழ்பெற்றவன் அவன் என்றும் உணர்த்துகிறார். "**தாவா விழுப்புகழ் மாயோன்**" என்று தொல்காப்பியத்திலும், "**தேயா விழுப்புகழ் தெய்வம்**" என்று முல்லைக்கலியிலும் பாடப்பட்டவன் இவனே என்று இதனாலும் வலியுறுத்தப்படுகிறது. நினைத்த காரியத்தை முடிப்பதில் முருகனை ஒத்திருப்பவன் பாண்டியன் என்றும் பாடினார். நாலு தெய்வங்களுக்கும், அமைத்திருக்கும் பெருமைகளில் திருமாலுடையதே சிறந்து விளங்குகின்றதென்பது தெளிவு.

"புகழ் ஒத்தீயே இகழுநர் அடுநனை" என்று ஐம்பத்தாறும் பாடலில் கூறியது ஐம்பத்தேழாம் பாடலில் விவரிக்கப்படுகிறது.

" வல்லார்ஆயினும் வல்லுநர்ஆயினும்
புகழ்தல் உற்றார்க்கு மாயோன் அன்ன
உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற " [57]

என்ற முதல் மூன்று அடிகளில் "கல்வி நிரம்பாதவராயினும், நிரம்பப் பெற்றவராயினும் புகழத் தொடங்கியவர்க்குத் திருமாலை ஒத்த பாண்டியனே!" என்று கூறுகிறார். "மாயோனை ஒத்தலாவது, பாண்டியன் வல்லவர்க்கும் வல்லரல்லார்க்கும் ஒப்பப் புகழ்ந்து முடிக்கவொண்ணாத தன்மையுடையவனாதல்; அன்றி இருதிறத்தார்க்கு ஒப்ப அருள் புரியும் தன்மையுமாம்" என்று இவ்வடிகளுக்கு இரண்டு கருத்துக்கள் உரையாசிரியரால் கூறப்பட்டன. முதற்பொருளில், கல்வியில் சிறப்புறாதவர்களோடு, சிறப்புப் பெற்றவரோடு வாசியறப் புகழ்ந்து தலைக்கட்ட

acharya.org

முடியாமை என்னும் பரம்பொருட்கேயுரிய பெருமை திருமாலுக்குக் கூறப்பட்டு, இத்தன்மையில் பாண்டியன் திருமாலையொத்திருக்கிருன் என்று பாண்டியனைப் புகழ்கிருர் கவிஞர் என்க. இரண்டாம் பொருளில், தன்னைப் புகழ்வார் புகழும் ஆற்றலுக்கேற்ப அருள்புரியாமல், அவர்கள் உள்ளத்தில் உள்ள அன்பையே நோக்கி. அனைவர்க்கும் ஒக்க அருள்புரிபவன் திருமால் என்று கூறுவதன்மூலம் திருமாலின் வண்மைக்குணம் வெளிப்படுத்தப்படுகிறது. "எத்தனையேனும் அறிவிற்சிறந்த பிரமன் உருத்திரன் முதலானுரும் தம் அறிவாலே திருமாலை உள்ளபடி புகழ முடியாது; அவனருளாலே அவன் தன்னைக் காட்டக் கண்டவர்கள் எத்தனையேனும் அறிவிற்குறைந்தவர்களாயினும் அவர்கள் அவனை உள்ளபடி புகழமுடியும்" என்னும் பொருளையும் இவ்வடிகள் காட்டுகின்றன. **"கூறுதல் ஒன்ருராக் குடக்கூத்த அம்மானைக் கூறுதலேமேவிக் குருகூர்ச்சடகோபன்"** [திருவாய் 2-5-11] என்றும், **"யாருமோர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான், யாருமோர் நிலைமையன் என அறிவெளிய எம்பெருமான்"** [திருவாய் 1-3-4] என்றும் ஆழ்வாராலே பாடப்பட்ட இப்பெருமையும் பரம்பொருட்கேயுரியது. **"நாவிஷ்ணுः ப்ருதிவீபதி:"** [அரசன் விஷ்ணுவிலும் வேறுபட்டவனல்லன்] என்னும் நியாயத்தாலே திருவுடை மன்னரெல்லாம் திருமாலின் அம்சம் பெற்றவராகையாலே, திருமாலின் இப்பெருமைகள், பாண்டியனிடம் ஏறிட்டுக்கூறப்படுகின்றன. நிற்க; இவ்வைம்பத்தேழாம் பாடலைப் பாடிய காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர் என்னும் கவிஞர், ஐம்பத்தெட்டாம் பாடலில் சோழனும் பாண்டியனும் நட்புடன் விளங்குவது கண்டு, பலராமகிருஷ்ணர்களை அவர்கட்கு உவமை காட்டும்போது,

"பால் நிற உருவின் பனைக் கொடியோனும்
நீல் நிற உருவின் நேமியோனும், என்று
இருபெரும் தெய்வமும் உடன் நின்ருஅங்கு
உரு கெழு தோற்றமொடு உட்குவர விளங்கி"

acharya.org

என்று பால்நிறவண்ணனாய், பனைக்கொடியோனான பலராமனும், நீலநிறவண்ணனாய், சக்கரம் தரித்தவனான கண்ணனும் இருபெரும் தெய்வங்கள் என்று பாடியதும் குறிக்கொள்ளத்தக்கது.

"ஆல் அமர் கடவுள் அன்ன நின் செல்வம்"

என்று நூற்றுத் தொண்ணூற்றெட்டாம் பாடலில் ஏழுலகையும் விழுங்கித் திருமால் ஆலிலையில் பள்ளிகொண்ட விருத்தாந்தமும் பாடப்பட்டது. செல்வத்திற் சிறந்தவன் திருமாலே என்றும் காட்டப்பெற்றது.

"விட்டோரை விடாஅள் திருவே
விடாஅதோர் இவள் விடப்பட்டோரே"

என்று 358-ம் பாடலில் திருமகளின் சிறப்பு கூறப்படுகிறது. "உலகப்பற்றற்றுப் பரம்பொருளைப் பற்றியவர்க்குத் திருமகள் மோக்ஷச் செல்வத்தை அடையச்செய்து என்றும் அவரை விடாதிருப்பாள். உலகப்பற்று விடாதவர்க்கு இவள் அச்செல்வத்தை அடைவிக்காததினால் அவர்கள் இவளால் விடப்பட்டவரே யாவர்" என்னும் கருத்து இதில் உணர்த்தப்படுகையால், உலகப்பற்றற்றவரால் பற்றத் தக்கவர் திருமகளும், அவள் கேள்வனும் என்று இப்பாடலில் தெளிவாக்கப்படுகிறது. இதனாலும் திருமகள் நாதனே பரம்பொருள் என விளங்குகிறது.

"அணங்குடை அவுணர் கணம் கொண்டு ஒளித்தென
சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது
இருள் கண் கெடுத்த பருதி ஞாலத்து
இடும்பை கொள் பருவரல் தீர, கடுந்திறல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு"

என்னும் நூற்றெழுபத்துநாலாவது பாடற்பகுதியில் திருமால் செய்த அருஞ்செயல் ஒன்று பேசப்படுகிறது. தேவர்க்கும், அசுரர்க்கும் போர் நிகழ்ந்தபோது, இரவிலே

acharya.org

பூலமுடைய அசுரர், இரவிற்போலே பகலிலும் பூலம் பெற்றுத் தாங்கள் வெற்றி பெறுவதற்காகச் சூரியனை ஒளித்துவிட, அதனால் உலகம் அடைந்த துன்பத்தைப் போக்கத் திருமால் சூரியனை மீட்டுவந்து அளித்த கதை இவ் வடிகளிலே பேசப்படுவதாக உரையாசிரியர் கூறுகின்றார். திருமாலே ஸர்வதேவர்க்கும் ரக்ஷகன் என்பதைக் காட்டும் இக்கதை எங்குள்ளது என்பதைப் புராணங்களில் ஆராய வேண்டும். இங்கு **'கடும் திறல் அஞ்சன உருவன்'** என்று திருமாலைப் பாடியிருப்பது நோக்கத்தக்கது.

"இலம்பாடு உழந்த என் இரும் பேர் ஒக்கல்,
விரற் செறி மரபின செவித் தொடக்குநரும்,
செவித் தொடர் மரபின விரற் செறிக்குநரும்,
அரைக்கு அமை மரபின மிடற்று யாக்குநரும்,
மிடற்று அமை மரபின அரைக்கு யாக்குநரும்,
கடுந் தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை,
நிலம் சேர் மதர் அணி கண்ட குரங்கின்
செம் முகப் பெருங் கிளை இழைப் பொலிந்தாஅங்கு,
அறாஅ அரு நகை இனிது பெற்றிகுமே—"

என்னும் முன்னூற்றெழுபத்தெட்டாம் பாடற்பகுதியில் இராமாயணத்திலிருந்து அபூர்வமான செய்தியொன்று விளக்கப்படுகிறது. சோழனைப்பாடிய கவிஞர்க்குச் சோழன் அரசர்க்குரிய பல அணிகளையும் அளிக்க, கவிஞர் அவற்றைத் தம் சுற்றத்தாரிடம் கொடுக்க, அவர்கள் அவ்வா பரணங்களைக்கண்டு திகைத்து, விரலில் அணிவன செவியிலும், செவியில் அணிவன விரலிலும், அரைக்கிடுவன கழுத்திலும், கழுத்திலிடுவன அரையிலுமாகத் தடுமாறி அணிந்தனர் என்னும் இச்செயல், இராவணன் சீதையைத் தூக்கிச்சென்றபோது அவள் கழற்றியெறிந்த அணிகளைச் சுக்கிரீவனைச்சேர்ந்த குரங்குகள் எடுத்து முறையறியாமல் அணிந்ததை ஒத்திருந்து, காண்பார்க்குப் பெருநகையை

acharya.org

விளைவித்தது என்று கூறப்படுகிறது இவ்வடிகளில். இதிலிருந்து, வால்மீகி ராமாயணத்திலில்லாத ராமாயணச் செய்திகளும் சங்ககாலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிவந்தன என விளங்குகிறது. இராமனை **"கடும் தெறல் இராமன்"** என்று மஹாவீரனுகக் குறிப்பிடுவதும் குறிக்கொள்ளத் தக்கது.

ஐம்படைத்தாலி

புறநானூறு எழுபத்தேழாம் பாடலில், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர் கிழார் பாடும்போது, **"தாலி களைந்தன்றும் இலனே"** என்னும் அடியில், தமிழர்கள் சிறுவர்களுக்கு ஐம்படைத்தாலியை ரக்ஷையாக இடும் வழக்கத்தைப் பாடியிருக்கிறுர். இவ்வழக்கம் சங்ககாலத்திற்குப் பிற் காலத்திலும் தொடர்ந்து வந்தது என்பது மணிமேகலையிலிருந்தும், கம்பராமாயணம் நாட்டுப்படலத்திலுள்ள " தாலியைம்படை தழுவு மார்பிடை " என்னும் பாடலிலிருந்தும் விளங்குகிறது. ஸர்வரக்ஷகனுன திருமாலின் பஞ்சாயுதங்களாகிற ஐம்படைகளையும் சிறுவர்களுக்கு ரக்ஷையாக அணிவது தமிழர் பண்பாடு என இதிலிருந்து விளங்குகிறது. **"மங்கல ஐம்படையும்...ஒத்திலக"** [பெரியாழ் திரு 1-5-10] **"நீலநிறத்தழகார் ஐம்படையும்"** [பெரியாழ்திரு 1-5-9] என்று பெரியாழ்வாரும் இவ்வழக்கத்தைக் காட்டினுர். இவர்கள் காட்டியது ஒருபுறமிருக்க; சைவர்களான பரஞ்சோதியும், சேக்கிழாரும் (முறையே) திருவிளையாடற் புராணத்திலும் பெரியபுராணத்திலும், இவ்வழக்கம் அவர்கள் காலத்திலும், சைவர்களிடையேயும் நடைமுறையிலிருந்ததைக் காட்டினுர்கள். பெரியபுராணத்தில் சேக்கிழார் சுந்தரமூர்த்திநாயனுருக்குச் சிறுவயதில் ஐம்படைத்தாலி இடப்பட்டதாகப் பாடியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. சிவன் முதலான மற்ற தெய்வங்களின் ஆயுதங்களைத் தமிழர் ரக்ஷையாக அணிந்து வந்ததாக எந்த நூலிலும் காண்கின்றிலோம். அனைவரையும் காக்கும் கடவுளான

acharya.org

திருமாலின் ஆயுதங்களே, தீயவர்களை அழித்து நல்லோரைக்காக்கும் தகைமையுடையவையென்றும், மற்ற தெய்வங்களின் ஆயுதங்களுக்கு என்றும் இப்பெருமை கிடையாது என்றும் தமிழர்கள் நம்பிவந்தார்கள் என்பது இதிலிருந்து விளங்குகிறது. இனி, அகநானூற்றுப் பாடல்களைக் காண்போம்.

அகநானூறில் அவதாரங்கள்

..............வடா அது
வண் புனல் தொழுநை வார் மணல் அகன் துறை
அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
மரம் செல மிதித்த மாஅல் போல [அகம் 59]

[**தொழுநை** — யமுனை. **அண்டர் மகளிர்** — ஆயர் மகளிர். **மாஅல்** — கண்ணன்.] என்று கிருஷ்ணாவதார லீலைகளில் ஒன்று பேசப்பட்டது. ஆயர்மகளிர் குளிக்கும்போது கண்ணன் அவர்களுடைய ஆடைகளை எடுத்துக்கொண்டு குருந்தமரத்து ஏறியிருந்தான் என்னும் செய்தி புராணங்களிலும், நாச்சியார் திருமொழியொன்றிலும் காணப்படுகிறது. அவ்விடங்களில் இல்லாத ஒரு செய்தி இங்கு கூறப்படுகிறது. அதாவது, — இப்படி ஆயர்மகளிர் குளித்துக் கொண்டிருக்கும்போது பலதேவன் அங்கு வந்தானும். அவன் அவர்களை இந்நிலையில் காணில் பழியாகும் என்று, கண்ணன் தான் ஏறியிருந்த மரக்கொம்பொன்றைத் தாழ்த்துக்கொடுக்க, ஆயர்மகளிர் அதன் இலைகளால் தம்மை மறைத்துக்கொண்டு நம்பி மூத்தபிரானின் பார்வையிற்படாமல் தப்பினராம்.

"நீல் நிற வண்ணன் அன்று நெடுந்துகில் கவர்ந்து தம் முன்
பால் நிற வண்ணன் நோக்கில் பழியுடைத்து என்று கண்டாய்
வேல் நிறத் தானை வேந்தே! விரிபுனல் தொழுனை ஆற்றுள்
கோல் நிற வளையினர்க்குக் குருந்து அவன் ஒசித்தது என்றான்"

[**நீல் நிற வண்ணன்**—நீலவண்ணனை கண்ணன். **துகில்**— ஆடை. **தம் முன்**—தமயன். **பால் நிற வண்ணன்**—பால்

வண்ணனை பலதேவன்.] என்ற சீவகசிந்தாமணிப்பாடலிலும் இச்செய்தி கூறப்பட்டிருப்பது காணத்தக்கது. இச்செய்தியிலிருந்து கோபியரின் அநங்யார்ஹஶேஷத்வம் (வேறெவர்க்குமல்லாமல் கண்ணனுக்கே உரியவராயிருக்கை) புலப்படுகிறது.

வென் வேற் கவுரியர் தொல் முது கோடி
முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன் துறை
வெல் போர் இராமன் அரு மறைக்கு அவித்த
பல் வீழ் ஆலம் போல
ஒலி அவிந்தன்று, இவ் அழுங்கல் ஊரே [அகம் 70]

[**தொல் முது கோடி** — மிகப் பழையதான தநுஷ்கோடி. **பௌவம்** — கடல். **மறை** — மந்திராலோசனை] என்னும் பாடலில், அபூர்வமான இராமாவதாரச் செய்தியொன்று கூறப்படுகிறது. இராமன் இலங்கைமேற் படையெடுக்கு முன் தநுஷ்கோடிக் கரையில் உள்ள ஆலமரத்தின் கீழ் வானர வீரர்களோடு மந்திராலோசனை செய்தானும்; அப்போது அம்மரத்திலுள்ள பறவைகளின் ஒலி, அவர்கள் மந்திராலோசனைக்கு இடையூறுயிருந்தமையால், இராமன் தன் ஆணையால் அப்பறவைகளை ஒலிக்காமல் அடக்கினன் என்னும் செய்தியே அது. தலைவன் தலைவியை மணந்து கொள்ள வந்தபோது, அவர்களைப்பற்றி அலர் தூற்றிக் கொண்டிருந்த ஊர் அத்தூற்றுதலைவிட்டு ஒலியடங்கிப் போனதற்கு, இராமனாணையால் ஆலமரத்திலிருந்த பறவைகள் ஒலியடங்கிப்போன செய்தி உவமையாகக் கூறப்படுகிறது. **'வேல் போர் இராமன்'** என இராமனை விஶேஷித்திருப்பது நோக்கத்தக்கது.

வேலினும் பல் ஊழ் மின்னி, முரசு என
மா இரு விசும்பில் கடி இடி பயிற்றி
நேர் கதிர் நிரைத்த நேமி அம் செல்வன்
போர் அடங்கு அகலம் பொருந்திய தார்போல்
திருவில்............ [அகம் 175]

acharya.org

[நேர் கதிர்...செல்வன்—நிரம்பிய கிரணங்களின் ஒழுங்கையுடைய சக்கரத்தையுடைய திருமால். திருவில்—இந்திர வில்] என்னும் பாடலில், மின்னி இடிக்கும் வானத்திற்குத் திருமாலின் திருமார்பு உவமையாகக் கூறப்படுகிறது. மின்னி இடிக்கும் கரிய வானுக்கு நேமியோடு கூடிய திருமாலின் மார்பும், அவ்வானில் தோன்றும் பல நிறமுடைய இந்திரவில்லுக்கு, திருமாலின் மார்பிலுள்ள பல நிறமுடைய வனமாலையும் உவமையாகக் காட்டப்படுகிறது. திருமாலைச் செல்வன் என்று கூறியிருப்பதும், பகைவர் போர் ஒழிவதற்குக் காரணமாயிருப்பது அவன் திருமார்பு என்று கூறியிருப்பதும் காணத்தக்கது.

மன் மருங்கு அறுத்த மழு வாள் நெடியோன்
முன் முயன்று அரிதினின் முடித்த வேள்வி
கயிறு அரை யாத்த காண் தகு வளப்பின்
அருங்கடி நெடுந்தூண்போல, யாவரும்
காணல் ஆகா மாண் எழில் ஆகம் [அகம் 220]

என்னும் பாடலில் "மழு வாள் நெடியோன்" என்று திருமாலின் அவதாரமாகிய மழுவேந்திய பரசுராமனையெடுத்து, அவன் தீய அரசர்களை மூவெழுகால் கொன்று யாகஂம் செய்தபோது, அந்த யாகத்தில் நட்ட தூண் (யூபம்) யாவரும் காணமுடியாத உயரத்தை உடையதாயிருந்தது என்று கூறப்படுகிறது. பரிபாடலில் கூர்ம வராஹ நரஸிம்ஹ ஹம்ஸ க்ருஷ்ண பலராமாவதாரங்கள் விவரிக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். நெய்தற்கலியில் ஏழாம்பாடலிலே,

"ஞாலம் மூன்றடித்தாய முதல்வற்கு"

என்று திரிவிக்கிரமாவதாரமும் பேசப்பட்டது. இங்கு பரசுராம, தாஶரதிராமாவதாரங்களும் பேசப்படுகின்றன. ஆகவிப்படி சங்கவிலக்கியங்களில் தஶாவதாரங்களில் பெரும்பாலானவை விவரிக்கப்பட்டுள்ளது காணத்தக்கது.

acharya.org

பழந்தமிழிலக்கியங்களில் அர்ச்சாவதாரங்கள்

1. அகநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் கோயில் திருமலைகள்

கல்லாடனார் என்னும் புலவர் இயற்றிய அகநானூற்றின் ஒன்பதாவது பாடலில் — வேங்கடமலையைக் கடந்து சென்று பொருளீட்டி வினைமுடித்து மீண்ட தலைமகன், தேர்ப்பாகனுக்குக் கூறியதாக உள்ள பாடலில்,

அத்தம் நண்ணிய அம் குடிச் சீறூர்
கொடு நுண் ஓதி மகளிர் ஓக்கிய
தொடி மாண் உலக்கைத் தூண்டு உரல் பாணி
நெடு மால் வரைய குடிஞையோடு இரட்டும்
குன்று பின் ஒழியப் போகி

என்றவிடத்தில் '**நெடுமால் வரைய**—குன்று ஒழியப் போகி' என்னும் தொடரால் நெடுமாலாகிற திருமால் எழுந்தருளியிருக்கும் வேங்கடக்குன்றையும் கடந்து தான் சென்றதாகக் குறிப்பிட்டான். தலைவன் வேங்கடமலைக்கும் அதைக் கடந்து அப்பாலும் சென்று பொருளீட்டி வருவது என்னும் மரபு அகநானூற்றின் பல பாடல்களில் காணப்படுவதால் இங்கு வேங்கடமலையைக் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தம். இம்மரபைப் பின்பற்றியே நம்மாழ்வாரும்,

"காண்கின்றனகளும் கேட்கின்றனகளும் காணில் இந்நாள்
பாண்குன்றநாடர் பயில்கின்றன இதெல்லாமறிந்தோம்
மாண்குன்றமேந்தித் தண்மாமலை வேங்கடத்து உம்பர்நம்பும்
சேண்குன்றம் சென்று பொருள்படைப்பான் கற்ற
திண்ணனவே" [திருவிருத்தம் 9]

என்று திருவிருத்தத்தில் பாடினார். நிற்க; சங்ககாலத்திற்குச் சிறிது பிற்பட்ட சிலப்பதிகாரத்திலும் வேங்கடத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவன் திருமாலே என்று மிகத் தெளிவாகப் பாடப்பட்டது.

acharya.org

வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலயத்(து) உச்சி மீமிசை
விரி கதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இரு மருங்(கு) ஓங்கிய இடை நிலைத் தானத்து
மின்னுக் கொடி உடுத்து விளங்கு வில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகைஅணங்கு ஆழியும் பால் வெண்சங்கமும்
தகை பெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம் கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம் பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்
[காடுகாண்காதை]

என்னும் சிலப்பதிகாரப்பகுதியில், ஒரு நீலமேகம், சூரிய சந்திரர்கள் தன் இருபுறமும் விளங்க, மின்னலை ஆடையாக உடுத்து, இந்திரவில்லை மார்பில் ஆரமாகப் பூண்டு நின்றாற்போல் உள்ளது திருமால் திருவேங்கடத்தில் நின்ற திருக்கோலம் என்கிறார் இளங்கோவடிகள். திருமால் திருமேனி மேகம் போலவும், அவருடைய இருகைகளிலும் உள்ள திருவாழியும் திருச்சங்கும் சூரியசந்திரர்கள் போலவும், அவருடுத்த பீதாம்பரம் மேகத்தைச் சூழ்ந்த மின்னல் போலவும், அவர் மார்பணிந்த வனமாலை இந்திரவில்போலவும் உள்ளன என்று அழகாகப் பாடுவது கண்டு களிக்கத் தக்கது. இத்தால் திருமலையில் கோயில் கொண்டிருக்கும் தெய்வம் சிவன், முருகன், சக்தி, என்றெல்லாம் பிதற்றும் நவீனர்களின் கூற்றுகள் ஆதாரமற்றவை என்று அறுதியிடப்பட்டது.

இனி, அகநானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும் பெரிய கோயிலாகிற திருவரங்கம் பாடப் பெற்றிருக்கும்படியைக் காண்போம். **உறையூர் முதுகூத்தனார்** என்னும் புலவர் பாடிய (அகநானூறு) 137-ம் பாடலில், தாம் வாழ்ந்த உறையூராகிற உறந்தையிலும், அதற்கருகிலுள்ள அரங்

கத்திலும் பங்குனி மாதத்தில் ப்₃ரஹ்மோத்ஸவம் நடைபெறுவதைப் பாடியுள்ளார். இன்றும் பங்குனிமாதத்தில் நடைபெறும் ஆதிப்₃ரஹ்மோத்ஸவத்தில், அரங்க நகரப்பன் உறையூர்க்கு எழுந்தருளுவது ஸுப்ரஸித்தம்.

வென்று எறி முரசின் விறல் போர்ச் சோழர்
இன் கடும் கள்ளின் உறந்தை ஆங்கண்
வரு புனல் நெரிதரும் இரு கரைப் பேரியாற்று
உருவ வெண் மணல் முருகு நாறு தண் பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீ இலை அமன்ற மரம் பயில் இறும்பில்
தீ இல் அடுப்பின் அரங்கம் போல
பெரும் பாழ் கொண்டன்று நுதலே

என்னும் பாடற்பகுதியில், ‘தலைமகன் பிரியப்போகிறான்’ என நினைத்து வேறுபட்ட தலைமகளின் நிலையைக் கூறும் போது, “திருவரங்கத்தில் பங்குனி உத்திரத் திருநாளின் போது, மக்கள் மிகுதியாகத்திரண்டு காவிரியின் இருகரைகளிலும் உள்ள சோலைகளில் தங்கியிருந்தபோது பொலிவுடையதாகத் தோன்றிய அச்சோலைகள், அவ்விழாவின் முடிவில் அனைவரும் அரங்கத்தைவிட்டுப் போனபின் பொலிவிழந்து தோன்றுவதுபோல், தலைமகன் பிரிவையெண்ணிய தலைமகளின் நெற்றியும் பொலிவிழந்து தோன்றுகிறது” என்கிறார். இப்பாடலில் இவ்விழா திருவரங்கத்தில் நடப்பது என்று கூறினாரேயொழியத் திருமாலுக்கு நடப்பது என்று கூறவில்லையே என்று சிலர் கலங்கக் கூடும். இக்குறைதீரச் சிலப்பதிகாரத்தில், திருவரங்கத்தில் பள்ளிகொண்டிருப்பவன் திருமாலே என்று மிகத்தெளிவாகக் கூறுகிறார் இளங்கோவடிகள்.

நீலமேகம் நெடும் பொன் குன்றத்துப்
பால்விரிந்து அகலாது படிந்ததுபோல
ஆயிரம் விரித்தெழு தலை உடை அருந்திறல்
பாயல் பள்ளிப் பலர் தொழு(து) ஏத்த

acharya.org

விரிதிரைக் காவிரி வியன் பெருந் துருத்தித்
திரு அமர் மார்பன் கிடந்த வண்ணமும்[காடுகாண்காதை]

[பால் விரிந்து அகலாது — பக்கங்களில் விரிந்து பரவாமல். துருத்தி — ஆற்றின் இடைப்பட்ட பிரதேசம்.] என்னும் சிலப்பதிகாரப்பகுதியில், ஒரு பெரிய பொன்மலையின்மீது ஒரு நீலமேகம் அம்மலையளவாகப் படிந்தாற்போல், படம் விரித்தெழுந்த ஆயிரம் தலைகளையும், அரிய வலிமையையும் உடைய ஆதிசேஷனுகிற படுக்கையின்மீது, உலகெல்லாம் தொழுதேத்தும்படியாக, திருமகளைத் திருமார்பிற்கொண்ட திருமால் கிடந்த திருக்கோலமாக எழுந்தருளியிருப்பதாகப் பாடியிருப்பது படித்துப் படித்து இன்புறத்தக்கது.

ஆக இவற்றிலிருந்து, கோயில் திருமலைகளில் திருமால் கிடந்த திருக்கோலமாகவும், நின்ற திருக்கோலமாகவும் எழுந்தருளியிருக்கும் நிலைகள் அகநானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும் பாடப்பட்டுள்ளன என்று அறியப்படுகிறது. திருமாலிருஞ்சோலையில் பரம்பொருளான திருமால் எழுந்தருளியிருப்பதையும், கூடலில் (மதுரையில்) இருந்தையூரில் திருமால் எழுந்தருளியிருப்பதையும் பரிபாடலில் சங்கப் புலவர்கள் பாடியிருப்பதை முன்னமே காட்டினேம். பெருமாள் கோயிலான ஸ்ரீ காஞ்சியில் திருவெஃகாவில் திருமால் பள்ளிகொண்டிருப்பதையும், திருவனந்தபுரத்தில் எழுந்தருளியிருப்பதையும், சங்கப்புலவர்கள் பாடியிருப்பதைக் காண்போமினி.

2. பதிற்றுப்பத்தில் திருவனந்தபுரம்

பதிற்றுப்பத்து என்னும் சேரவேந்தர்களைப்பற்றிய சங்கநூலில் திருமாலைப்பற்றிய குறிப்பு வந்துள்ளவிடங்களைக் காண்போம். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய நான்காம்பத்தின் தொடக்கத்தில் பின்வரும் அடிகளில், திருவனந்தபுரத்துத் திருமால் கோயிலில் மக்கள் வந்து துதித்துச் செல்லும் பெருமை விளக்கப்பட்டுள்ளது.

acharya.org

குன்று தலைமணந்து, குழூஉக் கடல் உடுத்த
மண் கெழு ஞாலத்து, மாந்தர் ஒராங்குக்
கை சுமந்து அலறும் பூசல், மாதிரத்து
நால் வேறு நனந் தலை, ஒருங்கு எழுந்து ஒலிப்ப,
தெள் உயர் வடி மணி எறியுநர் கல்லென,
உண்ணாப் பைஞ்ஞிலம் பனித் துறை மண்ணி,
வண்டு ஊது பொலி தார், திரு ஞெமர் அகலத்து,
கண் பொரு திகிரி, கமழ் குரற் துழாஅய்
அலங்கல், செல்வன் சேவடி பரவி,
நெஞ்சு மலி உவகையர் துஞ்சு பதிப் பெயர—
மணி நிற மை இருள் அகல, நிலா விரிபு,
கோடு கூடு மதியம் இயலுற்றுங்கு

[மாதிரம் — திசை. திரு ஞெமர் அகலம் — ஸ்ரீதேவி வாழும் மார்பு. திகிரி — சக்கரம். துழாஅய் அலங்கல் செல்வன் — துழாய் மாலையணிந்த உபயவிபூதிச் செல்வத்தையுடைய திருமால். கோடு—திருவிதாங்கோடு என்று வழங்கப்படும் திருவனந்தபுரம்.]

திருவனந்தபுரத்துத் திருமால் கோயிலில் மக்கள் திரண்டு கைகூப்பி வணங்கித் துதிக்கும் ஒலி நான்கு திசைகளிலும் பரவுகின்றதென்றும், அந்த மக்கள் உண்ணா நோன்பு இருந்து வழிபடுகின்றனர் என்றும், விடியற்காலையில் கோயில் மணி அடிக்கப்பட்டவுடன் அவர்கள் அனைவரும் சென்று நீராடி வந்து பகல் முழுவதும் திருமாலைத் துதித்து வழிபட்டிருந்து, இரவில் தம் தம் இருப்பிடம் செல்கின்றனர் என்றும், அங்ஙனம் செல்வார்க்குத் துணையாகச் சந்திரன் இருளை அகற்றி ஒளி வீசுகின்றான் என்றும் கூறுகிறார் இவ்வடிகளில். இதிலிருந்து—இன்றும் கேரள அரசர் குலதெய்வமாய் விளங்கும் திருவனந்தபுரத்துத் திருமால் திருக்கோயில் சங்ககாலத்திலேயே மிக்க புகழுடன் விளங்கியது என்று விளங்குகிறது. இங்கு திருமாலை 'செல்வன்' என்றது குறிக்கொள்ளத்தக்கது.

acharya.org

செல்வக்கடுங்கோ ஆழியாதனைக் கபிலர் பாடிய ஏழாம் பத்தின் பத்தாம் பாடலில். "வேள்வியில் கடவுள் அருத்தினை" என்னும் அடியால், அவ்வரசன் யஜ்ஞங்களால் பரம் பொருளைப் பூசித்ததைக் குறிப்பிட்டார். இக்கடவுள் யார்? என்னும் கேள்விக்கு பதில், இப்பத்தின் கடைசியிலுள்ள பதிகத்தில் உள்ள

ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி
ஆக்கிய பொழுதின் அறத்துறை போகி,
மாய வண்ணனை மனன் உறப் பெற்று, அவற்கு
ஓத்திர நெல்லின் ஒகந்தூர் ஈத்து,
புரோசு மயக்கி
மல்லல் உள்ளமொடு மாசு அற விளங்கிய
செல்வக் கடுங்கோ வாழியாதனைக்
கபிலர் பாடினர் பத்துப்பாட்டு.

என்னும் அடிகளில் காட்டப்படுகிறது. இத்தால்—வேள்விகள் பரம்பொருளான மாயவண்ணனுக்கு ஆராதனமாயிருப்பவை என்னும் அறிவுடன் சங்ககாலத்தில் மன்னர் மாயவண்ணனை பரம்பொருளை மனத்தில் இருத்தி வேள்விகளை இயற்றினர் என விளங்குகிறது. இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்பற்றிய இரண்டாம்பத்தில் ஐந்தாம் பாடலில்,

"ஏமம் ஆகிய சீர்கெழு விழவின்
நெடியோன் அன்ன நல் இசை
ஒடியா மைந்த! நின் பண்பு பல நயந்தே"

என்னும் அடிகளில்—ரக்ஷகனாயிருக்கும் தன்மையிலும், மஹோத்ஸவங்களைப் பெற்றிருப்பதிலும், அழியாத நல்ல புகழைப் பெற்றிருப்பதிலும் நெடியோனான திருமாலை ஒத்திருக்கிறான் சேரன் என்று பாடியதிலிருந்தும், சேர நாட்டில் சங்ககாலத்தில் திருமாலுக்குப் பல சீர்கெழு விழாக்கள் நடைபெற்றன என விளங்குகிறது. "நெடியோன்" என்னும் பெயரினாலும் உலகளந்த திருமாலின் பரத்துவம் காட்டப்படுகிறது.

acharya.org

3. பத்துப் பாட்டில் திருவெஃகாவும் கச்சி மூதூரும்

பத்துப்பாட்டில் ஒன்ருன பெரும்பாணுற்றுப்படை— காஞ்சீபுரத்தில் இருந்து அரசாண்ட தொண்டைமான் இளந் திரையனைப்பற்றிக் கடியலூர் உருத்திரங்கண்ணனுர்(உருத் திரன் மகன் கண்ணனுர்) என்னும் புலவர் பாடியது. இதின் தொடக்கத்தில் அரசனின் வமிசத்தைக் குறிக்கும்போது

"இரு நிலம் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்
திரைதரு மரபின், உரவோன் உம்பல்"

என்னும் அடிகளில், உலகனைத்தையும் அளந்துகொண்ட வனுய், திருவாகிய ஸ்ரீ தேவியையும், மறுவாகிற ஸ்ரீவத் ஸத்தையும் மார்பில் உடைய முந்நீர்வண்ணனுகிற ராமனின் வமிசமாகிய சோழகுலத்தில் உதித்தவன் என்று குறிக்கிருர். இப்பாடலின் 371-வது அடி தொடங்கி திரு வெஃகாவின் சிறப்பும் திருமால் வழிபாடும் பின்வருமாறு கூறப்படுகிறது.

நீடு குலைக்

காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு,
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்,
வெயில் நுழைபு அறியா, குயில் நுழை பொதும்பர்,
குறுங் கால் காஞ்சி சுற்றிய நெடுங் கொடி...
பெறற்கு அருந் தொல் சீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபின் பூ மலி பெருந் துறை,
செவ்வி கொள்பவரோடு அசைஇ; அவ்வயின்
அருந் திறற் கடவுள் வாழ்த்தி, சிறிது நும்
கருங் கோட்டு இன் இயம் இயக்கினிர் கழிமின்:

[சிலம்பு-மலை; களிறு-யானை; குறுங்கால் காஞ்சி-மெல்லிய காற்றுவீசும் காஞ்சி.] என்னும் அடிகளில், மலையில் யானை படுத்திருப்பதுபோலே, திருவெஃகாவில் பாம்பணைப்பள்ளி யில் திருமால் கிடந்த திருக்கோலத்தில் கிடக்குமழகு பாடப்

acharya.org

படுகிறது. திருமாலை 'அரும் திறல் கடவுள்' [அரிய திறலை யுடைய கடவுள்] என்பதும் நோக்கத்தக்கது. அவன் கோயில் கொண்டிருக்குமிடம், பெறுதற்கு அரிய பழமை யான புகழையுடைய மோக்ஷலோகம் போன்றது என்று கூறியிருப்பதிலிருந்தும் மோக்ஷவுலகையளிப்பவன் திரு மாலே என்று உணர்த்தப்படுகிறது.

"நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"

என்று பரிபாடலிலும் மோக்ஷமளிப்பவன் திருமாலே என்று சங்ககாலத் தமிழர் பாடியதும் காணத்தக்கது. அங்கு "**வீறு பெறு துறக்கம்**" என்று குறிக்கப்பட்ட பரமபதத் தையே இங்கு "**பெறற்கு அரும் தொல்சீர்த் துறக்கம்**" என்று குறிப்பிடுகிருர் என்பது தெளிவு.

பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப் படை யிலேயே கச்சியின் சிறப்பைச் சொல்லும் பகுதியில் 402-வது அடிதொடங்கி,

"நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவற் பயந்த பல் இதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி"

என்று நீலநிறமுள்ள வடிவையுடைய நெடியவனுடைய உந்தியிலிருந்து நான்முகனுகிய ஒருவனைப் பெற்றெடுத்த பல இதழ்களையுடைய தாமரையின் கொட்டைபோல் அழகு விளங்கத் தோன்றிற்று கச்சி என்று கூறுமிடத்தில், எல்லா உலகையும் படைத்த பிரமனையும் படைத்தவன் நீல நிற உருவுடைய நெடியோனுன திருமாலே என்று முழங்கி யிருப்பதிலிருந்தும் சங்ககாலத்தில் திருமாலே பரம்பொருள் என்பது பிரசித்தமாயிருந்தது என விளங்குகிறது.

"இருநிலம் கடந்த திரு மறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்
திரை தரு மரபின்" [29, 30, 31 அடிகள்]

acharya.org

என்னும் அடிகளில் திருமாலின் அவதாரமாகிய இராமனைப் பெரிய நிலத்தைத் திரிவிக்கிரமனாகி அளந்தவன் என்றும், திருவையும், மறுவையும் மார்பில் தரித்தவன் என்றும், முந்நீர்வண்ணன் என்றும் குறிப்பிட்டு, சோழ அரசர்கள் அவனுடைய மரபில் வந்தவர்கள் என்று குறிக்கப் பட்டுள்ளது. திருமாலின் பரத்துவத்தைக் காட்டும் இரு நிலம் கடந்த விருத்தாந்தம் மற்றும் பலவிடங்களிற்போலே இங்கும் குறிப்பிடப்பட்டிருப்பது காணத்தக்கது. சிவன் முதலானோரின் பரத்துவத்தைக் காட்டுவதற்காக ஏற்பட்ட அடிமுடிதேடிய கதை முதலானவை சங்க இலக்கியத்தில் எங்குமே காணப்படாததிலிருந்து அவை பிற்காலத்தில் புனையப்பெற்றவை என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

முல்லைப்பாட்டில் திரிவிக்கிரமன்

பத்துப்பாட்டில் ஒன்றான முல்லைப்பாட்டின் தொடக்கத்தில்,

> **"நனந் தலை உலகம் வளைஇ, நேமியொடு**
> **வலம்புரி பொறித்த மா தாங்கு தடக்கை**
> **நீர் செல நிமிர்ந்த மாஅல் போல"**

என்று திருமால் மாவலியிடம் நீர் ஏற்று ஓங்கி வளர்ந்த நிலை பனிக்கடல் பருகிக் கோடு கொண்டு எழுந்த மேகத்திற்கு உவமையாகக் கூறப்படுகிறது. **'நேமியொடு வலம் புரி தாங்கு தடக்கை மால்'** [சக்கரத்தோடு வலம்புரிச் சங்கத்தைத் தாங்கும் பெருங்கையை உடைய மால்] என்றும், **'மா பொறித்த மால்'** [திருமார்பில் திருவைத் தரித்த மால்] என்றும் திருமாலுக்கேயுரிய லக்ஷணங்களைச் சொல்லி, **'நீர் செல, நனந்தலை உலகம் வளைஇ நிமிர்ந்த மால்'** என்று மாவலி வார்த்த நீர் கையில் சேர்ந்தவுடன் உலகத்தைத் திருவடிகளிலே அணைத்துக்கொண்டு நிமிர்ந்தான் என்னும் பரத்துவத்தைக் காட்டும் திரிவிக்கிரம விருத்தாந்தம் தெளிவாகச் சொல்லப்படுவது குறிக்

acharya.org

கொள்ளத்தக்கது. இந்த முல்லைப்பாட்டின் கடைசியில் (பிற்காலத்தில் இணைக்கப்பட்டதாக) உள்ள தனிப்பாடல் ஒன்றில்,

"வண்டு அடைந்த கண்ணி வளர் ஆய்ச்சி வாள் நெடுங்கண்
சென்று அடைந்த நோக்கம் இனிப் பெறுவது என்றுகொல்
கன்று எடுத்து ஓச்சி, கனி விளவின் காய் உகுத்து,
குன்று எடுத்து நின்ற நிலை"

என்று கண்ணன் நப்பின்னைப் பிராட்டியிடம் ஈடுபட்டதையும், கன்று குணிலா எறிந்து விளவின் காய் வீழ்த்ததையும், குன்று எடுத்து நின்றதையும் பாடி, அந்நிலைகளை நாம் இனி என்று காண்போம் என்று ஆசைப்பட்டிருப்பது காணத்தக்கது.

மதுரைக்காஞ்சியில் மாலின் பரத்துவம்

பத்துப்பாட்டில் ஒன்முன மதுரைக் காஞ்சியில் கோயில்களில் அந்திவிழாவைக் கூறும் 454-வது அடிதொடங்கி,

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்து உடன் இயற்றிய
மழு வாள் நெடியோன் தலைவன் ஆக"

என்று பஞ்சபூ$_4$தங்களையும் ஸ்ருஷ்டிகாலத்தில் படைத்த தேவர் தலைவன் நெடியோனை திருமாலே என்று காட்டப்பட்டது. பகவானுக்குள்ள பதினறு ஆயுதங்களில், மழு ஒன்று என்பது பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலிருந்தும், தேசிகனருளிய ஷோட$_3$ஶாயுத$_4$ ஸ்தோத்ரத்திலிருந்தும் விளங்குகிறது. நாந்தகம் எனும் வாள் பகவானின் பஞ்சாயுதங்களில் ஒன்று என்பது பிரசித்தம். பரசுராமாவதாரத்தில் மழு எனும் பரசுவை ஏந்திநின்றதைக்கொண்டு மழுவைச் சொன்னதாகவும் கொள்ளலாம். பழைய இலக்கியங்களில் 'நெடியோன்' என்று பலவிடங்களில் திருமாலையே குறித்திருப்பதாலும், சிவனை எவ்விடத்திலும்

acharya.org

குறிக்கவில்லையாகையாலும் மழுவைச் சொல்லியிருப்பதைக் கொண்டு சிவனை இங்கு சொல்லுவதாகக் கூறுவது பொருந்தாது. மேலும், பஞ்சபூதங்களையும் படைத்த பெருமை பரிபாடல் முதலான சங்க இலக்கியங்களில் திருமாலுக்குக் குறிக்கப்படுவதுபோலே சிவனுக்கு எங்குமே குறிக்கப்படவில்லை. ஆகையால் இங்கு பஞ்சபூதங்களையும் படைத்தவனுகக் கூறப்படும் மழுவாள் நெடியோன் திருமாலே என்பது தெளிவு. ஆக, சங்ககாலத்தில் திருமாலே உலகனைத்தையும் படைத்த தேவர் தலைவனுக வழிபடப்பட்டு வந்தான் என்று தெளிவாக விளங்குகிறது. பரிபாடலில் இது மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதை முன்னமே கண்டோம். இம்மதுரைக் காஞ்சியிலே 590-வது அடி தொடங்கி,

> "கணம் கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
> மாயோன் மேய ஓண நல் நாள்"

என்று ஓண நாள் விழாவில் மறவர் மகிழ்ந்து திரிதலைக் கூறும்போது, அசுரர்களைக் கூட்டம் கூட்டமாக அழித்தவன் மாயோனை திருமாலே என்றும், அவனுடைய திருநட்சத்திரமான திருவோணத்தைத் தமிழர் விழாவெடுத்துக் கொண்டாடினர் என்றும் முழங்கப்படுவதும் காணத்தக்கது.

திருமுருகு ஆற்றுப்படையிலும் திருமாலின் பெருமை

பத்துப்பாட்டில் ஒன்ருய், முருகனின் பெருமையைச் சொல்லவென்றே ஏற்பட்டதான திருமுருகாற்றுப்படையிலும் முருகனுக்கோ, சிவனுக்கோ பரம்பொருளுக்குரிய பெருமைகள் ஒன்றும் கூறப்படவில்லை. 1. தெய்வயானையின் கணவன். 2. கடப்பமாலை புரளும் மார்பினன். 3. சூரரமகளிரின் இயல்பு. 4. காந்தளின் கண்ணிசூடிய சென்னியன். 5. முருகன் சூரனைத் தடிந்த வகை. 6. பேய்மகளின் துணங்கைக்கூத்து. 7. மாமரத்தை வெட்டிய வெற்றி. 8. ஆற்றுப் படுத்தல். 9. திருப்பரங்குன்றில் முருகன் வீற்றிருத்தல்.

acharya.org

10. ஆறுமுகன் யானையின்மேல் ஏறிவருதல். 11. ஆறு முகங்களின் இயல்புகள். 12. பன்னிரு கைகளின் தொழில் கள். 13. அலைவாயில் ஆறுமுகனின் காட்சி. 14. முன் செல்லும் முனிவரது இயல்புகள். 15. பாடுவார் இயல்பு. 16. பாடும் மகளிர் இயல்பு. 17. முருகனைக் காணவரும் திருமால், சிவன், இந்திரன் ஆகியோரின் இயல்புகள். 18. பிரமனுக்காகத் திரண்டு வந்த தேவர்கள். 19. தேவர்கள் வருகின்ற காட்சி. 20. முருகன் மடந்தையோடு வீற்றிருத் தல். 21. இருபிறப்பாளரின் இயல்பு. 22. அந்தணர் வழி படும் முறை. 23. குரவைக்கூத்து. 24. குன்றுதோறும் ஆடல் புரியும் தன்மை, 25. முருகன் இருப்பிடங்கள். 26. குறமகளின் வெறியாட்டு — முருகனை ஆற்றுப்படுத்தல். 27. முருகனை வழிபடுதல். 28. முருகனைக் கண்டு துதித்தல். 29. கருதிவந்ததை மொழிதல். 30. சேவிப்போர் கூற்று. 31. முருகன் அருள்புரிதல். 32. அருவியின் காட்சியும் இயற்கை வளமும் என்ற தலைப்புகளில் நக்கீரர் திருமுருகு ஆற்றுப்படை பாடியுள்ளார். பரிபாடல் முதலானவற்றில் திருமாலுக்குக் கூறியிருக்கும் பரம்பொருளுக்குரிய தன்மை களில் ஒன்றுகூட முருகனுக்கு இந்நூலில் ஓரிடத்தில் கூடப் பாடப்படவில்லை. முருகன் சிவனால் பெற்றெடுக்கப் பட்டவன் என்று கூறுவதன்மூலம் இவன் பரம்பொரு ளல்லன் என்றே காட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 'முருகனைக் கண்டு துதித்தல்' என்னும் தலைப்பில் உள்ள பின்வரும் அடிகளைக் காணலாம்.

நெடும் பெருஞ் சிமையத்து நீலப் பைஞ் சுனை,
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,
அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ !
ஆல் கெழு கடவுட் புதல்வ ! மால் வரை
மலைமகள் மகனே ! மாற்றோர் கூற்றே !
வெற்றி வெல் போர்க் கொற்றவை சிறுவ !
இழை அணி சிறப்பின் பழையோள் குழவி !

acharya.org

வானோர், வணங்கு வில், தானைத் தலைவ!
மாலை மார்ப! நூல் அறி புலவ!
செருவில் ஒருவ! பொரு விறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல் கெழு தடக் கைச் சால் பெருஞ் செல்வ!
குன்றம் கொன்ற குன்றுக் கொற்றத்து,
விண் பொரு நெடு வரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக!
நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேர் ஆள!
அலந்தோர்க்கு அளிக்கும், பொலம் பூண், சேஎய்!
மண்டு அமர் கடந்த நின் வென்று ஆடு அகலத்து,
பரிசிலர்த் தாங்கும் உரு கெழு நெடு வேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்!
சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி!
போர் மிகு பொருந! குரிசில்! எனப் பல,
யான் அறி அளவையின், ஏத்தி, ஆனாது—

இவ்வடிகளில் முருகனுக்குள்ள வீரம், பூலம் முதலான பெருமைகள் கூறப்பட்டிருக்கின்றனவேயொழியத் திருமாலுக்குச் சொன்னதுபோலே எல்லா உலகையும் படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்து தேர்ந்து அளிக்கும் தன்மைகள் ஒரு சிறிதும் பாடப்படவில்லை என்பதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் எங்குமே திருமாலைத் தவிர வேறு எந்த தெய்வத்திற்கும் பரம்பொருளுக்குரிய தன்மைகள் பாடப்படவில்லை. இந்தத் திருமுருகாற்றுப் படையிலேயே தேவர்கள் முருகனைக் காணவந்ததைக் குறிப்பிடும்போது,

“கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால் எயிற்று
அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந் திறல்
பாம்பு படப் புடைக்கும் பல் வரிக் கொடுஞ்சிறைப்
புள் அணி நீள் கொடிச் செல்வனும்”

acharya.org

என்று சிவன் முதலான மற்ற தேவர்களுக்கு முன்னால் திருமாலையே கூறி, அவனுடைய கொடியை 'நீள் கொடி' என்று நக்கீரர் குறித்திருப்பதிலிருந்து சங்ககாலத்தில் திருமாலே தேவர் தலைவனாகக் கருதப்பட்டு வந்தான் என்பது தெளிவாக விளங்குகிறது. இவ்விடத்தில் முருகனிலும் பெரியவர்களான தேவர்கள் முருகனைக் காண வர முடியுமேயொழிய, வழிபட வரமுடியாது என்பது தோற்ற 'வந்து உடன் **காண**' என்று பாடியது குறிக்கொள்ளத் தக்கது. முருகன் தந்தைக்கு உபதேசம் செய்தான். பாட்டனை பிரமனைச் சிறையில் அடைத்தான், முப்பாட்டனை திருமாலின் உலகையே அவன் மயில் அழித்து விட்டது முதலான கதைகளில் ஒன்றைக்கூட முருகனின் பெருமையைப் பேசவென்றே ஏற்பட்ட இந்நூலும் கூருததிலிருந்து இவை பிற்காலத்தில் எழுந்த கட்டுக்கதைகளே என விளங்குகிறது. திருமாலைக் காட்டிலும் சிவனோ, முருகனோ, காளியோ சிறந்தவர்கள் என்பதைக் காட்டும் ஒரு கதையும், ஒரு தொடரும் சங்க இலக்கியங்களில் எங்குமே கிடையாது.

முதல் பாகத்தின் முடிவுரை

ஆக, இதுவரையில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்னும் பெயருள்ள சங்க இலக்கியங்களில் உள்ளபடி பழந்தமிழர் சமயம் யாதென்று நிலைநாட்டப்பட்டது. நடுநிலை நின்று இவற்றை ஆராய்ந்தால், அக்காலத்தில் "திருமால் ஒருவனே பரம்பொருள்; பிரமன் சிவன் முதலிய எல்லா தேவர்களும், எல்லா ஜீவர்களும், எல்லா உலகமும் அவனால் படைத்தளித்து அழிக்கப்படும் பொருள்களாகவும், அவனுக்கு சரீரமாகவும் இருப்பவையே" என்னும் விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மதமே வைதிகமதமாகக் கொள்ளப்பட்டு வந்தது என்பது ஐயந்திரிபற விளங்கும். சமணம், பவுத்தம் முதலான புறச்சமயங்களும், 'சிவனே பரம்பொருள்' என்று கூறும் சைவசமயமும், 'நிர்விசேஷ

acharya.org

சிந்மாத்ர ப்₃ரஹ்மமே பரம்பொருள்; உலகனைத்தும் பொய்' என்று கூறும் அத்வைதமதமும், "திருமால், பிரமன், சிவன் முதலான தெய்வங்களெல்லாம் ஒரே பரம்பொருளின் பலவகைத் தோற்றங்களே; இவையெல்லாமேயான அல்லது இவற்றுக்கெல்லாம் மேலான ஏதோவொன்றுதான் பரம்பொருள்" என்று கூறும் சமரசமதமும் அக்காலத்தில் வழங்கவேயில்லை என்பதும் தெளிவாக விளங்குகிறது.

மோக்ஷத்தையும், ஆத்மாவுக்கு நன்மையையும் இவற்றுக்குத் தடையாயிராத இவ்வுலகப் பலன்களையும், விரும்பியவர்கள் திருமாலையும், இவ்வுலகப் பலன்களையும், உடலுக்கு உறுதியையுமே எளிதில் பெற விரும்பியவர்கள் சிவன், முருகன் முதலான மற்ற தெய்வங்களையும் வழி பட்டு வந்தனர் என்பதும் தெற்றன விளங்குகிறது. தமிழ் நாட்டின் மிகப்பழைய காலமும், பொற்காலமுமான சங்ககாலத்தில் நாட்டின் சமயநிலை இது.

பிற்காலத்தில், சிவன் முதலான தெய்வங்களை வழி பட்டு வந்தவர்கள் தங்கள் தங்கள் தெய்வங்களே பரம் பொருள்கள் என்று சொல்லத் தலைப்பட்டனர். அதற்கு ஆதாரமாகப் பல நூல்களும், பல கதைகளும் தோன்றின. மதத்துறையில் குழப்பம் ஏற்பட்டது. இந்நிலையில் ஆழ்வார்கள் தோன்றி, விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மதமே வைதிகமதம் என நிலைநாட்டினர். இதைப் பொருத சிவ பக்த ஸமூஹத்தில், நாயன்மார்கள் தோன்றி சிவனே பரம்பொருள் என்னும் சைவமதத்தை விசேஷமாகப் பரப்பினர். சமணம், பவுத்தம் முதலான சமயங்களை வைஷ்ணவர்களும், சைவர்களும் சேர்ந்து கண்டித்து அடக்கினர். ஆனல், இவர்கள் தங்களுக்குள் விவாதப் பட்டு நிற்பதைப் பார்த்துச் சிலர் — முத்தொழில்களில் ஒவ்வொன்றைப் புரியும் அரி அயன் அரன் என்னும் மூவரும் ஒன்று என்றும், மூவரும் ஸமமே என்றும், மூன்றிலும் மேம்பட்ட ஒன்று பரம்பொருள் என்றும் கூறத் தலைப்பட்டனர். வேதசாஸ்திரங்களில் பரம்பொருளைப் பல

acharya.org

பெயர்களால் குறிப்பிட்டிருப்பதையும், மும்மூர்த்திகளையும் ஒன்றாகவும், ஸமமாகவும் சில வாக்கியங்கள் பேசுவதையும் ஆதாரமாகக் காட்டினர். அவ்வேதவாக்கியங்களில், 'எல்லா தேவதைகளும், எல்லா ஆத்மாக்களும் அசித்துக்களும் ஒன்றே' என்று பேசப்பட்டிருக்கிறதே என்னும் கேள்வி எழுந்தவுடன், 'எல்லா ஆத்மாக்களும் ஒன்றான பரம்பொருளே; வேறாகத் தோன்றுவதெல்லாம் பொய்' என்னும் அத்வைதமதம் எழுந்தது. அபே₄த₃ ஶ்ருதிகளையும், நிர்க்கு₃ண ஶ்ருதிகளையும் ப்ரமாணமாகக்கொண்டு, பே₄த₃ஶ்ருதிகளையும், ஸகு₃ண ஶ்ருதிகளையும் தள்ளும் அத்வைத மதத்தை ஆதிசங்கரர் பாரததேசம் முழுதும் பரப்பினர். அநாதி₃ வைதி₃க மதமான விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மதமும், பின்னர் தோன்றிய பவுத்தம், சமணம் முதலான புறச்சமயங்களும், சைவம் முதலான அகச்சமயங்களும் மழுங்கி, அத்வைதமே மேலோங்கத் தொடங்கிற்று. இந்நிலையில் நாதமுனிகள், யாமுனமுனிகள், ஸ்ரீராமாநுஜமுனிவரர் முதலான ஆசார்யர்கள் தோன்றி, பல ப்ரமாண யுக்திகளைக் காட்டி எல்லா வேதவாக்கியங்களுக்கும் பொருந்திய அநாதி₃ வைதி₃க மதமான விசிஷ்டாத்₃வைத வைஷ்ணவ மதத்தை மறுபடியும் நிலைநாட்டினர். மத்₄வர் முதலானோர் தோன்றி வெவ்வேறு முறைகளில் வைஷ்ணவத்தை நிலைநாட்டினர். இருந்தபோதிலும், ஏற்கனவே காடாக மண்டிவிட்ட அத்வைத மதத்தையும், சமரச மதத்தையும் அவர்களால் அடியோடு அழிக்க முடியவில்லை. பரம்பொருளின் திருவுள்ளமும் இதுவேபோலும்! பிற்காலத்தில் சைவசித்தாந்திகள் தோன்றி சைவமதத்தையும் ஆங்காங்கு பரப்பினர். மிகப் பிற்காலத்தில் சமரசவாதிகளும் வலுப்பெறத்தொடங்கினர். இப்படிப் பல மதங்களின் கூட்டமாயிருக்கும் வைதிக ஸமூஹம், வெளிநாட்டினரால் இந்து ஸமூஹம் என்று அழைக்கப்பட்டது. வெளிநாட்டிலிருந்து இங்கு வந்த கிறிஸ்தவமதம், இஸ்லாமிய மதம் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டு

acharya.org

வதற்காக, இந்தியா என்னும் புதுப்பெயரைப்பெற்ற பாரததேசத்தில் நெடுங்காலமாயிருந்த எல்லா மதங்களும், இந்து மதம் என்று நூருண்டு காலமாக அழைக்கப்பட்டு வருகின்றன. 'வைதிகமதம்' என்னும் பழைய பெயரைக் கைவிட்டு, அரசியல் நிர்ப்பந்தங்களாலும், மற்றும் பல காரணங்களாலும் 'இந்து மதம்' என்னும் நவீனப் பெயரையும் பாரத சமுதாயம் ஏற்றுக்கொண்டுவிட்டது. சங்க காலத்திற்குப் பிற்பட்ட நூல்களிலிருந்து, இவ்விஷயங்களனைத்தையும், ஆதிகாலத்தில் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய சூத்ரர்கள் என்னும் நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த பாரத சமுதாயம், பிற்காலத்தில் ஆயிரம் சாதிகளாகப் பிரிவுபட்ட விதத்தையும், இனி, ஒற்றுமைக்கு வழி யாது என்பதையும் இந்நூலின் இரண்டாம் பாகத்தில் ஆராய்வோம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶனம் ஆசிரியர் இயற்றிய
சாதிமத ஆராய்ச்சியில் முதல் பாகம் முற்றிற்று.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஆழ்வாராசார்யர்களின் அருளிச்செயல்களுக்கு
எளிய தமிழ் விரிவுரைகளுடன்
வெளிவரும் சிறந்த
ஸ்ரீ வைஷ்ணவ மாதப்பத்திரிகை

ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம்

ஆசிரியர் :—
ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

வருடச் சந்தா ரூ. 8-00.

ஸர்வஜித் மார்கழி 28உ (12—1—1948) முதல்
தொடர்ந்து நடைபெறுகிறது.

acharya.org